


அரசு

[illegible]

[illegible]

2005

©

JL
XM m 211,N29k7
P06.77.1
227157








# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2036
ஆனி – ஆடி
மலர்: 37 இதழ்: 1
ஜூலை 2005
விலை ரூ.10


## இந்த இதழில்...


- ★ மாநில அரசு – வேளாண் பல்கலைக்கழகம் – அறிவியலாளர்கள் ஆகிய மூவருக்குமிடையேயான ஆற்றல் வாய்ந்த பங்காண்மை ஒன்றுதான் இப்போதைய தேவை – மாண்புமிகு **தமிழக முதலமைச்சர்** அவர்கள் ஆற்றிய உரை ........ 2
- ★ மேல்நிலைக் கல்வியை ஊக்கத்துடன் கற்க, மாணவர்களுக்கும் இலவசச் சைக்கிள்கள் வழங்கும் திட்டம் ........ 10
- ★ தரமான கல்வியைச் சிறப்புடன் வழங்க 11,788 ஆசிரியர்கள் நியமனம் ........ 12
- ★ சென்னையை மையமாகக் கொண்டு தென்னக எரிவாயுக் கட்டமைப்பு மற்றும் திரவ இயக்க வாயு மையம் அமைக்கப்பட வேண்டும் ........ 17
- ★ மாநிலங்கள் அளவில் பேரிடர் நிவாரணப் பணிக்குழுக்கள் அமைக்கப்பட வேண்டும் – மாண்புமிகு **தமிழக முதலமைச்சர்** அவர்கள் ஆற்றிய உரை ........ 23
- ★ விளையாட்டுப் போட்டிகளின் மேம்பாட்டிற்கு மிக உயரிய முக்கியத்துவம் – மாண்புமிகு **தமிழக முதலமைச்சர்** அவர்கள் ஆற்றிய உரை ........ 25
- ★ 86 இலட்சம் விவசாயத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திட ஊதிய உயர்வு ........ 28
- ★ உண்மையான சமூகநீதியின் உயர்ந்த நோக்கத்தை எய்துவதில் ஏற்பட்டுள்ள தடைகள் தற்காலிகமானவையே! ........ 30
- ★ சென்னை அரசுப் பொது மருத்துவமனை ஏழை, எளிய மக்களுக்குப் பணியாற்றுவதில் புதிய வரலாற்றைப் படைக்கும் ........ 33
- ★ மகேசனாகிய மக்கள் எப்போதும் என் இதயத்தில் இருக்கிறார்கள் – மாண்புமிகு **தமிழக முதலமைச்சர்** அவர்கள் ........ 37
- ★ கண் பார்வையற்றக் குழந்தைகளின் நலன் கருதி நிதியுதவி ........ 45
- ★ தமிழ்நாட்டில் நபார்டு வங்கி நிதி உதவியுடன் 14 நீர்ப்பாசனத் திட்டங்கள் ........ 47
- ★ மாநகராட்சி மற்றும் நகராட்சிச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் ........ 48
- ★ தென்னை விவசாயிகள் வருவாய் பெருகிட, கொப்பரைத் தேங்காய்கள் கொள்முதல் ........ 49
- ★ தமிழ்த் தாத்தா உ.வே.சா. அவர்களுக்கு நினைவு இல்லம் ........ 51
- ★ காவல்துறையில் தொடரும் சாதனை – 7 நாட்களில் தீர்ப்பு எழுதப்பட்ட **இரண்டு** வழக்குகள் ........ 52
- ★ மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நடவடிக்கையால் குவைத் சிறையில் வாடிய பெண் விடுவிப்பு ........ 54
- ★ பொதுமக்களுக்கானச் சேவை பாதுகாக்கப்படுவதே தலையாய நோக்கம் ........ 57
- ★ ஈரோடு மாவட்டம் – பர்கூர் மலைப்பகுதியில் ரோஸ்மேரி பயிர்ச் சாகுபடி ........ 62
- ★ சிறுதேயிலை விவசாயிகள் பாதுகாப்புத் திட்டம் ........ 65
- ★ பெருந்தலைவர் காமராஜர் ........ 68
- ★ ஏற்காடு சுற்றுலாத்தலம் மேம்பாடு பெற 4.49 கோடி ரூபாய் ........ 71
- ★ நலிந்த நிலையில் வாழும் கலைஞர்களுக்கு நிதி உதவி ........ 73
- ★ தமிழகக் காவல்துறையின் சாதனைக் கிரீடத்தில் மின்னிடும் 15 வைரக்கற்கள் ........ 74
- ★ நகரப் பகுதிகளிலும், கிராமப் பகுதிகளிலும் மேம்பட்ட சாலை வசதிகள் கொண்ட முன்னோடி மாநிலமாகத் தமிழகம் ........ 76
- ★ காவிரி டெல்டா பகுதியில் சம்பாச் சாகுபடிக்குத் தண்ணீர் திறக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் உத்தரவு ........ 78


### அட்டைப்பட விளக்கம்

**முதலாம் பக்க அட்டை** : சென்னை அரசுப் பொது மருத்துவமனை புதிய அடுக்குமாடிக் கட்டடங்கள் திறப்பு விழா

**இரண்டாம் பக்க அட்டை**: திருவள்ளூர் மாவட்ட அரசு விழா

**நான்காம் பக்க அட்டை** : குற்றாலம் அருவி


*ஆசிரியரும் வெளியிடுபவரும்*: **சி. முத்துக்குமாரசாமி**, இ.ஆ.ப., இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு கூடுதல் செயலாளர், தமிழ்நாடு அரசு
சென்னை– தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 25368926/25364906 தொலைநகல் : 25364906
மின் அஞ்சல் : tamilarasu2@yahoo.com




முழுமையான வெற்றி காண வேண்டும் என்ற உறுதிப்பாட்டுடன் இந்த உன்னதமானப் பணியில் நீங்கள் முனைந்து செயல்பட வேண்டும். நம்முடைய வேளாண் விஞ்ஞானிகள், அர்ப்பணிப்பு உணர்வுடன் மேற்கொண்ட பணியின் காரணமாகவே, முக்கியப் பயிர்களின் உற்பத்தித் திறனில் தமிழ்நாடு அனைத்திந்திய அளவில் முதலிடத்தை வகிக்கும் பெருமையைப் பெற்றுள்ளது.

10ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இடைக்கால மதிப்பீட்டு அறிக்கையை ஆய்வு செய்வதற்காக, அண்மையில், 27.6.2005 மற்றும் 28.6.2005ஆம் நாட்களில் நடைபெற்ற தேசிய வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் இடம்பெற்ற விவாதத்தின்போது, கடந்தப் பத்தாண்டுகளில் வேளாண்மைத் துறையில் ஏற்பட்டக் குறைவான வளர்ச்சி குறித்து, பெரும் கவலை தெரிவிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் நான் உரையாற்றியபோது, நாம் கட்டுப் பெட்டிச் சிந்தனைகளிலிருந்து வெளிப்பட்டு, புதுமையாகச் சிந்திக்க வேண்டியதன் அவசியம் குறித்து எடுத்துரைத்தேன். குறிப்பாக, நீர் ஆதாரங்களைச் சிறந்த முறையில் நிருவகித்தல், தகவல் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி வேளாண் விரிவாக்க முறையை முழுமையாக ஆராய்ந்து சீரமைத்தல், இடுபொருட்களைச் சிறந்த முறையில் பயன்படுத்துதல், உயிரி பண்ணை முறைப் பயிர் வகைகளைப் பல்திறப்படுத்துதல், மிகச் சிறிய நீர்வரத்துப் பகுதிகளின் நிருவாகம், சொட்டு நீர் மற்றும் தெளிப்பு நீர்ப் பாசனத்தை ஊக்குவித்தல் ஆகியவற்றிற்கான அவசியத்தை அக்கூட்டத்தில் நான் வலியுறுத்தினேன். காலம் யாருக்காகவும் காத்திருப்பதில்லை என்ற உண்மையைக் கவனத்தில் கொண்டு, தேவையான விழுமிய ஆராய்ச்சிப் பணிகளை நாம் மேற்கொள்ள வேண்டும்.

எனவே, நாம் உயர் வளர்ச்சி வேகத்தை எட்ட, வேளாண்மை தொடர்பான நமது கொள்கைகளில் பெரிய அளவில் மாற்றங்கள் தேவை. நமது அரிய நீர் ஆதாரங்களைச் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து, மாற்றுப் பயிர்களைக் கண்டறிந்து, அவற்றைப் பயிரிடும் முறைகளிலும் மாற்றங்கள் கொண்டு வரவேண்டும். நீடித்த முறையில், தரம் மற்றும் அளவு வகையில் சாதனைப் படைத்திட, பயிர் உயிரித் தொழில்நுட்பத்தை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். உணவுப் பாதுகாப்பு என்ற நிலை மாறி, அனைவருக்கும், அதிலும் குறிப்பாக, மகளிர் மற்றும் குழந்தைகளுக்கு சத்துணவுப் பாதுகாப்பு அளிக்கப்படவேண்டும். அரிய நீர் ஆதாரங்களைச் சேமித்தல், தரிசு நிலங்களின் முனைப்பான மேம்பாடு, வானம் பார்த்த பகுதிகளில் உற்பத்தித் திறன் அதிகரிப்பு, நிலையான வாழ்வாதாரம் ஆகியவற்றில் சுயஉதவிக் குழுக்களின் குழு நடவடிக்கை ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு நமது கொள்கைகள் அமைய வேண்டும்.

தமிழ்நாட்டில் தண்ணீர்ப் பற்றாக்குறை, மிகவும் மோசமான நிலையை எட்டியுள்ளது. தமிழ்நாட்டின் மேற்பரப்பு நீர்வளம் முற்றிலும் பயன்படுத்தப்பட்டு விட்டது. உண்மையைச் சொல்லப்போனால், நிலத்தடி நீர் ஆதாரமும் அளவுக்கு அதிகமாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. நான், 1984ஆம் ஆண்டிலேயே நாடாளுமன்றத்தில் நதிகளின் இணைப்பு குறித்து பேசியிருக்கிறேன். இவ்வாறு நதிகளை இணைப்பதும், தீபகற்ப நதிகளின் நீர் கட்டமைப்பை ஏற்படுத்துவதும்தான், நாட்டின் ஒரு பகுதியில் வெள்ளப் பெருக்கு பிறிதொரு பகுதியில் கடுமையானத் தண்ணீர்ப் பற்றாக்குறை என்ற முரண்பாட்டுக்கு ஒரு நிரந்தர முற்றுப்புள்ளி வைக்கும் என்ற போதிலும், மத்திய அரசு, இத்திட்டத்தைக் குறிப்பிட்ட கால அளவிற்குள் நிறைவேற்றி முடிக்கப்படவேண்டிய செயல் திட்டமாக எடுத்துக் கொள்ளவில்லை. புதுதில்லியில், அண்மையில் நடைபெற்ற, தேசிய வளர்ச்சி மன்றக் கூட்டத்திலும், மாநிலங்களிடைக் குழுக் கூட்டத்திலும், இத்திட்டத்தை அவசரமாக நிறைவேற்ற வேண்டியதன் அவசியத்தை நான் வலியுறுத்தினேன். நம்முடையதைப் போன்ற ஒரு பொருளாதாரத்திற்கு இத்தகையதொரு திட்டத்தை, நிறைவேற்ற இயலுமா என்று மேம்போக்காகச் சிந்திக்கக் கூடாது. சீனா இதைச் செய்து முடித்துள்ளது. நாமும் இயன்ற அளவு கடும் முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

"காலமும், கடலலையும், யாருக்காகவும் காத்திருப்பதில்லை" என்று கூறுவார்கள். "வேளாண்மையும் யாருக்கும் காத்திருப்பதில்லை" என்பதை நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன். ஆகவேதான், தற்போதுள்ள நீர் ஆதாரங்களை நவீனப்படுத்துவதற்கானத் திட்டமொன்றை, அதாவது, இரண்டாவது நீர் ஆதாரங்கள் தொகுப்புத் திட்டத்தை உலக வங்கியின் ஒப்புதலுக்காக அனுப்பியுள்ள நிலையிலும், அதன் ஒப்புதலுக்காகக் காத்திருக்காமல், பாலாறு வடிநிலப் பகுதியில் இவ்வாண்டிலேயே அதனைத் தொடங்கலாம் என்றும், ரூ.20 கோடி செலவில், மாநில நிதி உதவி பெறும் திட்டமொன்றைத் தொடங்கலாம் என்றும் நான் ஆணையிட்டுள்ளேன்.

சமுதாயத்திற்கும், உழவர்களின் தேவைகளுக்கும் பயன்படும் விதத்தில் நமது நீர் ஆதாரங்கள் பாதுகாக்கப்பட்டு, மேம்படுத்தப்பட வேண்டும் என்று நான் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வந்துள்ளேன். மக்கள் பங்கேற்புடன், ஏரிகளைச் சீரமைத்துப் புதுப்பிப்பது, பாசனத்திற்கும் ஊரக வேலைவாய்ப்பு உருவாக்கத்திற்கும் ஏற்ற, செலவுக்குத் தகுந்த பயன் விளைவிக்கக் கூடிய, சரியான திட்டமாக இருக்கும் என்று உணர்ந்தே, நான் ரூ.62.50 கோடி மொத்தச் செலவில், 2005–2006ஆம் ஆண்டில், பொதுப் பணித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள பாசன ஏரிகளை ஆழப்படுத்திச் சீரமைக்கும் புதிய திட்டமொன்றைச் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ள ஆணையிட்டுள்ளேன். இதனால், 62,500 ஏக்கர் பண்ணை நிலங்கள் பயன்பெறும்.

வருவது உரைக்கும் தெய்வப் புலவர் திருவள்ளுவர் 2000 ஆண்டுகளுக்கு முன்னரே மழை நீரையும், நிலத்தடி நீரையும் இணைத்துப் பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தைப் பற்றிக் கூறும்போது

"இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு"

– என்று குறிப்பிட்டுள்ளார். அதாவது, ஊற்று நீர், மழை நீர் எனப்பட்ட இரண்டு நீரும் வளந்தருமாறு வாய்த்த மலைகளும், மலைகளில் உண்டாகி வரும் ஆற்று நீரும், இவற்றுடன் வலிமை வாய்ந்த இயற்கை அரண்களும், ஒரு நாட்டிற்கு இன்றியமையாத உறுப்புகளாகும்.

நிலத்தடி நீர் மட்டம் குறைந்துகொண்டே வருவதாலும், அடுத்தடுத்து ஏற்பட்ட வறட்சியினாலும், தமிழ்நாடு கடுமையான தண்ணீர்ப் பற்றாக்குறையைச் சந்தித்து வருகிறது. எனவேதான், நான் மழை நீர் சேகரிப்புத் திட்டம், மழை நீரை, நிலத்தடி நீருடன் இணைத்துப் பயன்படுத்தும் திட்டம், நீர் வரத்துப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் ஆகிய திட்டங்களைத் தொடங்கிச் செயற்படுத்தி வருகிறேன். மாநிலம் முழுதும் உள்ள கட்டடங்களில் மழை நீர் சேகரிப்பு அமைப்புகளை ஏற்படுத்துவதன் மூலம், மழை நீரின் ஒவ்வொருத் துளியையும் சேமிப்பதற்கானப் பெருந்திட்டமொன்றுச் செயற்படுத்தப்பட்டு வருகிறது. கிடைக்கும் நீரை, திறம்படப் பயன்படுத்த, நீர்வரத்துப் பகுதி அணுகுமுறை இன்றியமையாததாகிறது. தமிழ்நாட்டில் வேளாண்மைக்குப் புத்துயிரளிக்க, இந்த அணுகுமுறைக்கு நான் அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறேன். மக்களின் பங்கேற்புடன், 66 இலட்சம் எக்டேரை (1.63 கோடி ஏக்கர்) உள்ளடக்கிய, மொத்தம் 13,206 சிறிய நீர்வரத்துப் பகுதிகளும், பயன்பெறக்கூடிய பெரிய அளவிலான நீர்வரத்துப் பகுதி மேம்பாட்டுத் திட்டமொன்று, இந்த ஆண்டில் நிறைவேற்றத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், இவ்வாண்டில், 1,000 புதிய சிறிய நீர்வரத்துப் பகுதிகள் பண்படுத்தப்படும்.

தமிழ்நாட்டில், பயிரிடத்தக்கத் தரிசு நிலங்கள், உலர் தரிசு நிலங்கள் மற்றும் இதரத் தரிசு நிலங்கள் என, சுமார் 2 மில்லியன் எக்டேர் (49.42 இலட்சம் ஏக்கர்) தரிசு நிலங்கள் உள்ளன. உழவர்களால் இந்த நிலங்களைச் சாகுபடிக்குப் பயன்படுத்த இயலவில்லை. அந்த நிலங்களை ஒருங்கிணைந்த நீர்வரத்துப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கொண்டு வர வேண்டியதன் அவசியத்தை நான் உணர்ந்து, மரக்கன்று வளர்ப்பு வடிவில், குறிப்பாக, தோட்டக் கலைப் பயிர்களின் மூலம்

பசுமைப் பகுதியை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு 2001ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த நீர்வரத்துப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தை நான் தொடங்கினேன். இதன் பயனாக, சுமார் 2.5 இலட்சம் ஏக்கர் தரிசு நிலங்கள் சாகுபடியின் கீழ் கொண்டு வரப்பட்டு, இத்திட்டம் நல்ல முன்னேற்றம் கண்டு வருகிறது.

பாசனத்திற்குக் குறைந்த நீரே தேவைப்படக் கூடியதும், அறுவடைக்குப் பின்னர், வேளாண் செய்முறைப்படுத்துதல் மூலம் மதிப்பு கூட்டக் கூடியவையுமான மாற்றுப் பயிர்ச் சாகுபடி, எனது அரசு பின்பற்றி வரும் மற்றுமொரு முக்கியமான அணுகுமுறை ஆகும். இனிப்புச் சோளம், சர்க்கரைவள்ளிக் கிழங்கு ஆகியவை, கரும்பைவிடக் குறைவாக நீர் தேவைப்படுகிற பயிர்களாகும். அவற்றை உயிரி எரிபொருள் தயாரிக்கவும் பயன்படுத்திக் கொள்ளலாம். வழக்கமாகக் கரும்பு பயிரிடும் உழவர்களுக்கு ஏற்ற நிலையான மாற்றுப் பயிர்களாக இவை அமைகின்றன. அதேபோன்று, காட்டாமணக்குப் பயிர் உயிரி எரிபொருள் தயாரிப்பதற்கான ஒரு முக்கியமான மூலப் பொருளாக, மானவாரிப் பருவ நிலைகளில், மண் வளமற்ற மிகவும் குறைந்த மண் வளமுடைய மற்றும் தரமற்ற நிலங்களில் கூட, நன்கு வளரக்கூடியத் தரிசு நிலங்களுக்கேற்ற ஒரு அற்புதமானப் பயிர் என்பது நிரூபணமாகியுள்ளது. இனிப்புச் சோளம் மற்றும் சர்க்கரைவள்ளிக் கிழங்கு ஆகியவற்றை முக்கிய மாற்றுப் பயிர்களாகப் பயிரிடுவதற்கு, என்னுடைய அரசு ஊக்கம் அளித்து வருகிறது. இத்தகையப் பயிர்களைச் சாகுபடி செய்யும் விவசாயிகளுடன், பண்ணைத் தொழில் ஒப்பந்தங்கள் செய்து கொண்டு, அவர்களுடைய உற்பத்திப் பொருள்களுக்கு நிச்சயமான, நல்ல விலை கிடைப்பதை உறுதி செய்ய வேண்டுமெனத் தொழிலகங்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன. உயிரி எரிபொருள்களாகப் பயன்படுத்துவதற்குத் தேவையான 'எத்தனால்' உற்பத்தித் திட்டங்களையும், இத்தொழிலகங்கள் செயல்படுத்தி வருகின்றன. இது போலவே, உயிரி எரிபொருள் தயாரிப்புக்கானக் காட்டாமணக்கை மூலப் பொருளாகக் கொண்ட எண்ணெய் நிறுவனங்களுக்கும் ஊக்கமளிக்கப்படுகிறது.

நம்முடைய விவசாயிகளுக்கு வளமான வாழ்க்கை அமையவும், வேளாண் தொழிலாளர்களுக்கும், ஊரகப் பகுதிகளிலுள்ள வறியவர்களுக்கும் வேலைவாய்ப்புக் கிட்டிடவும் வகை செய்யும் நிலையான வேளாண் வளர்ச்சிக்கு இது ஒரு நல்ல முயற்சியாக அமையும்.

இந்தத் திட்டத்தைப் பிரபலப்படுத்தி, மாநிலம் முழுதும் பரப்புவதற்கு வசதியாக சாகுபடியாளர்களுக்கு மிகச் சிறந்த பொருள்கள் எளிதில் வழங்கப்படுவதை உறுதிப்படுத்த, இப்பயிர்களுக்கானப் பால்படா உருவாக்க வித்து பழத் தோட்டங்களை (Clonal Seed Orchard) அமைப்பது மற்றும் திசு வளர்ப்பு முறையிலான பரவல் ஏற்பாட்டின் அடிப்படையில், பெரும் அளவில் தாவரப் பெருக்க உத்திகளை உருவாக்குவது ஆகியவை தொடர்பான ஆராய்ச்சியை, இப்பல்கலைக்கழகம் மேற்கொள்ள வேண்டுமென்ற கருத்தை இங்கே தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். வளர்ந்த நாடுகளுக்கும், வளர்ந்துவரும் நாடுகளுக்கும் இடையில் கருத்து வேறுபாடுகளை உருவாக்கக்கூடிய பிரச்சினைகள், உலக வர்த்தக அமைப்பில், வேளாண் துறை தொடர்பான முக்கிய வர்த்தக ஒப்பந்தங்களுக்கு, தொடர்ந்து ஒரு தடையாக இருந்து வந்தாலும் இந்தியாவிற்குப் பல புதிய வாய்ப்புகளுக்கானக், குறிப்பாக, தோட்டக் கலை, உற்பத்திப் பொருள்கள், கொய் மலர்கள், தாவர உணவுகள் போன்ற மரபுசாரா உற்பத்திப் பொருள்களின் ஏற்றுமதிக்கானப் புதிய வாய்ப்புச் சாளரங்கள் திறந்தே இருக்கின்றன. இவை, நம்முடைய விவசாயிகளுக்கு, ஆவலைத் தூண்டும் புதிய வர்த்தக வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருகின்றன. தோட்டக்கலை உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதியை மேம்படுத்தும் பொருட்டு, கொய் மலர்களுக்கென்றே, தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில், 24.85 கோடி ரூபாய் செலவில் வேளாண்–ஏற்றுமதி மண்டலங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. நீலகிரியில், தனியார் துறை பங்கேற்புடன், 15.89 கோடி ரூபாய் செலவில் மலர்களுக்கான வேளாண் ஏற்றுமதி மண்டலம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. பொதுப் பதப்படுத்தும் தொழிற்பிரிவு, பொதுவான அங்காடி வசதிகள் போன்ற அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக, என்னுடைய அரசு, தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்துடன் (டிட்கோ) இணைந்து, கூட்டுத் துறைத் திட்டத்தின் கீழ், ஒசூரில் "டான்ஃப்ளோரா" என்னும் நிறுவனம் ஒன்றைத் தொடங்கியுள்ளது. மலர்ச் செடி வளர்ப்புப் பிரிவுகளுக்குத் தேவையான நிலக் குத்தகை வசதிகளையும் இந்நிறுவனம் செய்து வருகிறது. மேலும் குளிர் சாதனப் பிரிவுகள், ரீஃபர் (Reefer) வேன்கள், பொது விற்பனை வசதிகள் போன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவதற்காக, என்னுடைய அரசு, வேளாண்மை மற்றும் பதப்படுத்தப்பட்டஉணவுப் பொருட்களின் ஏற்றுமதி மேம்பாட்டு அதிகார மன்றத்துடன் (APEDA) ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. தேனி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களை உள்ளடக்குகிற வகையில், தனியார் துறை பங்கேற்புடன் ரூ.24.60 கோடி செலவில், மாம்பழ ஏற்றுமதிக்கென்றே வேளாண்–ஏற்றுமதி மண்டலம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதுபோலவே, திராட்சை, முந்திரிப் பருப்பு, வாழைப்பழம் போன்றவற்றின் ஏற்றுமதிகளை அதிகரிப்பதற்காக, வேளாண்–ஏற்றுமதி மண்டலங்களை ஏற்படுத்த, நாங்கள் திட்டமிட்டு வருகிறோம்.

வேளாண்மைத் துறை, தற்போது, நவீனமயமாதல், வணிகமயமாதல், தொழில் நுட்ப மேம்பாடு ஆகியவற்றுக்கு உள்ளாகி வருவதால், வேளாண்மை விற்பனை முன் எப்போதும் இல்லாத அளவுக்கு அதிக முக்கியத்துவம் பெற்று விளங்குகிறது. வேளாண் விளைபொருள்களின் விற்பனைக்கு வகை செய்யவும், அவற்றிற்கு நல்ல விலை கிடைக்கச் செய்யவும், மேலும் அதிக முக்கியத்துவம் அளிக்கும் விதத்திலும், வேளாண் விளை பொருள்களின் அறுவடை மேலாண்மை, பதப்படுத்துதல், மற்றும் ஏற்றுமதி ஆகியவற்றில் உழவர்களுக்கு உதவவும், அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மை உத்திகளைப் பின்பற்ற விவசாயிகளை, ஆற்றுப்படுத்த வேண்டியப் புதிய பொறுப்பு, வர்த்தகத் தரப்படுத்து மையங்களுக்கு இருப்பதைப் பிரதிபலிக்கின்ற வகையில் வர்த்தகத் தரப்படுத்து மையங்கள் அறுவடைக்குப் பிந்தையத் தகவல் தொழில் நுட்ப மையங்களாக மாற்றப்பட்டு வருகின்றன. மதுரையில் நெல்லுக்கும், ஈரோட்டில் மஞ்சளுக்கும் அங்காடி வளாகங்கள் கட்டும் பணியை நாங்கள் மேற்கொண்டுள்ளோம். விவசாயிகளுக்கு, அங்காடி நிலவரம் பற்றிய தகவல்களை அளிக்கும் நோக்குடன் மாநிலமெங்கிலும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில், வேளாண் உற்பத்தி மற்றும் விற்பனைத் தகவல் மையங்களையும் நாங்கள் ஏற்படுத்தி வருகின்றோம்.

என்னுடைய அரசால் தொடங்கப்பட்ட தோட்டக்கலைப் பணித்திட்டம், வேளாண் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் தொழில்நுட்பங்களை உருவாக்குவது, தொழில் நுட்ப உத்திகளை உழவர்களுக்குக் கற்றுத் தருவது, அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மை மற்றும் விற்பனைத் தொடர்புகளை மேம்படுத்துவது போன்றவற்றில் கவனம் செலுத்தி வருகிறது. தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் ரூ.7.20 கோடி செலவில், சுமார் 400 எக்டேர் நிலப்பரப்பில் தற்போது செயல்பட்டு வருகின்ற துல்லிய பண்ணைத் திட்டத்திற்குக் கிடைத்த வெற்றியை அடுத்து, இத்திட்டம் மாநிலத்தில் மேலும் 6 மாவட்டங்களில், அதாவது, தேனி, வேலூர், கடலூர், ஈரோடு, திருநெல்வேலி, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்படும் என நான் அறிவித்துள்ளேன். இத் திட்டத்தின் செயலாக்கத்திற்கான மதிப்புறு ஆராய்ச்சி ஆதரவினை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் வழங்கும்.

நெல் மற்றும் கோதுமை விளைச்சலில் ஏற்பட்டுள்ள தேக்க நிலை, மற்றும் மண்ணில் காணப்படும் நுண்ணூட்டச் சத்துக் குறைபாடு, வேளாண் இராசாயனங்களை அதிகமாகச் சார்ந்திருத்தல் ஆகிய காரணங்களால் விளைச்சல் குறைந்து வருவது, ஆகிய பிரச்சினைகள் பற்றி நான் முன்னரே குறிப்பிட்டேன். மரபு ஊடு கலப்புப் பயிர் (Transgenic Crops) வகைகள், உயிர்ம இணை மரபியல் (Genomics) மறு கூட்டினை மரபணு தொழில் நுட்பம் மற்றும் மார்க்கர் உதவி இனப் பெருக்கம் (Marker Assisted Breeding) ஆகியவற்றை உருவாக்குவதில் தாவர உயிர் தொழில் நுட்பத்திற்குள்ள ஆற்றல், தரத்திலும், அளவிலும் நிலைத்த முன்னேற்றத்தைக் காண்பதற்கான முக்கியமானத் திருப்பு முனையாக அமையும். மேலும் இதன் மூலம் உயிரிய மற்றும் உயிரல்லா அழுத்தங்களைத் தாக்குப் பிடிக்கக் கூடிய அல்லது அவற்றுக்கு எதிர்ப்பாற்றல் கொண்ட பல்வேறு பயிர் வகைகளை உருவாக்குவதற்கான வாய்ப்புகளும் உருவாகியுள்ளன. நம்முடைய விவசாயிகளின் பயனுக்காக, மரபியல் சார் மாற்றுப் பயிர் வகைகளை (Genetically Modified Crops) உருவாக்கும் பணியில் இப்பல்கலைக்கழகம் ஈடுபட்டிருப்பதாக நான் அறிகிறேன். அடுத்து, ஒரு சவாலாக, அதிசய உயர்ரக நெல் ரகத்தை உருவாக்கும் பணியை இப்பல்கலைக்கழகம் மேற்கொள்ள வேண்டும் என நான் கேட்டுக் கொள்கிறேன்.

உயிரித் தொழில்நுட்பவியல் ஆராய்ச்சிக்கு உத்வேகம் அளிக்கும் பொருட்டு என்னுடைய அரசு, அமெரிக்க ஐக்கிய நாடுகளைச் சேர்ந்த "கார்னெல்" பல்கலைக்கழகத்தின் உடனுழைப்புடன் ரூ.62.50 கோடி ரூபாய் செலவில் டைசல் உயிரிப் பூங்கா ஒன்றை அமைத்துள்ளது. இந்தப் பூங்கா நொதிக்க வைத்தல், நுண்ணுயிரியல், மூலக்கூற்று உயிரியல், தாவர திசு வளர்ப்பு ஆகியவற்றில் ஆராய்ச்சி மேற்கொள்வதற்கான அதி நவீன சாதன வசதிகளையும் மற்றும் பசுமை இல்லம், பயிற்சி மையம் ஆகியவற்றையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

உயிரித் தொழில்நுட்பவியல் துறையில் பெண் தொழில் முனைவோர்களுக்கு உதவும் பொருட்டு, வெவ்வேறு வகையானத் தொழில்களுக்குரிய உதவிப் பணிகளை நல்குவதற்காக, பெண்களுக்கென்றே உயிரித் தொழில்நுட்பப் பூங்கா ஒன்று ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ளது.

நடைமுறையில், பெண்கள் மேற்கொள்ளும் முக்கியப் பணிகளின் அளவு அதிகரித்து கொண்டே வருவதால் ஊட்டச்சத்துப் பாதுகாப்பு எய்துவதான நம்முடைய கொள்கைகள், அடிப்படையில், பெண்களுக்குச் சாதகமாக இருத்தல் வேண்டும் என நான் கருதுகிறேன்.

போதியப் பயிற்சி அளிக்கப்பட்டால், பெண்களும் நவீன வேளாண்மைத் தொழில்நுட்பங்களைக் கற்றுத்

தேர்ந்து, அதன் துணையுடன் உற்பத்தியைப் பெருக்கி, உணவுப் பாதுகாப்பை மேம்படுத்தி, அதன் மூலம் விவசாயி என்ற முறையில், தங்களுடைய முழு ஆற்றலையும் வளர்த்துக் கொள்வார்கள் என்பதைத் தமிழ்நாடு பண்ணை மகளிர் திட்டம் நமக்குத் தெள்ளத் தெளிவாக மெய்ப்பித்துள்ளது. தமிழ்நாட்டில், என்னுடைய அரசு, மகளிர் சுயஉதவிக்குழுக்களை பெரிய அளவில் ஏற்படுத்தியுள்ளது. இன்றைக்கு, தமிழ்நாடு முழுவதிலும், 34.10 இலட்சம் பெண்களை உறுப்பினர்களாகக் கொண்ட 2,03,080 மகளிர் சுயஉதவிக் குழுக்கள் உள்ளன. இந்தச் சுய உதவிக் குழுக்களில் 60 சதவிகிதத்திற்கும் மேலானவை, பால்பண்ணை, செம்மறியாடு வளர்ப்பு, கயிறு தயாரிப்பு ஆகியவற்றுடன் குத்தகை நிலங்களில் சாகுபடி செய்தல், மலர்ச்செடி வளர்ப்பு, நாற்றங்கால் வளர்ப்பு, தீவனப் பயிர்ச் சாகுபடி, மூலிகைச் செடி சாகுபடி, இயற்கை உரக் காய்கறிச் செடி வளர்ப்பு, முசுக்கட்டைச் செடி வளர்ப்பு, புளியைத் தூய்மைப்படுத்தும் செய்முறை உட்பட வேளாண்மை மற்றும் வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட துணைத் தொழில்கள் ஆகியவற்றில் ஈடுபட்டு வருகின்றன. காடுகள் அழிந்து விட்ட இடங்களில் மீண்டும் காடு வளர்த்தல், ஆக்கப் பூர்வமான நிலப் பயன்பாட்டுத் திட்டங்கள் போன்ற முக்கியமான சீரமைப்புப் பணிகளிலும் மகளிர் சுயஉதவிக் குழுக்கள் ஈடுபட்டு வருகின்றன. வறட்சி, சுற்றுச் சூழல், சீரழிவு ஆகியவற்றை எதிர்த்துப் போராடுவதிலும், நீடித்த வேளாண்மை மற்றும் சத்துணவுப் பாதுகாப்பு நோக்கிலான இயக்கத்தை முன்னின்று நடத்திச் செல்வதிலும், அதிகாரம் பெற்ற மகளிர் சுய உதவிக் குழுக்கள் முக்கியப் பங்காற்றிட வேண்டும் என்பதே என்னுடைய அவா; என்னுடைய கனவு.

ஊரகப் பொருளாதாரம், வேளாண்மையைத் தவிர, பண்ணை சாரா ஊரகத் துறை வளர்ச்சியையே பெரிதும் சார்ந்திருக்கிறது. இவ்வாறு, ஊரகப்பகுதிகள் உண்மையிலேயே வளம் பெற வேண்டுமானால் பல்வேறுபட்ட பொருட்களை உற்பத்தி செய்யும் வேளாண் தொழிலும், சிறிய உற்பத்திப் பிரிவுகளும் ஏராளமாக உருவாக வேண்டும். இந்தச் சிந்தனை ஓட்டம் தான், இம்மாநிலத்திலுள்ள 385 வளர்ச்சி வட்டாரங்களையும் உள்ளடக்கிப் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை நான் அறிவிக்கக் காரணமாய் அமைந்தது. 173.14 கோடி ரூபாய் செலவில், 265 தொழிற்பிரிவுகள் ஏற்கெனவே தொடங்கப்பட்டுவிட்டன என்பதையும், மேலும் 220 தொழிற்பிரிவுகள் விரைவில் அமைக்கப்படவுள்ளன என்பதையும், உங்களிடையே தெரிவித்துக் கொள்வதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இதனால், ஊரகப் பகுதிகளில், பண்ணை சாரா வேலை வாய்ப்பு மேம்பட்டு, ஊரகத் தொழில் மயமாக்கலுக்கு வழி கோலப்பட்டுள்ளது. வறுமைக்கு எதிரான எங்களுடைய போரில் இது ஒரு கேந்திரமான பொருளாதார உத்தியாகும்.

இந்தியா, தற்போது தகவல் தொழில் நுட்பத் துறையில், அனுகூலமான நிலையில் உள்ளது. தகவல் மற்றும் தொடர்பு தொழில் நுட்பத்திலே நாம் பெற்றுள்ள வலிமை, பண்ணைத் துறையில் அளவிடற்கரிய வாய்ப்புகளை உருவாக்கியுள்ளது. தகவல் மற்றும் தொடர்பு தொழில்நுட்ப உத்தியைப் பயன்படுத்தி, இடுபொருள் வழங்கல், தட்ப வெப்பநிலை, வறட்சி, இயற்கைச் சீற்றங்கள், பயிர்ப்பூச்சிகள் மற்றும் நோய்கள் தொடர்பான முன் எச்சரிக்கை, விலை நிலவரம், இடுபொருள் விலைகள் முதலியவை குறித்தத் தகவல்களை உரிய நேரத்தில் சேகரித்துப் பரப்புதல் ஆகியப் பணிகளை உத்வேகப்படுத்த முடியும். இதன் மூலம் ஊரக மக்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் விரிவாக்கக் கட்டமைப்பு ஆகியோருக்கிடையிலான தொடர்புகள் மேம்பட்டு மேலும் இறுக்கமடையும், ஊரக மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதில் தகவல்-தொழில் நுட்பத்திற்குள்ள ஆற்றலை, என்னுடைய அரசு தொடங்கி வைத்த, இணையதள வழி ஊரகச் சேவைத் (ராசி)திட்டம் செயலில் நிருபித்துக் காட்டியுள்ளது. அதில் தகவல் மையக் கணினியை இயக்குகிற இளம் பெண் ஒருவர், நச்சுத் தொற்றினால் பாதிக்கப்பட்ட காய்கறிப் பயிரின் தோற்றத்தை, வீடியோ மூலம், மதுரையிலுள்ள தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக விரிவாக்க மையத்திற்கு ஒளிபரப்பினார். அதனையடுத்து, அதற்கான அறிவியல் ரீதியான தீர்வு மறுமுனையிலிருந்து ஒளிபரப்பப்பட்டது. இதனால், 1.50 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள காய்கறிப் பயிர்கள் காப்பாற்றப்பட்டன. இணையதளம், சமுதாய வானொலி, கம்பிவடத் தொலைக்காட்சி மற்றும் நம்முடைய உழவர்கள் பயன்பெறுவதற்காகப் பல மாநில மொழி செய்தித்தாள்கள் ஆகியவை ஒருங்கிணைந்த தகவல் மற்றும்தொடர்புத் தொழில் நுட்பப் பணிகளை நம்மால் விரிவுபடுத்த இயலுமானால், வேளாண்மை உற்பத்தித் திறனில் குறிப்பிடத்தக்க உயர்வு ஏற்படுவது உறுதி.

இயற்கையின் கொடையான தண்ணீர் நமக்குக் கிடைப்பதில் தட்டுப்பாடு நிலவுகின்ற போதிலும், தமிழ்நாட்டில் வேளாண்மை, நிலைமைக்கேற்ப தன்னைத்தானே மாற்றிக் கொண்டு வலுவான உறுதியான ஊரகப் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கிற ஆற்றலைப் பெற்றுத் திகழ்கிறது. நமது உழவர்கள், அயராது கடுமையாகப் பாடுபடுகின்ற ஆற்றலையும், வறட்சியாகட்டும், வெள்ளமாகட்டும் அல்லது சுனாமிப் பேரலை என இயற்கைச் சீற்றம்



ஆகட்டும் அவை எந்த உருவில் வந்தாலும் அதனால் ஏற்படுகிறப் பாதிப்புகளை எதிர்கொண்டு போராடி மீண்டெழுகிற வலிமையையும் பெற்றுள்ளனர். ஒருங்கிணைந்து பணியாற்றி, தமிழ்நாட்டில் நீடித்த வேளாண்மை மேம்பாட்டைக் கொண்டு வருவதற்கு உழவர்கள், மாநில அரசு மற்றும் இந்த மாபெரும் பல்கலைக்கழக அறிவியலாளர்கள் ஆகிய மூவருக்குமிடையேயான, ஆற்றல் வாய்ந்த பங்காண்மை ஒன்றுதான் இப்போதைய தேவை ஆகும்.

தமிழ்நாடு வேளாண்மைக் கல்லூரி ஆராய்ச்சி நிறுவனம் கடந்த நூறாண்டுகளாகப் பல இலட்சக்கணக்கான நமது உழவர்களின் வாழ்க்கையை மாற்றியமைப்பதில் அரிய தொண்டாற்றியுள்ளது. அரிய தகவல், புதிய விதை ரகங்கள், நவீன சாதனங்கள், அறிவியல் நடைமுறைகள் ஆகியவை பற்றியத் தகவல்களை இந்தப் பகுதியிலுள்ள உழவர்களுக்குக் கொண்டு சேர்ப்பதற்காகவும், பல பயிர்களின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்காகவும், அயராது பாடுபட்டுள்ள இப்பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த அறிவியல் வல்லுநர்களையும், ஆராய்ச்சியாளர்களையும் நான் பாராட்டுகிறேன்.

வேளாண்மைக் கல்லூரியும், ஆராய்ச்சி நிறுவனமும் அமைந்துள்ள இக்கட்டடம் பல வரலாறுகளைப் படைத்துள்ளது. அதன் நூற்றாண்டு விழாவின் போது, இந்தச் சிறப்பு வாய்ந்த தருணத்தை நினைவு கூரும் வகையில் நூற்றாண்டு விழாக் கட்டடம் ஒன்றுக்கு அனுமதியளிப்பது பொருத்தமாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். ஆகவே, புதிய நூற்றாண்டு விழாக் கட்டடம் கட்டுவதற்காக, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு 3 கோடி ரூபாய் அளிப்பதாக அறிவிப்பதில் நான் அகம் மிக மகிழ்கிறேன்.

இந்த மாபெரும் நிறுவனத்தின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டத்தில் பங்கேற்பதற்கும், உங்கள் அனைவரையும் சந்தித்து வேளாண்மை குறித்த என்னுடைய கருத்துகள் சிலவற்றை உங்களுடன் பகிர்ந்து கொள்வதற்கும், இந்த மாபெரும் பாரம்பரியத்தின் ஓர் அங்கமாக இருப்பதற்கும், இந்த அரிய வாய்ப்பினை எனக்கு நல்கிய துணைவேந்தர், பேராசிரியர் சி.இராமசாமி அவர்களுக்கும், இங்குக் கூடியுள்ள அறிவியல் சமுதாயத்தினர் அனைவருக்கும் மற்றும் மாணவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய உழவர்களுக்கு, நம்முடைய சமுதாயத்திற்கு, நம்முடைய தாய் மண்ணிற்கு, இப்பெரும் நிறுவனம் இன்னும் பல நூற்றாண்டுகள் சேவை செய்து சிறக்க வேண்டுமென வாழ்த்தி அமைகிறேன்.

நன்றி.

(4.7.2005 அன்று கோயம்புத்தூர்
வேளாண்மைக் கல்லூரி – ஆராய்ச்சி
நிறுவனத்தின் நூற்றாண்டு விழாவில்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய
ஆங்கில உரையின் தமிழாக்கம்)

# மேல்நிலைக் கல்வியை ஊக்கத்துடன் கற்க, மாணவர்களுக்கும் இலவசச் சைக்கிள் வழங்கும் திட்டம்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்**

**அறிக்கை 11–7–2005**



நாட்டின் முன்னேற்றத்திற்கு அடித்தளமாக விளங்குவது மனித வள மேம்பாடு தான். மனித வள மேம்பாட்டிற்கு மிகவும் இன்றியமையாதது கல்வியே. எனவே தான், கல்வித் துறைக்கு எனது அரசு தனி முக்கியத்துவம் அளித்துப் பல்வேறு சிறப்பானத் திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. கல்வி கற்கும் மாணவ, மாணவியர் இடை நிற்றலைத் தவிர்க்கும் வகையில் அனைத்துக் குடியிருப்புகளுக்கும் ஒரு கிலோமீட்டர் தூரத்திற் குள்ளேயே, தொடக்கப்பள்ளி அமைந்திடுவதை எனது அரசு உறுதி செய்துள்ளது. அதே போன்று, அனைத்துக் குடியிருப்புகளுக்கும், 3 கிலோ மீட்டருக்குள் நடுநிலைப் பள்ளி அமைந்திடு வதையும் எனது அரசு உறுதி செய்துள்ளது. மேலும், மாணவ, மாணவியர் மிக விரும்பி ஊக்கத்துடன் கல்வி கற்றிட இலவச மதிய உணவு, இலவசச் சீருடை, இலவசப் பாடப் புத்தகங்கள், கல்வி உதவித் தொகை போன்றப் பல்வேறு நலத் திட்ட உதவிகளை எனது அரசு வழங்கி வருகிறது.

தமிழகத்தில் பெண் கல்வியைத் தீவிரமாக ஊக்குவிக்கும் அடிப்படை நோக்கத்துடன், இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத முன்னோடித் திட்டமாக மேல்நிலைக் கல்வி, அதாவது 11 மற்றும் 12–ஆம் வகுப்புப் பயிலும் ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மாணவியர், அனைவருக்கும் இலவசச் சைக்கிள் வழங்கும் புதுமைத் திட்டத்தை 2001–ஆம் ஆண்டில் நான் தொடங்கினேன். இந்த இலவசச் சைக்கிள் வழங்கும் திட்டம், மாணவிகள் தங்களது படிப்பைப் பாதியிலேயே நிறுத்தாமல் தொடர்ந்து கல்வி கற்க ஊக்கம் அளிப்பதுடன், சமுதாயத்தில் சுதந்திரமாகவும், தன்னம்பிக்கையுடனும், துணிவுடனும் செயல்பட அடித்தளம் அமைத்துத் தருவதால், இதனை 2004–ஆம் ஆண்டு விரிவுபடுத்தினேன். அதன்படி, தமிழ்நாட்டிலுள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறுகின்ற அனைத்துப் பள்ளிகளிலும், மேல்நிலைக் கல்வி, அதாவது 11 மற்றும் 12–ஆம் வகுப்புப் பயிலும் பிற்படுத்தப் பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினைச் சார்ந்த அனைத்து மாணவிகளுக்கும் இலவசமாகச் சைக்கிள் வழங்கிட நான் ஆணையிட்டேன்.

இந்தத் திட்டத்தின் மூலம் இதுவரை 11 மற்றும் 12–ஆம் வகுப்புப் பயின்று வரும் ஆதிதிராவிட, பழங்குடியின, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினைச் சார்ந்த மொத்தம் 4.64 இலட்சம் மாணவிகள் பயன் பெற்றுள்ளனர். நடப்பாண்டில், அதாவது 2005–2006–ஆம் ஆண்டில் மேலும் சுமார் 2.10 இலட்சம் மாணவியர் பயன் பெறுவர்.

இவ்வாறு, தமிழகத்தில் மேல்நிலைக் கல்வி பயிலும் மாணவியருக்கு இலவசச் சைக்கிள்கள் வழங்கப் படுவதைப் போலவே, தாங்களும் தொடர்ந்து ஊக்கமுடன் கல்வி கற்க வகை செய்யும் விதமாகவும், எளிதில் கல்விக் கூடங்களுக்குச் சென்று வர ஏதுவாகவும், இலவசச் சைக்கிள்கள் தங்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்று மேல்நிலை வகுப்புப் பயிலும் மாணவர்கள் என்னிடம் கோரிக்கை வைத்துள்ளனர்.

மாணவர்களும் முழு ஈடுபாட்டுடன் தொடர்ந்து மேல்நிலைக் கல்வியைக் கற்க ஊக்கம் அளிக்கும் வகையில், இக்கோரிக்கையைப் பரிவுடன் பரிசீலனை செய்து, மேல்நிலை வகுப்பு, அதாவது 11 மற்றும் 12–ஆம் வகுப்புப் பயிலும் ஆதிதிராவிட, பழங்குடியின, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினைச் சார்ந்த மாணவர்கள் அனைவருக்கும் இலவசச் சைக்கிள்கள் வழங்கிட நான் ஆணையிட்டுள்ளேன். இதன்படி அரசு மற்றும் அரசு உதவி பெறுகின்ற பள்ளிகளில் 11 மற்றும் 12–ஆம் வகுப்புப் பயிலும் ஆதிதிராவிட, பழங்குடியின, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினைச் சார்ந்த மாணவர்களுக்கு இலவசச் சைக்கிள்கள் வழங்கப்படும். இத்திட்டம் நடப்புக் கல்வி ஆண்டு முதலே செயல்படுத்தப்படும். 66 கோடி ரூபாய் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

தற்போது அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் இப்பள்ளிகளில் சுயநிதி அடிப்படையில் நடத்தப்படும் வகுப்புகளில் 1–ஆம் வகுப்பு முதல் 12–ஆம் வகுப்பு வரை பயிலும், மாணவ, மாணவியருக்கும் இலவசமாகப் பாடப் புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. இதே அடிப்படையில், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் சுயநிதி அடிப்படையில் நடத்தப்படும் வகுப்புகளில் 11 மற்றும் 12–ஆம் வகுப்புப் பயிலும் மாணவ மாணவியருக்கும் இலவசச் சைக்கிள்கள் வழங்கிட நான் ஆணையிட்டுள்ளேன்.

இந்த விரிவுபடுத்தப்பட்ட திட்டத்தின் மூலம் 11 மற்றும் 12–ஆம் வகுப்புப் பயின்று வரும் ஆதி திராவிட, பழங்குடியின, பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினைச் சார்ந்த சுமார் 3.65 இலட்சம் மாணவர்கள் பயன் பெறுவர் என்பதையும், மொத்தத்தில் 11 மற்றும் 12–ஆம் வகுப்புப் பயிலும் 5.75 இலட்சம் மாணவ, மாணவியர் பயன் பெறுவர் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டத்திற்காக இந்த ஆண்டு அரசு மொத்தம் 103.50 கோடி ரூபாய் செலவழிக்கும். ✶

## கூடுகட்டி வாழும் ஒரே பாம்பினம்

நல்ல பாம்பு, நாகப் பாம்பு என்றெல்லாம் குறிப்பிடப்படும் இந்திய நாகம் சுமார் 1.6 மீட்டர் நீளம் வரை வளரக் கூடியது. இந்தியத் துணைக் கண்டத்தில் இதில் பல உட்பிரிவுகள் உள்ளன. இவற்றின் விரிந்த படத்திலே ஒற்றைச் சக்கரம், இரட்டைச் சக்கரம், மூக்குக் கண்ணாடி போன்ற அடையாளங்கள் இருக்கும். வெறும் குறுக்குக் கோடு உள்ளவையும் இருக்கின்றன. கருநாகம் என்று ஒரு வகையும் உள்ளது. அஸ்ஸாமில் காணப்படும் ஒரு வகை நாகம் நச்சைச் சிறிது தூரம் வரை பீச்சக் கூடியது.

இதை யாராவது சீண்டினாலோ அல்லது தாக்க முற்பட்டாலோ உடல் நீளத்தில் மூன்றில் ஒரு பங்கை உயர்த்திக் கொண்டு படமெடுத்துச் சீறி தாக்கத் தொடங்கும். இவற்றின் இளங்குட்டிகள் மிக மூர்க்கமானவை. இது ஒரு இரவு இரைதேடி. அந்திப் பொழுதில் வயல்வெளிகளில் எலிகளையும், சுண்டெலிகளையும் வேட்டையாடும். தவளை, தேரை, பறவைகள், ஓணான்கள் முதலியனவும் இதன் உணவுதான். மற்ற பாம்புகளையும் விட்டு வைக்காது.

ஜூன் முதல் ஆகஸ்டு வரையான காலத்தில் முட்டைகள் இடும். முட்டை பொரிந்து இளம் பாம்புகள் வெளிவரும் வரை ஏறக்குறைய இரண்டு மாதகாலம் வரை பெண் பாம்பு முட்டைகளின் அருகிலேயே தங்கியிருக்கும். கறையான் புற்று, எலி வளை, வல் குழி, மரப்பொந்து மற்றும் மறைவான ஒதுக்கிடங்களில் இது முட்டைகளிடும்.

வயதான நாகப் பாம்பு மாணிக்கக் கல்லை உமிழும் என்று பெரும்பாலோர் கருதுகிறார்கள். இது யாரோ, எப்பொழுதோ புனைந்துவிட்ட கதை. இவற்றின் தலையில் மாணிக்கக் கல்லும் கிடையாது; இது அம்மாதிரி எதையும் உமிழவும் செய்யாது.

ராஜ நாகம் என்பது உண்மையில் நல்ல பாம்பல்ல! படம் எடுத்து ஆடுவதால் நல்ல பாம்பின் நெருங்கிய உறவினம் என்று கூறலாம். நச்சுப் பாம்புகளிலேயே மிகப் பெரிய பாம்பு இதுதான். உலகிலேயே மிகக் கொடிய நச்சுடைய 23 பாம்புகளில் இது 17ஆவது இடத்தைப் பெற்றுள்ளது. ஒரு கடியில் வெளியாகும் இதன் நச்சு 30 பேர்களைக் கொல்லக் கூடியதாகும்.

சுமார் 5 மீட்டர் நீளம் வரை வளரக்கூடிய இது இந்தியாவின் பல பகுதிகளிலும் தென்கிழக்கு ஆசியா, தெற்கு சீனா பகுதிகளிலும் பரவலாகக் காணப்படுகிறது. மிக மூர்க்கமானது. இதன் இரை மற்ற பாம்புகள். குறிப்பாக, சாரைப் பாம்புகளும், ஓணான்களும். இது தனது குட்டிகளைக் கூடச் சாப்பிட்டுவிடும். கூடுகட்டி வாழும் ஒரே பாம்பு இதுதான். தவிட்டு மஞ்சள் அல்லது கரும் பச்சை நிறம் கொண்டது. வாழ்நாள் முழுவதும் தன் இணையுடன் வாழக் கூடியது. இது ஒரு பகல் இரை தேடி. ஒரு தடவையில் 20 முதல் 30 முட்டைகள் வரை இடும். முட்டைகளிலிருந்து குட்டிகள் வெளிவர அறுபது நாள்கள் ஆகும். அதுவரை பெண் ராஜ நாகம் முட்டைகள் அருகிலேயே அமர்ந்திருக்கும்.

– "விந்தை உயிரினங்கள் 100" என்ற நூலிலிருந்து

❖ ❖ ❖ ❖

# தரமான கல்வியைச் சிறப்புடன் வழங்க 11,788 ஆசிரியர்கள் நியமனம்

தமிழகத்தில் உள்ள அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் கீழ் செயல்பட்டு வரும் பள்ளிகளில் பயிலுகின்ற மாணவ, மாணவியருக்குத் தரமான கல்வியைச் சிறப்புடன் வழங்கும் வகையில், 1,216 ஆரம்பப் பள்ளிகளில் தலைமையாசிரியர் பணியிடங்கள் உருவாக்கிடவும் மற்றும் அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் கீழ் செயல்படும் ஆரம்ப, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பல்வேறு இனங்களில் (various categories) காலியாக உள்ள மொத்தம் 11,788 ஆசிரியர் பணியிடங்கள் புதிதாக நிரப்பிடவும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், ஆணையிட்டுள்ளார்கள்.



பள்ளிக் கல்விக்கு முன்னுரிமை அளித்துச் சிறப்புடன் மேற்கொண்டப் பல்வேறு நடவடிக்கைகளின் பயனாக, பள்ளிக் கல்வியில் இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாகத் தமிழகத்தை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், உருவாக்கி உள்ளார்கள். பள்ளி மாணவ, மாணவியர் இடைநிற்றலைத் தவிர்க்கும் வகையில், அனைத்துக் குடியிருப்புகளுக்கும் ஒரு கிலோ மீட்டர் தூரத்திலேயே தொடக்கப் பள்ளியும், 3 கிலோ மீட்டர் தொலைவுக்குள்ளாக நடுநிலைப் பள்ளியும் அமைந்து இருப்பதைத் தமிழ்நாடு அரசு உறுதி செய்து உள்ளது. பள்ளிக் கல்வியை மேம்படுத்தி மாணவ, மாணவியர் மிக விரும்பி ஊக்கத்துடன் கல்வி கற்றிட, இலவச மதிய உணவு, இலவசச் சீருடை, இலவசப் பாடப் புத்தகங்கள், இலவசச் சைக்கிள் மற்றும் கல்வி உதவித் தொகை போன்ற பல்வேறு நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான தமிழக அரசு வழங்கி வருகிறது.



தமிழகத்தில் உள்ள ஆரம்பப் பள்ளி, நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளி ஆகியவற்றில் பயிலுகின்ற மாணவ, மாணவியருக்குத் தரமான கல்வியைச் சிறப்புடன் வழங்கும் வகையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற 2001ஆம் ஆண்டு முதல் 2003ஆம் ஆண்டு வரையிலான மூன்று ஆண்டுகளில், 22,178 ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்பட்டன. அதன் பின்னர், பணியிலிருந்த ஆசிரியர்கள் ஓய்வு, பதவி உயர்வு மற்றும் தோற்றுவிக்கப் பட்டப் புதிய பணியிடங்கள் ஆகியவற்றின் காரணமாக ஏற்பட்ட 22,817 ஆசிரியர் பணியிடங்களையும் நிரப்ப, 20.7.2004 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், ஆணையிட்டு இப்பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளன.

தற்போது மேலும், தமிழகத்தில் உள்ள அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் கீழ் செயல்பட்டு வரும் 1,216 ஆரம்பப் பள்ளிகளில் தலைமையாசிரியர் பணியிடங்கள் உருவாக்கிடவும், அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் கீழ் செயல்படும் ஆரம்ப, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பல்வேறு இனங்களில் (various categories) காலியாக உள்ள 11,788 ஆசிரியர் பணியிடங்கள் புதிதாக நிரப்பிடவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், ஆணையிட்டுள்ளார்கள்.

1999–2000ஆம் ஆண்டிற்குப் பிறகு தொடங்கப்பட்ட ஆரம்பப் பள்ளிகளில் இரண்டு அல்லது அதற்கு மேல் இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் இருந்து தலைமையாசிரியர் பணியிடத்திற்கு அனுமதி இல்லாத 860 பள்ளிகளில், தலைமையாசிரியர் பதவியிடம் அமையும் வகையில், தற்போது அப்பள்ளியில் உள்ள இடைநிலை ஆசிரியர் பணியிடம் ஒன்றை தலைமையாசிரியர் பணியிடமாக நிலை உயர்த்தி இந்த 860 ஆரம்பப் பள்ளிகளிலும், தலைமையாசிரியர்கள் நியமித்திட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், ஆணையிட்டுள்ளார்கள்.

2003–2004ஆம் ஆண்டு "அனைவருக்கும் கல்வி" (சர்வசிக்ஷா அபியான்) திட்டத்தின் கீழ் திறக்கப்பட்ட 356 ஆரம்பப் பள்ளிகளில், இடைநிலை ஆசிரியர் பணியிடங்களைத் தலைமையாசிரியர் பணியிடங்களாக நிலை உயர்த்தி, இந்த 356 ஆரம்பப் பள்ளிகளிலும் பணியில் அமர்த்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், ஆணையிட்டுள்ளார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இவ்வாறு 1,216 ஆரம்பப் பள்ளிகளில் தலைமையாசிரியர்கள் பணியிடங்களை உருவாக்கி ஆணையிட்டதன் மூலமாக, தமிழகத்தில் உள்ள பள்ளிக் கல்வித் துறையின் கீழ் இயங்கும் எந்த ஒரு ஆரம்பப் பள்ளியும் தலைமையாசிரியர் இன்றி இயங்கவில்லை என்ற ஒரு சிறப்பான நிலை உருவாகி உள்ளது.

தமிழகத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியம், நகராட்சி ஆரம்ப மற்றும் நடுநிலைப்பள்ளிகள், மாநகராட்சி மற்றும் அரசு உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 2005–2006ஆம் ஆண்டு, பணியிலிருந்த ஆசிரியர்கள் ஓய்வு, பதவி உயர்வு மற்றும் தோற்றுவிக்கப்பட்ட புதிய பணியிடங்கள் ஆகியவற்றின் காரணமாக ஏற்பட்ட இடைநிலை ஆசிரியர்கள், உடற்பயிற்சி ஆசிரியர்கள், சிறப்பு ஆசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள், முதுநிலை பட்டதாரி ஆசிரியர்கள் ஆகிய பல்வேறு இனங்களில் காலியாக உள்ள 11,788 பணியிடங்களை உடனடியாக நிரப்பிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், ஆணையிட்டுள்ளார்கள். இதன் வாயிலாகப் பள்ளிக் கல்வி மேலும் சிறப்புடன் மேம்பட்டு, தமிழகத்தில் உள்ள அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் கீழ் செயல்படும் பள்ளிகளில் பயிலுகின்ற மாணவ, மாணவியர் அனைவரும் தரமான கல்வியை பெறுவார்கள்.

□ □ □

## நார்த்தாமலை

*நார்த்தா மலை என்பது மதுரையிலிருந்து மானாமதுரை செல்லும் இருப்புப் பாதையில் உள்ள சிறு கிராமம். ரெயில் நிலையத்திலிருந்து நான்கு கி.மீ. தூரத்தில் உள்ளது. முதலாம் இராஜராஜன் காலத்தில் தெலுங்க குலகாலபுரம் என்றும் மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் குலோத்துங்க சோழ பட்டிணம் என்றும் பின்னாளில் நார்த்தாமலை என்றும் வழங்கி வருகிறது. எட்டு சிறு குன்றுகளால் சூழப்பட்டது. அவற்றில் முக்கியமானது மேலை மலையும் கடம்ப மலையும் ஆகும். இங்கு சிற்ப சிறப்பு வாய்ந்த கோயில்கள் கடம்ப மலையிலுள்ள இராஜராஜன் காலத்தில் கட்டப்பட்ட கடம்பர் கோயிலும், மேலை மலையில் பல்லவர் காலத்து இரண்டு குடைவரைக் கோயில்களும், விஜயாலய சோழீசுவரம் என்ற சோழர் காலத்துக் கற்கோயிலுமேயாகும்.*

*மேலை மலையில் மூன்று கோயில்கள் உள்ளன. இவற்றில் இரண்டு குடைவரைக் கோயில்கள் வடக்கிலுள்ள குகைக் கோயிலுக்குச் 'சமணர் குடகு' என்று பெயர். பாறையிலேயே குடைந்தெடுத்த மூலவரும் நான்கு தூண்கள் கொண்ட அர்த்த மண்டபமும் கொண்டது. கருவறையில் மூலவர் சிலை காணப்படவில்லை. அர்த்த மண்டபத்திற்கும் குகைக்கும் இடையிலுள்ள பாறையில் விஷ்ணுவின் பன்னிரண்டு சிற்பங்கள் உள்ளன. ஆதியில் இது சமண ஆலயம் என்று சிலர் கூறுகிறார்கள்.*

*இதற்கு எதிராக துவார பாலகர்களுடன் கூடிய விஜயாலய சோழீசுவரம் கற்கோயில் உள்ளது. இக்கோயில், மத்தியில் பிரதான கோயிலும் சுற்றிலும் ஏழுசுற்றுக் கோயில்களும் இவற்றைச் சூழ்ந்துள்ள கல்மதில்களும் அடங்கியது. வெளியே சதுரமாகவும் உள்ளே வட்ட வடிவமும் கொண்டது. இக்கோயிலின் கருவறை எட்டடி உயரமும், ஒன்பதடி குறுக்களவும் கொண்டது இது.*

*விமானத்தின் மூலைகளில் சிம்மங்கள், ரிஷபங்கள் ஆகியன செதுக்கப்பட்டுள்ளன. நான்கு குவிமாடங்களில் தட்சிணாமூர்த்தி, சிவபார்வதி சிலைகள் உள்ளன. அர்த்த மண்டபச் சுவர்களில் பல சுவரோவியங்களும் உள்ளன. இவை காலத்தால் பிற்பட்டவை.*

நம்மவர் செய்த விந்தைகள் என்னும் நூலிலிருந்து...



# பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு 131 கோடி ரூபாய் மதிப்பில் 416 விடுதிகள்

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தற்போது வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபைச் சார்ந்த மாணவ, மாணவிகள் தங்கிப் பயிலும் 416 விடுதிகளுக்கு, 131.04 கோடி ரூபாய் மதிப்பில், சொந்தக் கட்டடங்கள் கட்ட ஆணையிட்டுள்ளார்கள்.



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 2001ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பு ஏற்றபோது, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபைச் சார்ந்த மாணவ, மாணவிகள் தங்கிப் பயின்று வந்த மொத்தம் உள்ள 973 விடுதிகளில், 202 விடுதிகள் மட்டுமே சொந்தக் கட்டடங்களில் இயங்கி வந்தன. மற்ற விடுதிகள் போதிய இடவசதியோ, தேவையான அடிப்படை வசதிகளோ இல்லாமல் தனியார் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வந்ததை அறிந்த, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இவற்றிற்குச் சொந்தக் கட்டடங்கள் கட்ட ஆணையிட்டார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், ஆணைப்படி, 2001–2002 முதல் 2004–2005 வரை 103.95 கோடி ரூபாய் செலவில் 345 விடுதிகளுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டப்பட்டன. மேலும், 2005–2006ஆம் ஆண்டிற்கான ஆளுநர் உரை விவாதத்தின் பதிலுரையின் போது, தமிழ்நாட்டில் வாடகைக் கட்டடங்களில் இயங்கும் அனைத்து பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் விடுதிகளுக்கும், இவ்வாண்டு (2005–2006) சொந்தக் கட்டடம் கட்டப்படும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், அறிவித்தார்கள். இதன்படி, போதிய இடவசதியோடும், அனைத்து அடிப்படை வசதிகளோடும் 131.04 கோடி ரூபாய் செலவில் 416 விடுதிகளுக்கும் சொந்தக் கட்டடம் கட்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தற்போது ஆணையிட்டுள்ளார்கள்.

இதன் மூலம், தமிழகத்தில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபைச் சார்ந்த மாணவ, மாணவிகள் தங்கிப் பயிலும் அனைத்து விடுதிகளும் போதிய இடவசதியும், அனைத்து அடிப்படை வசதிகளும் கொண்ட சொந்தக் கட்டடங்களில் இயங்கும் என்ற நிலையை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், உருவாக்கி உள்ளார்கள்.

◆ ◆ ◆

# ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி திரு.கே.சம்பத் அவர்கள் தலைமையிலான விசாரணை ஆணைய அறிக்கை

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம், **13.7.2005** அன்று தலைமைச் செயலகத்தில், கும்பகோணம் தனியார் பள்ளியில் 16.7.2004 அன்று, *ஏற்பட்ட தீ விபத்திற்கான காரணங்கள்* மற்றும் சூழ்நிலைகள் குறித்து விசாரிக்கவும், *இதுபோன்ற துயரச் சம்பவம்* இனிமேல் நடைபெறாமல் தடுப்பதை உறுதி செய்யும் வகையிலும், மேற்கொள்ள வேண்டிய அனைத்துச் சீரமைப்பு நடவடிக்கைகள் குறித்து பரிந்துரை செய்ய நியமிக்கப்பட்ட விசாரணை ஆணையத்தின் தலைவர், ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி திரு.கே.சம்பத் அவர்கள், தனது விசாரணையை முடித்து ஆணைய அறிக்கையினை நேரில் சமர்ப்பித்தார்.



தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் காசிராமன் தெருவில் உள்ள தனியாருக்குச் சொந்தமான ஸ்ரீ கிருஷ்ணா தொடக்கப் பள்ளியில், 16.7.2004 அன்று ஏற்பட்ட தீ விபத்தில் பள்ளிக் குழந்தைகள் பலர் உயிரிழந்தனர். இக்கொடிய விபத்து பற்றிய செய்தி அறிந்தவுடன், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், உடனடியாக அன்றைய தினமே நேரில் சென்று விபத்து நடந்த இடத்தைப் பார்வையிட்டு, இவ்விபத்தில் குழந்தைகளை இழந்து தவிக்கும் பெற்றோர்களுக்கும், உறவினர்களுக்கும், காயமடைந்த குழந்தைகளுக்கும், ஆறுதலையும், அனுதாபத்தினையும் தெரிவித்தார்கள். இத் தீ விபத்தில் இறந்த பள்ளிக் குழந்தைகள் ஒவ்வொருவரின் குடும்பத்திற்கும் ரூபாய் 1 இலட்சமும், பலத்த காயமடைந்த குழந்தைகளுக்கு, தலா ரூபாய் 25 ஆயிரமும், சாதாரணக் காயம் அடைந்த குழந்தைகளுக்குத் தலா ரூபாய் 10 ஆயிரமும், முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், உத்தரவிட்டார்கள்.

மேலும், தீ விபத்தில் காயமுற்ற குழந்தைகளுக்கு மிகச் சிறந்த மருத்துவச் சிகிச்சைகளை வழங்குமாறு மாவட்ட நிருவாகத்திற்கும், மருத்துவத் துறையினருக்கும் உடனடியாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், ஆணையிட்டார்கள். சென்னையில் இருந்தும், மாநிலத்தின் பல பகுதிகளில் இருந்தும், புகழ் பெற்ற மருத்துவர்களை வரவழைத்து, காயமுற்ற குழந்தைகளுக்கு மருத்துவ உதவி அளிக்க உத்தரவிட்டார்கள். மாவட்ட நிருவாகமும், மிக விரைந்து செயல்பட்டு, தேவையான வசதிகளையும், உதவிகளையும் வழங்கியது. அது மட்டுமல்லாமல், சிறப்பு மருத்துவச் சிகிச்சை தேவைப்பட்ட குழந்தைகளைச் சென்னைக்குக் கொண்டு வந்து, பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சை நிபுணர்கள் மூலம் சிகிச்சை அளிக்கவும் ஆணையிட்டார்கள். அதன்படி, சிறப்பு மருத்துவச் சிகிச்சைத் தேவைப்பட்ட 2 குழந்தைகள் சென்னைக்குக் கொண்டு வரப்பட்டு, அப்பல்லோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அவர்களுக்குச் சிறந்த முறையில் சிகிச்சை அளிக்கப்பட்டது.

விபத்து நடந்த பள்ளியை உடனடியாக மூடவும், அந்தப் பள்ளிக்கு வழங்கப்பட்டிருந்த அனுமதியை ரத்து செய்யவும், அந்தப் பள்ளியின் மாணவ மாணவிகளை வேறு பள்ளிக்கு உடனடியாக இட மாற்றம் செய்யவும் முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள். மேலும், இது போன்ற துயர நிகழ்ச்சி எதுவும் எதிர்காலத்தில் நடைபெறவே கூடாது என்பதால், தமிழகத்தில் உள்ள அனைத்துப் பள்ளிக் கட்டடங்களிலும் தக்க பாதுகாப்பை உறுதி செய்திடும் வகையில், போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், உத்தரவிட்டார்கள்.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தங்கள் மாவட்டங்களில் உள்ள பள்ளிகளை ஆய்வு செய்து, கூரைக் கட்டடங்கள் உள்ள பள்ளிகளின் பட்டியலைத் தயாரிக்க, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால், அறிவுறுத்தப்பட்டார்கள். அதனைத்தொடர்ந்து, கீற்று கூரைக் கொட்டகை கொண்ட பள்ளிகள், ஓலைக் கூரைகளை அகற்றித் தீப்பிடிக்காத கூரைகளை அமைக்கவும், அவ்வாறு செய்யத் தவறினால், அத்தகைய பள்ளிகளின் அங்கீகாரம் ரத்து செய்யப்பட்டு, நிருவாகத்தினர் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், உத்தரவிட்டார்கள்.

இந்தத் துயர நிகழ்வு குறித்து விசாரணை மேற்கொள்ள, 1952–ஆம் ஆண்டு விசாரணை ஆணையச் சட்டத்தின் கீழ் ஒரு விசாரணை ஆணையத்தை அமைக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், ஆணையிட்டார்கள். விசாரணை ஆணையமாகச் செயல்பட, சென்னை உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி திரு. கே.சம்பத் அவர்கள், நியமிக்கப்பட்டார். தீ விபத்து நடைபெற்ற சூழல் மற்றும் காரணங்கள் குறித்தும், இனிமேல் அதுபோன்ற சம்பவம் நடைபெறாமல் இருப்பதை உறுதி செய்யும் வகையில் மேற்கொள்ள வேண்டிய அனைத்து சீரமைப்பு நடவடிக்கைகள் குறித்தும், பரிந்துரை வழங்க இந்த ஆணையம் அமைக்கப்பட்டது. இந்த ஆணையத்திற்கு உதவிடும் வகையில் நிபுணர் குழு ஒன்று அமைக்கப்பட்டது.

இதன்படி, கும்பகோணம் தீ விபத்திற்கான காரணங்கள் மற்றும் சூழ்நிலைகள் குறித்து விசாரிக்கவும், இதுபோன்ற துயரச் சம்பவம் இனிமேல் நடைபெறாமல் தடுப்பதை உறுதி செய்யும் வகையிலும், மேற்கொள்ள வேண்டிய அனைத்துச் சீரமைப்பு நடவடிக்கைகள் குறித்து பரிந்துரை செய்ய ஆலோசனை வழங்கவும், ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி திரு.கே.சம்பத் அவர்கள் தலைமையில், 20.7.2004 அன்று அமைக்கப்பட்ட விசாரணைக் கமிஷன், தனது விசாரணையை முடித்து அறிக்கையை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடத்தில் 13.7.2005 அன்று நேரில் சமர்ப்பித்தது. ★

**பார்வை இழந்தும் படித்து உயர்ந்தவர் !**

ஜப்பானைச் சேர்ந்தவர் ஹனாவா ஹாகிச்சி. முகாஷி மாகாணத்தில் பிறந்த இவர் மிகப் பெரிய அறிவாளி. 1772 லிருந்து 1823 வரை வாழ்ந்த இவருக்கு தனது ஏழாவது வயதில் கண்பார்வை போய்விட்டது. எஞ்சிய 44 இருண்ட ஆண்டுகளையும் கல்வி கற்பதிலும், கற்பிப்பதிலுமே செலவிட்டார். அவரது நினைவாற்றல் அற்புதமானது. தன் வாழ்நாளில் சேமித்த 4,00,000 எழுத்துப் பிரதிகளின், சுவடிகளில் அடங்கியுள்ள செய்திகளைத் தன் நினைவில் செதுக்கிக் கொண்டார். 2,820 பகுதிகளைக் கொண்ட (வால்யூம்) குண்ஷோ ரூய்ஜு என்ற நூலை ஹாகிச்சி தொகுத்துள்ளார். அவ்வளவு பெரிய நூலை அதுவரை யாருமே தொகுத்ததில்லை என்பது குறிப்பிடத்தக்கது. 1910ல் இந்நூல் மறுபதிப்பு செய்யப்பட்டது. ஜப்பானிய மாணவர்களும், வரலாற்று ஆய்வாளர்களும் கிடைத்தற்கரிய பேறாக கருதும் நூல் இது. இத்தகையச் சிறப்பு வாய்ந்த அறிஞர் ஹாகிச்சி, தன்னால் காண முடியாத பல இலக்கியங்களைப் படிக்கக் கேட்டு அறிந்து கொள்வதற்காக வாகாகுசோ பள்ளி என்றதோர் நிறுவனத்தை நிறுவினார்.

– **"விந்தை – விநோதம் விசித்திரம்!"** என்னும் நூலிலிருந்து




# சென்னையை மையமாகக் கொண்டு தென்னக எரிவாயுக் கட்டமைப்பு மற்றும் திரவ இயக்க வாயு மையம் அமைக்கப்பட வேண்டும்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
**புதுதில்லியில் ஆற்றிய உரை**

பத்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் இடைக் கால மதிப்பீட்டைப் பரிசீலிப்பதற்கென்றே முக்கியமாகக் கூட்டப்பட்டுள்ளத் தேசிய வளர்ச்சி மன்றத்தின் இந்த 51ஆவதுக் கூட்டத்தில் கலந்துகொள்வதில் நான் அகம் மிக மகிழ்கிறேன். மத்தியத் திட்டக்குழு தயாரித்து அளித்துள்ள இந்த இடைக்கால மதிப்பீட்டு அறிக்கையானது, நமது பொருளாதார நிலை பற்றிய ஒரு புதியக் கணிப்பு என்பதோடல்லாமல், பொருளாதார வளர்ச்சி வேகத்தை, மேலும் அதிகரிக்க, நாம் செல்லவேண்டியத் திசையையும் நமக்குக் காட்டுகிறது.

மாண்புமிகு பிரதமர் அவர்கள், இக்கூட்டத்தில் சில முக்கியமானப் பிரச்சினைகளை முன்வைத்து, இங்கு வருகை புரிந்துள்ள முதலமைச்சர்களின் கருத்துகளைக் கோரியுள்ளார்.

என்னுடைய உரை இங்கே சுற்றனுப்பப்பட்டுள்ளது. இதனை அன்புகூர்ந்து கருத்தில் கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.



இங்கு எழுப்பப்பட்ட அனைத்துப் பிரச்சினைகளையும் பற்றிய தமிழ்நாடு அரசின் கருத்துக்கள், அதில் விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் முக்கியமான சிலவற்றைப் பற்றி இங்கே நான் சுருக்கமாகக் கூற விரும்புகிறேன்.

இலட்சோபலட்ச ஏழை எளிய மக்களுக்கு உண்மையிலேயே பயனளிக்கின்றச் சமச்சீரான வளர்ச்சிக்கான வீதத்தை எட்ட வேண்டுமானால், நாம் வேளாண்மை, பாசனம் மற்றும் ஊரக மேம்பாடு ஆகிய துறைகளில் அதிகக் கவனம் செலுத்த வேண்டுமென்பதில் எவ்வித ஐயத்திற்கும் இடமில்லை. மதிப்பீட்டு அறிக்கை, வேளாண்மைத்துறையின் வளர்ச்சி வேகம் குறைந்துள்ளது குறித்த கவலையைத் தெரிவித்துள்ளது. அது சரியே. இத்துறையில் ஒரு புதிய உத்வேகத்தைப் பெறுவது எப்படி? இதற்கு நாம் வழக்கமானச் சிந்தனை வட்டத்திலிருந்து வெளியேறி புதிய கோணத்தில் சிந்திக்க வேண்டும்.

தற்போதுள்ளப் பாசன ஏற்பாட்டு முறைகளைச் சீரமைப்பதற்கு முன்னுரிமை அளிக்கப்படவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. விரைவுபடுத்தப்பட்ட பாசனப் பயன் திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டப் பாசன ஏற்பாட்டு முறைகளைச் சீரமைப்பது குறித்து, நான் பலமுறை வலியுறுத்தியபோதிலும், இதில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை என்று நான் அறிகிறேன். நீர் ஆதாரத் தொகுப்புத்திட்டம்–II, இருக்கின்ற நீர் ஆதாரங்களைச் செம்மையாகப் பயன்படுத்த வகை செய்வதால் இதற்கு அதிக முன்னுரிமை அளிக்கப்படவேண்டும்.

மாபெரும் பாசனத் திட்டங்கள் பற்றி இங்கே குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், இவை எல்லாமே அந்தந்த மாநிலங்களுக்கு மட்டுமே பயனளிக்கக் கூடியவையாகும். நதிநீர் இணைப்புத் திட்டம் ஏன் கிடப்பில் போடப்பட்டுள்ளது? மாண்புமிகு பிரதமர் அவர்களே! மகாநதியையும், காவிரியையும் முதற்கண், இணைத்து, பின் குந்தாறு நதியையும் இணைத்தால், தீபகற்பப் பகுதி முழுவதற்குமே புதுவாழ்வு கிடைக்கும். அந்தந்த மாநிலங்கள் மட்டுமே பயன்பெறுகிறத் திட்டங்களை விட, இத்திட்டத்திற்கு முன்னுரிமை அளித்து நிறைவேற்றத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

சிறிய அளவிலான நீர்வரத்துத் திட்டத்தைச் சீரமைத்துப் பெரிய அளவில் புதிதாகத் தொடங்கவேண்டும் என்பதை நான் முழுமையாக ஏற்றுக் கொள்கிறேன். தமிழ்நாட்டில், இவ்வாண்டில் சிறிய அளவிலான 1000 நீர்வரத்துத் திட்டங்களை நாங்கள் மேற்கொண்டுள்ளோம்.

மாண்புமிகு பிரதமர் அவர்கள், வேளாண்மைப் பணிகளைப் பல்திறப்படுத்துதல் குறித்து குறிப்பிட்டுள்ளார்கள்.

மாற்றுப் பயிர்த் திட்டத்திற்கு, நான் அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறேன். இது குறித்து உங்களுக்கும் நான் எழுதியுள்ளேன். வேளாண்மைப் பணிகளைப் பல்திறப்படுத்துவதற்கு ஆக்கம் அளித்திட எங்களுக்குச் சிறப்புத் தொகுப்புதவி தேவைப்படுகிறது. உயிரி டீசலை மேம்படுத்தும் திட்டம் சரியானதே. நான் இதனை வரவேற்கிறேன். தமிழ்நாட்டில், வானம் பார்த்த பூமிகளில் கரும்பு, காட்டாமணக்கு ஆகியவற்றிற்குப் பதிலாக இனிப்புச் சோளம், சர்க்கரை வள்ளிக்கிழங்கு ஆகியவற்றின் சாகுபடியை நான் தீவிரப்படுத்தியுள்ளேன்.

மதிப்பீட்டு அறிக்கையில் இடம்பெற்றுள்ள, உரவிலை நிர்ணயம் குறித்த தொலைநோக்குக் கொள்கை மற்றும் பொது விநியோக முறையைச் சீரமைப்பது குறித்த பரிந்துரைகள் தொடர்பாக, நாம் எச்சரிக்கையோடு செயல்படவேண்டுமென்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

உரமானியத்தைக் குறிவைத்து நாம் சட்டென ஒரு முடிவு எடுத்துவிடக்கூடாது. அப்படி எடுத்தோமானால் அது விவசாயிகளுக்கு எதிரானதாக அமைந்துவிடும்.

பொது விநியோக முறையின்கீழ் விற்பனை செய்யப்படும் அரிசியின் விலையை அதிகரிப்பதற்கு அல்லது குறிப்பிட்ட ஒரு பகுதி மட்டுமே பொருந்துமாறு செய்வது குறித்த எந்த ஒரு நடவடிக்கையும் எனக்கு உடன்பாடானதல்ல.

அண்மையில், அடுத்தடுத்து ஏற்பட்ட வறட்சியின்போது, பொது விநியோக முறைதான் பட்டினிக் கொடுமையை அண்டவிடாமல் தடுத்தது என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். நாம் எந்தவொரு சீர்திருத்தம் செய்வதானாலும் மிகுந்த எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும். அவசரக் கதியில் எதுவும் செய்யாமல் இருப்பது நல்லது.

பாசனம் மற்றும் நீர்வழங்கல் திட்டங்களில் ஏற்பட்ட இழப்பை ஈடுசெய்ய, நீண்டகால அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இழப்புகளைக் குறைக்க, என்னுடைய அரசு ஏற்கெனவே 2003ஆம் ஆண்டிலேயே தேவையான மாற்றங்களைச் செய்துள்ளது.

வேளாண்மை விரிவாக்கம், கடன் வழங்குதல், இடுபொருள் வழங்கும் முறை ஆகியவற்றிற்கு, ஆதரவு அளித்துவரும் நடைமுறைகளுக்குப் புத்தெழுச்சி ஊட்ட வேண்டியதன் அவசியம் குறித்து, மாண்புமிகு பிரதமர் வெளியிட்டுள்ளக் கவலையை நானும் பகிர்ந்து கொள்கிறேன்.

தகவல் தொழில்நுட்பத் துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை முழுமையாகப் பயன்படுத்திட, வேளாண் விரிவாக்க முறையை நவீனப்படுத்திக் கொள்ள வேண்டும். விரிவாக்கப்பணிகளை முழுமையாக ஆய்வு செய்து மாற்றியமைக்க வேண்டும் என்ற கருத்தை நானும் ஏற்றுக்கொள்கிறேன். தமிழ்நாட்டில் இதைத்தான் நாங்கள் செய்து வருகிறோம்.

அடுத்தடுத்து நாம் சந்தித்த வறட்சிகளால், பண்ணைக் கடன், ஒரு பிரச்சினையாக மாறிவிட்டது. விவசாயிகளுக்குக் கடன் நிவாரணம் அளிக்க வேண்டுமென்று நான் மிகவும் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவுக் கடன் வழக்கு செயற்பாட்டின் செயல்திறனை ஆய்வு செய்த, பணிக்குழுவின் பரிந்துரைகள் நம் முன் உள்ளன. இதில் துரதிருஷ்டம் என்னவென்றால், விவசாயிகளின் கடன்களைக் குறைப்பது குறித்த பரிந்துரை எதுவுமே அதில் இல்லை. மிகவும் கடுமையானத் தகுதி நிபந்தனைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இது கூட்டுறவுக் கடன் வழங்கும் ஏற்பாட்டைக் கலைத்துவிடுவதற்கு ஒப்பானதாகும். மாநில அரசுகள் கூட்டுறவுக் கடன் வழங்கும் அமைப்பில் தங்களுக்குள்ளப் பங்கைத் திரும்பப் பெற்றுக் கொண்டு வெளியேறிவிட வேண்டும் என்ற பரிந்துரை விவேகமானதல்ல. வேறு மன்றத்தில் இப்பிரச்சினைகள் அனைத்தும் குறித்து அலசி ஆராயப்பட வேண்டுமென்று நான் கருதுகிறேன்.

தமிழ்நாட்டில், வறுமையை விரைந்து குறைத்திட வேண்டும் என்ற குறிக்கோளை எய்தும் பொருட்டு, ஏழை, எளிய மக்களை நேரடி இலக்காகக் கொண்ட இரு புதிய திட்டங்களை நான் தொடங்கியுள்ளேன். இடைக்கால மதிப்பீட்டு அறிக்கை நேரடி தலையீட்டிற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கவில்லை என்றே எனக்குத் தோன்றுகிறது. சிறு கடன் வழங்கல் திட்டத்தில், சுய உதவிக்குழுக்கள் அடைந்துள்ள வெற்றி, வாழ்வாதாரத் திட்டங்களுக்கு, இன்னும் கூட அதிக முக்கியத்துவம் அளிக்கவேண்டும் என்பதையே நமக்கு உணர்த்துகிறது.

மாண்புமிகு பிரதமர் அவர்களே! தேசிய வளர்ச்சித் திட்டத்தை (Bharat Nirman Programme) நீங்கள் தொடங்கியுள்ளீர்கள். இத்திட்டத்தை நான் வரவேற்கிறேன். ஆனால், தமிழ்நாட்டைப் போன்ற ஒரு மாநிலத்தில், வெவ்வேறு துணைக் குறி இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டாலன்றி இத்திட்டம் பொருளார்ந்ததாக இராது. எடுத்துக்காட்டாக, தமிழ்நாட்டில் சாலைகளைப் பொறுத்தவரையில், 1000 மக்கள்தொகை உள்ள குடியிருப்புகளுக்குச் சாலை வசதி அளிக்கப்பட வேண்டும் என்பதற்குப் பதிலாக, 250 மக்கள்தொகை உள்ள குடியிருப்புகளுக்குச் சாலை வசதி அளிக்கப்படவேண்டும் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட வேண்டும். ஏனெனில், 1000 மக்களுக்கு என்ற இலக்கை நாங்கள் ஏற்கெனவே எய்திவிட்டோம்.

பாசனத்தைப் பொறுத்தவரை, எங்களுடைய மேற்பரப்பு நீர் ஆதாரம் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டுவிட்டதால், புதிய பாசன வளம் பற்றிய வினாவுக்கே இடமில்லை என்று நான் கருதுகிறேன். இந்த வகையில் வேறுபட்டத் திட்ட உத்தி வேண்டாமா? தமிழ்நாட்டைப் போன்ற மாநிலத்திற்கானத் திட்டத்தைத் தயாரிக்கும்போது, இந்தப் பிரச்சினைகளையெல்லாம் விரிவாகப் பரிசீலிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஒவ்வொரு வறியக் குடும்பத்தையும் சேர்ந்த வயது வந்த நபர் ஒவ்வொருவரும், ஓராண்டில் குறைந்தது 100 நாட்களுக்காவது, வேலைவாய்ப்பைக் கிடைக்கச் செய்வதற்கான வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டக் கோட்பாட்டை நான் வரவேற்கிறேன். அறிவிக்கப் பட்டுள்ள இத்திட்டத்தில், மாற்றியமைக்கப்பட வேண்டிய

சில அம்சங்கள் உள்ளன. வேலை வாய்ப்பு இல்லாதவர்களுக்கு உதவித்தொகை வழங்குவது, மாநில அரசின் பொறுப்பாக இருக்கவேண்டும் என்று இத்திட்டம் கூறுகிறது. அவ்வாறு வேலைவாய்ப்பில்லாதவர்களுக்கு உதவித்தொகை வழங்குவதற்காகும் செலவு முழுவதையும் மத்திய அரசு ஈடுசெய்யவேண்டும் என்பது எங்களுடைய ஆய்ந்த கருத்தாகும். அறிவிக்கப்பட்ட திட்டச் செலவில் 25 சதவிகிதத்தை மாநில அரசு ஏற்கவேண்டும் என்று கூறுகிறது.



இதனால், மாநிலங்களுக்குப் பெரும் நிதிச்சுமை ஏற்படும். மாநிலத்தின் பங்களிப்பு 10 சதவிகிதமாகக் குறைக்கப்படவேண்டும். இத்திட்டத்தின்கீழ் பயனடைவோரில் குறைந்தது 50 சதவிகிதத்தினர் மகளிராக இருப்பது கட்டாயமாக்கப்படவேண்டும். இத்திட்டம், எளிதில் பின்பற்றக்கூடிய, மேலும் நீக்குப்போக்கு உடையதாக இருக்கின்ற வகையில், பல்வேறு ஊரகப் பணிகளையும் உள்ளடக்கி, வேலைகளின் தன்மை விரிவு படுத்தப்படவேண்டும்.

இவை யாவுமே, வேலைவாய்ப்பு உத்தரவாதம் அளிப்பது குறித்த உத்தேசச் சட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படவேண்டிய எனது கருத்துகளாகும்.

மின்சாரம் மற்றும் குடிநீருக்கு, விலை நிர்ணயிப்பதற்கான அமைப்புகளை ஏற்படுத்தும் பிரச்சினையை மாண்புமிகு பிரதமர் அவர்கள் எழுப்பியுள்ளார்கள். எங்களை மிகவும் பலவீனப்படுத்தி விட்ட, அடுத்தடுத்து தாக்கிய வறட்சியின் பிடியிலிருந்து, நாங்கள் தற்போதுதான் மீண்டு வந்து கொண்டிருக்கிறோம் என்பதை நாம் மனதில் கொள்ளவேண்டும். எனவே, இதில் நிதானப் போக்குத் தேவை. இதைத் திடீரென செயற்படுத்தக்கூடாது.

சமூகத் துறைகள் தொடர்பாக, பல்வேறு பிரச்சினைகள் எழுப்பப்பட்டுள்ளன. இவை எல்லாவற்றிலுமே தமிழ்நாடு தொடர்ந்து சாதனை புரிந்து முதன்மை பெற்றுத் திகழ்கிறது. மனிதவள மேம்பாட்டுக் குறியீட்டின் அடிப்படையில், தமிழ்நாடு மூன்றாம் இடத்தில் உள்ளது. புத்தாயிரம் ஆண்டு வளர்ச்சி இலக்குகளை, முன்கூட்டியே நாங்கள் இந்தத் துறைகளில் நிர்ணயிக்கப்பட்டுள்ள பிற இலக்குகளிலும்கூட, நாங்கள் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறோம். அனைவருக்கும் கல்வித் திட்டத்தில், தமிழ்நாட்டின் சாதனையை மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சர் பாராட்டியுள்ளார். மாண்புமிகு பிரதமர் எழுப்பிய பிரச்சினைகள் குறித்து, எனது உரையில் விரிவானக் கருத்துகளை நான் தெரிவித்துள்ளேன். குறிப்பாக, ஆசிரியர் பணிக்கு வராதிருப்பதைக் கட்டுப்படுத்தும் பிரச்சினையையும், ஆசிரியர் பணியின் தரத்தை மேம்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டியதன் அவசியத்தையும் குறித்து, நாங்கள் சிந்தித்து நடவடிக்கை எடுத்துள்ளோம். அதிகரித்து வருகின்ற இடைநிலைக் கல்வித் தேவையைச் சமாளிப்பதில் புதுமைகளைப் புகுத்த வேண்டியதன் அவசியத்தையும், இதுதொடர்பாகத் தனியார் பங்கேற்பை நாம் நாடலாம் என்பதையும் நான் ஒப்புக்கொள்கிறேன். உதவிபெறும் பள்ளிகள் குறித்த நமது ஏற்பாட்டு முறை ஒரு சிறந்த முன் மாதிரியாகும்.

தேவையான மாற்றங்களுடன் இதனைப் பின்பற்றப் படலாம். தேசிய ஊரகச் சுகாதார இயக்கத்திற்குப் போதிய நிதி வழங்கி ஆதரிக்கவேண்டும். அதன் ஆய்வு வரம்புகளில் உள்நாட்டு மருத்துவமுறை சேர்த்துக் கொள்ளப்படவேண்டும். தேசியத் துப்புரவு இயக்கம் ஒன்றை ஏற்படுத்துவது குறித்தக் கருத்தும் வரவேற்கத்தக்கதே.

மகப்பேறின்போது தாய் இறப்பு வீதம் பற்றி, மாண்புமிகு பிரதமர் அவர்களே குறிப்பிட்டீர்கள். இந்த வீதத்தை மேலும் குறைப்பதற்குத் தமிழ்நாட்டில் நாங்கள் புதிய முன்முயற்சிகளை எடுத்துள்ளோம் என்பதைத் தங்களுக்குத் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். ஆரம்பச் சுகாதார நிலையங்களில் 24 மணி நேரமும் பேறுகால மருத்துவக் கவனிப்பு வசதி ஏற்படுத்திக் கொடுத்துள்ள தமிழ்நாட்டின் முன் முயற்சிகளை இடைக்கால மதிப்பீட்டு அறிக்கையே சுட்டிக் காட்டியுள்ளது. ஒவ்வொரு ஊரகப் பகுதிகளிலும், விரைந்து அத்தகைய சுகாதார நிலைய வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும் என்பதே எங்களுடைய நோக்கம் ஆகும்.

திறன்மேம்பாடு மற்றும் வாழ்க்கைத் தொழில் கல்வியில் நாங்கள் தனிக்கவனம் செலுத்தி வருகிறோம் என்பது, அதே அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்த ஓர் அம்சமாகும். 100 தொழில் பயிற்சி நிலையங்களை நிலை உயர்த்துவதற்கான திட்டம் வரவேற்கப்படவேண்டிய ஒன்று ஆகும். இதனை உடனடியாக விரிவுபடுத்திட வேண்டும்.

வளர்ச்சித் திட்டங்கள் அனைத்திலும், பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்களை ஈடுபடுத்துவதில் நாங்கள் புதிய முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம். கிராமப் பஞ்சாயத்துக்களுக்கும், கிராமச் சபைகளுக்கும் அதிகாரமளிக்கின்ற 'நமது கிராமம்' திட்டத்தைத் தொடங்குவதன் மூலம், நாங்கள் நடைமுறைக்கு உகந்த அணுகுமுறை ஒன்றை மேற்கொண்டுள்ளோம்.

அடிப்படைக் கட்டமைப்பு வசதி, முக்கியமாகக் கவனம் செலுத்தப்பட வேண்டிய ஒன்றாகும். மின்வாரியங்கள் குறித்தும், மின்துறை குறித்தும் பல கருத்துரைகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. இந்தக் கருத்துரைகள் யாவுமே இத்துறையில் போட்டி ஊக்குவிக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையான எண்ணத்திலிருந்து, கிளைத்தெழுவன வாகும்.

இதற்கானப் பொருளாதார அடிப்படையிலான கோட்பாடு என்னவாக இருப்பினும், இத்துறை பற்றிய தொலைநோக்கில், நமக்குத் தெளிவு தேவை என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன். நுகர்வோருக்குக் கிடைக்கின்ற பயனின் அடிப்படையில்; ஒரு குறிப்பிட்டக் கால அளவில் நாம் சாதிக்க விரும்புவது என்ன என்பது குறித்து, விரிவான பேச்சுவார்த்தை நடத்துவதன் வாயிலாகவே நம்மால் அந்தத் தெளிவைப் பெற இயலும்.

தமிழ்நாட்டில் பொதுத்துறை, தனியார் துறை கூட்டுப் பங்கேற்பை ஊக்குவிப்பதில் நாங்கள் வேகமான முன்னேற்றம் கண்டுள்ளோம். அத்தகையப் பங்கேற்புக்கு ஆக்கம் அளித்திடக் கொள்கைத் திட்டம் ஒன்றை நாங்கள் வகுத்து வருகிறோம். மாண்புமிகு பிரதமர் அவர்களே, பொதுத்துறை, தனியார் கூட்டுப் பங்கேற்பிற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகத் திகழ்கின்ற சில திட்டங்கள் தமிழ்நாட்டில் வெற்றிகரமாக முடிக்கப்பட்டுள்ளன. அண்மையில் முடிக்கப்பட்டுள்ள திருப்பூர் குடிநீர் வழங்கல் திட்டம், இதற்கு ஒரு உன்னதமான எடுத்துக்காட்டு ஆகும்.

மாண்புமிகு பிரதமர் அவர்களே! தேசிய நகர்ப் பகுதி புதுப்பிப்பு இயக்கம் பற்றிக் குறிப்பிட்டீர்கள். இதை நான் வரவேற்கிறேன். குடிசைப் பகுதி மேம்பாடு குறித்து தனிக்கவனம் செலுத்துவது மிகச்சரியே. இதற்கு எங்களுக்கு அதிக நிதியுதவி தேவைப்படுகிறது.

டில்லி, கொல்கத்தா ஆகிய பகுதிகளில் மட்டும் பெருநகர் இரயில் போக்குவரத்து வசதி ஏற்படுத்துவது குறித்து குறிப்பாகவும், அதோடு கூடவே பெங்களூரில் அமைப்பது பற்றியும் குறித்து விவாதிக்கப்பட்டிருப்பது எனக்குச் சற்றுக் கலக்கம் அளிக்கிறது.

ஏற்கெனவே, விரிவான திட்ட அறிக்கை (DPR) ஒன்று தயாரிக்கப்பட்டு அணியமாக உள்ள சென்னைப் பெருநகர இரயில் திட்டத்தை விரைந்து தொடங்க வேண்டுமென நான் கேட்டுக் கொள்கிறேன்.

இரயில்வேயில் முதலீடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்துத் திட்டக் குழு துணைத் தலைவர் குறிப்பிட்டுள்ளார். சென்னைக்கும் – டில்லிக்கும், சென்னைக்கும் – மும்பைக்கும் இடையே தனியானதொரு சரக்கு போக்குவரத்து இருப்புப்பாதை அமைப்பது குறித்து ஏன் திட்டமிடப்படவில்லை என்பது எனக்குப் புரியவில்லை. இதுவும் உடனடியாக எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். தென்னகத்தை ஏனைய அங்காடி மையங்களுடன் இணைக்க வேண்டியது தேவையான ஒன்று என்பது மட்டுமல்ல, கட்டாயமாக நிறைவேற்றப்படவேண்டியதும் ஆகும்.

தமிழ்நாட்டின் சில முக்கியமான அடிப்படைக் கட்டமைப்புத் திட்டங்களுக்கு, அதாவது, சென்னையில் புதிய பன்னாட்டு விமான நிலையம் அமைத்தல், மதுரையில் வானூர்தியியல் பல்கலைக்கழகம் ஒன்று ஏற்படுத்துதல், தூத்துக்குடியில் பெரிய அளவிலான துறைமுகம் (Hubport) ஒன்று அமைத்தல் மற்றும் சென்னையில் மோட்டார் வண்டி சோதனை வசதி மற்றும் மோட்டார் வண்டி சோதனைத் தடம் அமைத்தல் ஆகிய அடிப்படைக் கட்டமைப்புத் திட்டங்களை விரைந்து பரிசீலித்து, ஒப்புதலளிக்குமாறு மாண்புமிகு பிரதமர் அவர்களை, இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இதேபோன்று, சென்னையை மையமாகக் கொண்டு, தென்னக எரிவாயு இணைப்புக் கட்டமைப்பு மற்றும் திரவ இயற்கை வாயு முனையம் ஆகிய திட்டங்களையும் முன்னுரிமை அடிப்படையில் செயற்படுத்திட வேண்டும் என்றும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

நான் என் உரையை முடிப்பதற்கு முன்னர், இந்த ஆண்டு மத்திய நிதியுதவித் திட்டத்தின் கீழான கடன், மத்திய வரவு–செலவு திட்டத்தில் அறிவிக்கப்பட்ட

தொகை இன்னும் வழங்கப்படவில்லை என்ற தகவலை, உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இதுகுறித்துத் தேசிய வளர்ச்சி மன்றத்தில் தான் முடிவு எடுக்கப்பட்டிருக்க வேண்டும். இருப்பினும், வழக்கமான கடன்களை அங்காடிகளிலிருந்துத் திரட்டிக்கொள்ள அனுமதிக்க வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன். மாநிலம் பெறுகின்ற மொத்தக் கடன் குறித்த வரம்புடன் சில புதிய அம்சங்கள் சேர்க்கப்பட்டுள்ளதையடுத்து, இக்கடனை எப்படித் திரட்டுவது என்றதொரு குழப்பம் இன்னும் இருந்து கொண்டுதான் இருக்கிறது. இக்குழப்பத்திற்கு உடனடியாகத் தீர்வு காணப்பட்டாக வேண்டும்.



பிரதமர் அவர்களே! நீங்களே ஒரு தலைசிறந்த பொருளாதார நிபுணர் என்பதால் வளர்ச்சி என்பதில் கடனும் உள்ளடங்கியதே என்பதை நான் உங்களுக்குச் சொல்லத் தேவையில்லை. வளர்ச்சிக்கு ஏற்ற, தாங்கிக் கொள்ளத்தக்க கடன் என்பதே தாரக மந்திரமாக இருக்க வேண்டும். வளர்ச்சியைக் கருத்தில் கொள்ளாமல், கடன் அளவைக் குறைக்க இயலாது. 12ஆவது நிதிக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் இது குறித்து நாம் ஒட்டு மொத்தமாக மறுசிந்தனை செய்ய வேண்டும்.

நாம் அனைத்துப் பகுதிகளின் வளர்ச்சிக்காகவும் பாடுபட வேண்டும். அப்படியிருக்க, தற்போது பின்பற்றப்பட்டு வருகின்ற 'தவிர்த்தல்' கொள்கையில் எனக்கு உடன்பாடில்லை. நன்கு செயல்படுகின்ற ஒரு மாநிலத்திற்கான ஒவ்வொரு நிதி வாயிலும் அடைக்கப்பட்டு வருகின்றன. 12ஆவது நிதிக்குழு, குறிப்பிட்டச் சில மாநிலங்களுக்கு ஏற்கெனவே கணிசமான மானியம் வழங்கியுள்ளது. மத்திய திட்டக் குழுவும் இதே போன்று வழங்கவிருக்கிறது. இந்தச் செயல் எங்களை அலைக்கழிப்புக்குள்ளாக்கி குழப்பதையும், வேதனையையும் அளித்துள்ளது. பின்தங்கிய பகுதிகளுக்கான மானிய நிதியைப் பொறுத்தமட்டில், தேசிய ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டம் (Rashtriya Sam Vikas Yojana) எனும் திட்டத்தின் கீழ் பின்பற்றப்படுகின்ற அதே அளவுகோல்களைப் பின்பற்றத் தமிழ்நாட்டில் உள்ள 13 மாவட்டங்களும் தகுதியுடையனவாகக் கருதப்பட வேண்டும் என்பதை நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். புதிய அணுகுமுறையானது, தமிழ்நாட்டில் இந்த வகையில் பரிசீலிக்கப்பட வேண்டிய மாவட்டங்களின் எண்ணிக்கையைக் குறைப்பதாகத் தெரிகிறது. ஒரு மாநிலத்திற்குள்ளேயே வளர்ச்சியில் பாகுபாடு காட்ட முடியாது.

இங்கே விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட அனைத்து அம்சங்கள் குறித்தும், குறிப்பாக, மாண்புமிகு பிரதமர் அவர்கள், எழுப்பிய பிரச்சினைகள் குறித்தும் என்னுடையக் கருத்துகளை இங்கே நான் சுருக்கமாக எடுத்துரைத்தேன். சமச்சீரான உயர்வளர்ச்சி விகிதத்தை எட்டுவது என்ற குறிக்கோளை எய்துவதற்குரிய அணுகு முறைகளை வகுக்க, இந்தக் கூட்டம் நமக்குப் பெரிதும் உதவியாக இருக்கும் என நான் நம்புகிறேன். தமிழ்நாட்டில் 2004–2005ஆம் ஆண்டில் ஒட்டு மொத்த உற்பத்தி வளர்ச்சி விகிதம் 8.73 சதவிகிதம் அதிகரித்துள்ளது. இனிவரும் காலத்தில், இம்மாநிலத்தை உயர்வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்லவும், அதே நேரத்தில் வறுமையை விரைந்து குறைத்திடுவது என்ற குறிக்கோளை எட்டவும் முடியும் என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.

புதுதில்லியில், 27–6–2005 அன்று நடைபெற்ற
தேசிய வளர்ச்சி மன்றத்தின் 51ஆவது கூட்டத்தில்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம்.

# மாநிலங்கள் அளவில் பேரிடர் நிவாரணப் பணிக் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள், புதுதில்லியில் ஆற்றிய உரை




**பு**துதில்லியில் நடைபெறுகிற ஒன்பதாவது மாநிலங்களிடை மன்றக் கூட்டத்தில் கலந்து கொண்டுள்ள உங்கள் அனைவருக்கும், முதற்கண், என்னுடைய வணக்கத்தையும், நல்வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். சுற்றனுப்பப்பட்டுள்ள என்னுடைய உரையைக் கவனத்தில் கொள்ள வேண்டுமாய் உங்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பிரதமர் அவர்களே! நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்றுள்ள இனங்கள், இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 263ஆம் உறுப்பின் கீழ் ஏற்படுத்தப்பட்ட மாநிலங்களிடை மன்றக் குழுவில் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு வருவது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. மண்டலக் குழுக் கூட்டத்தில் எழுப்பப்பட்ட நதிகளின் இணைப்பு, இடஒதுக்கீட்டுக் கொள்கை குறித்துத் தீர்க்கப்படாமல் உள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது, பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்களின் அமைப்பு முறையில், சிறிது நீக்குப் போக்குத் தன்மையை ஏற்படுத்துவதற்காக, அரசமைப்புச் சட்டத்தில் செய்ய வேண்டிய திருத்தங்களை முடிவு செய்வது முதலான பிற பொருண்மைகளும், இந்நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப் பட்டிருக்கலாம். மாநிலங்களிடை மன்றக் குழு மற்றும் மண்டலக் குழுக்களின் செயல்பாட்டில் ஒரு நெருக்கமான ஒருங்கிணைப்பு இருக்க வேண்டிய அவசியத்தை, உள்ளபடியே, இது மேலும் அதிகரிக்கிறது.

அரசை மாற்றியமைப்பது என்பது எளிதான காரியம் அல்ல. அரசு நிறுவனங்களின் செயல்பாட்டில், பதில் சொல்லும் பொறுப்பு இல்லாதிருப்பது கண்டு நான் பலகாலும் வியப்படைந்ததுண்டு. செயல்திட்டம் சீர்திருத்த முன்னுரிமைகளைத் தெளிவுபட உணர்த்துகிறது. இருந்தாலும், பதில் சொல்லும் பொறுப்பு என்பது ஒரு வழிகாட்டிக் கோட்பாடாக இருக்க வேண்டும் என்பதை நான் வலியுறுத்த விழைகிறேன். அரசுப் பணி சீர்திருத்தங்களைப் பொறுத்தவரையில், அது (பணியாளர்களை) பொத்திப் பாதுகாப்பதாக இல்லாமல் பணியின் தரத்தை வலியுறுத்துவதாகவும், பதில் சொல்லும் பொறுப்பை நிர்ணயிப்பதாகவும் இருக்க

வேண்டும் என்பதை நாம் வலியுறுத்த வேண்டும். சார் நிலை அதிகாரிகள் மக்கள் நலன் நோக்கிலான, பணிகளில் அதிகக் கவனம் செலுத்துகின்ற வகையில் அவர்களை நாம் செயலூக்கப்படுத்த வேண்டும். இல்லையெனில், மக்கள் அந்த ஆட்சியைக் கொடுங்கோலாட்சி எனக் கருதி விடுவர்.

இரண்டாவது, சீர்திருத்தத் தொகுப்பு மிக முக்கியமானதொன்றாகும். தமிழ்நாட்டில், வளர்ச்சி வேகத்தை அதிகப்படுத்துவதற்காக இந்தத் தொகுப்பிற்கு நாங்கள் முக்கியத்துவம் அளித்துச் செயற்படுத்தி வருகிறோம்.

குடிமக்களின் நலனை நோக்கமாகக் கொண்டதொரு ஆட்சியின் கீழ்தான் முத்திரைப் பதிக்கத்தக்க முன்னேற்றத்தைக் காண முடியும். தெரிவிக்கப்பட்டுள்ள சீர்திருத்தங்களுள் பெரும் பாலானவற்றை, இன்னும் சொல்லப்போனால், அவற்றையும் தாண்டி, இங்குச் சொல்லப்படாத சீர்திருத்தங்களையும் கூட நாங்கள் தமிழ்நாட்டில் செயல்படுத்தி வருகிறோம். குடிமக்களின் நலனை நோக்கமாகக் கொண்ட மின்–ஆளுகை முயற்சிகளைச் சாத்தியமாக்க, தகவல்–தொழில் நுட்பத்தை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். தமிழ்நாட்டில், மின்–ஆளுகை நடவடிக்கைகள் பலவற்றை நான் தொடங்கி வைத்துள்ளேன். அவற்றுள் 'ராசி', 'தமிழ் நிலம்' போன்றவை நிகழ்ச்சி நிரல் குறிப்புகளில் இடம் பெற்றுள்ளன.

நிகழ்ச்சி நிரலின் இரண்டாவது இனத்தைப் பொறுத்தவரையில், எவ்வித முன்னெச்செரிக்கையுமின்றி தமிழ்நாட்டின் கடலோரப் பகுதியைத் திடீரெனத் தாக்கிய சுனாமித் துயரச் சம்பவத்திற்குப் பின்னர், இன்று நாம் கூடியுள்ளோம் என்பதை இங்கே நான் சுட்டிக் காட்ட விழைகிறேன். இத்தாக்குதலையடுத்து உடனடியாக என்னுடைய அரசு மேற்கொண்டப் பலதரப்பட்ட நிவாரண நடவடிக்கைகளை உலக நாடுகள் பாராட்டியுள்ளன. சுனாமித் தாக்குதலின் பயங்கரமான விளைவுகளைச் சமாளிக்க நாங்கள் அசாதாரண நடவடிக்கைகளை மேற்கொண்டோமென்றாலும், இத்தகைய பேரிடர்களின் போது மீட்பு நடவடிக்கை எடுக்க, நிறுவன ரீதியிலான நல்லதொரு அமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டியது அவசியம் என்ற கருத்து வலுப்பெற்றுள்ளது. ஆயத்த நிலை என்பது வழிகாட்டும் கொள்கையாக இருக்க வேண்டும் என்பதில் ஐயமேதுமில்லை. அறிக்கையில் இடம்பெற்றுள்ள அனைத்துக் கருத்துகள் குறித்தும் நாங்கள் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

நாடாளுமன்றத்தில், 2005ஆம் ஆண்டு பேரிடர் மேலாண்மை சட்டமுன் வடிவு அறிமுகப்படுத்தப்பட்டதை நான் வரவேற்கிறேன். நாங்களும் இதையொத்த சட்டமியற்றுவதற்கான ஆயத்த நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறோம். நாங்கள் விரைவில் சட்டம் கொண்டு வருவோம். தேசியப் பேரிடர் நிவாரணப் பணிக் குழு ஒன்று அமைக்கப்படவிருக்கிறது என்று நான் அறிகிறேன். மாநிலங்கள் அளவிலும் பேரிடர் நிவாரணப் பணிக் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும், அதற்கு 100 சதவிகித நிதியுதவி அளிக்கப்பட வேண்டும் என்ற என்னுடைய கருத்தை இங்கே நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

பேரிடரைச் சமாளிப்பதற்கான ஆயத்த நிலை குறித்த அறிக்கை, சுனாமி எச்சரிக்கை மையம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடுகிறது. மாண்புமிகு பிரதமர் அவர்களே! இது பற்றி நான் உங்களுக்கு எழுதியுள்ளேன். இந்த மையம் சென்னையில் அமைக்கப்பட வேண்டும்.

பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்களுக்கு, அதிக அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்க வேண்டும் என்ற மந்திரத்தை, மாநில அரசுகளுக்கு உபதேசிக்கிற மத்திய அரசு, மாநில அரசுகள் மக்களுக்குப் பயன்படும் வகையில் விரைந்து செயல்பட ஏதுவாக, அவற்றுக்கு அதிக அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்காதது எனக்கு மிகுந்த வருத்தத்தைத் தருகிறது. பொதுப் பட்டியலிலுள்ள பொருண்மைகள் குறித்தச் சட்டமியற்றுவது பற்றிய எங்களுடையக் கருத்துரைகளை, மத்திய அரசு கருத்தில் கொள்ள வேண்டுமென இங்கே தெரிவித்துக் கொள்ள விழைகிறேன்.

1956ஆம் ஆண்டு மாநிலங்களுக்கிடையிலான நீர்த் தகராறுகள் சட்டத்தில் திருத்தம் கொண்டு வர நீர் ஆதாரங்கள் அமைச்சகம் மேற்கொண்ட முயற்சிகளுக்காக நான், என்னுடைய பாராட்டுதலைப் பதிவு செய்ய விரும்புகிறேன். நடுவர் மன்றத்தின் ஆணையை உச்ச நீதிமன்றத்தின் ஆணையைப் போல் கருதி செயல்படுத்த வேண்டிய கடப்பாடு மத்திய அரசுக்கு உள்ளது. உச்ச நீதிமன்ற ஆணையைப் போன்று முழு வீச்சுடன் காவிரி நீர்த் தகராறு குறித்த நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணை, செயல்படுத்தப் படுவதை உறுதி செய்ய வேண்டுமென்று மாண்புமிகு பிரதமர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

சர்ச்சைக்குரியப் பல பிரச்சினைகள் குறித்து புதிய கொள்கை அணுகுமுறைகளை உருவாக்குவதில் மண்டலக் குழுக்களோடு, மாநிலங்களிடை மன்றத்தினையும் பயனுள்ள வகையில் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற கருத்தை வலியுறுத்தி, நான் என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

(புதுதில்லியில், 28.6.2005 அன்று நடைபெற்ற 9ஆவது மாநிலங்களிடை மன்றக் கூட்டத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம்)

# விளையாட்டுப் போட்டிகளின் மேம்பாட்டிற்கு மிக உயரிய முக்கியத்துவம்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்

**செ**ன்னையில், முதலில் 24–6–2005லிருந்து 26–6–2005 வரையிலும், மீண்டும் 1–7–2005லிருந்து 3–7–2005 வரையிலும், இரண்டு கட்டமாக நடைபெறுகின்ற முதுநிலை ஆடவர் கைப்பந்து உலகச் சாம்பியன் தகுதிச்சுற்றுப் போட்டிகளின் தொடக்க விழாவில் கலந்துகொள்வதில், நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். கைப்பந்து உலகச் சாம்பியன் தகுதிச் சுற்றுப் போட்டி, இந்தியாவில் நடைபெறுவது இதுவே முதல் முறை என்று நான் அறிகிறேன். இந்தியாவில், குறிப்பாக, சென்னையில் இப்போட்டியினை நடத்துவதற்குப் பெரும் முயற்சியினை எடுத்த, இந்தியக் கைப்பந்துப் போட்டி கூட்டமைப்பிற்கும், அதன் தலைவர் டாக்டர் பி.சிவந்தி ஆதித்தன் அவர்களுக்கும், என்னுடைய மனமார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தியக் கைப்பந்துப் போட்டி வரலாற்றில், குறிப்பாக, இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்ச்சி சென்னையில் நடைபெற்று வருவது குறித்து நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். என்னுடைய அரசு உருவாக்கிய, உலகத்தரம் வாய்ந்த இந்த அடிப்படைக் கட்டமைப்பு வசதியின் காரணமாகத்தான், பன்னாட்டுக் கைப்பந்துப் போட்டிக் கூட்டமைப்பு, பெருமைக்குரிய இந்தப் போட்டியை நடத்துவதற்கு சென்னையைத் தேர்ந்தெடுத்துள்ளது என்பதை நான் எண்ணிப் பெருமைப்படுகிறேன்.



தமிழ்நாடு, அதன் வளமார்ந்த மரபு, பாரம்பரியம், பண்பாடு, விருந்தோம்பல் பண்பு ஆகியவற்றுக்குப் பெயர் பெற்ற மாநிலம் என்பது

❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖

# 86 இலட்சம் விவசாயத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திட ஊதிய உயர்வு

❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖ ❖



**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 28-3-2005 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், விவசாயம் மற்றும் அதனைச் சார்ந்துள்ள தொழில்களில் ஈடுபட்டு வரும் தொழிலாளர் களுக்கானக் குறைந்தபட்ச ஊதியத்தை உயர்த்தி அறிவித்த வண்ணம், விவசாயத் தொழிலாளர்கள் உயர்ந்த ஊதியம் பெற்றிடும் வகையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் உத்தரவின்படி, ஏற்கெனவே வெளியிடப்பட்ட முதனிலை அறிவிக்கை (Preliminary Notification) உறுதி (Confirm) செய்யப்பட்டு, அரசு ஆணை மற்றும் அறிவிக்கை ஆகியவை 8-7-2005 அன்று வெளியிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், 28-3-2005 அன்று விவசாயத் தொழிலாளர்களுக்கானக் குறைந்தபட்ச ஊதியத்தை உயர்த்தி விதி எண்.110ன் கீழ் அறிக்கை ஒன்றை வெளியிட்டார்கள். அப்போது, தமிழகத்தில் சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள ஏறத்தாழ 86 இலட்சம் விவசாயத் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டியது நமது கடமை ஆகும் என்றும், அவர்களுக்கு வழங்கப்படும் ஊதியம் அதிகரிக்கப்பட்டால் தான் அவர்களது வாழ்க்கைத் தரம் மேம்படும் என்றும் தெரிவித்ததுடன், கடந்த சில ஆண்டுகளில் தமிழகத்தில் தொடர்ந்து நிலவி வந்த கடும் வறட்சியின் காரணமாக விவசாயத் தொழிலாளர்களின் ஊதியத்தை உயர்த்த முடியாத நிலை இருந்தது என்றும், இந்த ஆண்டு பருவ மழை நல்ல முறையில் பெய்ததன் காரணமாக விவசாயம் புதிய வளம் பெற்றுள்ள சூழ்நிலையில், விவசாயம் மற்றும் அதனைச் சார்ந்துள்ள தொழில்களில் ஈடுபட்டு வரும் தொழிலாளர்களுக்கானக் குறைந்தபட்ச ஊதியத்தை உயர்த்துவது பொருத்தமாக அமையும் என்றும் தெரிவித்து, விவசாயத் தொழிலாளர்களுக்கானக் குறைந்தபட்ச ஊதிய விகிதங்களை உயர்த்தி அறிவித்தார்கள். மேலும், இதன்படி, விவசாயத் தொழிலாளர்கள் உயர்ந்த ஊதியம் பெற்றிடும் வகையில், குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளபடி, முதனிலை அறிவிக்கை - Preliminary Notification" - ஒன்றை உடனடியாக வெளியிட ஆணையிட்டார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆணைப்படி, குறைந்தபட்ச ஊதியங்களை உயர்த்துவதற்கான முதனிலை அறிவிக்கை Preliminary Notification - 28-3-2005 அன்று வெளியிடப்பட்டது. மேலும், குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின்படி இதுகுறித்த ஆட்சேபணைகள் மற்றும் ஆலோசனைகள் இரண்டு மாத காலத்திற்குள் தெரிவிக்கப்பட வேண்டும் என்றும், அந்த அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டது. அவ்வாறு பெறப்பட்ட ஆட்சேபணைகள் மற்றும் ஆலோசனைகள் ஆகியவற்றின் மீது தக்க ஆய்வு மேற்கொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களது தலைமையிலான அரசு, இது குறித்து வெளியிடப்பட்ட முதனிலை அறிவிக்கையை (Preliminary Notification) உறுதி (Confirm) செய்து, 8-7-2005 அன்று அரசு ஆணை மற்றும் அறிவிக்கையை வெளியிட்டுள்ளது.

இதன்படி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், ஏற்கெனவே அறிவித்த வாறு, விவசாயம் மற்றும் அதனைச் சார்ந்துள்ள தொழில்களில் ஈடுபட்டு வரும் தொழிலாளர்களுக்கான குறைந்தபட்ச ஊதியம் இனி கீழ்க்கண்டவாறு உயர்த்தி வழங்கப் படும்.

★ தங்களது சொந்த ஏர் மற்றும் உழவு மாடுகளுடன் உழவுப் பணியில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள தற்போது நாள் ஒன்றுக்கு 100 ரூபாய் என வழங்கப்படும் குறைந்தபட்ச ஊதியம் இனி 150 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

★ பணி அமர்த்துபவரால் ஏர் மற்றும் உழவு மாடுகள் வழங்கப் படுமாயின் உழவுப் பணிக்கு தற்போது நாள் ஒன்றுக்கு வழங்கப்படும் 54 ரூபாய் குறைந்தபட்ச ஊதியம் இனி 80 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.



★ கதிர் அறுத்தல், கதிர்க் கட்டுகளைச் சுமந்து வந்து களத்தில் சேர்த்தல், கதிர் அடித்தல், நெல் தூற்றுதல், நெல்லை அளந்து மூட்டைகள் ஆக்குதல் ஆகிய பணிகளில் ஈடுபட்டுள்ள ஆண் தொழிலாளர்களுக்குத் தற்போது உள்ள குறைந்தபட்ச ஊதியமான நாள் ஒன்றுக்கு 6 மணி நேர வேலைக்குக் குறைந்தபட்ச ஊதியம் 54 ரூபாய் என்பது இனி 80 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

★ அதேபோன்று, இதே வேலைகளில் ஈடுபடும் பெண் தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு 5 மணி நேர வேலைக்குத் தற்போதையக் குறைந்தபட்ச ஊதியம் 45 ரூபாய் என்பது இனி 70 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

★ வழங்கப்படும் ஊதியம் பணமாக வழங்கப்படாமல் சாகுபடிப் பொருளாக வழங்கப்பட்டால் மொத்த மகசூலில் எட்டில் ஒரு பங்கு ஊதியமாக வழங்கப்படவேண்டும். பணம் அல்லது பொருள் இவ்விரண்டில் அதிகமானது எதுவோ அது வழங்கப்பட வேண்டும்.

★ இதேபோன்று, நெல் அல்லாத பிற பயிர்கள் அறுவடை செய்யும் பணியில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கும் இதே அளவில் ஊதியம் வழங்கப்படும்.

★ விதைத்தல், நாற்றுப் பறித்தல், நாற்று நடுதல் மற்றும் களை எடுத்தல் ஆகிய பணிகளில் ஈடுபடும் ஆண் தொழிலாளர்களுக்குத் தற்போது நாள் ஒன்றுக்கு 6 மணி நேர வேலைக்கு 54 ரூபாய் என்றும், இதே வேலைகளில் ஈடுபடும் பெண் தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு 5 மணி நேர வேலைக்கு 45 ரூபாய் என்றும் உள்ள குறைந்தபட்ச ஊதியம், இனி ஆண் தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு 6 மணி நேர வேலைக்கு 80 ரூபாய் என்றும், பெண் தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு 5 மணி நேர வேலைக்கு 70 ரூபாய் என்றும் உயர்த்தி வழங்கப்படும்.

★ வரப்புகளையும், வயல்களையும் சீரமைத்தல், தேனீ வளர்த்தல், கோழி வளர்ப்பு, பால் பண்ணை மற்றும் மரம் ஏறுதல் ஆகிய வேலைகளில் ஈடுபடும் ஆண் தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு, 6 மணி நேர வேலைக்கு 54 ரூபாய் என்றும், இதே வேலைகளில் ஈடுபடும் பெண் தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு, 5 மணி நேர வேலைக்கு, 45 ரூபாய் என்றும் வழங்கப்படுகின்ற ஊதியம் இனி, நாள் ஒன்றுக்கு, ஆண் தொழிலாளர்களுக்கு, 6 மணி நேர வேலைக்கு 80 ரூபாய் என்றும், பெண் தொழிலாளர்களுக்கு 5 மணி நேர வேலைக்கு 70 ரூபாய் என்றும் குறைந்தபட்ச ஊதியமாக நிர்ணயிக்கப்பட்டு உயர்த்தி வழங்கப்படும்.

★ விவசாயத் தொழிலில் ஈடுபடுத்தப்படும் விவசாயத் தொழிலாளர்களுக்குப் பணி அமர்த்துபவரால் உணவு வழங்கப்படுமாயின், அவ்வாறு வழங்கப்படும் அந்த உணவின் பண மதிப்பு ஊதியத்தில் இருந்து கழிக்கப்படாது.

★ வேலை நேரங்களிலும், பணியின் தன்மையிலும் வேறுபாடு இல்லாது, தொழில் புரியும் ஆண் மற்றும் பெண் தொழிலாளர் இருபாலருக்கும், 1976ஆம் ஆண்டு சம ஊதியச் சட்டத்தின்படி சம ஊதியம் வழங்கப்படும்.

★ மேலே தெரிவித்த குறைந்தபட்ச ஊதிய விகிதங்கள் அரசுப் பண்ணைகளிலும், வேளாண்மைப் பல்கலைக்கழகங்களின் பண்ணைகளிலும், பணிபுரியும் தொழிலாளர்களுக்கும் பொருந்தும்.

விவசாயத் தொழிலாளர்கள், மேற்கொள்ளும் வேலைகளுக்கு என நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தபட்ச ஊதிய விகிதங்களைக் கணிசமாக உயர்த்தி வழங்கிட ஆணையிட்டு, அதற்கான அறிவிக்கையை வெளியிட்டதன் வாயிலாக, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களது தலைமையிலான அரசு, விவசாயத் தொழிலாளர்கள் சிறந்த வாழ்க்கைத் தரம் பெறுவதை உறுதி செய்துள்ளது. ●

அனைவரும் அறிந்த ஒன்றே. உலகளவில் கைப்பந்து விளையாட்டுப் போட்டிகளை நடத்துகிற பன்னாட்டுக் கைப்பந்து விளையாட்டுக் கூட்டமைப்பு, சென்னையில் இந்த விளையாட்டுப் போட்டியை நடத்துகிற பெருமையை வழங்கியிருப்பது குறித்து, நான் மகிழ்ச்சி அடைகிறேன். உலகத் தரம் வாய்ந்த, இந்த ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்க வளாகம், 40,000 பார்வையாளர்கள் அமரக்கூடிய திறந்தவெளி அரங்கு ஒன்றையும், 8,000 பார்வையாளர்கள் அமர்ந்து கண்டு மகிழத்தக்க உள்அரங்கு ஒன்றையும் கொண்டுள்ளது. ஜவஹர்லால் நேரு பன்னாட்டு அழைப்பு கால்பந்துப் போட்டி, பன்னாட்டு அமைப்பு தடகளப் போட்டி, 1995இல் நடைபெற்ற தெற்காசியக் கூட்டமைப்பு விளையாட்டுப் போட்டிகள் மற்றும் பிற பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகள் இந்த விளையாட்டு அரங்க வளாகத்தில் நடத்தப்படுகின்றன. உலகத்தரம் வாய்ந்த இந்த அரங்கம், 1993ஆம் ஆண்டில் என்னுடைய அரசால் உருவாக்கப்பட்டது என்பதை நினைவுகூர்வதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். செயற்கைப் புல் தரையுடன் கூடிய ஹாக்கி விளையாட்டு அரங்கம், செயற்கை ஆடுகளம் கொண்ட டென்னிஸ் விளையாட்டு அரங்கம் மற்றும் நீச்சல் போட்டி நடத்துவதற்குரிய வசதிகளைக் கொண்ட நீச்சல் குளம், முக்குளிப்பு நீச்சல் போட்டி விளையாட்டுக்கான நீச்சல் குளம், நீச்சல் பயிற்சிக்குளம் ஆகியவற்றுடன் கூடிய நீர் விளையாட்டு வளாகம் ஆகியவற்றை உள்ளடக்கிய பன்னாட்டுத் தரம் வாய்ந்த 4 விளையாட்டு அரங்குகளும் என்னுடைய அரசால் 1994–95ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டன. மேலும், ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்க வளாகத்தில், செஸ் அரங்கு ஒன்றும், வாள் வீச்சுப் பயிற்சி அரங்கு ஒன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தனியார் துறை பங்கேற்புடன், சென்னையில் ஸ்குவாஷ் விளையாட்டுப் பயிற்சி மையம் ஒன்று, நீச்சல் பயிற்சி மையம் ஒன்று, மதுரையில் 'பூப்பந்தாட்டப் பயிற்சி மையம்' ஒன்று ஆகியவையும் உருவாக்கப்பட்டுள்ளன. இத்தகைய உலகத் தரம் வாய்ந்த வசதிகள் உருவாக்கப்பட்ட காரணத்தால்தான், தமிழ்நாடு, பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதற்கு விரும்பித் தேர்ந்தெடுக்கப்படும் மையமாக உருவெடுத்துள்ளது. 2005ஆம் ஆண்டு ஜனவரியில் முதல் முறையாக, சென்னையில் ஒப்பன் டென்னிஸ் போட்டி (டென்னிஸ் விளையாட்டு வீரர்கள் சங்கம்) நடத்தப்பட்டதன் வாயிலாக, சென்னை, இந்தியாவின் டென்னிஸ் விளையாட்டுத் தலைநகரம் என்ற பெருமையை ஈட்டியுள்ளது. இந்தியக் கைப்பந்து விளையாட்டுப் போட்டி வரலாற்றில், இந்த ஆண்டு, முதல்முறையாக இந்தியாவில் நடத்தப்படும் முதுநிலை ஆடவர் கைப்பந்து உலகச் சாம்பியன் தகுதிச் சுற்றுப் போட்டியை, சென்னையில் நடத்துகிற பெருமையை இன்றைக்கு நாம் பெற்றுள்ளோம்.



என்னுடைய அரசு, எப்போதுமே விளையாட்டுப் போட்டிகளின் மேம்பாட்டிற்கு மிக உயரிய முக்கியத்துவம் அளித்து வருகிறது. இம்மாநிலத்தில் பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுவதை நான் எப்போதுமே ஊக்குவித்துத் தேவையான வசதிகளைச் செய்து கொடுத்து வருகிறேன். இந்த மாநிலத்தில் பன்னாட்டு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுவதை, பன்னாட்டு அளவிலான விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கானத் திறனை, இம்மாநிலம் பெற்று விளங்குவதை உலகுக்குப் பறைசாற்றுகின்ற ஒரு நிகழ்வாகவே நான் நினைக்கிறேன். இத்தகைய போட்டிகள் இங்கே நடத்தப்படுவதால் தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களும், வீராங்கனைகளும் பன்னாட்டு அளவிலான, போட்டி விளையாட்டுகளை நேரடியாகக் கண்டுகளிக்கின்ற வாய்ப்பைப் பெறுவதோடு, திறமையை மேலும் வளர்த்துக் கொள்வதற்கானச் செயலூக்கமும் வாய்ப்பும் பெறுகின்றனர். இதன் பொருட்டே, இந்தப் போட்டியை வெற்றிகரமாக நடத்துவதற்கு 1.41 கோடி ரூபாய் வழங்க என்னுடைய அரசு முன்வந்துள்ளது. சென்னையில் நடத்தப்படுகின்ற இந்த முதுநிலை ஆடவர் கைப்பந்து உலகச் சாம்பியன் தகுதிச் சுற்றுப் போட்டியானது, தமிழ்நாட்டு இளைஞர்களையும், விளையாட்டுகளில் திறமையும், ஆர்வமும் கொண்டுள்ள உள்ளூர் இளைஞர்களையும், யுவதிகளையும் இவ்விளையாட்டில் ஆர்வத்துடன் பங்கு கொள்ளச் செய்து, இவ்விளையாட்டு மாநிலமெங்கும் மேலும் பிரபலமடைய வழி வகுக்கும்.

இம்மாநிலத்தில் விளையாட்டுப் போட்டிகளுக்கான அடிப்படை வசதியை வலுப்படுத்துவதற்கு, என்னுடைய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளதோடு, தேசிய அளவிலும், பன்னாட்டு அளவிலும் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் பங்கெடுத்துப் பரிசுகள் பெற்று, இம்மாநிலத்திற்குப் பெருமை தேடித்தந்துள்ள விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கத் தொகைகளையும், பரிசுகளையும் வழங்கிடும் சிறந்த திட்டம் ஒன்றையும் வகுத்துள்ளது. ஒலிம்பிக் போட்டிகள், ஆசிய விளையாட்டுப் போட்டிகள், தெற்காசியக் கூட்டமைப்பு விளையாட்டுப் போட்டிகள், காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள், உலகத் தடகளப் போட்டி மற்றும் தேசிய விளையாட்டுப் போட்டிகள் ஆகியவற்றில் பங்கெடுத்துப் பதக்கங்களை வென்ற, தமிழ்நாட்டைச் சேர்ந்த




விளையாட்டு வீரர்களை ஊக்குவித்துச் சிறப்பிக்கும் பொருட்டு, இவ்வரசு, பதக்கம் வென்ற வீரர்களுக்கு 25,000 ரூபாயிலிருந்து 1 கோடி ரூபாய் வரை ஊக்கத்தொகை வழங்கியுள்ளது. இத்திட்டத்தில், பதக்கங்கள் வென்ற, விளையாட்டு வீரர்களுக்கு மட்டுமல்லாது, இந்த விளையாட்டு வீரர்களுக்கு நன்கு பயிற்சி அளித்து உருவாக்கிய பயிற்சியாளர்களுக்கும் ஊக்க உதவித்தொகை வழங்கப்படுகிறது என்பதை இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். 'கிராண்ட் மாஸ்டர்' பட்டம் பெறும் சதுரங்க விளையாட்டு வீரர்களுக்கு 5 இலட்சம் ரூபாய் வழங்கப்படுகிறது. 2001 முதல் 2005 ஜூன் வரையிலான கால அளவில், தேசிய அளவிலான மற்றும் பன்னாட்டு அளவிலான போட்டிகளில் பதக்கங்களை வென்ற 254 விளையாட்டு வீரர்களுக்கு 2.53 கோடி ரூபாய் அளவுக்கு ரொக்கப் பரிசுகள் வழங்கப்பட்டுள்ளன. நான் அறிவித்த "சேம்பியன் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ்'' தேசிய அளவிலும், பன்னாட்டு அளவிலும் பதக்கங்களைப் பெற்ற, தங்கள் திறமையை மேற்கொண்டும் வளர்த்து, விருதுகள் பெறக்கூடிய ஆற்றல் உள்ள விளையாட்டு வீரர்களுக்கு நிதி உதவிகள் அளிக்கப்படுகின்றன. என்னுடைய அறிவுறுத்தலின் பேரில், தமிழ்நாடு போட்டி விளையாட்டுகள் மேம்பாட்டு ஆணையம், பன்னாட்டு, விளையாட்டுப் பயிற்சியாளர்களை வரவழைத்து தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டுப் பயிற்சியாளர்களுக்குப் பன்னாட்டுப் பயிற்சியின் தரத்தைப் பற்றி உணர்த்தி, பயிற்சி முறைகளில் அண்மையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து அறிவுறுத்திட முயற்சிகள் மேற்கொண்டுள்ளது. எனது அரசு மேற்கொண்ட இந்த நடவடிக்கைகள் நமது விளையாட்டு வீரர்கள் ஊக்கமும், உற்சாகமும் பெற்று சாம்பியன்களாக உருவெடுத்திட, தூண்டுகோலாக அமையும் என்று நான் நம்புகிறேன்.

அடுத்த சில நாட்களுக்கு, சென்னை மக்களும், இங்கு வருகை தரும் விளையாட்டு வீரர்களும், இந்தியா முழுதுமிருந்து வரும் மக்களும், உயரியத் தரத்திலான கைப்பந்து விளையாட்டுப் போட்டிகளைக் கண்டு களித்திடும் வாய்ப்பைப் பெறுவர். இந்த விளையாட்டுப் போட்டியைச் சென்னையில் நடத்துவதை சாத்தியமாக்கிய பன்னாட்டுக் கைப்பந்து விளையாட்டுக் கூட்டமைப்புக்கும், இந்திய கைப்பந்து விளையாட்டுக் கூட்டமைப்புக்கும், தமிழக மக்களின் சார்பாக எங்களுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், சீனா, தாய்லாந்து, இந்தோனேசியா ஆகிய நாடுகளிலிருந்து வருகை தந்திருக்கும் விளையாட்டு வீரர்கள்/வீராங்கனைகளை, பண்பாட்டின் உறைவிடமான சென்னை மாநகருக்கு வருக வருக என்று வரவேற்கிறேன். எமது மக்களின் பாரம்பரியமிக்க கனிவான வரவேற்பும், விருந்தோம்பல் பண்பும், உங்களுக்கு இனியதொரு அனுபவமாக அமையும். நமது நாடுகளுக்கிடையேப் பொதுவான ஆசியப் பண்பாட்டுப் பாரம்பரியம் ஒன்று உண்டு. சென்னைக்கு அருகிலுள்ள எங்களுடைய சில கோயில்களையும், கட்டடக் கலைச் சிறப்புக்கு எடுத்துக்காட்டுகளாக விளங்கும் இடங்களையும் நீங்கள் பார்வையிட வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். தமிழகத்தின் பாரம்பரிய உணவு வகைகளைப் போன்றே இவையும் உங்களுக்கு மகிழ்ச்சி நிறைந்தப் பயனுள்ள அனுபவமாக அமையும் என்று உறுதியாக நம்புகிறேன். சென்னையில் உங்களது தங்கல், மகிழ்ச்சி கரமானதாகவும், என்றென்றும் நினைவில் நிற்கத் தக்கதாகவும் அமைய எனது வாழ்த்துகள்.

இந்த முதுநிலை ஆடவர் கைப்பந்து உலகச் சாம்பியன் தகுதிச் சுற்றுப் போட்டியில் இடம் பெறும் உலகப் புகழ்பெற்ற அணிகளுக்கிடையிலான போட்டிகள், விறுவிறுப்பானதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. இந்தப் போட்டியில் கலந்துகொள்ளும் அணிகளுக்கு எனது நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த உரையுடன், முதுநிலை ஆடவர் கைப்பந்து உலகச் சாம்பியன் தகுதிச்சுற்று ஆட்டத்தைத் தொடங்கி வைக்கிறேன்.

சென்னையில் 23–6–2005 அன்று நடைபெற்ற
முதுநிலை ஆடவர் கைப்பந்து உலகச் சாம்பியன்
தகுதிச் சுற்றுப் போட்டித் தொடக்க விழாவில்,
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்,
ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம்.

# உண்மையான சமுகநீதியின் உயர்ந்த நோக்கத்தை எய்துவதில் ஏற்பட்டுள்ள தடைகள் தற்காலிகமானவையே!



மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்
அறிக்கை – 8.7.2005

ஒவ்வொரு துறையிலும், போதிய வசதி வாய்ப்பற்ற நிலையில் உள்ள பிரிவினருக்கு ஆதரவுக் கரம் நீட்டி, அவர்களுக்கு நிலைத்த பயன்கள் கிடைப்பதற்கான உறுதியான நடவடிக்கைகளை எடுப்பதில், என்னுடைய அரசு எப்போதுமே முன்னணியில் இருந்து வருகிறது. இந்த வகையான நீடித்தப் பயனை அளிக்கும் பொருட்டே, நான் கடந்த முறை முதலமைச்சராக இருந்த போது, 1994–ஆம் ஆண்டில், என்னுடைய அரசு, மாநில சட்டமன்றப் பேரவையில் ஆதிதிராவிடர் / பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆகியோருக்கு 69 சதவீத இடஒதுக்கீடு அளிக்க வகை செய்யும் சட்டம் ஒன்றை நிறைவேற்றி, அது இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் ஒன்பதாவது அட்டவணையில் சேர்க்கப்படுவதையும் உறுதி செய்தது. ஆக, என்னுடைய அரசு, எப்போதுமே, சமுதாயத்தின் ஏழை எளிய, நலிந்த, வசதி வாய்ப்பற்ற பிரிவினரின், அதிலும் குறிப்பாக, கிராமப்புறங்களைச் சேர்ந்த வறியோரின் நலன்களைப் பாதுகாப்பதற்குத் தேவையான சரியான நடவடிக்கையை நிச்சயமாக எடுக்கும்.

தொழில் கல்லூரி மாணவர் சேர்க்கைக்கான பொது நுழைவுத் தேர்வு முறையை ரத்து செய்து விட்டு, கிராமப்புற மாணவர்களுக்கு எதிரானப் பாகுபாடு கொண்டிராத, நியாயமான, ஒளிவு மறைவற்ற மாணவர் சேர்க்கை முறை ஒன்றைச் செயல்படுத்த வேண்டும் என்ற தெளிவான சிந்தனையோடும், மனத் திண்மையோடும் தான் என்னுடைய அரசு, புதிய முறை ஒன்றை அறிமுகப்படுத்தியது. தமிழகத்தில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளுமே இந்த நடவடிக்கையைத் தான் கோரி வந்தன. பொது நுழைவுத் தேர்வு, தங்களது நியாயமான விழைவுகளுக்குத் தடையாக இருக்கிறது என்ற மனக்குறை தீர்க்கப்படாமல் நீண்ட காலமாகவே புழுங்கிக் கொண்டிருந்த கிராமப்புற மாணவர்களின் கோரிக்கையும் இதுவாகத்தான் இருந்தது. மிகுந்த சிந்தனைக்கும், கவனமான ஆய்வுக்கும் பின்னரே என்னுடைய அரசு, +2 தேர்வு மதிப்பெண்களை மட்டுமே அடிப்படையாகக் கொண்ட தொழில் கல்விக்கான மாணவர் சேர்க்கைக்குப் புதிய முறை ஒன்றை அறிமுகப்படுத்தியது. இது, பொது நுழைவுத் தேர்வு காரணமாக ஏற்படுகின்ற தேவையற்ற சுமை, செலவு, மன அழுத்தம், கவலை ஆகியவற்றைப் போக்கும் மிக அவசியமானச் சீர்திருத்தம் என்று தமிழ்நாட்டில் உள்ள பெரும்பாலான பெற்றோர்களும், மாணவர்களும் இந்த நடவடிக்கையைப் பெரிதும் வரவேற்றுள்ளனர். மிக முக்கியமாக, பொது நுழைவுத் தேர்வு முறையில் இயல்பாகவே உள்ள பாகுபாடு காட்டும் ஒரு சார்புத் தன்மை இதன் மூலம் அகற்றப்படுவதால், கிராமப்புற மக்கள் இந்த நடவடிக்கையைப் பெரிதும் பாராட்டியுள்ளனர். நமது அரசியலமைப்புச் சட்டச் சிற்பிகள் உள்ளபடியே விரும்பிய உண்மையானச் சமத்துவத்தை எய்த வேண்டும் என்ற எண்ணத்தினால், என்னுடைய அரசு, கவனமானப் பரிசீலனைக்குப் பிறகு, பரந்துபட்ட செயல் விளைவைக் கொண்ட இந்த மாற்றத்தை, நடப்புக் கல்வி ஆண்டில் இருந்தே செயல்படுத்த முடிவு செய்தது. இதற்காக, இக்கொள்கையையும், நடைமுறையையும், காரண காரியங்களோடு தெளிவாக விளக்கி 9–6–2005 அன்று ஒரு விரிவான அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டது.

எனினும், மாணவர்களில் ஒரு சிலர், இந்த அரசாணையை எதிர்த்து, சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தனர். பரந்துபட்ட செயல் விளைவைக் கொண்ட இந்த மாற்றத்தைச் செய்வதில் இந்த அரசு கொண்டுள்ள நிலைப்பாட்டை உயர்நீதிமன்றம் வெகுவாகப் பாராட்டியுள்ளது. இது பற்றிக் கருத்துத் தெரிவித்த உயர்நீதிமன்றம், “கிராமப்புற மாணவர்கள் பாதிக்கப்படக் கூடும் என்ற மாநில அரசின் கவலையை எங்களால் உணரவும், புரிந்து கொள்ளவும் முடிகிறது. இந்திய மக்களில் 70 சதவிகிதத்தினர் கிராமங்களிலேயே வாழ்கின்றனர். அவர்கள், பொதுவாகவே ஏழைகளாகவே உள்ளனர். நகர்ப்புற மக்கள் அனுபவிக்கின்றப் பல வசதிகளும், வாய்ப்புகளும் அவர்களுக்குக் கிடைப்பதில்லை” என்று தெரிவித்துள்ளது. இவ்வாறாக, அரசாணையில் தெரிவிக்கப்பட்ட அரசின் அடிப்படையான கொள்கைக்கு உயர்நீதிமன்றம் மறுப்புத் தெரிவிக்கவில்லை. சொல்லப்போனால், உயர்நீதிமன்றம் பாராட்டவே செய்துள்ளது.

இருந்தாலும், ஒரு மத்தியச் சட்டத்தின் கீழ் இயற்றப்பட்ட இந்திய மருத்துவக் குழு மற்றும் அனைத்திந்திய தொழில்நுட்பக் கல்விக் குழு ஆகியவற்றின் சில விதிமுறைகளைக் கருத்தில் கொண்டு, பரந்துபட்ட செயல் விளைவைக் கொண்ட மாணவர் சேர்க்கை குறித்த புதிய கொள்கையை வகுத்து, 9–6–2005 அன்று பிறப்பிக்கப்பட்ட அரசாணையை உயர்நீதிமன்றம் ரத்து செய்தது. இவ்வாறாக, அரசின் கொள்கையையும், நோக்கத்தையும் பாராட்டிய உயர் நீதிமன்றம் அதனைச் செயல்படுத்துவதில் உள்ள சட்ட இடையூறுகளைச் சுட்டிக் காட்டியுள்ளது.

என்னுடைய அரசு, அனைவருக்கும், குறிப்பாக, கிராமப்புற ஏழை மாணவர்களுக்குச் சம வாய்ப்பு அளிக்கக் கூடிய நியாயமான, ஒளிவு மறைவற்ற மாணவர் சேர்க்கை முறை ஒன்றை அறிமுகப்படுத்த வேண்டும் என்ற உறுதியான நிலைப்பாட்டில் மிகத் தெளிவாக இருப்பதால், உயர் நீதிமன்றத்தின் ஆணைகளை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் ஒரு சிறப்பு அனுமதி மனு தாக்கல் செய்ய உடனடியாக நடவடிக்கை எடுத்தது. உச்ச நீதிமன்றத்திற்கு விடுமுறையாக இருந்த போதிலும், இதில் கால விரயம் எதுவும் செய்யப் படவில்லை. சென்னை உயர்நீதிமன்றத்தில் இவ்வழக்கில் தன்னையும் ஒரு தரப்பாகச் சேர்த்துக் கொண்ட ஓர் அரசியல் கட்சி, உச்சநீதிமன்றத்தில் சிறப்பு அனுமதி மனு எதனையும் தாக்கல் செய்யாமல் இருந்துவிட்டது என்பதை இங்கே குறிப்பிட்டே ஆக வேண்டும். மாணவர் சேர்க்கையை முறைப்படுத்துவதற்கான இப்புதிய கொள்கையை நிலைநாட்டிச் செயல்படுத்துவதற்கு அவசியமான அனைத்து வாதங்களும் உச்ச நீதிமன்றத்தின் முன் ஆணித்தரமாக எடுத்து வைக்கப்படுவதை இவ்வரசு உறுதி செய்தது. ஆனால், உயர் நீதிமன்றத்தின் ஆணைகளுக்குத் தடை ஆணை பிறப்பிக்க முடியாது என உச்சநீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது. அதாவது, மதிப்பெண் உயர்த்துத் தேர்வில் பெற்ற மதிப்பெண்கள், +2 தேர்வு மதிப்பெண்கள் மற்றும் பொது நுழைவுத் தேர்வு மதிப்பெண்கள் ஆகியவற்றின் அடிப்படையிலான முந்தைய மாணவர் சேர்க்கை முறை 2005–2006 ஆம் கல்வி ஆண்டுக்கும் தொடர வேண்டும் என்ற உயர்நீதிமன்றத்தின் ஆணை கடைபிடிக்கப்பட வேண்டும்.

இதனூடே, உச்சநீதிமன்றத்தின் 7 நீதிபதிகள் அடங்கிய ஓர் ஆயம், தொழில் படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கை தொடர்பான, பல்வேறு அம்சங்களைத் தனியாக ஆய்வு செய்து வருகிறது. எதிர்காலத்தில் பின்பற்றப்பட வேண்டிய மாணவர் சேர்க்கை முறையை வகுக்கும்போது, உச்ச நீதிமன்றம் இவ்வழக்கில் பிறப்பிக்கவிருக்கின்ற ஆணையின் உட்கருத்தையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

எனவே, தற்போதைக்கு உடனடியாக, உச்ச நீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றத்தின் ஆணைகளைப் பின் பற்றுவதைத் தவிர இவ்வரசுக்கு வேறு வழி இல்லை. இதன் விளைவாக, பொது நுழைவுத் தேர்வு அடிப்படையிலான முந்தைய மாணவர் சேர்க்கை முறை மீண்டும் செயலுக்கு வருகிறது. எனவே +2 தேர்வு மதிப்பெண்கள், முன்னர் அனுமதிக்கப்பட்டவாறான மதிப்பெண் உயர்த்துத் தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் ஆகியவற்றோடு, ஏற்கெனவே நடத்தப்பட்ட பொது நுழைவுத் தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட முந்தைய மாணவர் சேர்க்கை முறையிலேயே, 2005–2006–ஆம் கல்வி ஆண்டில் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர். இது தொடர்பாக விரிவான ஆணைகள் தனியே பிறப்பிக்கப்படும்.

மாநில அரசு சட்டமன்றப் பேரவையை உடனடியாகக் கூட்டி, ஆட்சேபம் எழுப்பி, உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்ட அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள திட்டத்தை, உள்ளடக்கிய சட்டம் ஒன்றை இயற்றலாம் அல்லது அவசரச் சட்டம் ஒன்றைப் பிறப்பிக்கலாம் என்று

சில அரசியல் கட்சிகளும், பிறரும் வாதிடுகிறார்கள். இது தொடர்பாக உயர்நீதிமன்றம் கருத்துத் தெரிவிக்கையில், "அதனைச் செய்திருந்தாலும் (அதாவது, சட்டமோ, அவசரச் சட்டமோ கொண்டு வந்திருந்தாலும்) கூட அது செல்லுபடியாகக் கூடிய சட்டமாக இருக்குமா என்பது ஐயமே; ஏனெனில் அதுவும் கூட ஏற்கெனவே மேலே குறிப்பிட்டவாறு அரசியலமைப்புச் சட்டத்தின் 14ஆவது உறுப்பை மீறுவதாக அமையும்" என்று தெளிவுபடக் கூறியுள்ளது. என்னுடைய அரசு, சிறப்பு அனுமதி மனு தாக்கல் செய்துள்ள நிலையில், தற்போது இந்த விவகாரம் உச்சநீதிமன்றத்தில் உள்ளது. மாணவர் சேர்க்கைக் கொள்கை தொடர்பானப் பிரச்சினையின் சாரமே, அரசியலமைப்புச் சட்டத்தின் 14–ஆவது உறுப்பின் கீழ் அளிக்கப்பட்டுள்ளச் சம வாய்ப்புக் குறித்த அடிப்படைக் கோட்பாடு பற்றியதாகும். இதே பொருள் குறித்து நாடாளுமன்றத்தில் இயற்றப்பட்ட மத்தியச் சட்டம் காரணமாக இப்பிரச்சினை எழுகிறது. எனவே, கிராமப்புற மாணவர்களுக்கு நியாயம் கிடைக்கச் செய்ய வேண்டும் என்ற மாநில அரசின் நோக்கம், கிராமப்புற மாணவர்களுக்குச் சாதகமற்ற வேறுபட்டதொரு மாணவர் சேர்க்கை முறையை வரையறுக்கின்ற மத்திய சட்டத்தையும், அதன் விதிமுறைகளையும் எதிர் கொள்ள வேண்டி உள்ளது. இவ்வாறாக, நாடாளுமன்றச் சட்டம் ஒன்றின் கீழ் வகுக்கப்பட்டுள்ள மத்திய விதிமுறைகளை, அதிலும் குறிப்பாக, மத்திய சுகாதாரத் துறை அமைச்சகத்தின் கீழ் வருகின்ற இந்திய மருத்துவக் குழுவின் விதிமுறைகளைத் திருத்துவது தான் உண்மையிலேயே தற்போது செய்ய வேண்டிய பணியாகும். புதுடெல்லியில் ஆட்சி அதிகாரத்தில் உள்ள, தமிழகத்தைச் சேர்ந்த எதிர்கட்சிகளின் தலைவர்கள், மாநிலச் சட்டம் இயற்றப்பட வேண்டும் அல்லது அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட வேண்டும் என்று இங்கிருந்து அறிக்கைகள் விடுவதற்குப் பதிலாக, பொது நுழைவுத் தேர்வை ரத்து செய்து என்னுடைய அரசு அறிவித்த புதிய கொள்கையைச் செயல்படுத்துவதற்கு உண்மையான தடைக்கல்லாக இருக்கக் கூடிய மத்திய விதிமுறைகளை மாற்ற எளிதாக நடவடிக்கை எடுக்கலாமே ?

என்னுடைய அரசு கொண்டு வந்துள்ள இந்த அதிமுக்கியத்துவம் வாய்ந்த மாற்றத்தின் நுட்பமான அம்சங்களைத் தமிழகத்தைச் சேர்ந்த படித்த, அறிவார்ந்த மக்கள் நிச்சயமாகப் புரிந்து கொள்வார்கள். இது, உண்மையிலேயே கிராமப்புற ஏழை மக்களின் நலனை நோக்கமாகக் கொண்ட ஆக்கப்பூர்வமானதொரு நடவடிக்கையாகும். இதனைச் செயல்படுத்துவதில் நான் மிகவும் உறுதியாக உள்ளேன். உண்மையான சமூக நீதியின், உயர்ந்த நோக்கத்தை, எய்துவதில் ஏற்பட்டுள்ள தடைகள் தற்காலிகமானவையே, என்பதை மக்கள் புரிந்து கொள்வார்கள். நடப்புக் கல்வி ஆண்டில், பொது நுழைவுத் தேர்வை அடிப்படையாகக் கொண்ட முந்தைய மாணவர் சேர்க்கை முறையை மீண்டும் செயல்படுத்துவதைத் தவிர வேறு வழி இல்லையென்றாலும், பொது நுழைவுத் தேர்வைக் கட்டாயமாக்குகிற மத்திய சுகாதாரத் துறை அமைச்சகத்தின் கீழ் இயங்கி வருகின்ற இந்திய மருத்துவக் குழுவின் விதிமுறைகளையும், தொழில் படிப்புகள் குறித்த இதுபோன்ற இதர விதிமுறைகளையும் மாற்றி அமைப்பதற்கு உரிய எல்லா நடவடிக்கைகளும் நிச்சயமாக மேற்கொள்ளப்படும். இப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண, சம்பந்தப்பட்ட அனைவருடனும் உரியவாறு கலந்து ஆலோசித்து, பிற மாற்று வழிகள் குறித்தும் ஆராயப்படும். அடுத்தக் கல்வி ஆண்டிலிருந்து செயல்படுத்தத்தக்க ஒரு முறையானத் தீர்வினை முடிவு செய்வதற்கு ஏதுவாக மேற்சொன்ன அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். கிராமப்புற மாணவர்களின், நியாயமான விழைவுகள் நிறைவேறுவதை உறுதி செய்ய வேண்டும் என்ற என்னுடைய நோக்கதில் நான் மிகத் தெளிவாக இருக்கிறேன். இந்தக் குறிக்கோளை எய்துவதில் நான் சற்றும் தளரப் போவதில்லை. கிராமப்புற மாணவர்களுக்கு ஆதரவான, ஏற்றதொரு முறை அடுத்தக் கல்வி ஆண்டிலிருந்து செயல்படுத்தப் படுவதை உறுதிப்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் என்னுடைய அரசு மேற்கொள்ளும் என்பதைத் தமிழக மக்கள் உறுதியாக நம்பலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். ★

## கேரள மாநிலம் கோட்டயம் பொது நூலகத்திற்கு 1,000 புத்தகங்கள்

15.7.2005 அன்று காலை 11.30 மணியளவில் கேரள மாநிலம், கோட்டயம் மாவட்ட பொது நூலகக் குழுத் தலைவர் திரு. ஆபிரகாம் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத்தலைவர் டாக்டர் கா. காளிமுத்து அவர்களை கோட்டையில் சந்தித்தார். சட்டமன்றப் பேரவைச் செயலாளர் அவர்களும் உடனிருந்தார். கடந்த மாதம் இறுதியில் பேரவைத் தலைவர் அவர்கள் கோட்டயம் பொது நூலகத்தைப் பேரவை நூலகக் குழுத் தலைவர் என்ற முறையில் பார்வையிடச் சென்றபோது அந்நூலகத்திற்கு நூல்கள் சிலவற்றைப் பரிசாக வழங்குவது குறித்து விருப்பம் தெரிவித்திருந்ததைத் தொடர்ந்து, 15.7.2005 அன்று சுமார் 1,000 புத்தகங்களை திரு. ஆபிரகாம் அவர்களிடம் நேரில் வழங்கினார். மேலும், முன்பொரு நேர்வில் பேரவைத் தலைவர் அவர்கள், தான், வேளாண்மைத் துறை அமைச்சராகப் பொறுப்பு வகித்த காலத்திலும், பல அரியப் புத்தகங்களை இந்நூலகத்திற்கு வழங்கியுள்ளார்.



# சென்னை அரசுப் பொது மருத்துவமனை ஏழை, எளிய மக்களுக்குப் பணியாற்றுவதில் புதிய வரலாற்றைப் படைக்கும்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்

சென்னை மாநகர மக்களுக்கு, மருத்துவ வசதி அளிப்பதில் முன்னோடியாக விளங்கி வருவதும், தமிழகத்தில் உள்ள மருத்துவமனைகளின் திலகமாக விளங்குவதுமான சென்னை அரசுப் பொது மருத்துவமனையில், 104 கோடியே 47 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இந்தப் புதிய அடுக்கு மாடிக் கட்டடங்களை, இன்று திறந்து வைத்ததில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

மாபெரும் மருத்துவர்களும், மருத்துவ அறிஞர்களும், வாழ்ந்த நாடு தமிழ்நாடு.

"நோயற்ற வாழ்வே, குறைவற்ற செல்வம்" என்னும் பழமொழி, நல்வாழ்வு பற்றிய தமிழர்களின் சிந்தனையை நமக்கு எடுத்துக்காட்டுகிறது.

ஞான நூலாகவும், யோக நூலாகவும் விளங்குகின்ற திருமந்திரத்தில், திருமூலர் மருந்தைப் பற்றிக் கூறியுள்ளக் கருத்து, உலக மருத்துவர்கள் மருந்தைப் பற்றி இதுவரை கூறியுள்ளக் கருத்துகளின் சாரமாக விளங்குவதோடு அல்லாமல், அதைவிட ஒரு படி தாண்டிச் செல்கிறக் கருத்தாகவும் உள்ளது.

எது மருந்து என்கிற கேள்விக்கு,

உடல் நோயை நீக்குவது மருந்து!
உளநோயை நீக்குவது மருந்து!
நோயே இனிமேல் வராமல் தடுப்பது மருந்து!
மரணத்தைத் தடுப்பதே மருந்து!

என்று விடை தருகிறார் திருமூலர்.

திருமூலர் கருத்துப்படி, மக்களுக்கு நோய் வராமல் தடுக்கவும், வந்த நோயைக் குணப்படுத்தவும் மகத்தான பணி ஆற்றி வருகிறது எனது தலைமையிலான அரசு. தமிழக மக்கள் அனைவருக்கும் நல்வாழ்வு என்ற



இலக்குடன், மக்களுக்குச் சுகாதாரச் சேவைகள் அளிப்பதில், ஒரு முன்னோடி மாநிலமாகத் தமிழகத்தை உருவாக்கிட பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளை நான் மேற்கொண்டு வருகிறேன்.

தமிழக மக்களுக்கு, மேம்பட்ட மருத்துவ வசதிகள் அளிக்கப்பட வேண்டும் என்ற என்னுடைய முனைப்பான நடவடிக்கைகளின் ஒரு முக்கியமான நிகழ்வாக, இன்று சென்னை அரசுப் பொது மருத்துவமனையின் அடுக்கு மாடிக் கட்டடங்கள் என்னால் திறந்து வைக்கப் பட்டுள்ளன. இதுவன்றி, இந்த விழாவில், "எலும்பு வங்கி", அதாவது "Bone Bank" ஒன்றையும் நான் திறந்து வைத்துள்ளேன்.

பல்வேறு அறுவைச் சிகிச்சை அரங்கங்கள்; அறுவைச் சிகிச்சைக்குப் பிந்தைய மருத்துவச் சிகிச்சைப் பிரிவுகள்; விபத்துக் காயச் சிகிச்சை மற்றும் தீவிர மருத்துவச் சிகிச்சை; 24 மணி நேரமும் இயங்கும் அவசரச் சிகிச்சைப் பிரிவுகள் போன்ற ஏராளமான வசதிகள் இங்கு உருவாக்கப்பட்டுள்ளன. இரத்தம் உறையாமல் காக்கும் Deep Freezers கருவிகள்; இரத்த அணுக்களைப் பிரிக்கும் Cell Separators கருவிகள் முதலான உயர் தொழில்நுட்பச் சாதனங்கள் பொருத்தப்பட்ட வெவ்வேறு வகைகளைச் சார்ந்த சுமார் 3,000 இரத்தப் பைகள் சேமித்து வைக்கும் வசதிகளைக் கொண்ட நாட்டிலேயே மிகப் பெரிய அளவிலான, இரத்தச் சேமிப்பு வங்கி, இக்கட்டடத்தில் அமைக்கப்பட்டுள்ளது என்பதைப் பெருமிதத்துடன் குறிப்பிட விரும்புகிறேன். மேலும், இந்தியாவிலேயே முதன் முறையாக அரசுத் துறையில் தொடங்கப்பட்டுள்ள நச்சு நீக்குச் சிகிச்சை மையமும், இக்கட்டடத்தில் தான் அமைக்கப்பட்டுள்ளது என்பதும் பெருமைக்குரிய செய்தியாகும். ISO 9001:2000 என்னும் சர்வதேசத் தரச் சான்றிதழை இந்த ஆண்டு பெற்றுள்ள சென்னை மருத்துவக் கல்லூரி மற்றும் அரசுப் பொது மருத்துவமனை தற்போது பெற்றுள்ளப் புதிய வசதிகளால், சென்னை மாநகர மக்களுக்கும் மற்றும் மேம்பட்ட சிகிச்சை நாடி வரும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்களுக்கும் மேலும் சிறந்த சிகிச்சையை அளிக்கும் என்பது உறுதி.

நகரங்களும், நகர்ப்புறங்களும் பெறுகின்ற வசதிகளுக்கு இணையாக, கிராமங்களும் கிராமப்புறங்களும் அனைத்து வசதிகளையும் பெற்றிட வேண்டும் என்பதே எனது குறிக்கோளாகும். அந்த வகையில், நவீன வசதிகளுடன் கூடிய மருத்துவ மனைகள், அதன் மூலம் நகர்ப்புற மக்களுக்குக் கிடைக்கும் மருத்துவச் சிகிச்சைகள் ஆகிய அனைத்தும் கிராமப்புறங்களில் வசிக்கும் ஊரகப் பகுதி மக்களுக்கும் கிடைத்திட வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டு, அதனை நிறைவேற்றும் முகமாக மாவட்ட மருத்துவமனைகள், வட்ட மருத்துவமனைகள், வட்டம் சாரா மருத்துவமனைகள் மற்றும் மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆகியவை இல்லாத ஊராட்சி ஒன்றியங்கள் ஒவ்வொன்றிலும், 30 படுக்கை வசதி கொண்ட ஒரு மருத்துவ நிலையமாவது அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று நான் ஆணையிட்டேன் என்பதை, இந்த நேரத்தில் நினைவு கூர விரும்புகிறேன். அதன்படி, கடந்த நான்கு ஆண்டுகளில் நவீன மருத்துவக் கருவிகளான அல்ட்ரா சோனோகிராம் (Ultra Sonogram), ஈ.சி.ஜி., ஊடுகதிர் இயந்திரச் சாதனப் பிரிவு (X-ray), பகுப்பாய்வு செய்யும் ஆய்வகம், (Laboratory) மற்றும் நோயாளர் ஊர்தி (Ambulance) போன்ற வசதிகளுடன் 105 ஆரம்பச் சுகாதார நிலையங்கள், 30 படுக்கை வசதி கொண்ட மருத்துவமனைகளாக மேம்படுத்தப்பட்டுள்ளதுடன், புதியதாக 5 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன என்பதை மிகுந்த மன நிறைவுடன் இங்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தில் உள்ள ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும், அரசு மருத்துவமனைகளிலும், காலியாக உள்ள பணியிடங்களை உடனடியாக நிரப்பிட நான் ஆணையிட்டவாறு கடந்த நான்கு ஆண்டுகளில் 3,917 மருத்துவர்கள் பணி நியமனம் செய்யப்பட்டு, தொய்வில்லாத மருத்துவச் சிகிச்சை அளித்து



வருகின்றனர் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழக மக்களுக்குத் தடையற்ற மருத்துவச் சேவைகள் வழங்குவதையும், அவர்களுக்கு ஆரோக்கியமான வாழ்வு அளிப்பதையும் குறிக்கோளாகக் கொண்டு, பல்வேறு முன்னோடித் திட்டங்களை எனது தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

மாநிலத்தில் உள்ள அரசு மருத்துவமனைகள்; மாவட்ட, வட்ட அளவிலான மருத்துவமனைகள் ஆகியவற்றின் செயல்பாடுகளை உயர்த்திடவும்; இருதய நோய், சர்க்கரை நோய், புற்று நோய்களுக்குச் சிகிச்சை அளிப்பதில் கூடுதல் கவனம் செலுத்தவும்; நோய்த் தடுப்பு முறைகளை விரிவுபடுத்தவும்; உலக வங்கியின் உதவியுடன் செயல்படுத்தப்படும் 597.15 கோடி ரூபாய் மதிப்பிலான தமிழ்நாடு சுகாதார மேம்பாட்டுத் திட்டத்தை 21.3.2005 அன்று நான் தொடங்கி வைத்தேன்.

நோயாளிகள் பல்வேறு துறைகளைச் சார்ந்த மருத்துவ வல்லுநர்களுடன் கணினி மூலம் நேரடியாகத் தொடர்பு கொண்டு, தங்களது நோய்கள் குறித்தச் சந்தேகங்களைத் தீர்த்துக் கொண்டு சிகிச்சை பெறும் வகையில், நாள்தோறும் மாலை 4 மணி முதல், 6 மணி வரை உரையாடும் வசதியுடன் கூடிய மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின் இணையதளத்தை நான் தொடங்கி வைத்தேன். அரசு மருத்துவமனையைப் பொறுத்தவரை, இந்தியாவிலேயே முதன் முறையாக செயல்படுத்தப்படுகின்ற இந்த வசதியை ஒரு இலட்சம் பேர் பயன்படுத்தியுள்ளனர். அதில் இதுவரை 10,000 நோயாளிகள் தங்களது நோய்கள் குறித்து 900 மருத்துவர்களுடன் கணினி மூலம் நேரடியாகப் பேசி பயன்பெற்றுள்ளனர் என்பதை நான் மனமகிழ்வோடு குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன்.

பிறவிக் குறைபாடு காரணமாக, குழந்தைகளுக்கு விகாரமான முகத் தோற்றத்தை ஏற்படுத்துவதோடு பேச்சு சரியின்மை, காது கேளாமை மற்றும் பற்கள் வளர்ச்சியில் குறைபாடு போன்ற மருத்துவக் குறைகளை ஏற்படுத்து கின்றப் பிளவுபட்ட உதடு மற்றும் பிளவுபட்ட மேலண்ணம் உடைய குழந்தைகள் அனைவருக்கும் இலவசச் சீரமைப்பு அறுவைச் சிகிச்சை செய்கின்ற புதுமைத் திட்டத்தை நான் சமீபத்தில் தொடங்கி வைத்தேன்.

62 ஒருங்கிணைந்த அவசரக் கால மகப்பேறுச் சிகிச்சை மற்றும் சிசுப் பராமரிப்பு மருத்துவமனைகள் 24 மணி நேரமும் சிசேரியன் அறுவைச் சிகிச்சை வசதிகளுடன் செயல்பட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதனால், மாவட்டத்தின் எந்தப் பகுதியிலிருந்தும் 1 மணி நேரத்தில் தாய்மார்கள் அனைத்து வசதிகளையும் கொண்ட மருத்துவமனைகளுக்குச் சென்றடைய முடியும். மேலும், 180 ஆரம்பச் சுகாதார நிலையங்களில் 24 மணி நேரமும் பேறு காலச் சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

கருவுற்றத் தாய்மார்களின் மன உளைச்சலையும், பிரசவம் தொடர்பான அவர்களது பயத்தையும் நீக்கும் வகையில், அரசு மருத்துவமனைகள் அனைத்திலும், பிரசவம் மேற்கொள்ளும் தாய்மார்கள் தங்களது பிரசவ நேரத்தில் அவரது தாயார், சகோதரி அல்லது அவர் விரும்புகின்ற பெண் உறவினர் எவரேனும் ஒருவரை உடன் வைத்துக் கொள்ளலாம் என்னும் புதுமைத் திட்டத்தையும் நான் அறிமுகப்படுத்தி உள்ளேன்.

இவ்வாறு, நான் மேற்கொண்ட பல்வேறு முனைப்பான நடவடிக்கைகளின் விளைவாக,

இந்தச் சீர்மிகு விழாவில், 261 கோடியே 7 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டி முடிக்கப்பட உள்ள 6,660 பணிகளுக்கு அடிக்கல் நாட்டியதில்,உள்ளம் மிக மகிழ்கிறேன். தொகுப்பு வீடுகள், அங்கன்வாடிக் கட்டடங்கள், மாணவ, மாணவியர் விடுதிக் கட்டடங்கள், கருத்தாய்வு மையக் கட்டடங்கள், பள்ளிக் கட்டடங்கள், சமுதாயக் கூடங்கள், தடுப்பணைகள் போன்றவற்றிற்கு அடிக்கல் நாட்டியதில் நான் மனமகிழ்ச்சி அடைகிறேன்.

நான் ஆட்சிப் பொறுப்பேற்ற நாள் முதல்,இன்று வரை மக்களுக்கு நன்மை செய்யும் திட்டங்களைத் தொடர்ந்து அறிவித்து நிறைவேற்றி வருகிறேன். ஒவ்வொரு துறையிலும் இப்படித் திட்டங்களை அறிவித்துச் செயல்படுத்தி வருகிறேன். சமுதாயத்தின் ஒவ்வொரு பிரிவினர்க்குமான திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்தி வருகிறேன்.

ஆனால், தமிழக மக்கள் நலன் கருதி நான் அறிவிக்கும் திட்டங்களைப் பார்த்துப் பொறாமையிலே புழுங்கி, புதுப்புது அறிக்கை விடுவதையே பொழுது போக்காகக் கொண்டிருக்கிறார்கள் மத்தியில் ஆளும் கூட்டணி அரசுக்கு 'வழிகாட்டும் ஒளி விளக்குகளாக' தங்களை எண்ணிக் கொண்டுள்ள ஒரு சிலர்.

'உங்களை நன்மை செய்யவும் விட மாட்டோம்; நாங்கள் தீமை செய்யவும் தவற மாட்டோம்', என்ற பாணியில் தான் அவர்கள் இன்றுவரை செயல்பட்டு வருகிறார்கள்.

பெட்ரோல் மற்றும் டீசல் விலை உயர்வின் மூலம் தமிழக மக்களின் முதுகில் ஏற்றிய, அநியாயச் சுமையை இறக்கி வையுங்கள் என்று கேட்க வேண்டிய அவர்கள், அதை நியாயப்படுத்தி அறிக்கை விடுகிறார்கள். அநியாய விலை உயர்வுக்கு ஆலவட்டம் வீசுகிறார்கள்.

'நெஞ்சில் உரமும் இன்றி
நேர்மைத் திறமும் இன்றி
வஞ்சனை செய்வாரடி – கிளியே
வாய்ச் சொல்லில் வீரரடி'

– என்று பாரதி பாடியது, அவர்களைப் பற்றித் தானோ?

விவசாயத் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வை நான் நிர்ணயம் செய்து ஆணையிட்டால், அதைப் பொறுக்காமல் "இந்த அளவிற்கு, ஊதியம் தர வேண்டுமென்றால், அவர்களுக்கு வேலை கிடைப்பதே முயற் கொம்பாகி விடும்", என்று அறிக்கை விட்டு விவசாயத் தொழிலாளர்களுக்குக் கிடைக்க வேண்டிய நியாயமான ஊதிய உயர்வைத் தடுக்கப் பார்க்கிறார்கள்.

ஒருங்கிணைந்த சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், 920 கோடி ரூபாய் மதிப்பில்,தமிழ்நாட்டில் உள்ள சாலைகளை மேம்படுத்த நான் ஆணை வெளியிட்டால் "எவ்வளவு பெரிய திட்டத்தை எவ்வளவு சர்வ சாதாரணமாக அறிவிக்கிறார்" என்று அங்கலாய்க்கிறார்கள்.

அன்றாடம் அறிவிப்புகளை நான் அள்ளிக் கொட்டிக் கொண்டிருப்பதாக பொறாமையில், ஆத்திரத்தில் அறிக்கை விடுகிறார்கள்.

மக்கள் நலத் திட்டங்களைப் பெருமளவில் தற்போது நிறைவேற்ற முடிகிறதென்றால், அதற்குக் காரணம் எனது அரசின் திறம்பட்ட நிதி நிருவாகம் தான்!

நான் ஆட்சிப் பொறுப்பேற்ற போது அதல பாதாளத்தில் கிடந்தது தமிழகத்தின் நிதி நிலை! காலி ஆகக் கிடந்தது அரசு கஜானா! தள்ளாடிக் கொண்டிருந்தது தமிழக நிதி நிருவாகம்!

முந்தைய அரசு விட்டுப் போயிருந்த முள் கிரீடத்தை அணிந்த நான், நிதிச் சீரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டேன்; நித்தமும் துறை வாரியாகத் திட்டமிட்டேன்; நிதி நிலை பெருக அரசு வருமானத்தைப் பெருக்கினேன்; அனாவசியச் செலவுகளைக் குறைத்தேன்!

விளைவு? தள்ளாடிக் கொண்டிருந்த நிதி நிருவாகம் புத்துணர்ச்சி பெற்றது.

வளர்ச்சித் திட்டங்களை வரிசையாக அறிவித்தேன்; செயல்படுத்தினேன்.

இன்று, நிதி வளம் பெற்ற நிலையில் இன்னும் பல திட்டங்களை அறிவித்துக் கொண்டிருக்கிறேன்.

ஆனால், தேர்தலை முன்னிட்டே நான் இப்படிச் செய்வதாகப் பொருந்தாத காரணத்தைத் திருந்தாத சில மனிதர்கள் சொல்லி வருகிறார்கள்.

தேர்தலைப் பற்றியே எப்போதும் சிந்தித்து, கோட்டையைப் பற்றியே ஒவ்வொரு நாளும் கனவு கண்டு கொண்டிருக்கும் கோமான்களுக்கு, ஏழை, எளிய மக்கள் நலன் பெற,நான் அறிவிக்கும் திட்டங்கள் எட்டிக்காயாகக் கசப்பதில் என்ன வியப்பு?

கொள்கை அறிக்கைகளை நான் வெளியிட்டுக் கொண்டிருக்க, குழப்ப அறிக்கைகளை வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்கள் சில குதர்க்கவாதிகள்!






நான் ஆக்கப் பணிகளுக்கான அறிக்கை தருகிறேன். அவற்றைக் கண்ணும் கருத்துமாகச் செயல்படுத்துகிறேன். என்னைப் பொறுத்தவரையில், அறிக்கைகள்; அரும்புகள்; திட்டங்கள் காய்கள்; செயல்பாடுகள் கனிகள்!

என்னுடைய அறிக்கை அரும்புகள் சாதனைக் கனிகளாக உருமாறி சமுதாயத்துக்குப் பயன்படுகின்றன.

உங்கள் துணையோடு இந்தப் பணி என்றும் தொடரும் என்பதை மகிழ்வோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தில் உள்ள நகர்ப் பகுதிகளுக்கும், கிராமப்புறக் குடியிருப்புகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர், தேவையான அளவு தடையின்றி வழங்கப்பட வேண்டும் என்பதே எனது நோக்கம் ஆகும். இந்த நோக்கத்தை நிறைவேற்றும் வகையில், அந்தந்தப் பகுதிகளுக்கு ஏற்ற குடிநீர்த் திட்டங்களை எனது அரசு செயல்படுத்தி வருகிறது. திருவள்ளூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், நம்பகமான நீர் ஆதாரங்கள் அவ்வளவாக இல்லாத காரணத்தால், பெருமளவில் அந்தந்தக் குடியிருப்புகளிலேயே கிணறுகள் மற்றும் ஆழ்துளைக் கிணறுகள் அமைத்து, தனி மின் விசைத் திட்டங்கள் மூலம் குடிநீர் வழங்க எனது அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இந்த அடிப்படையில், இன்று நான் திறந்து வைத்துள்ள திட்டங்கள் உட்பட, இதுவரை 46.75 கோடி ரூபாய் மதிப்பில் தனி மின் விசைத் திட்டங்கள் திருவள்ளூர் மாவட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன. ஒட்டுமொத்தமாக திருவள்ளூர் மாவட்டத்தில், எனது அரசு ஆட்சிப் பொறுப்பேற்றது முதல், இதுவரை 89.45 கோடி ரூபாய் செலவில் குடிநீர்ப் பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இதன் மூலம், முழுமையான அளவு – அதாவது நபர் ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு 40 லிட்டர் என்ற அளவில் குடிநீர் வழங்கப்படும். குடியிருப்புகளின் எண்ணிக்கை 801–லிருந்து 1,736 ஆக உயர்ந்துள்ளது.

இந்த இனிய விழாவில், திருவள்ளூர் மாவட்ட மக்களின் நலன் கருதி, அவர்களது குடிநீர்த் தேவையை நிறைவு செய்திடும் வகையில், 1 கோடியே 59 இலட்சம் ரூபாய் மதிப்பிலான ஊத்துக்கோட்டை சிறப்பு ஊராட்சிக் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்; 1 கோடியே 23 இலட்சம் ரூபாய் மதிப்பிலானப் பொன்னேரி சிறப்பு ஊராட்சிக் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்; 44 இலட்சம் ரூபாய் மதிப்பிலான கும்மிடிப்பூண்டி சிறப்பு ஊராட்சிக் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்; 11 கோடி ரூபாய் மதிப்பிலான திருவள்ளூர் நகராட்சிக் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்; 9 கோடியே 46 இலட்சம் ரூபாய் மதிப்பில் பூவிருந்தவல்லி நகராட்சிக்கானக் கூட்டுக் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்; 2 கோடியே 93 இலட்சம் ரூபாய் மதிப்பிலான மீஞ்சூர் ஒன்றியத்தைச் சேர்ந்த அனுப்பம்பட்டு மற்றும் 62 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆகியவை உள்ளிட்ட 33 கோடியே 27 இலட்சம் ரூபாய் மதிப்பில் நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ள 114 குடிநீர்த் திட்டங்களைத் திறந்து வைத்துள்ளேன் என்பதையும், இத்திட்டங்களின் வாயிலாக 2 இலட்சத்து 22 ஆயிரம் பேர் பயன் அடைவார்கள் என்பதையும் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், 24 இலட்சம் ரூபாய் மதிப்பிலான அம்மையார் குப்பம் ஊராட்சிக் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்; 2 கோடியே 81 இலட்சம் ரூபாய் மதிப்பிலான மீஞ்சூர் சிறப்பு ஊராட்சிக் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்; 3 கோடியே 15 இலட்சம் ரூபாய் மதிப்பிலான மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த அத்திப்பட்டு மற்றும் 66 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம், ஆகிய குடிநீர் மேம்பாட்டுப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டியுள்ளேன் என்பதையும், இங்கு திரளாகக் கூடியுள்ள மக்களுக்குத் தெரிவிப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

இன்று இந்த இனிய விழாவில், 7 கோடியே 57 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட உள்ள 125 தனி மின்விசைத் திட்டங்களுக்கும்; 1 கோடியே 32 இலட்சம் ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட உள்ள 220 சிறு மின்விசைத் திட்டங்களுக்கும் நான் அடிக்கல் நாட்டியுள்ளேன் என்பதில் அக மிக மகிழ்கிறேன்.

ஒரு நாட்டின் முன்னேற்றம் அதன் சாலை வசதிகளைப் பொறுத்தே அமைகிறது. மாநிலத்தில் தொழில் வளம்

தமிழகத்தில் எத்தகைய தொரு மாற்றம் உருவாகியுள்ளது தெரியுமா? நமது தமிழகம் எத்தகையதொரு மாநிலமாக மாறியுள்ளது தெரியுமா?



★ சிறந்த சுகாதாரக் குறியீடுகளை அடைந்த மாநிலமாக இன்று தமிழகம் திகழ்கிறது. தற்பொழுது, 99.6 சதவிகிதம் பிரசவங்கள் மருத்துவமனை மற்றும் பயிற்சி பெற்ற பணியாளர்கள் மூலம், பாதுகாப்பான முறையில், தமிழ்நாட்டில் நடைபெறுகின்றன. இதில், 55 சதவிகிதம் பிரசவங்கள் அரசு மருத்துவமனைகளில் நடைபெறுகின்றன. இது நாட்டிலேயே மிக உயரிய அளவாகும்.

★ சிசு மரண வீதம் 2000–மாம் ஆண்டில் 51 என இருந்தது. இது தற்போது 30– ஆகக் குறைந்துள்ளது.

★ 2001ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது பேறுகால இறப்புகள் தற்போது 25 சதவிகிதம் குறைந்துள்ளது.

★ குடும்ப நலம், குழந்தைப் பேறு சார் நலம், குழந்தைகள் நலம், தடுப்பூசித் திட்டங்கள் மற்றும் தொற்று நோய்களைக் கட்டுப்படுத்துதல் போன்ற பல பிரிவுகளில் சாதனைகள் பலவற்றைப் படைத்துள்ள மாநிலமாகத் தமிழகம் திகழ்கிறது.

★ எய்ட்ஸ், தொழுநோய், காசநோய் மற்றும் பார்வைக் குறைபாடு ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும் சுகாதாரத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் முன்னோடி மாநிலமாகத் தமிழகம் விளங்குகிறது.

இத்தனைப் பெருமைகளைத் தமிழ்நாடு இன்றைக்கு ஈட்டியுள்ளது.

நாட்டின் பிற பகுதிகளுக்கு எடுத்துக்காட்டாகத் திகழும் பொதுச் சுகாதாரக் கொள்கைகளால்; ஏனைய மாநிலங்களுக்கு வழிகாட்டும் முன்னோடித் திட்டங்களால்; தமிழகம் சுகாதாரத் துறையில் முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. மேம்பட்ட மருத்துவ வசதிகளால், உயிர் காக்கும் உயர் நுட்ப உபகரணங்கள் கொண்ட மருத்துவமனைகளால், தொழில் திறன் மிகுந்த மருத்துவ வல்லுநர்களால், இன்று சென்னை மாநகரம் இந்தியாவின் மருத்துவத் தலைநகரமாக உருப் பெற்றுள்ளது. இந்தியாவின் எந்த மூலையில் இருப்பவரும் தனது நோய் நீங்கி உடல் நலம் பெற்றிட, சென்னை வந்தால் சிறப்பானச் சிகிச்சை பெற்று, உடல் நலம் பெற்று, இன்முகத்துடன் தங்கள் வீடு திரும்பலாம் என்ற நிலையை நாம் உருவாக்கி இருக்கிறோம் என்பதை மன நிறைவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல்வேறு மருத்துவ ஜாம்பவான்கள் பணிபுரிந்த இந்த சென்னை அரசுப் பொது மருத்துவமனை; புகழ் பெற்ற மருத்துவர்களை உருவாக்கிய இந்த மருத்துவமனை; தனித் திறமை வாய்ந்த மருத்துவர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கும் இந்த மருத்துவமனை; இன்று பெற்றிருக்கும் புதிய கட்டட வசதியோடும், புதுமையான கருவி வசதியோடும், மக்களுக்குப் பணியாற்றுவதில் குறிப்பாக, ஏழை, எளிய மக்களுக்குப் பணியாற்றுவதில், புதிய வரலாற்றை நிச்சயம் படைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, உடல் நலம் பேணி, உயிர் நலம் பேணும் உன்னதப் பணியில் ஈடுபட்டிருக்கும் அனைவருக்கும் எனது வாழ்த்துகளை உரித்தாக்கி, அண்ணா நாமம் வாழ்க! புரட்சித் தலைவர் நாமம் வாழ்க! எனக் கூறி விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

1.7.2005 அன்று நடைபெற்ற
சென்னை அரசுப் பொது மருத்துவமனை
புதிய அடுக்குமாடிக் கட்டடங்கள் திறப்பு விழாவில்,
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்
ஆற்றிய உரை.



# மகேசனாகிய மக்கள் எப்போதும் என் இதயத்தில் இருக்கிறார்கள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்

பெருக வேண்டும் என்றால் மேம்பட்ட சாலை வசதிகளுடன் அந்த மாநிலம் இருக்க வேண்டும் என்பது மிகவும் அவசியம் ஆகும். இதனைக் கருத்தில் கொண்டு தான் சாலைகளை மேம்படுத்தவும், இணைப்புச் சாலைகளை உருவாக்கவும், பாலங்கள் கட்டவும் நான் மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகிறேன். நபார்டு வங்கிக் கடன், உலக வங்கிக் கடன், மாநில அரசின் பல்வேறு திட்டங்கள் என்று வாய்ப்புள்ள அனைத்துத் திட்டங்களின் வாயிலாகவும் சாலை மேம்பாட்டுப் பணிகளை எனது அரசு செயல்படுத்தி வருகிறது.

இந்த அடிப்படையில் தான், திருவள்ளூர் மாவட்டத்தில் கடந்த நான்கு ஆண்டுகளில் பல்வேறு திட்டங்களின் கீழ், 130.65 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 1,086 கிலோ மீட்டர் நீளத்திற்குச் சாலைகளைச் சீரமைத்தல், புதுப்பித்தல், புதிதாக உருவாக்குதல் ஆகிய பணிகளும், 8 பாலப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதில் 937 கிலோ மீட்டர் சாலைப் பணிகளும், 6 பாலப் பணிகளும் நிறைவேற்றி முடிக்கப்பட்டு, மக்கள் பயன்பாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளன; மீதமுள்ள 149 கிலோ மீட்டர் சாலைப் பணிகளும், 2 பாலப் பணிகளும் விரைவில் முடிக்கப்படும் என்பதையும் தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த இனிய விழாவில், இம்மாவட்டத்தில் மேலும் 78.50 கிலோ மீட்டர் நீளமுள்ளச் சாலைகளை 127.60 கோடி மதிப்பில் அகலப்படுத்தி மேம்படுத்திட இன்று நான் அடிக்கல் நாட்டியுள்ளேன். இத்திட்டத்தின் மூலம், திருவொற்றியூர்–பொன்னேரி–பஞ்செட்டி சாலையில், திருவொற்றியூரில் இருந்து மணலி வரை 4.6 கிலோ மீட்டரும்; சென்னை–பழவேற்காடு சாலையில் தச்சூர் கூட் ரோட்டில் இருந்து பொன்னேரி வரை 7.5 கிலோ மீட்டரும்; அம்பத்தூர் – மதனகுப்பம் – மேட்டுப்பாளையம் சாலையில் அம்பத்தூரில் இருந்து புழல் வரை 8.2 கிலோ மீட்டரும், திருமழிசை – சத்தியவேடு சாலையில் பூவிருந்தவல்லியில் இருந்து திருவள்ளூர் வரை 20 கிலோ மீட்டரும், சென்னை எண்ணூர் திருவொற்றியூர் நெடுஞ்சாலையில் தண்டு மாரியம்மன் கோவிலில் இருந்து எர்ணாவூர் பாலம் வரை 5 கிலோ மீட்டரும்; ஆக, 45.3 கிலோ மீட்டர் சாலைகள் நான்கு வழித்தடச் சாலைகளாக அகலப்படுத்தப்பட்டு, உறுதிப்படுத்தப்படும் என்பதையும், சிங்கப்பெருமாள் கோயில் – ஸ்ரீபெரும்புதூர் – திருவள்ளூர் – செங்குன்றம் சாலையில் திருவள்ளூர் சாலையில் இருந்து, செங்குன்றம் வரை 34.4 கிலோ மீட்டர் நீளம் அகலப்படுத்தி உறுதிப்படுத்தப்படும் என்பதையும் தெரிவிப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

இன்று, நான்கு வழித்தடச் சாலைகளாக அகலப்படுத்தி உறுதிப்படுத்திட நான் அடிக்கல் நாட்டியுள்ள இந்தச் சாலை மேம்பாட்டுப் பணிகள் மூலம், அண்டை மாநிலமான ஆந்திரப் பிரதேசம் செல்கின்ற அனைத்து வாகனப் போக்குவரத்தும் எவ்வித நெரிசலும் இன்றிப் பாதுகாப்புடன் எளிதாகச் செல்ல ஏதுவாகும் என்பதுடன்; மாநிலப் பொருளாதார வளர்ச்சிக்கும் இது மிகவும் பயன்படும் என்பதையும் மிக்க மன நிறைவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம், திருவள்ளூர் மாவட்டத்தில் மேலும் தொழில் வளம் பெருகி, பலப் பல தொழிற்சாலைகள் உருவாகி,மக்களுக்கு வேலைவாய்ப்பு பெருகுவதுடன், மாவட்டப் பொருளாதாரமும் மேம்பாடு அடையும் என்பது உறுதி.

மேலும், பல்வேறு திட்டங்கள் வாயிலாக கிராமப்புற இணைப்புச் சாலைகள் அமைக்கும் பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 2006–2007ஆம் ஆண்டுக்குள் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள அனைத்துக் கிராமங்களும் முழுமையான தரமுள்ள இணைப்புச் சாலைகளைப் பெற்றிடும் என்பதைத் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

மக்களின் தேவைகளை அறிந்து அவற்றை நிறைவேற்றுவதை எனது அரசு தனது தலையாயக் கடமையாகக் கொண்டுள்ளது. அதன் அடிப்படையில், திருவள்ளூர் மாவட்ட மக்களின் பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றும் வகையில், சில புதிய திட்டங்களை அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

1. கும்மிடிப்பூண்டி வளர்ந்து வரும் நகரமாக உள்ளதால், இப்பகுதி மக்களின் மருத்துவத் தேவைகள் நாளும் அதிகரித்து வருகின்றன. எனவே, இதனை நிறைவு செய்யும் வகையில் தற்போது இந்நகரில் உள்ள 30 படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனையை, 50 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக தரம் உயர்த்திட நான் ஆணையிட்டுள்ளேன். அறுவைச் சிகிச்சை அரங்கம், மகப்பேறுப் பிரிவு ஆகியவை மேம்படுத்தப்படும். இதனால், சிசேரியன் அறுவைச் சிகிச்சை உட்பட பல்வேறு அறுவைச் சிகிச்சைகள் இம்மருத்துவமனையில் மேற்கொள்ள ஏதுவாகும். தேவையானப் புதிய கட்டடம் கட்டுவதற்கும், அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கும் 1 கோடி ரூபாய், ஒதுக்கீடு செய்யப்படும். இம்மருத்துவமனைக்கு, கூடுதலாக 2 மருத்துவர்கள் மற்றும் 4 செவிலியர் பணியிடங்கள் ஏற்படுத்தப்படும். கும்மிடிப்பூண்டி அரசு மருத்துவமனையில் உள்ள பிணவறை சீரமைக்கப்படும்.



2. அருங்குளம் அருகில் குசத்தலை ஆற்றில் அமைக்கப்பட்ட நீர் உறிஞ்சு கிணறுகள், திருத்தணி நகராட்சிக்கு நீர் வழங்கும் ஆதாரமாக அமைக்கப்பட்டது. இவை வறண்டுவிட்ட காரணத்தால், தற்போது திருத்தணி நகராட்சியில் குடிநீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது என்பது எனது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. எனவே, எனது ஆணையின் பேரில் நீர் ஆதாரத்தைப் பெருக்குவதற்காகக் குசத்தலை ஆற்றின் குறுக்கே, தடுப்பணை ஒன்று பொதுப்பணித் துறையின் மூலம் கட்டப்பட்டு வருகிறது. மேலும், திருத்தணி நகராட்சிக்கான குடிநீர் விநியோகத்தை மேம்படுத்து வதற்காக பாலாற்றில், திருப்பாற்கடல் என்னும் இடத்தில் இருந்து, புதிய குடிநீர்த் திட்டம் ஒன்று செயல்படுத்திட ஆய்வுகள் உடனடியாக மேற்கொள்ளவும் நான் ஆணையிட்டுள்ளேன்.

3. திருவள்ளூர் நகரில் தற்போதுள்ள பேருந்து நிலையம், மக்களின் வளர்ந்து வரும் தேவைக்கு ஈடு கொடுக்க முடியாத வண்ணம் இட நெருக்கடியுடன் இருப்பதைக் கருத்தில் கொண்டு, அனைத்து அடிப்படை வசதிகளோடும், போதிய இட வசதியோடும் ஒரு புதிய பேருந்து நிலையம் அமைக்கப்படும். சம்பந்தப்பட்ட மக்களுடன் கலந்து பேசித் தகுந்த இடம் தேர்வு செய்து இந்தப் புதிய பேருந்து நிலையம் விரைவில் கட்டப்படும்.

4. பூந்தமல்லியில் 36 செண்ட் பரப்பளவே கொண்ட ஒரு சிறிய இடத்தில் பேருந்து நிலையம் தற்போது அமையப் பெற்றுள்ளது. மிக மையமாக அமைந்துள்ள இப்பேருந்து நிலையத்திற்கு வந்து போகின்ற பேருந்துகளின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதால், மிகுந்த இட நெருக்கடி ஏற்பட்டு பொது மக்கள் சொல்லொணா இன்னலுக்கு ஆளாகி வருகின்றனர். எனவே, இப்பேருந்து நிலையத்திற்குப் பின்புறம் உள்ள 3.5 ஏக்கர் நிலப்பரப்பில் பேருந்து நிலையம் விரிவுபடுத்தப்படும்.

5. திருவள்ளூர் நகரத்தில் மேல்நிலைக் கல்வி பயின்றிட தனியார் மற்றும் அரசு உதவி பெறும் மேல்நிலைப் பள்ளிகளே உள்ளன என்றும்; அரசே நடத்துகின்ற மேல்நிலைப் பள்ளி எதுவும் இல்லை என்பதால், அரசு மேல்நிலைப் பள்ளி அமையப் பெற வேண்டும் என்பது இப்பகுதி மக்களின் கோரிக்கை ஆகும். இதனை நிறைவு செய்யும் வகையில், திருவள்ளூர் நகரில் உள்ள அரசுப் பெண்கள் உயர்நிலைப் பள்ளியை, மேல்நிலைப்பள்ளியாக தரம் உயர்த்த நான் ஆணையிட்டுள்ளேன். இப்பள்ளி மேல்நிலைப் பள்ளியாக நடப்பாண்டிலேயே தரம் உயர்த்தப்படும்.

6. திருவள்ளூர் மாவட்டத்திற்கெனத் தனியாக மாவட்ட அமர்வு நீதிமன்றம் மற்றும் முதன்மைக் குற்றவியல் நீதிமன்றம் ஆகியவை இதுகாறும் அமைக்கப்படவில்லை. திருவள்ளூர் மாவட்ட மக்கள், திருவள்ளூரிலிருந்து 60 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள செங்கல்பட்டில் அமைந்துள்ள மாவட்ட அமர்வு நீதிமன்றம் மற்றும் முதன்மைக் குற்றவியல் நீதிமன்றங்களுக்குச் செல்ல வேண்டிய நிலை தான் தற்போது உள்ளது. திருவள்ளூர் மாவட்டத்திற்கென இந்நீதிமன்றங்கள் தனியே அமைக்கப்பட வேண்டும் என்பது இம்மாவட்ட மக்களின் நீண்ட நாள் கோரிக்கை ஆகும். இதனை நிறைவேற்றும் வகையில், திருவள்ளூர் நகரில் மாவட்ட அமர்வு நீதிமன்றம் மற்றும் முதன்மைக் குற்றவியல் நீதிமன்றம் ஆகியவை புதிதாக அமைக்கப்படும். இதற்கான தொடராச் செலவினம் 39 இலட்சம் ரூபாய் ஆகவும், வருடாந்திரத் தொடர் செலவினம் 81 இலட்சம் ரூபாய் ஆகவும் இருக்கும்.

7. திருவள்ளூர் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து பொது மக்கள் தங்கள் பகுதிகளுக்குப் புதிய பேருந்து வசதிகளும், கூடுதல் பேருந்து நடைகளும் ஏற்படுத்தித் தர வேண்டும் என்று எனக்குக் கோரிக்கைகள் விடுத்துள்ளனர். இக்கோரிக்கைகளை நிறைவு செய்யும் வகையில்:–

புதுவாயல், ஆரணி, பெரியபாளையம் வழியாக பொன்னேரியிலிருந்து திருவள்ளூருக்கு ஒரு பேருந்தும், கும்மிடிப்பூண்டியிலிருந்து திருவள்ளூருக்கு ஒரு பேருந்தும்; ஆக இரண்டு புதிய புறநகர் பேருந்துகள் இன்று முதல் இயக்கப்படும்.

கவரப்பேட்டை, சின்னம்புலியூர், மாதர்பாக்கம் வழியாக பொன்னேரியிலிருந்து, எருக்குவாய்க்கு புதிய நகரப் பேருந்து இயக்கப்படும்.

மேலும், சின்னம்பேடு வழியாக, பொன்னேரியில் இருந்து பெரியபாளையத்திற்குக் கூடுதலாக இரண்டு நடைகள் இயக்கப்படும்.

செர்ப்பேடு புதுப்பாளையம் மற்றும் காரணிக்கு, கூடுதலாக நான்கு நடைகள் இயக்கப்படும்.

புதுவாயல் வழியாக, பொன்னேரியில் இருந்து ஆரணிக்குக் கூடுதலாக நான்கு நடைகள் இயக்கப்படும்.

மேலும், கே.கே.சத்திரம் வழியாக, திருத்தணி – திருவாலங்காடு ரயில்வே நிலையம், பூண்டி சென்ராயன்பாளையம் வழியாக, திருவள்ளூர் – கே.கே. சத்திரம், மீஞ்சூர் புதுப்பட்டு வழியாக, பொன்னேரி – மவுத்தம்பேடு, ஆவடி, பாக்கம் வழியாக, சென்னை – கொமக்கம்பேடு மற்றும் செங்குன்றம் – முக்கரம்பாக்கம், திருத்தணி–வங்கனூர், செங்குன்றம் – மாதர்பாக்கம் ஆகிய வழித் தடங்களில் இன்று முதல் கூடுதல் நடைகள் இயக்கப்படும்.

8. திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை வட்டத்தில் உள்ள கல்பட்டு, வடமதுரை, ஏனம்பாக்கம், வெங்கல், கன்னிகைபேர், சின்னம்பேடு, பனப்பாக்கம், ஆரணி, இராளப்பாடி, பனையஞ்சேரி, மாம்பாக்கம், வேளாக்காபுரம், அத்திலவாக்கம் ஆகிய பல கிராமங்களைச் சேர்ந்த விவசாயப் பெருங்குடி மக்கள், ஆரணி ஆற்றின் குறுக்கே கல்பட்டு, பெரியபாளையம், வடதில்லை ஆகிய இடங்களில் அணைக்கட்டுகள் கட்டிக் கால்வாய்கள் சீரமைத்துத் தங்கள் ஏரிகளுக்குத் தண்ணீர் வழங்கக் கோரிக்கை விடுத்துள்ளனர். நான் அவர்களது கோரிக்கையை ஏற்று கல்பட்டு, பெரியபாளையம், வடதில்லை ஆகிய மூன்று இடங்களிலும் அணைக்கட்டுகள் அமைப்பதற்கு விரிவான ஆய்வுகள் மேற்கொள்ள ஆணையிட்டுள்ளேன்.

இந்த மூன்று அணைக்கட்டுகளும் ஒன்றுக்கொன்று மிகவும் அருகில் அமைவதால், முதற்கட்டமாக, இவற்றுள் கல்பட்டு அணைக்கட்டுத் திட்டத்தினை உடனடியாக விரிவான ஆய்வுகள் செய்து பணிகள் மேற்கொள்ள ஆணையிட்டுள்ளேன்.

கல்பட்டு அணை கட்டுதல் மற்றும் கால்வாய்களைச் சீரமைத்தல் ஆகிய இத்திட்டம், 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும். இதன் மூலம், கல்பட்டு, வடமதுரை, ஏனம்பாக்கம், வெங்கல், கன்னிகைபேர் ஆகிய கிராமங்களில் 3,652 எக்கர் நிலங்களுக்கு நிரந்தரப் பாசன வசதி கிடைக்கும். மேலும், இப்பகுதியில் நிலத்தடி நீர்மட்டம் வெகுவாக உயரும்.

9. பழவேற்காடு பகுதியில் உள்ள மீனவர்கள், தாங்கள் பிடித்து வரும் மீன்களைப் பாதுகாத்திடப் பழவேற்காட்டில் எனது அரசால் அமைக்கப்பட்ட நவீன மீன் விற்பனை அங்காடியில், குளிர் வைப்பறை (Cold Storage Facility) ஒன்றை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர். அதனை ஏற்று, பழவேற்காடு மீன் அங்காடியில் குளிர் வைப்பறை ஒன்று அமைத்திட நான் ஆணையிட்டுள்ளேன்.

10. பழவேற்காடு மற்றும் ஆரம்பாக்கம் பகுதிகளில் மீனவ மகளிர் 130 சுயஉதவிக் குழுக்களை ஏற்படுத்திச் சுய தொழில் மேற்கொண்டு வந்தனர். சுனாமியினால் ஏற்பட்ட பாதிப்பினால், இந்தச் சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த மீனவ மகளிர், தாங்கள் வங்கிகளிலிருந்து பெற்ற கடனுக்கானத் தவணைகளை உரிய காலத்தில் திரும்பச் செலுத்த இயலவில்லை என்றும், இதனால் தங்களுக்கு மேலும் கடன் வசதி கிடைப்பதில், பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன என்றும் தெரிவித்து, இப்பிரச்சினைகளை உடனடியாகத் தீர்த்து வைத்து, மேலும் கடன் உதவி பெற்றிட வழிவகை செய்து தர வேண்டும் என்று என்னிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். மீனவ மகளிரின் இந்தக் கோரிக்கைகளை ஏற்று, அவர்கள் தொடர்ந்து கடன் வசதி பெற, தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு நான் ஆணையிட்டுள்ளேன்.

11. திருவள்ளூர் நகரில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க, பெரியகுப்பம், சேலை மற்றும் திருப்பாச்சூர் வழியாக, 4 கிலோ மீட்டர் நீளத்திற்கு ஒரு புறவழிச்சாலை அமைக்கப்பட வேண்டும் என்பது இப்பகுதி மக்களின் கோரிக்கையாகும். இதனை ஏற்று, திருவள்ளூர் நகரில் புறவழிச்சாலை ஒன்றை அமைத்திட, ஆய்வு மேற்கொள்ள நான் ஆணையிட்டுள்ளேன்.

12. பொன்னேரியில் உள்ள குன்னமான்சேரி, ஏலியம்பேடு, வைரவன்குப்பம், பெரியக்காவனம் ஆகிய கிராமத்தில் வசிக்கும் மக்கள், ஆரணி ஆற்றின் குறுக்கே ஒரு தரைப்பாலம் அமைக்கப்பட வேண்டும் என்று என்னிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். இக்கோரிக்கையினை ஏற்று, ஆரணி ஆற்றின் குறுக்கே 1 கோடி ரூபாய் செலவில் தரைப்பாலம் அமைக்க நான் ஆணையிட்டுள்ளேன்.

13. இன்று நடைபெறும் இந்த் இனிய விழாவில், 195 கோடி ரூபாய் மதிப்பிலானச் சாலை மற்றும் பாலப் பணிகளுக்கு நான் அடிக்கல் நாட்டியுள்ளேன். திருவள்ளூர் மாவட்ட மக்களின் கோரிக்கையை ஏற்று, மேலும் சில சாலைப் பணிகளை மேற்கொள்ள நான் ஆணையிட்டுள்ளேன். இதன்படி,

பூந்தமல்லி நசரத்பேட்டிலிருந்து மேப்பூர் வரை 7.7 கிலோ மீட்டர் சாலை 3.8 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்பாடு செய்யப்படும்.

பூந்தமல்லி பாரிவாக்கம் முதல் பட்டாபிராம் வரை 11 கிலோ மீட்டர் சாலை 7.5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இருவழித்தடச் சாலையாக மேம்படுத்தப்படும்.

திருவாலங்காடு முதல் அரக்கோணம் இரும்பு உருக்காலை வரை 8.8 கிலோ மீட்டர் சாலை 1.8 கோடி ரூபாய் செலவில் அகலப்படுத்தி, உறுதிப்படுத்தப்படும்.

வெங்கடாபுரத்திலிருந்து பொதட்டூர்பேட்டை வரை 5 கிலோ மீட்டர் நீளச் சாலை 48 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அகலப்படுத்தப்படும்.

14. இலவச வேட்டி–சேலைத் திட்டத்தின் கீழ் ஈடுபட்டுள்ளக் கைத்தறி நெசவாளர்கள் அதிக வருவாய் பெறும் வகையில், சந்தையில் எளிதில் விற்பனையாகக் கூடிய, மதிப்புக் கூடிய ரகங்களை உற்பத்தி செய்ய திருவள்ளூர் மாவட்டத்தில், 31 கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களைச் சேர்ந்த 1,250 கைத்தறி நெசவாளர்களுக்குப் பயிற்சி அளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இவ்வாறு, பயிற்சி பெற்ற கைத்தறி நெசவாளர்கள் மதிப்புக் கூடிய ரகங்களைத் தொடர்ந்து உற்பத்தி செய்து அதிக வருவாய் ஈட்டும் வகையில், அவர்களது தறிகளை மேம்படுத்துவதற்காக ஒவ்வொரு தறிக்கும், 5,000 ரூபாய் வீதம் 1,250 நெசவாளர்களுக்கு மொத்தம் 62.50 இலட்சம் ரூபாய் வழங்கப்படும்.

15. மேலும், இப்பகுதியில் உள்ள கைத்தறி நெசவாளர்கள் பயன்பெறும் வகையில், நெசவுக்கு முந்தைய உப தொழில்களானப் பாவு ஓடுதல், கஞ்சி தோய்த்தல், சாயமிடல் போன்ற பணிகளை மேற்கொள்ள 1 கோடியே 10 இலட்சம் ரூபாய் மதிப்பில் அம்மையார்குப்பத்தில் பொது வசதி மையம் – Common Facility Centre ஒன்றை அமைத்திட நான் ஆணையிட்டுள்ளேன்.

என் மீது உண்மையான அன்பு கொண்டு இங்கே திரளாகக் கூடியுள்ள உங்களை எல்லாம் காணும் போது எனக்கு ஒரு கதை நினைவுக்கு வருகிறது.

முன்னொரு காலத்தில் மன்னர் ஒருவர் இருந்தார். ஒரு நாள், அவரது மனதிலே ஒரு கேள்வி எழுந்தது. "கடவுள் எவ்வளவு தூரத்தில் இருக்கிறார் ? அவர் இருக்கும் இடத்துக்கும், நமக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் ? யாரைக் கேட்டால் தெரியும் ?"

அரச சபையில் ஒவ்வொருவராகக் கேட்டார். யாருக்கும் விடை தெரியவில்லை. அமைச்சர் சொன்னார்– "மன்னா, நம் நகருக்கு வெளியே ஒரு மண்டபம் இருக்கிறது. அங்கு ஒரு பெரியவர் இருக்கிறார். அவருக்குக் கடவுள் எவ்வளவு தூரத்தில் இருக்கிறார் என்ற விவரம் தெரிந்திருக்கும். அவரை அழைத்து வரச் சொல்கிறேன்; அவரிடம் கேட்கலாம்". இவ்வாறு சொல்லிய அமைச்சர் அந்தப் பெரியவரை அழைத்து வரச் சேவகர்களை அனுப்பினார்.

பெரியவர் வந்தார். அவருக்கு உரிய மரியாதை செலுத்திய மன்னர், "கடவுள் எவ்வளவு தூரத்தில் இருக்கிறார் ? உங்களுக்குத் தெரியுமா ?" என்று கேட்டார்.

பெரியவர் அமைதியாகப் பதில் சொன்னார் – "கடவுள் கூப்பிடு தூரத்தில் இருக்கிறார்".

"அப்படியானால், அழைத்தால் உடனே வந்து விடுவார் அல்லவா ?" என்று மன்னர் கேட்டார்.

"அது எந்த இடத்தில் கடவுள் இருப்பதாக நீ நினைக்கிறாயோ அதைப் பொறுத்தது", என்று பெரியவர் பதில் சொன்னார்.

"எனக்கு விளங்கவில்லையே. கொஞ்சம் புரியும்படி சொல்லுங்கள்" என்று கேட்டுக் கொண்டார் மன்னர்.

"துரியோதனன் சபையிலே திரவுபதி துன்புறுத்தப்பட்ட போது கிருஷ்ணனை அழைத்தாள். அப்படி அழைக்கும் போது, 'வைகுந்த வாசா! வந்து காப்பாற்று' என்றாள். கிருஷ்ணன் வரவில்லை.

"துவாரகை தானே கிருஷ்ணன் ஊர்; எனவே, 'துவாரகாபுரி வாசா' என்று அழைத்தாள். கிருஷ்ணன் வரவில்லை!

"கடைசியில் இதயத் தாமரையில் இருப்பவனே என்னும் பொருள்பட, 'ஹ்ருதய கமல வாசா" என்று அழைத்தாள்.

"கிருஷ்ணன் உடனே அருள் புரிந்தான். அவளுக்கு ஆடை வழங்கினான்; அவளது துன்பத்தைப் போக்கினான்.

"வைகுந்தத்தில் கிருஷ்ணன் இருப்பதாக நினைத்தாள்; "வைகுந்த வாசா" என்று அழைத்தாள்; கிருஷ்ணன் வரவில்லை. பின்பு அதைக் காட்டிலும் அருகில், துவாரகாபுரியில் இருப்பதாக எண்ணி `துவாரகாபுரி வாசா` என்று அழைத்தாள். கிருஷ்ணன் வரவில்லை.

"கிருஷ்ணன் எங்கேயோ இல்லை, தன் இதயத்திலேயே இருக்கிறான் என்பதை உணர்ந்து `ஹ்ருதய கமல வாசா` என்று அழைத்தாள்; அருள் பெற்றாள்.

"கடவுள் எவ்வளவு தொலைவில் இருக்கிறார் என்று நீங்கள் நினைக்கிறீர்களோ, அந்த நினைப்புக்குத் தகுந்தவாறு உடனே வந்து கடவுள் அருள் புரிவார். எந்த இடத்தில் இருந்தாலும் அவருக்குக் கேட்கும். ஆனால் உங்கள் உள்ளத்திலேயே கடவுள் இருப்பதாக எண்ணி அழைத்தால் உடனுக்குடன் கடவுள் வருவார்; அருள் தருவார்" என்று, அந்தப் பெரியவர், மன்னருக்கு விளக்கம் சொன்னார்.

கடவுளைப் போலத்தான் மக்களும்! மக்கள் வேறு, மகேசன் வேறா ? மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்றால், மக்கள் தானே மகேசன்!

மகேசனாகிய மக்கள் எப்போதும் என் இதயத்தில் இருக்கிறார்கள். அவர்கள் திருவள்ளூரில் இருக்கலாம்! திருவாரூரில் இருக்கலாம்! திருப்பூரில் இருக்கலாம்! திருநெல்வேலியில் இருக்கலாம்!

ஆனால், என்னைப் பொறுத்தவரை எப்போதும் என் இதயத்திலேயே இருக்கிறார்கள்.

மக்கள் எங்கேயோ இருப்பதாக நினைக்கிறவர்களை மக்கள் புறக்கணிக்கிறார்கள்.

மக்கள் தங்கள் இதயத்திலே இருப்பதாக யார் எண்ணிச் செயல்படுகிறார்களோ, அவர்களை மக்கள் தங்கள் மனசுக்குள் வைக்கிறார்கள்.

நான், அப்படி உங்களை எல்லாம் என் இதயத்தில் வைத்திருக்கிறேன்.

என்னுள்ளத்தில் நீங்கள் இருப்பதால், உங்கள் உள்ளத்தில் நான் இருப்பதால், நாம் இந்த அன்புக் கூட்டணியை அமைத்துள்ளோம். இந்தக் கூட்டணியால்தான் தமிழகம் துறை தோறும், துறை தோறும், முதல் நிலையை எய்தி வருகிறது. இந்தக் கூட்டணி தொடரும். இந்தக் கூட்டணியை உடைக்க யாராலும் முடியாது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

எழுச்சியோடு நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்த இனிய விழாவிலே இன்றைய தினம், மொத்தம் 24,317 பயனாளிகளுக்கு 10 கோடியே 3 இலட்சம் ரூபாய் மதிப்புடையப் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்குவதில் நான் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன்.

பல்வேறு நலத்திட்ட உதவிகளை இன்றைய தினம் பயனாளிகள் அனைவருக்கும் என் கையாலேயே வழங்க வேண்டும் என்ற ஆசை எனக்கு இருந்தாலும், நேரம் போதாது என்பதால் 15 பயனாளிகளுக்கு மட்டும், இந்த மேடையிலே நான் நலத்திட்ட உதவிகளை வழங்க உள்ளேன். மற்ற பயனாளிகள் அனைவருக்கும் அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற – சட்டமன்ற உறுப்பினர்களும், அரசு அதிகாரிகளும், இப்போதே, இங்கேயே வழங்குவார்கள் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பயனாளிகள் அனைவரும் இந்த உதவிகளை அடிப்படையாக வைத்து, தங்கள் தொழில்களை இன்னும் சிறப்போடு செய்து வாழ்க்கையில் நலமும், வளமும் பெற்றிட வேண்டும் என்று அனைவருக்கும் என் நெஞ்சார்ந்த நல்வாழ்த்துகளை இந்த நல்ல நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விழாவைச் சீரும் சிறப்பும் மிக்க நிகழ்ச்சியாக அமைத்திடப் பணியாற்றிய திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர், திரு.பங்கஜ் குமார் பன்சல் அவர்களுக்கும், அனைத்து அரசுத் துறைப் பணியாளர்களுக்கும், காவல் துறையினருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொண்டு,

அண்ணா நாமம் வாழ்க!

புரட்சித் தலைவர் நாமம் வாழ்க!

எனக் கூறி விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

19.7.2005 அன்று நடைபெற்ற
திருவள்ளூர் மாவட்ட அரசு விழாவில்,
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்,
ஆற்றிய உரை



# கண் பார்வையற்றக் குழந்தைகளின் நலன் கருதி நிதியுதவி

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், வேலூர் மாவட்டம் ராச்சமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த திருமதி. சரஸ்வதி என்பவர் தனது கணவரை இழந்த நிலையில், தன்னுடைய கண் பார்வையற்ற ஐந்து பிள்ளைகள் உள்ளிட்ட 6 குழந்தைகளையும் நன்கு பராமரிக்க இயலாத வறுமையான குடும்பச் சூழ்நிலையில் இருப்பதைக் கருத்தில் கொண்டு, கண் பார்வையற்ற அந்தக் குழந்தைகளின் எதிர்கால நலனைக் கருதி அவர்கள் ஒவ்வொருவருக்கும், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.50 ஆயிரம் நிதி உதவி வழங்க ஆணையிட்டார்கள். இதன்படி, மொத்தம் ரூ.2 இலட்சத்து 50 ஆயிரம் நிதி உதவிக்கான ஆணைகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 8.7.2005 அன்று தலைமைச்செயலகத்தில் அக்குழந்தைகளின் தாயார் திருமதி. சரஸ்வதி அவர்களிடம் நேரில் வழங்கினார்கள்.

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டத்தில் உள்ள ராச்சமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த திருமதி. சரஸ்வதி என்ற பெண்மணிக்குப் பிறந்த 6 குழந்தைகளில் 5 பேர் கண் பார்வை அற்றவர்களாக உள்ளனர். இப்பெண்மணி, இரண்டு ஆண்டுகளுக்கு முன் தன்னுடைய கணவர் இறந்துவிட்டார் என்றும், ஊதுபத்தி தேய்த்துக் கொடுக்கும் கூலித் தொழில் செய்து தனக்குக் கிடைக்கும் சொற்ப வருவாயில் தன் பிள்ளைகளைக் காப்பாற்ற முடியாமல் மிகவும் கஷ்டப்படுவதாகவும் தெரிவித்து, கண் பார்வையற்ற தன் குழந்தைகளைப் பராமரிக்கும் வகையிலும், அவர்களது படிப்புச் செலவு மற்றும் பிற்காலத் தேவைகளுக்கு உதவிடும் வகையிலும், தனக்கு உதவி புரிந்திட வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு, கோரிக்கை மனு அளித்திருந்தார்.

இவரது மனுவைப் பரிவுடன் பரிசீலனை செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், திருமதி. சரஸ்வதி அவர்களின் வறுமையானக் குடும்ப சூழ்நிலையையும், கண் பார்வையற்ற கோவிந்தம்மாள், காஞ்சனா, ஏழுமலை, வெங்கடேசன், இசைதீபா ஆகிய அவரது ஐந்து குழந்தைகளின் எதிர்கால நலனையும் கருத்தில் கொண்டு,

இக்குழந்தைகளை நல்ல முறையில் பராமரிக்கவும், அவர்களது படிப்புச் செலவினத்தை மேற்கொள்ளவும் ஏதுவாக அவர்கள் ஒவ்வொருவருக்கும் தலா ரூ.50 ஆயிரம் நிதி உதவி வழங்கிடவும், இந்த நிதியை கண் பார்வையற்ற இந்தக் குழந்தைகள் ஒவ்வொருவர் பெயரிலும் தனித்தனியே தமிழ்நாடு மின்விசை மேம்பாட்டு நிறுவனத்தில் (Tamil Nadu Power Finance Development Corpo ration) வைப்பு நிதியாக முதலீடு செய்து, அதிலிருந்து மாதந்தோறும் கிடைக்கும் வட்டித் தொகையைப் பிள்ளைகளின் பராமரிப்பு மற்றும் கல்விச் செலவிற்குப் பயன்படுத்திக் கொள்ளவும் ஆணையிட்டார்கள். மேலும், இவர்களுக்கு 18 வயது நிறைவடையும்போது, உயர்கல்விப் பயிலவோ அல்லது சொந்தத் தொழில் தொடங்கவோ பயன்படுத்திக் கொள்ளும் வகையில், இந்த வைப்பீட்டுத்தொகையை அவர்களுக்கு வழங்கிடவும் உத்தரவிட்டார்கள். இதற்கேற்ப, அந்த நிதி உதவிக்கான ஆணைகளை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், கண்பார்வையற்ற ஐந்து குழந்தைகளின் தாயான திருமதி. சரஸ்வதியிடம் 8.7.2005 அன்று தலைமைச்செயலகத்தில் நேரில் வழங்கினார்கள்.

இதன்படி, வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம் ராச்சமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த திருமதி. சரஸ்வதி அவர்களுக்கு கண் பார்வையற்ற அவரது குழந்தைகளை வளர்க்கவும், பராமரிக்கவும் ஏதுவாக இந்த வைப்பீட்டுத் தொகையிலிருந்து மாதந்தோறும் ரூ.1,458 உதவித் தொகையாகக் கிடைக்கும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடமிருந்து, நிதி உதவிக்கான ஆணையைப் பெற்றுக் கொண்ட திருமதி. சரஸ்வதி அவர்கள், தனது மனமார்ந்த நன்றியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொண்டார்கள்.

* * *



தியாகிகள் தினத்தை முன்னிட்டு, 17–7–2005 அன்று சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் அமைந்துள்ள தியாகிகள் திருவுருவச் சிலைகளுக்கு, மாண்புமிகு தமிழக சட்டப்பேரவைத் தலைவர் டாக்டர்.கா.காளிமுத்து அவர்கள் தலைமையில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.



# தமிழ்நாட்டில் நபார்டு வங்கி நிதி உதவியுடன் 14 நீர்ப்பாசனத் திட்டங்கள்

தமிழ்நாட்டில் 14 நீர்ப்பாசனத் திட்டங்களை 44.82 கோடி ரூபாய் மதிப்பில் செயல்படுத்த, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், உத்தரவிட்டுள்ளார்கள்.

தமிழ்நாட்டில் நிலத்தடி நீர் வளத்தைப் பெருக்கவும், விவசாய நிலங்களுக்குப் பாசன வசதியை மேம்படுத்தவும், விவசாய உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், பல்வேறு நீர்ப்பாசனத் திட்டங்களைப் பொதுப்பணித் துறை மூலம் செயல்படுத்த, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், உத்தரவிட்டுள்ளார்கள். நபார்டு வங்கி நிதி உதவியுடன் பல்வேறு நீர்ப்பாசனத் திட்டங்கள் தமிழ்நாட்டில் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் நபார்டு வங்கி நிதி உதவியுடன் கீழ்க்கண்ட 14 நீர்ப்பாசனத் திட்டங்களை மொத்தம் 44.82 கோடி ரூபாய் மதிப்பில் செயல்படுத்த, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், ஆணையிட்டுள்ளார்கள்.

1. வேலூர் மாவட்டம், மேலரசம்பட்டு கிராமத்திற்கு அருகில், கோவில் மலையாற்றின் குறுக்கே தடுப்பு அணை ஒன்றினை 12.98 கோடி ரூபாய் மதிப்பில் கட்டுவதற்கு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், உத்தரவிட்டுள்ளார்கள். இதனால் 1,853 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

2. தூத்துக்குடி மாவட்டம், T.அய்யாப் பாபுரம் கிராமத்தில் 23.39 இலட்சம் ரூபாய் மதிப்பில் புதிய ஏரி ஒன்று அமைக்கவும்;

3. விருதுநகர் மாவட்டம், கிருதமால் ஆற்றின் குறுக்கே அணைக்கட்டு ஒன்றினை 86.81 இலட்சம் ரூபாய் மதிப்பில் அமைத்து, ஒடத்தூர் மற்றும் இதர ஏரிகளுக்குத் தண்ணீர் வழங்கவும்;

4. விருதுநகர் மாவட்டம், அம்பலத்தடி சீனமக்கல் அருகே 20.91 இலட்சம் ரூபாய் மதிப்பில், கிருதமால் ஆற்றில் இருந்து பூம்பிடாகை கண்மாய்க்குப் புதிய கால்வாய் வெட்டவும்;

5. சிவகங்கை மாவட்டம், வைகை ஆற்றின் குறுக்கே படுகை அணை ஒன்றினை 76.97 இலட்சம் ரூபாய் மதிப்பில் அமைத்து, கானூர் கண்மாய்க்குத் தண்ணீர் வழங்கவும்;

6. சிவகங்கை மாவட்டம், வைகை ஆற்றின் குறுக்கே படுகை அணை ஒன்றினை 74.86 இலட்சம் ரூபாய் மதிப்பில் அமைத்து, மிளகனூர் கால்வாய்க்குத் தண்ணீர் வழங்கவும்;

7. புதுக்கோட்டை மாவட்டம், வெள்ளாற்றின் குறுக்கே அணைக்கட்டு ஒன்றினை 1 கோடியே 57.40 இலட்சம் ரூபாய் மதிப்பில் அமைத்து, மும்பாலை மற்றும் வடக்கு மணமேல்குடி ஏரிகளுக்குத் தண்ணீர் வழங்கவும்;

8. இராமநாதபுரம் மாவட்டம், வைகை ஆற்றின் குறுக்கே படுகை அணை ஒன்றினை 92.84 இலட்சம் ரூபாய் மதிப்பில் அமைத்து, கீழ்ப்பெருங்கரை கிராமத்தில் கூத்தங்கால் கால்வாய்க்குத் தண்ணீர் வழங்கவும்;

9. இராமநாதபுரம் மாவட்டம், வைகை ஆற்றின் குறுக்கே படுகை அணை ஒன்றினை 67.89 இலட்சம் ரூபாய் மதிப்பில் அமைத்து, அரசடி வண்டல் கிராமத்தில் கீழ்நாட்டார்கால் கால்வாய்க்குத் தண்ணீர் வழங்கவும்;

10. இராமநாதபுரம் மாவட்டம் வைப்பாற்றின் குறுக்கே அணைக்கட்டு ஒன்றினை 52.68 இலட்சம் ரூபாய் மதிப்பில் அமைத்து, திருப்பாலக்குடி ஏரிக்குத் தண்ணீர் வழங்கவும்;

11. திருவண்ணாமலை மாவட்டத்தில், 25.83 இலட்சம் ரூபாய் மதிப்பில் இரும்பேடு ஏரி உபரி நீர் கால்வாயில் உள்ள மண் அணையைக் கல் அணையாக மாற்றவும்;

12. விழுப்புரம் மாவட்டம், மாத்தூர் கிராமம் அருகே, பம்பையாற்றின் குறுக்கே அணைக்கட்டு ஒன்றினை 4 கோடியே 17.40 இலட்சம் ரூபாய் மதிப்பில் அமைக்கவும்;

13. பெரம்பலூர் மாவட்டம், தொண்டைமான்துறை கிராமத்தில் விஸ்வக்குடி கல்லார் ஓடையின் குறுக்கே புதிய ஏரி ஒன்றினை 7 கோடியே 23.36 இலட்சம் ரூபாய் மதிப்பில் அமைக்கவும்;

14. தஞ்சாவூர் மாவட்டம், கல்லணை மற்றும் மைல் 17/2ல் உள்ள மடைகளை 13 கோடியே 63.20 இலட்சம் ரூபாய் மதிப்பில் சீரமைக்கவும்;

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், ஆணையிட்டுள்ளார்கள்.

விவசாயப் பெருமக்களுக்கு மிகவும் பயனளிக்கும் இந்த 14 திட்டங்களைச் சிறப்பான முறையில், விரைவில் செய்து முடித்திட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

# மாநகராட்சி மற்றும் நகராட்சிச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் – 2005 (Tamil Nadu Urban Local Bodies Road Development Project - 2005)–ன் கீழ் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள சாலைகளை, 400.81 கோடி ரூபாய் மதிப்பில் மேம்படுத்த ஆணையிட்டுள்ளார்கள்.

தமிழ்நாட்டில் பாதுகாப்பான, வேகமான, வாகனப் போக்குவரத்தை உறுதி செய்யும் விதத்தில், சாலைக் கட்டமைப்பினை மேம்படுத்த மாண்புமிகு தமி[ழக] முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தலைமையிலான [அரசு] அதிக முன்னுரிமை அளித்து வருகிறது. இதன் அடிப்படையில் [...] தமிழ்நாட்டில் மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட பெரிய சாலை[கள்], மாவட்ட இதரச் சாலைகள், ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலை[கள்] ஆகியவற்றை, ஒருங்கிணைந்த சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தின் கீழ் (Comprehensive Road Infrastructure Developm[ent] Project), 920 கோடி ரூபாய் மதிப்பில் மேம்படுத்த, 10.7.2005 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், ஆணையிட்டார்கள்.

தமிழ்நாட்டில் மொத்தம் 13,681 கிலோ மீட்டர் நீளமுள்ளச் சாலைகள், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளால் (Urban Local Bodies) பராமரிக்கப்பட்டு வருகின்றன. இதில், 2001–2002ஆம் ஆண்டு முதல் 2004–2005ஆம் ஆண்டு வரை, கடந்த நான்கு ஆண்டுகளில், 294.9[..] கோடி ரூபாய் மதிப்பில் 4,329 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளால் மேம்படுத்தப்பட்டுள்ளன. தற்போது 400.81 கோடி ரூபாய் மதிப்பில், மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள சாலைகளை மேம்படுத்தப் புதிய திட்டத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், அறிவித்துள்ளார்கள்.

மொத்தம் 400.81 கோடி ரூபாய் மதிப்பில், நகர்ப்புறங்களிலுள்ள கற்சரள் சாலைகள், மண் சாலைகள் ஆகியவற்றைத் தார்ச் சாலைகளாக மாற்றவும், பேருந்து செல்லும் வழித்தடச் சாலைகள், மருத்துவமனைகள், கல்லூரிகள், மதவழிபாட்டுத் தலங்கள், வணிக வளாகங்கள் அமைந்துள்ள சாலைகள், முக்கிய இணைப்புச் சாலைகள் ஆகியவற்றிற்கு முன்னுரிமை அளித்து, இச்சாலைகளைச் செப்பனிட்டு, புதுப்பித்து, மேம்படுத்தவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், ஆணையிட்டுள்ளார்கள்.



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், இந்தப் பணிகள் அனைத்தையும் விரைவாகவும், சிறப்பாகவும் செய்து முடிக்க ஆணை யிட்டுள்ளார்கள். □



# தென்னை விவசாயிகள் வருவாய் பெருகிட

## கொப்பரைத் தேங்காய்கள் கொள்முதல்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை – 12.7.2005

கிராமப்புற மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு அடித்தளமாக விளங்குகின்ற வேளாண் தொழிலை மேம்படுத்தி, விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திட வேண்டும் என்பதே எனது அரசின் தலையாய நோக்கமாகும். இந்த நோக்கத்தை நிறைவேற்றிடும் வகையில், நீர் ஆதாரங்களைப் பெருக்குதல், நிலத்தடி நீரை உயர்த்துதல், விவசாயிகளுக்குத் தரமான விதைகளையும், இடுபொருட்களையும் வழங்குதல், மேம்படுத்தப்பட்ட விவசாய உபகரணங்களை வழங்குதல், புதிய விஞ்ஞானத் தொழில் நுட்ப உத்திகளைப் புகுத்தி உற்பத்தியைப் பெருக்குதல் எனப் பலப் பல உயரியத் திட்டங்களை வகுத்து எனது அரசு செயல்படுத்தி வருகிறது.



இதே அடிப்படையில் தான், விவசாயிகள் உற்பத்தி செய்யும் விளை பொருட்களின் விலை வெளிச் சந்தையில் வீழ்ச்சி அடையும் போது, அப்பொருட்களுக்குக் குறைந்தபட்ச ஆதரவு விலைகளை அளித்து, விவசாயிகளின் நலனைப் பாதுகாத்திட எனது அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

அண்மையில், ஏற்றுமதிச் சந்தையின் பல்வேறுபட்ட காரணிகள் மற்றும் இவ்வாண்டு மிளகாய்ப் பயிர் விளைச்சலில் காணப்பட்ட உயர்வு ஆகியவற்றால் வெளிச் சந்தையில், மிளகாய் வற்றலின் விலை வெகுவாகச் சரிந்து, மிளகாய் விவசாயிகள் பாதிக்கப்பட்டபோது, அவர்களின் நலனைப் பாதுகாக்கும் வகையில், மிளகாய் வற்றலுக்கு ஆதரவு விலையை அறிவித்து தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தின் (TANFED) மூலம் உடனடியாக மிளகாய் வற்றலைக் கொள்முதல் செய்யுமாறு நான் ஆணையிட்டேன். இந்த நடவடிக்கையின் விளைவாக மிளகாய் பயிரிட்டப் பல்லாயிரக்கணக்கானத் தமிழக விவசாயிகள் பெரிதும் பயன்பெற்றனர்.

அதே போல, தேயிலை விலை கடும் வீழ்ச்சி அடைந்து பெரும் பாதிப்புக்குள்ளான நீலகிரி மாவட்ட சிறு தேயிலை விவசாயிகளின் நலனைப் பாதுகாத்திட, **'சிறு தேயிலை விவசாயிகள் பாதுகாப்புத் திட்டம்'** என்னும் புதிய திட்டத்தைச் செயல்படுத்த நான் 11.7.2005 அன்று ஆணையிட்டேன். இதன்படி, சிறு தேயிலை விவசாயிகள் உற்பத்தி செய்யும் பசும் தேயிலைக்குக் கிலோ ஒன்றுக்கு 2 ரூபாய் வீதம் மானியம் வழங்க உத்தரவிட்டு, 6 மாத கால அளவில் ஏக்கர் ஒன்றில் சராசரியாக 1400 கிலோ பசும் தேயிலை உற்பத்தியாகும் எனக் கணக்கிட்டு, ஒவ்வொரு சிறு தேயிலை விவசாயிக்கும் ஏக்கர் ஒன்றுக்கு மொத்தம் 2,800 ரூபாய் மானியமாக வழங்கிட ஆணையிட்டேன்.

தற்போது, தமிழகத்தில் உள்ள தென்னை விவசாயிகள், தேங்காய்க் கொப்பரைகளின் விலை வெளிச் சந்தையில் வெகுவாகக் குறைந்து, தாங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, இந்தப் பாதிப்பில் இருந்து தாங்கள் மீள உதவி புரிந்திட வேண்டும் என்று என்னிடம் கோரிக்கை வைத்துள்ளனர்.

தமிழ்நாட்டில் வெளிச் சந்தையில், குறிப்பாக கொப்பரைத் தேங்காய்களை கொள்முதல் செய்யும் முக்கியச் சந்தைகளான காங்கேயம் மற்றும் உடுமலைப்பேட்டை ஆகிய இடங்களில், கொப்பரைத் தேங்காயின் விலை குவிண்டால் ஒன்றுக்கு



பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் 103ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, 15–7–2005 அன்று, சென்னை காமராஜர் சாலையில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் தலைமையில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மாலையணிவித்து மரியாதை செலுத்தினர்.

2,900 ரூபாயிலிருந்து 3,000 ரூபாய் வரையில்தான் உள்ளது. இதனால், கொப்பரைத் தேங்காய் உற்பத்தி செய்யும் தென்னை விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே, பாதிப்படைந்துள்ள தமிழகத் தென்னை விவசாயிகளின் நிலையைக் கருத்தில் கொண்டு, அவர்களது கோரிக்கையை எனது அரசு மிகுந்த பரிவுடன் பரிசீலனை செய்து, தென்னை விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற கொப்பரைத் தேங்காய்க்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள ஆதரவு விலை அளித்து, தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் மூலமாகக் கொள்முதல் செய்திட முடிவெடுத்துள்ளது.

இதன்படி, கொப்பரைத் தேங்காய்களை நிர்ணயிக்கப்பட்ட ஆதரவு விலையான குவிண்டால் ஒன்றுக்கு 3,570 ரூபாய் என்ற விலையில் கொள்முதல் செய்திட தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்கு நான் ஆணையிட்டுள்ளேன்.

இவ்வாறு, கொப்பரைத் தேங்காய்களைக் கொள்முதல் செய்திட ஏதுவாக, தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்கு 50 இலட்சம் ரூபாய் வழிவகை முன்பணமாக (Ways and means advance) வழங்கிட நான் உத்தரவிட்டுள்ளேன்.

கடந்த 2000–ஆம் ஆண்டில், கொப்பரைத் தேங்காய் கொள்முதல் செய்தபோது, விவசாயிகளுக்குப் பலன் கிடைக்காமல், வியாபாரிகள் பயன்பெறும் வகையில் நடைபெற்ற முறைகேடுகளைக் கவனத்தில் கொண்டு, நான் அறிவித்துள்ள இந்தக் கொப்பரைத் தேங்காய் கொள்முதலில் எவ்விதத் தவறும் நடைபெறாத வண்ணம் செயல்படத் தகுந்த வழிமுறைகளை வகுத்தளித்திடவும் நான் ஆணையிட்டுள்ளேன்.

தென்னை விவசாயிகள், தாங்கள் உற்பத்தி செய்துள்ள கொப்பரைத் தேங்காய்களை, எளிதில் கொள்முதல் மையங்களுக்குக் கொண்டு சேர்க்கும் வகையில், தேவையான இடங்களில், கொள்முதல் மையங்களை நிறுவிட நான் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்குத் தக்க ஆணைகள் பிறப்பித்துள்ளேன். தென்னை விவசாயிகளிடமிருந்து கொப்பரைத் தேங்காய்கள் கொள்முதல் செய்யும் பணியை உடனடியாகத் தொடங்குமாறும் நான் உத்தரவிட்டுள்ளேன்.

இன்று நான் பிறப்பித்துள்ள இந்த ஆணையின் பயனாக, வெளிச் சந்தை விலையைவிட கூடுதல் விலையில் கொப்பரைத் தேங்காய் கொள்முதல் செய்யப்படும் என்பதால், தென்னை விவசாயிகளின் வருமானம் கணிசமாக உயரும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

❖ ❖ ❖



# தமிழ்த் தாத்தா உ.வே.சா. அவர்களுக்கு நினைவு இல்லம்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், பழந்தமிழ் ஓலைச் சுவடிகளைத் தேடித் தொகுத்து, அச்சிட்டு, வெளியிட்ட டாக்டர் உ.வே. சாமிநாத அய்யர் அவர்களின் தமிழ்த் தொண்டினையும், நினைவையும் போற்றும் வகையில் திருவாரூர் மாவட்டம், உத்தமதானபுரத்தில், அவர் வாழ்ந்த இல்லத்தை நாட்டுடைமையாக்கி, 23 இலட்சம் ரூபாய் மதிப்பில் தமிழ்த் தாத்தா டாக்டர் உ.வே.சாமிநாத அய்யர் நினைவு இல்லம் உருவாக்கிட ஆணையிட்டுள்ளார்கள்.



டாக்டர் உ.வே. சாமிநாத அய்யர் அவர்கள், ஓலைச் சுவடிகளில் இருந்த பத்துப்பாட்டு நூல்களையும், எட்டுத் தொகையில் புறநானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், குறுந்தொகை ஆகிய நூல்களையும், சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி போன்ற காப்பியங்களையும் பதிப்பித்து, வெளிக்கொணர்ந்து, தமிழ் இலக்கியங்களைப் பாதுகாத்தப் பெருமைக்குரியவர் ஆவார்.

செல்லரித்தும், சேதமுற்றும், அழியும் நிலையில் இருந்த ஓலைச் சுவடித் தமிழை, அச்சுத் தமிழாக்கியதோடு, புதிய நூல்களையும் படைத்துத் தமிழுக்கு வளம் சேர்த்த, தமிழ்த் தாத்தா டாக்டர் உ.வே. சாமிநாத அய்யர் அவர்களின் அரும்பணிகளைப் பாராட்டி, அவரது பிறந்த நாளான பிப்ரவரி 19ஆம் நாளன்று, சென்னை மாநிலக் கல்லூரி வளாகத்தில் இருக்கும் அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவிக்கும் நிகழ்ச்சியை, தமிழ்நாடு அரசு சார்பில் ஆண்டுதோறும் நடத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தனது முந்தைய ஆட்சிக் காலத்திலேயே, அதாவது 21.1.1994 அன்று ஆணை பிறப்பித்தார்கள்.

தமிழ்த் தாத்தா டாக்டர் உ.வே. சாமிநாத அய்யர் அவர்களது 150–ஆவது பிறந்த நாளையொட்டி, அன்னைத் தமிழ்மொழிக்குத் தொண்டுள்ளத்தோடு, அவர் ஆற்றியப் பணிகளைத் தமிழக மக்கள் என்றென்றும் நினைவு கொள்ளவும், இளைய தலைமுறையினருக்கு, அவரது தமிழ்த் தொண்டினை எடுத்துக் காட்டவும், டாக்டர் உ.வே. சாமிநாத அய்யர் அவர்கள் வாழ்ந்த சரஸ்வதி இல்லத்தை நாட்டுடைமையாக்கி, 11.50 இலட்சம் ரூபாய் மதிப்பில் பழுது பார்த்து, நினைவு இல்லமாகப் போற்றிப் பாதுகாக்க, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 20.2.2004 அன்று ஆணையிட்டார்கள்.

மிகவும் பழமையான அந்த இல்லம் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் பெய்த கன மழையால் மிகவும் பாதிப்படைந்ததால், இதனை, பழைய இல்லப் பாங்கு மாறாமல், புதுப்பொலிவுடன் உருவாக்கிப் போற்றுவது பொருத்தமாக இருக்கும் என்று கருதி, திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் வட்டம், உத்தமதானபுரத்தில் உள்ள அவர் வாழ்ந்த இல்லத்தை, 1.37 இலட்சம் ரூபாய் செலவில் அரசு சார்பில் வாங்கிக் கொள்ளவும், மேற்கொண்டு 23 இலட்சம் ரூபாய் மதிப்பில் புதிதாகக் கட்டுமானப் பணிகள் மேற்கொண்டு, தமிழ்த் தாத்தா உ.வே. சாமிநாத அய்யர் நினைவு இல்லம் அமைத்திடவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், உத்தரவிட்டுள்ளார்கள். ❖



விதத்தில், சாலைக் கட்டமைப்பினை மேம்படுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தலைமையிலான அரசு அதிக முன்னுரிமை அளித்து வருகிறது. இதன் அடிப்படையில் தான், தமிழ்நாட்டில் மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட பெரிய சாலைகள், மாவட்ட இதரச் சாலைகள், ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் ஆகியவற்றை, ஒருங்கிணைந்த சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (Comprehensive Road Infrastructure Development Project), 920 கோடி ரூபாய் மதிப்பில் மேம்படுத்த, 10.7.2005 அன்று, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், ஆணையிட்டார்கள்.

தமிழ்நாட்டில் மொத்தம் 13,681 கிலோ மீட்டர் நீளமுள்ளச் சாலைகள், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளால் (Urban Local Bodies)

# மாநகராட்சி மற்றும் நகராட்சிச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் – 2005 (Tamil Nadu Urban Local Bodies Road Development Project - 2005)–ன் கீழ் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள சாலைகளை, 400.81 கோடி ரூபாய் மதிப்பில் மேம்படுத்த ஆணையிட்டுள்ளார்கள்.

தமிழ்நாட்டில் பாதுகாப்பான, வேகமான, வாகனப் போக்குவரத்தை உறுதி செய்யும் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இதில், 2001–2002ஆம் ஆண்டு முதல் 2004–2005ஆம் ஆண்டு வரை, கடந்த நான்கு ஆண்டுகளில், 294.96 கோடி ரூபாய் மதிப்பில் 4,329 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகள், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளால் மேம்படுத்தப்பட்டுள்ளன. தற்போது 400.81 கோடி ரூபாய் மதிப்பில், மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள சாலைகளை மேம்படுத்தப் புதிய திட்டத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், அறிவித்துள்ளார்கள்.

மொத்தம் 400.81 கோடி ரூபாய் மதிப்பில், நகர்ப்புறங்களிலுள்ள கற்சரள் சாலைகள், மண் சாலைகள் ஆகியவற்றைத் தார்ச் சாலைகளாக மாற்றவும், பேருந்து செல்லும் வழித்தடச் சாலைகள், மருத்துவமனைகள், கல்லூரிகள், மதவழிபாட்டுத் தலங்கள், வணிக வளாகங்கள் அமைந்துள்ள சாலைகள், முக்கிய இணைப்புச் சாலைகள் ஆகியவற்றிற்கு முன்னுரிமை அளித்து, இச்சாலைகளைச் செப்பனிட்டு, புதுப்பித்து, மேம்படுத்தவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், ஆணையிட்டுள்ளார்கள்.



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், இந்தப் பணிகள் அனைத்தையும் விரைவாகவும், சிறப்பாகவும் செய்து முடிக்க ஆணை யிட்டுள்ளார்கள். □



# தென்னை விவசாயிகள் வருவாய் பெருகிட

## கொப்பரைத் தேங்காய்கள் கொள்முதல்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை – 12.7.2005

கிராமப்புற மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு அடித்தளமாக விளங்குகின்ற வேளாண் தொழிலை மேம்படுத்தி, விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திட வேண்டும் என்பதே எனது அரசின் தலையாய நோக்கமாகும். இந்த நோக்கத்தை நிறைவேற்றிடும் வகையில், நீர் ஆதாரங்களைப் பெருக்குதல், நிலத்தடி நீரை உயர்த்துதல், விவசாயிகளுக்குத் தரமான விதைகளையும், இடுபொருட்களையும் வழங்குதல், மேம்படுத்தப்பட்ட விவசாய உபகரணங்களை வழங்குதல், புதிய விஞ்ஞானத் தொழில் நுட்ப உத்திகளைப் புகுத்தி உற்பத்தியைப் பெருக்குதல் எனப் பலப் பல உயரியத் திட்டங்களை வகுத்து எனது அரசு செயல்படுத்தி வருகிறது.



இதே அடிப்படையில் தான், விவசாயிகள் உற்பத்தி செய்யும் விளை பொருட்களின் விலை வெளிச் சந்தையில் வீழ்ச்சி அடையும் போது, அப்பொருட்களுக்குக் குறைந்தபட்ச ஆதரவு விலைகளை அளித்து, விவசாயிகளின் நலனைப் பாதுகாத்திட எனது அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

அண்மையில், ஏற்றுமதிச் சந்தையின் பல்வேறுபட்ட காரணிகள் மற்றும் இவ்வாண்டு மிளகாய்ப் பயிர் விளைச்சலில் காணப்பட்ட உயர்வு ஆகியவற்றால் வெளிச் சந்தையில், மிளகாய் வற்றலின் விலை வெகுவாகச் சரிந்து, மிளகாய் விவசாயிகள் பாதிக்கப்பட்டபோது, அவர்களின் நலனைப் பாதுகாக்கும் வகையில், மிளகாய் வற்றலுக்கு ஆதரவு விலையை அறிவித்து தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்தின் (TANFED) மூலம் உடனடியாக மிளகாய் வற்றலைக் கொள்முதல் செய்யுமாறு நான் ஆணையிட்டேன். இந்த நடவடிக்கையின் விளைவாக மிளகாய் பயிரிட்டப் பல்லாயிரக்கணக்கானத் தமிழக விவசாயிகள் பெரிதும் பயன்பெற்றனர்.

அதே போல, தேயிலை விலை கடும் வீழ்ச்சி அடைந்து பெரும் பாதிப்புக்குள்ளான நீலகிரி மாவட்ட சிறு தேயிலை விவசாயிகளின் நலனைப் பாதுகாத்திட, 'சிறு தேயிலை விவசாயிகள் பாதுகாப்புத் திட்டம்' என்னும் புதிய திட்டத்தைச் செயல்படுத்த நான் 11.7.2005 அன்று ஆணையிட்டேன். இதன்படி, சிறு தேயிலை விவசாயிகள் உற்பத்தி செய்யும் பசும் தேயிலைக்குக் கிலோ ஒன்றுக்கு 2 ரூபாய் வீதம் மானியம் வழங்க உத்தரவிட்டு, 6 மாத கால அளவில் ஏக்கர் ஒன்றில் சராசரியாக 1400 கிலோ பசும் தேயிலை உற்பத்தியாகும் எனக் கணக்கிட்டு, ஒவ்வொரு சிறு தேயிலை விவசாயிக்கும் ஏக்கர் ஒன்றுக்கு மொத்தம் 2,800 ரூபாய் மானியமாக வழங்கிட ஆணையிட்டேன்.

தற்போது, தமிழகத்தில் உள்ள தென்னை விவசாயிகள், தேங்காய்க் கொப்பரைகளின் விலை வெளிச் சந்தையில் வெகுவாகக் குறைந்து, தாங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, இந்தப் பாதிப்பில் இருந்து தாங்கள் மீள உதவி புரிந்திட வேண்டும் என்று என்னிடம் கோரிக்கை வைத்துள்ளனர்.

தமிழ்நாட்டில் வெளிச் சந்தையில், குறிப்பாக கொப்பரைத் தேங்காய்களை கொள்முதல் செய்யும் முக்கியச் சந்தைகளான காங்கேயம் மற்றும் உடுமலைப்பேட்டை ஆகிய இடங்களில், கொப்பரைத் தேங்காயின் விலை குவிண்டால் ஒன்றுக்கு



# காவல் துறையில் தொடரும் சாதனை 7 நாட்களில் தீர்ப்பு எழுதப்பட்ட இரண்டு வழக்குகள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை – 9.7.2005

குற்றம் செய்பவர்கள் தாமதம் இன்றி தண்டிக்கப்படுவார்கள் என்ற நம்பிக்கையைப் பொதுமக்கள் பெறும் வகையில், குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்தி, அவர்களுக்கு உரிய தண்டனையை விரைந்து பெற்றுத் தர வேண்டும் என்பதே எனது எண்ணமாகும். இதனை நிறைவேற்றும் வகையில், தமிழகக் காவல் துறை தமிழகத்தில் குற்ற எண்ணிக்கையைக் குறைத்து, குற்றங்களைக் கண்டுபிடிக்கும் சதவீதத்தை உயர்த்தி, குற்ற வழக்குகளில் துரிதமாக விசாரணைகள் மேற்கொண்டு, குற்றவாளிகளுக்கு விரைந்து தண்டனை பெற்றுத் தந்து, தொடர்ந்து சாதனைப் படைத்து வருகிறது என்பதை பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு கொலை வழக்கில் முதல் தகவல் அறிக்கைப் பதிவு செய்த 44 நாட்களிலேயே குற்றவாளிகளுக்கு விரைவு நீதிமன்றத்தின் மூலம் தண்டனை பெற்றுத் தந்து, 16.12.2004 அன்று சாதனை நிகழ்த்தியது. இதனை அடுத்து, 7.2.2005 அன்று பதிவு செய்யப்பட்ட ஒரு கொலை வழக்கில், 8.3.2005 அன்று, அதாவது 29 நாட்களிலேயே குற்றவாளிக்குத் தண்டனை பெற்றுத் தந்தது. மேலும், இந்தச் சாதனைகளை மிஞ்சும் வகையில், வழக்குப் பதிவு செய்யப்பட்ட 17 நாட்களுக்குள் ஒரு கொலை வழக்கிலும், 16 நாட்களுக்குள் மற்றொரு கொலை வழக்கிலும், கடந்த மே திங்களில் குற்றவாளிகளுக்கு ஆயுள் தண்டனை பெற்றுத் தந்த தமிழகக் காவல் துறை, கடந்த ஜூன் மாதம், மற்றொரு கொலை வழக்கில், 8 நாட்களில் குற்றவாளிக்கு 10 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை பெற்றுத் தந்து சிறப்பானச் சாதனை படைத்தது.

தற்போது இந்தச் சாதனைகளை எல்லாம் மிஞ்சும் வகையில், மேலும் இரு கொலை வழக்குகளில், வழக்குப் பதிவு செய்யப்பட்ட 7 நாட்களுக்குள் குற்றவாளிகளுக்குத் தண்டனை பெற்றுத் தந்து தமிழ்நாடு காவல் துறை சாதனை படைத்துள்ளது.

சென்னையை அடுத்த தாம்பரத்தில் வசிக்கும் திரு.ராஜேந்திரன் என்பவர், தனது மனைவி லதிகா என்பவரை, 29–6–2005 அன்று கொலை செய்த வழக்கில், செங்கல்பட்டு விரைவு நீதிமன்றத்தில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு, 7 நாட்களில், அதாவது 5–7–2005 அன்று குற்றவாளிக்கு 10 ஆண்டு சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

அதேபோல, தாம்பரத்தை அடுத்த பீர்க்கங்கரணை அருகே வெங்கம்பாக்கம் கிராமம் முத்துநகரைச் சேர்ந்த குஞ்சான் என்கிற கண்ணன் என்பவர், தனது மாமனார் சுப்பிரமணி என்பவரைக் கொலை செய்த வழக்கு 29–6–2005 அன்று பதிவு செய்யப்பட்டு, செங்கல்பட்டு விரைவு நீதிமன்றத்தில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு 7 நாட்களுக்குள், அதாவது 5–7–2005 அன்று குற்றவாளிக்கு 10 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை வழங்கப்பட்டுத் தீர்ப்பளிக்கப் பட்டுள்ளது.

இவ்வாறு, இந்த இரு கொலை வழக்குகளிலும், வழக்குப் பதிவு செய்யப்பட்ட 7 நாட்களில் துரிதமாக விசாரணை மேற்கொண்டு, குற்றவாளிகளுக்கு விரைந்து தண்டனை பெற்றுத் தந்து சாதனை படைத்துள்ள, சென்னை மாநகரக் காவல் துறை ஆணையர், திரு.ஆர்.நடராஜ் அவர்களுக்கும், இந்தச் சாதனை படைக்கக் காரணமாக இருந்த தமிழகக் காவல் துறையின் ஏனைய அலுவலர்களுக்கும், எனது மனமுவந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

* * *

# வறிய நிலையில் வாடிவரும் பழம்பெரும் திரைப்பட நடிகைக்கு வாழ்நாள் நிதி உதவி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், வறிய நிலையில் வாடி வரும் பழம்பெரும் திரைப்பட நடிகை மற்றும் திரைப்படப் பாடகி திருமதி ராவ் பாலசரஸ்வதி தேவி அவர்கள் வாழ்க்கை நடத்துவதற்காக, தமிழ்நாடு அரசு வீட்டு வசதி வாரியத்துறையின் மூலம் வாடகை இல்லா இலவசக் குடியிருப்பு ஒன்றினை வழங்கிடவும், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 10 இலட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கிடவும், அதனை தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் (Tamil Nadu Power Finance and Infrastructure Development Corporation) கலைப் பண்பாட்டு இயக்கக ஆணையரின் பெயரில் வைப்புத் தொகையாகச் செலுத்தி,



அதிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையை, மாதந்தோறும் அவரது வாழ்நாள் முழுவதும் வழங்கிடவும் உத்தரவிட்டு, அதற்கான ஆணைகளை 11–7–05 அன்று தலைமைச் செயலகத்தில் நேரில் வழங்கினார்கள்.

திருமதி ராவ் பாலசரஸ்வதி தேவி அவர்கள், திரைப்பட உலகில் அறிமுகமாகி பாலயோகினி, பக்த குசேலா, திருநீலகண்டன் போன்ற திரைப்படங்களில் நடித்து, பின் திரைப்படப் பாடகியாகி 2000–க்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடியவர் ஆவார். இவர் பாடிய 'நீலவண்ண கண்ணா வாடா' என்ற பாடல் இன்றளவும் மக்கள் மத்தியில் வெகுவாக வரவேற்கப்படும் பாடலாகத் திகழ்கிறது. திருமதி ராவ் பாலசரஸ்வதி தேவி அவர்கள், தற்சமயம் மிகவும் வறிய சூழ்நிலையில் உள்ளதாகவும், போதிய இடவசதியற்ற வாடகை வீட்டில் மிகுந்த சிரமத்துடன் வசித்து வருவதாகவும், எனவே, தான் தொடர்ந்து வாழ்க்கை நடத்த உதவிட வேண்டும் என்று கோரி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்குக் கோரிக்கை மனு கொடுத்திருந்தார்.

இந்தக் கோரிக்கை மனுவைப் பரிவுடன் பரிசீலனை செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், வறிய நிலையில் வாடும் இவர் வாழ்க்கை நடத்துவதற்காக முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து, 10 இலட்சம் ரூபாய் நிதி உதவியும், தனது வாழ்நாள் முழுவதும் இலவசமாக வசிக்கும் வகையில், அரசு வீட்டு வசதி வாரியக் குடியிருப்பும் வழங்க ஆணையிட்டார்கள்.

மேலும், இந்த உதவித்தொகை ரூபாய் 10 இலட்சத்தையும் கலை பண்பாட்டு இயக்கக ஆணையரின் பெயரில், தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் வைப்புத் தொகையாகச் செலுத்துமாறும், அதிலிருந்து மாதந்தோறும் கிடைக்கும் வட்டித் தொகையான 5,833/– ரூபாயை, அவரது வாழ்நாள் முழுவதும் வழங்கிடவும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், உத்தரவிட்டார்கள்.

இதன்படி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், இதற்கான அரசாணைகளை திருமதி ராவ் பாலசரஸ்வதி தேவி அவர்களிடம் 11–7–2005 அன்று தலைமைச் செயலகத்தில், நேரில் வழங்கினார்கள்.

இதன் மூலம், திருமதி ராவ் பாலசரஸ்வதி தேவி அவர்கள் வாழ்க்கை நடத்த ஏதுவாக, மாதந்தோறும் ரூ. 5,833 உதவித் தொகையாகக் கிடைக்கும். அரசு வீட்டு வசதி வாரியக் குடியிருப்பை தனது வாழ்நாள் முழுவதும் இலவசமாக இவர் பயன்படுத்திக் கொள்ளலாம்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடமிருந்து, இதற்கான ஆணைகளைப் பெற்றுக் கொண்ட பழம்பெரும் நடிகை மற்றும் திரைப்படப் பாடகி திருமதி. ராவ் பாலசரஸ்வதி தேவி அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்குத் தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நடவடிக்கையால்**

# குவைத் சிறையில் வாடிய பெண் விடுவிப்பு



**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களது ஆணைப்படி, தமிழகக் காவல்துறை விரைந்து மேற்கொண்ட நடவடிக்கைகளின் பயனாக, குவைத் நாட்டில் வீட்டு வேலை செய்யும் பணிப் பெண்ணாகப் பணியாற்றி, அந்த வீட்டுச் சொந்தக்காரர்களால் பாலியல் துன்பத்திற்கு ஆளாக்கப்பட்டு, குவைத் சிறையில் அடைக்கப்பட்டிருந்த திருமதி. சுப்புலட்சுமி, 6.7.2005 அன்று பத்திரமாகத் தமிழகம் வந்து சேர்ந்தார்.

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டைக்கு அருகே உள்ள காளையார்கரிசல் குளத்தில் டீக்கடை வைத்து வாழ்ந்து வரும் திரு. நரசிங்கபெருமாள் என்பவரின் மனைவியான திருமதி.சுப்புலட்சுமி, வறுமையான தங்களது குடும்பச் சூழ்நிலை காரணமாக குவைத் நாடு சென்று, வீட்டு வேலை செய்து வந்தார். குவைத் நாட்டில் வீட்டு வேலைப்பணி செய்து வந்த தனது மனைவி திருமதி. சுப்புலட்சுமியை, அந்த வீட்டுச் சொந்தக்காரர்கள் பாலியல் பலாத்காரம் செய்வதாகத் தெரிவித்து, அவரை அங்கிருந்து காப்பாற்றித் தமிழ்நாட்டிற்குத் திரும்பி அழைத்து வர உதவிட வேண்டும் என்று கோரி திரு. நரசிங்கபெருமாள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம், அவரது இல்லத்தில் நேரில் மனு அளித்திருந்தார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இந்தக் கோரிக்கை மீது உடனடி நடவடிக்கை மேற்கொண்டு, திருமதி. சுப்புலட்சுமி அவர்களை குவைத் நாட்டிலிருந்து தமிழகத்திற்குத் திரும்ப அழைத்து வர ஆவன அனைத்தும் செய்யுமாறு காவல் துறைக்கு உத்தரவிட்டார்கள்.

திருமதி. சுப்புலட்சுமி, வீட்டு வேலைப் பணியாளாகப் பணிபுரிந்திட 21.12.2004 அன்று குவைத் சென்றுள்ளார். அங்கு, இவர் பணியாற்றிய வீட்டின் சொந்தக்காரர்கள் இவர் மீது பாலியல் பலாத்காரம் செய்ததன் காரணமாக, தான் கடைசியாக வேலை பார்த்த வீட்டை விட்டு வெளியேறியுள்ளார். ஆனால், வெளியில் நடமாடுவதற்கான முறையான அனுமதி எதையும் இவர் வைத்திராத காரணத்தினால், குவைத் காவல் துறையினர் இவரைக் கைது செய்து சிறையில் அடைத்திருந்தனர். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆணைப்படி, சென்னை மாநகரக் காவல் துறையின் மத்தியக் குற்றப் பிரிவு, சென்னையிலுள்ள வெளிநாடு செல்லும் இந்தியர்களுக்கான குடிபெயர்வோர் பாதுகாப்பகத்தையும் குவைத் நாட்டிலுள்ள இந்தியத் தூதரகத்தையும் தொடர்பு கொண்டு, திருமதி. சுப்புலட்சுமி அவர்களைப் பத்திரமாக தமிழகத்திற்குத் திரும்ப அழைத்து வருவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொண்டது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆணைப்படி, தமிழகக் காவல் துறை விரைந்து மேற்கொண்ட நடவடிக்கைகளின் பயனாக, 6.7.2005 அன்று காலை 7 மணியளவில் குவைத் ஏர்லைன்ஸ் விமானம் மூலமாக திருமதி. சுப்புலட்சுமி பத்திரமாகச் சென்னை வந்தடைந்தார்.

கடும் துன்பத்திலிருந்து தன்னை மீட்டு, தனது குடும்பத்தாருடன் மீண்டும் இணைந்து வாழ்ந்திட வழியமைத்துக் கொடுத்த, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு, திருமதி. சுப்புலட்சுமி தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

* * *

# ஊனமுற்றவர்களுக்கு நிதிஉதவி



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள் வழங்கினார்

**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த இரு கால்களும் ஊனமுற்ற மாணவி செல்வி பரமேஸ்வரியின் மேற்படிப்புச் செலவுக்காக 5 இலட்சம் ரூபாயும், தேனி மாவட்டத்தைச் சேர்ந்த மனவளர்ச்சி குன்றிய செல்வன் மாடமுத்துவின் வாழ்க்கைச் செலவுக்கும், பராமரிப்பிற்கும், 1 இலட்சம் ரூபாயும் வழங்க ஆணையிட்டார்கள். இதன்படி, இதற்கான ஆணைகளை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 12–7–2005 அன்று தலைமைச் செயலகத்தில், மாணவி பரமேஸ்வரியிடமும், செல்வன் மாடமுத்துவின் தாயார் திருமதி. வேல்விழியிடமும் நேரில் வழங்கினார்கள். மேலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், உடல் வளர்ச்சி குன்றி 3¼ அடி உயரமே உள்ள, தேனி மாவட்டத்தைச் சேர்ந்த திரு.ராஜா என்பவருக்கு, அவரது வாழ்க்கைச் செலவிற்கு உதவிடும் வகையில், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 25 ஆயிரம் ரூபாய் நிதியுதவிக்கான காசோலையை நேரில் வழங்கினார்கள்.

எவ்வித ஆதரவும் அற்ற நிலையில், திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டை வட்டத்தில் உள்ள, ஆனையார்குளம் தூய அன்னாள் உடல் ஊனமுற்றோர் இல்லத்தில் தங்கி, தூய வளனார் பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் இரண்டாம் ஆண்டு தட்டச்சுப் பிரிவில் பயின்றுவரும் இரு கால்களும் ஊனமுற்ற மாணவியான செல்வி பரமேஸ்வரி, தந்தை இல்லாத தன்னைப் பராமரிக்க இயலாமல் தனது தாய், பாட்டியிடம் விட்டுச் சென்றுவிட்டதாகவும், தனது பாட்டியும் தன்னை வளர்க்க வழியின்றி ஊனமுற்றோர் இல்லத்தில்

ஒப்படைத்துச் சென்று விட்டதாகவும், தற்போது தனது பாட்டியும் இறந்துவிட்ட நிலையில் தனது வாழ்க்கைச் செலவிற்கும், தன்னுடைய மேல்படிப்புச் செலவிற்கும், உதவிட வேண்டும் எனக் கோரி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு மனு அளித்திருந்தார்.

செல்வி பரமேஸ்வரியின் மனுவைப் பரிவுடன் பரிசீலித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இவர் தனது மேற்படிப்பைத் தொடரவும், வாழ்க்கைச் செலவிற்காகவும் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து 5 இலட்சம் ரூபாய் நிதியுதவி வழங்க ஆணையிட்டார்கள். இந்த உதவித் தொகையைத் திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் செல்வி பரமேஸ்வரி ஆகியோரது பெயரில் கூட்டாகத் தமிழ்நாடு மின்விசை மேம்பாட்டு நிறுவனத்தில் வைப்பீடு செய்திடவும், இந்த வைப்பீட்டுத் தொகையிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையை, செல்வி பரமேஸ்வரியின் மேற்படிப்பிற்கும், வாழ்நாள் முழுவதும் வாழ்க்கைச் செலவிற்கும் பயன்படுத்திக் கொள்ள, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், ஆணையிட்டார்கள்.

தேனி மாவட்டம், ஆண்டிபட்டி டி.சுப்புலாபுரத்தைச் சேர்ந்த திருமதி. வேல்விழி என்பவர், மனவளர்ச்சிக் குன்றிய தனது மகன் செல்வன் மாடமுத்துவைப் பராமரிக்கவும், அவரது மருத்துவச் செலவிற்காகவும், உதவிட வேண்டுமெனக் கோரி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு, மனு அளித்திருந்தார்.

திருமதி. வேல்விழி அளித்த மனுவைப் பரிவுடன் பரிசீலனை செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், அவரது மனவளர்ச்சிக் குன்றிய மகன் செல்வன் மாடமுத்துவைப் பராமரிக்க, முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து 1 இலட்சம் ரூபாய் வழங்க ஆணையிட்டார்கள். இந்த உதவித் தொகையைத் தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் திருமதி. வேல்விழி ஆகியோரது பெயரில் கூட்டாகத் தமிழ்நாடு மின்விசை மேம்பாட்டு நிறுவனத்தில் வைப்பீடு செய்திடவும், இந்த வைப்பீட்டுத் தொகையிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையை, செல்வன் மாடமுத்துவின் வாழ்க்கைச் செலவிற்கும், பராமரிப்பிற்கும் பயன்படுத்திக் கொள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், ஆணையிட்டார்கள்.

இதன்படி, இதற்கான ஆணைகளை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 12-7-2005 அன்று தலைமைச் செயலகத்தில், செல்வி பரமேஸ்வரி மற்றும் செல்வன் மாடமுத்துவின் தாயார் திருமதி. வேல்விழி ஆகியோரிடம் நேரில் வழங்கினார்கள்.

இதன் மூலம், செல்வி பரமேஸ்வரியின் மேற்படிப்பிற்கும், வாழ்க்கைச் செலவிற்கும், மாதந்தோறும் 2,917 ரூபாய் உதவித் தொகை கிடைக்கும். அதேபோல, மனவளர்ச்சிக் குன்றிய செல்வன் மாடமுத்துவின் பராமரிப்புச் செலவுக்கு மாதந்தோறும் 583 ரூபாய் உதவித் தொகையாகக் கிடைக்கும்.

தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் அருந்ததியர் தெருவைச் சேர்ந்த திரு.ராஜா என்பவர், உடல் வளர்ச்சி குன்றி, 3¼ அடி உயரமே உள்ளார். இவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம், ஊனமுற்று வறிய நிலையில் வாழும் தனது வாழ்க்கைச் செலவிற்கு உதவிட வேண்டுமென்று கோரி மனு அளித்திருந்தார்.

இந்த மனுவைப் பரிவுடன் பரிசீலித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இவரது வாழ்க்கைச் செலவிற்கு உதவிடும் வகையில் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 25 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்க ஆணையிட்டார்கள். இதன்படி, இதற்கானக் காசோலையை மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 12-7-2005 அன்று தலைமைச் செயலகத்தில், திரு.ராஜா அவர்களிடம் நேரில் வழங்கினார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் இருந்து நிதி உதவிக்கான ஆணைகளைப் பெற்றுக் கொண்ட செல்வி பரமேஸ்வரி, திருமதி. வேல்விழி மற்றும் நிதியுதவிக்கான காசோலையைப் பெற்றுக் கொண்ட திரு.ராஜா ஆகியோர் தங்களது மனமார்ந்த நன்றியை மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்குத் தெரிவித்துக் கொண்டார்கள்.

* * *



**2004**ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் வெளியிடப்பட்ட என்னுடைய விரிவான அறிக்கையின் வாயிலாக அரசுக்கும், அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கும் இடையிலான உறவில் ஒரு புதிய அத்தியாயத்தை நான் தொடங்கி வைத்தேன். ஒருபுறம் அனைத்துப் பணியாளர்களுக்கும் நல்ல வாழ்க்கைத் தரம் அமைந்து, அதன் மூலம் அவர்கள் மக்களுக்கு மேலும் சிறப்பாகப் பணியாற்ற இயலும் வகையில் அவர்களுக்கு ஊக்கம் அளித்திடும் அதே வேளையில், மறுபுறம் ஏழை எளிய மக்களுக்குப் போதிய பயன்கள் உரிய நேரத்தில் சென்றடைவதையும் நாம் உறுதி செய்திட வேண்டும் என்பதை நான் அதில் தெளிவுபடுத்தியிருந்தேன். ஒரு நல்ல ஆட்சிக்கு உள்ள சவாலே, இவ்விரண்டுக்கும் இடையே சரியானச் சமன்பாடுக் காணப்படுவதை உறுதி

# பொதுமக்களுக்கானச் சேவை பாதுகாக்கப்படுவதே தலையாய நோக்கம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை – 18.7.2005.

செய்வது தான். அரசின் சேவைச் செயலாக்க அமைப்பின் முதுகெலும்பாகத் திகழ்கின்ற அரசுப் பணியாளர்களும், ஆசிரியர்களும், இந்த அடிப்படையான நல்லாட்சிக் கோட்பாட்டை உணர்ந்து ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று நான் வேண்டுகோள் விடுத்திருந்தேன். அரசுப் பணியாளர் சங்கங்களும், ஆசிரியர் அமைப்புகளும் 2004 அக்டோபரில், நான் வகுத்துரைத்த, இந்தப் புதிய அணுகுமுறையைப் பெரிதும் வரவேற்றுள்ளன,

2001 மே திங்களில், என்னுடைய அரசு சந்திக்க வேண்டியிருந்த முன் எப்போதும் இல்லாத கடுமையான நிதி நெருக்கடியை நான் இங்கே நினைவு கூர விரும்புகிறேன். முந்தைய திமுக அரசு, தான் வெளியிடும் அறிவிப்புகளை நிறைவேற்றுவதற்கான திறன் இல்லாமலேயே அரசுப் பணியாளர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் புதிய பயன்களை அளிக்கின்ற பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டது. இதனால், நிலுவைத் தொகைகள் வழங்குவதைத் தள்ளிப் போட வேண்டிய நிலைமை உருவாயிற்று. இதனால், அனுமதிக்கப்பட்ட தொகைப் பட்டிகளுக்கும், இன்னும் சொல்லப் போனால் சம்பளப் பட்டிகளுக்கும் கூட, அரசுக் கருவூலங்களால் தொகை வழங்க முடியாத நிலைமை ஏற்பட்டது. சமாளிக்க முடியாத இந்தச் சூழ்நிலைகளை உறுதியான நடவடிக்கைகள் எடுத்துத் தான் சீர்படுத்த வேண்டியிருந்தது. அப்படிச் செய்யாதிருந்தால், அரசு நிருவாகமே முற்றிலும் சீர்குலைந்து போயிருக்கும். இந்தச் சூழ்நிலையில்தான், முதலில் நிதிநிலைமையைச் சீரமைத்து விட்டு, அதன் பின்னர், மேம்பாடுகள், பயன்கள் குறித்துப் பரிசீலிக்கலாம் என்றும், அதுவரை அரசுப் பணியாளர்களும், ஆசிரியர்களும் பொறுமையாக இருக்க வேண்டும் என்றும் நான் கேட்டுக் கொண்டேன்.

அப்படி நான் வேண்டுகோள் விடுத்தும் கூட, துரதிருஷ்டவசமாக, சில அரசுப் பணியாளர்

சங்கங்களும், ஆசிரியர் அமைப்புகளும் 2003 ஜூலைத் திங்களில், சில அரசியல் தலைவர்களின் தூண்டுதலின் பேரில், வேலை நிறுத்தத்தில் ஈடுபட முடிவு செய்தார்கள். அரசு, அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களின் தலையாயக் கடமை, நம்முடைய உண்மையான எஜமானர்களான மக்களுக்குச் சேவை செய்வதே என்பதை எப்போதுமே நினைவில் கொள்ள வேண்டும் என்ற கோட்பாட்டை நிலை நிறுத்துவதைத் தவிர வேறு வழியில்லாத சூழ்நிலை என்னுடைய அரசுக்கு ஏற்பட்டது. இந்தப் பின்னணியில்தான், எவரும், எந்தச் சூழ்நிலையிலும் பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கக் கூடாது என்ற உயரிய கோட்பாடு 2003 ஜூலையில் நிலை நிறுத்தப்பட்டது. பொது மக்களுக்கு எந்தவிதமான இடையூறும் ஏற்படாமல் இருப்பதை உறுதி செய்ய, அரசு, 2002–ஆம் ஆண்டு தமிழ்நாடு இன்றியமையாப் பணிகள் பராமரிப்புச் சட்டத்தை அப்போது அமல்படுத்த வேண்டியதாயிற்று. இதன் காரணமாக, சில இன்றியமையாப் பணிகளில் வேலை நிறுத்தத்தைத் தடை செய்து, இந்தச் சட்டத்தின் கீழ் ஓர் அறிவிக்கை வெளியிடப்பட்டது. இந்த அறிவிக்கை காலமுறைப்படி நீட்டிக்கப்பட்டுப் புதுப்பிக்கப்பட்டுள்ளது.

2003 ஜூலைத் திங்களில் நடைபெற்ற வேலை நிறுத்தத்தின் போது, இந்தச் சட்டத்தின் விதிமுறைகளை அமல்படுத்திய நேரத்தில் கூட, அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் மீது அரசுக்கு எந்தவிதமான மனக்கசப்பும் கிடையாது என்பதை எனது அரசு தெளிவுபடுத்தியது. உச்ச நீதிமன்றத்தின் உத்தரவுகளின் பேரில் நியமிக்கப்பட்ட நீதிபதிகள் குழுவின் பரிந்துரையின்படி தண்டனை வழங்கப்பட்டவர்களுக்கும் கூட, நான் பொது மன்னிப்பு அளித்ததிலிருந்து இது தெளிவாகும். எந்த ஒரு ஆட்சி முறையிலும், பொது மக்களுக்கானச் சேவைப் பாதுகாக்கப்படுவதே தலையாய நோக்கமாக இருக்க வேண்டும் என்றக் கருத்தை வலியுறுத்தவே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பதை இது தெள்ளத் தெளிவாக உணர்த்தியது.

அரசு, பொது மக்களுக்குச் சேவை ஆற்றுவதை முடக்கும் நியாயமற்ற அச்சுறுத்தல் அகற்றப்பட்டதுமே, உடனடியாக அரசுக்கும், அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கும் இடையே மீண்டும் நல்லுறவை ஏற்படுத்த நான் நடவடிக்கை எடுத்தேன். அரசுப் பணியாளர் சங்கங்கள், ஆசிரியர் அமைப்புகள் மற்றும் அரசுப் பணியாளர்கள், ஆசிரியர்களின் அனைத்துப் பிரிவினரும் இந்த வலுவான ஆட்சி முறைக் கோட்பாட்டை ஏற்றுக்கொண்டு, 20.10.2004–ஆம் நாளிட்ட என்னுடைய அறிக்கையை, அரசுக்கும், அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கும் இடையே மீண்டும் நல்லுறவு ஏற்பட வழிவகுக்கும் அறிக்கை என்று பாராட்டி வரவேற்றுள்ளார்கள்.

இவ்வாறாக, ஒரு புதிய அத்தியாயம் தொடங்கி, அனைத்துத் தரப்பினராலும் இந்தக் கோட்பாடு தற்போது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அரசுக்கும், அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கும் இடையிலான பரஸ்பர புரிதல் மற்றும் ஒத்துழைப்பு உணர்வு மீண்டும் முழுமையாக உருவாக்கப்பட்டுள்ள இந்தப் பின்னணியில், எந்தவிதமானக் குறுக்கீடுகளுக்கும் இடமளிக்காத வகையில், பொது மக்களுக்குத் தாங்கள் ஆற்ற வேண்டிய இந்தக் கடமையைத் தண்டனை விதிமுறை மூலமாக, அரசுப் பணியாளர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் தொடர்ந்து, மேலும் நினைவூட்டிக் கொண்டிருக்க வேண்டிய அவசியம் இல்லை என்று நான் முடிவு செய்துள்ளேன். 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு இன்றியமையாப் பணிகள் பராமரிப்புச் சட்டத்தின் 3(1) பிரிவின் கீழ் 24.1.2005 அன்று வெளியிடப்பட்டு, அச்சட்டத்தின் 3(3) பிரிவின் கீழ் 24.4.2005–லிருந்து மேலும் 3 மாத கால அளவுக்கு நீட்டிக்கப்பட்ட அறிவிக்கை, உள்ளபடியே இத்தகைய நினைவூட்டு நடவடிக்கையின் தன்மையிலானதே. மோதல் போக்கைக் கையாண்டு பொதுமக்களுக்கு இன்னல்களை ஏற்படுத்தியத் தங்களுடையத் தவறை அரசுப் பணியாளர் சங்கங்களும், ஆசிரியர் அமைப்புகளும் மற்றும் ஒட்டுமொத்த அரசுப் பணியாளர்களும், ஆசிரியர்களும் தற்போது உணர்ந்துவிட்டார்கள் என்றும்; எந்தவித தடுமாற்றத்திற்கும் இடமளிக்காமல், பரஸ்பர பேச்சு வார்த்தைகள் மூலம் எஞ்சியுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முன்வருவார்கள் என்றும், எனக்கு தற்போது நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. இந்தத் திடமான நம்பிக்கையின் பேரில் தான், தமிழ்நாடு இன்றியமையாப் பணிகள் பராமரிப்புச் சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்பட்டுள்ள தற்போதைய அறிவிக்கை 23.7.2005 அன்று காலாவதியான உடன், புதிய அறிவிக்கை வெளியிடுவதில்லை என்று நான் முடிவு செய்துள்ளேன். 2004 அக்டோபர் திங்களில் பொதுமக்களுக்கானப் பயனே தலையாய நோக்கமாக இருக்க வேண்டும் என்ற நல்லாட்சிக் கொள்கையையும், கோட்பாட்டையும் வகுத்ததிலிருந்து, அரசுக்கும், அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கும் இடையே பெரிய அளவில் நல்லிணக்கமும், புரிதலும் ஏற்பட்டுள்ளது என்ற தைரியத்திலேயே, அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் நலனைக் கருத்தில் கொண்டு, பரந்துபட்ட செயல்விளைவைக் கொண்ட இந்த நடவடிக்கையை நான் அறிவிக்கிறேன். அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் மீது எனக்குள்ள உறுதியான நம்பிக்கையின் பேரில் தான் இந்தத் துணிச்சலான நடவடிக்கையை நான் எடுத்துள்ளேன். என்னுடைய இந்த நடவடிக்கையைப் பிரதிபலிக்கும் வகையில், அரசுப் பணியாளர்களும், ஆசிரியர்களும், பொது மக்களைப் பாதிக்கின்ற நடவடிக்கைகளை முற்றிலுமாக ஒதுக்கித் தள்ளிவிட்டுப் பரஸ்பர பேச்சுவார்த்தைகள் மூலமாகவே எந்த ஒரு பிரச்சினைக்கும் தீர்வு கண்டு, புரிதல், கட்டுப்பாடு, பொதுமக்களுக்கான நல்ல சேவை ஆற்றுவது என்ற வழிமுறையை எப்போதும் பின்பற்ற வேண்டும்.

அரசுப் பணியாளர்களும், ஆசிரியர்களும் சிறந்த முறையில் பணியாற்ற அவர்களுக்குச் செயல் ஊக்கம் அளித்து, அதன் மூலம் பொது மக்களுக்கு மேலும் சிறப்பாகச் சேவையாற்றுவதற்கான இந்த முயற்சியின் ஓர் அங்கமாக, 25.7.2003 முதல் 10.2.2004 வரையிலானக் கால அளவைப் பணிக் கால அளவாகக் கருத வேண்டும் என்ற 1,003 அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களின் கோரிக்கையைப் பரிவுடன் பரிசீலிக்க முடிவு செய்துள்ளேன். 20.10.2004 அன்று, நான் அறிவித்த அரசுப் பணியாளர்களுக்கானத் தொகுப்புப் பயன்களில், வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு, 25.7.2003 அன்று பணியில் மீண்டும் சேர்ந்த 1,65,533 அரசுப் பணியாளர் மற்றும் ஆசிரியர்களைப் பொறுத்த வரையில், 5.7.2003 முதல் 24.7.2003 வரையிலான கால அளவு, பணிக்காலமாகக் கருதப்படும் என்று நான் குறிப்பிட்டிருந்ததை நினைவு கூரலாம். அதன் பிறகு, 2005–2006–ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில், பணி நீக்கம் செய்யப்பட்டு, பிறகு என்னுடைய தலையீட்டின் பேரில், பணியில் சேர்த்துக் கொள்ளப்பட்ட அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களைத் தவிர, நீதிபதிகள் குழு சில தண்டனைகள் விதித்து அளித்த தீர்ப்புகள் தெரியவந்த பிறகு, பணியில் சேர்ந்த மற்றைய அனைவரையும் பொறுத்தவரையில், ஏற்கெனவே ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளப் பணியாளர்களைப் போன்றே, இவர்கள் பணிக்கு வராத கால அளவும் பணிக் காலமாக முறைப்படுத்தப்படும் என்று எனது அரசு அறிவித்திருந்தது.

நீதிபதிகள் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் பணி அறவு/பணி நீக்கம் செய்யப்பட்டு, பின்னர் எனது தலையீட்டின் பேரில் 2004 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் மீண்டும் பணியில் சேர்த்துக் கொள்ளப்பட்ட 1,003 அரசுப் பணியாளர்கள், ஆசிரியர்கள், அவர்கள் பணியில் இல்லாத காலத்தை, பணிக் காலமாகக் கருத வேண்டும் என்று தற்போது கோரிக்கை வைத்துள்ளனர். பொது மக்களுக்குச் சேவையாற்றுவதில் மேலும் சிறப்பாகச் செயலாற்றிட, அவர்களுக்குச் செயலூக்கம் அளிக்க வேண்டும் என்பதில் எனக்கு நம்பிக்கை உள்ளது என நான் தெளிவாகக் கூறியுள்ளேன். இந்த முயற்சியின் ஒரு பகுதியாகவும், அக்டோபர் 2004இல் நான் அறிவித்த கொள்கையின் அடிப்படையிலான பரஸ்பர புரிதல் மற்றும் ஒத்துழைப்பு உணர்வை மேலும் வலுப்படுத்தும் நடவடிக்கையின் தொடர்ச்சியாகவும் இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொள்வதென நான் முடிவு செய்துள்ளேன். எனவே, இந்த 1,003 அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களைப் பொறுத்த வரையில், 25.7.2003 முதல் 10.2.2004 வரையிலான காலம் பணிக் காலமாகக் கருதப்படும்.

அரசின் நிதி நிலைச் சீரடையும் போது, அரசுப் பணியாளர்களுக்கு மேலும் பயன்கள் வழங்குவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்று நான் ஏற்கெனவே அறிவித்துள்ளேன். அதன்படி, அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான அகவிலைப்படியை என்னுடைய அரசு முறையாக உயர்த்தி வருகிறது. 2005–2006 ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்டத்தில் 1.4.2005 முதல் 3 சதவீத அகவிலைப்படி உயர்வு வழங்கப்படும் என்று அறிவித்ததன் மூலம், மத்திய/மாநில அரசுப் பணியாளர்களின் அகவிலைப்படிக்கிடையே ஏற்கெனவே இருந்த கால இடைவெளிப் படிப்படியாகக் குறைக்கப்பட்டு, மத்திய அரசுப் பணியாளர்களுக்கு இணையாக அகவிலைப்படி வழங்கப்பட்டது. தற்போது, மத்திய அரசு மேலும் ஒரு தவணை அகவிலைப்படி அறிவித்துள்ளது.

அகவிலைப்படி மேலும் 3 சதவீதம் உயர்த்தப்படும் என்று தற்போது அறிவிப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இதனால் 1.7.2005 முதல் வழங்கப்படும் அகவிலைப்படியின் அளவு 64 சதவீதத்திலிருந்து 67 சதவீதமாக உயரும். இது ரொக்கமாக வழங்கப்படும். இந்த அகவிலைப்படி உயர்வு, அனைத்து அரசுப் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கும் பொருந்தும்.

அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர் மற்றும் ஆசிரியர் அல்லாத பணியாளர்கள், உள்ளாட்சி மன்றப் பணியாளர்கள், சத்துணவு அமைப்பாளர்கள், குழந்தை நல அமைப்பாளர்கள், அங்கன்வாடிப் பணியாளர்கள், வருவாய்த் துறையில் பணியாற்றும் கிராம உதவியாளர்கள், பல்கலைக்கழக மானியக் குழு அனைத்திந்திய தொழில்நுட்பக் கல்விக் குழுவின் சம்பள வீத ஆளுகைக்குட்பட்ட பணியாளர்கள், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பல்தொழில்நுட்பப் பயிலகம் மற்றும் சிறப்புப் பட்டய நிறுவனங்கள் ஆகியவற்றில் பணியாற்றும் ஆசிரியர்கள், உடற்பயிற்சி ஆசிரியர்கள், நூலகர்கள் ஆகியோருக்கும் இது பொருந்தும். இப்பயன் ஒய்வூதியதாரர்களுக்கும் வழங்கப்படும்.

தொகுப்பூதியம் பெறுவோர் மற்றும் 1.1.1996 அன்றுள்ளபடி, மாதம் ஒன்றுக்கு 150 ரூபாய்க்கு மேல் மதிப்பூதியம் பெறுவோர் ஆகியோருக்கு ஒட்டு மொத்தமாக மாதம் ஒன்றுக்கு 20 ரூபாயும், 1.1.1996 அன்றுள்ளபடி, மாதம் ஒன்றுக்கு 150 ரூபாய்க்கும் குறைவாக மதிப்பூதியம் பெறுவோருக்கு மாதம் ஒன்றுக்கு 10 ரூபாயும், 1.7.2005 முதல் உயர்த்தி வழங்கப்படும்.

இந்த அகவிலைப்படி உயர்வினால் 12.33 இலட்சம் அரசுப் பணியாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் பிறரும், 4.37 இலட்சம் ஓய்வூதியதாரர்களும் பயன் பெறுவர். இதனால், அரசுக்கு ஆண்டொன்றுக்கு 201.23 கோடி ரூபாய் கூடுதலாகச் செலவாகும்.

அரசுப் பணியாளர்களும், ஆசிரியர்களும், பொதுமக்களுக்கு மேலும் சிறப்பாகச் சேவை ஆற்றிட உதவும் குறிப்பான நோக்கத்துடன், நல்லெண்ண அடிப்படையிலான இந்தச் சலுகைத் தொகுப்பை நான் அறிவித்துள்ளேன். ஒரு சிறப்பானக் குறிக்கோளை, ஒவ்வொரு துறையிலும் தமிழகத்தை முதன்மையான இடத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும் என்கின்ற இலக்கை நான் கொண்டுள்ளேன். தமிழகத்தை முன்னெடுத்துச் செல்வதிலும், இந்த இலக்கை அடைவதிலும் அரசுப் பணியாளர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் முக்கியப் பங்கு உள்ளது. நாட்டிலேயே முதன்மையான மாநிலமாகத் தமிழகத்தை உருவாக்க வேண்டும் என்ற என்னுடைய கூர்நோக்கை மெய்யாக்குவதில் ஒவ்வொரு அரசுப் பணியாளரும், ஆசிரியரும் என்னோடு இணைந்துச் செயலாற்ற வேண்டும் என்பதே என் விருப்பம் ஆகும்.

* * *



## தீ விபத்தில் உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு நிதி உதவி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்
அறிக்கை – 8.7.2005

கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம் வட்டம், வடசேரி தினசரிச் சந்தையில், 8.7.2005 அன்று அதிகாலை, திடீரென ஏற்பட்ட தீ விபத்தில் அங்கு கடைகளில் இருந்த 6 பேர் உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகுந்த துயருற்றேன். இந்தத் துயரச் சம்பவத்தில் அகால மரணமடைந்தவர்களின் குடும்பத்தினருக்கு, எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்தத் தீ விபத்தில் 2 பேர் காயம் அடைந்தனர் என்பதை அறிந்து நான் மிகுந்த வருத்தம் அடைந்தேன். தீக்காயமுற்று மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள இவர்களுக்குச் சிறப்பானச் சிகிச்சை அளிக்குமாறு கன்னியாகுமரி மாவட்ட நிருவாகத்திற்கு நான் உத்தரவிட்டுள்ளேன். இவர்கள், விரைவில் பூரண குணம் அடைய வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் தீ விபத்தின் காரணமாக உயிரிழந்தவர்களின் குடும்பங்கள் ஒவ்வொன்றிற்கும், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 50 ஆயிரம் ரூபாயும், தீக்காயம் அடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்குத் தலா 15 ஆயிரம் ரூபாயும் வழங்கிட நான் உத்தரவிட்டுள்ளேன். □



## விடுதலைப் போராட்ட வீரருக்கு ஓய்வூதியம்

இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கு பெற்று, சுதந்திரம் அடைவதற்காகப் போராடிச் சிறையில் அடைக்கப்பட்டு, துன்பம் அனுபவித்த விடுதலைப் போராட்ட வீரரானத் தனக்கு, தமிழ்நாடு அரசு வழங்கும் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் வழங்கி உதவிட வேண்டுமெனக் கோரி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம், மனுக் கொடுத்திருந்த சென்னையைச் சேர்ந்த திரு.வி.எஸ்.வேதமணி என்பவருக்கு, மாநில அரசு விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் வழங்கி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், ஆணையிட்டுள்ளார்கள்.

சென்னையைச் சேர்ந்த திரு.வி.எஸ்.வேதமணி என்பவர், 1942–ஆம் ஆண்டு நடைபெற்ற "வெள்ளையனே வெளியேறு" என்ற இயக்கத்தின் சார்பில் வேதாரண்யம் காவல் நிலையத்தின் முன்பு, சர்தார் வேதரத்தினம் பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்ற போராட்டத்தில் கலந்து கொண்டு, சுதந்திரம் பெறுவதற்காகப் போராடிச் சிறையில் அடைக்கப்பட்டுத் துன்பம் அனுபவித்ததாகவும், அதனடிப்படையில் தனக்கு மாநில அரசின் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் வழங்க வேண்டுமெனவும் கோரி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம், கோரிக்கை மனு அளித்திருந்தார்.

இந்த மனுவைப் பரிவுடன் பரிசீலனை செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இவரது தியாகத்தைப் போற்றி, மாநில அரசின் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியத்தை உடனடியாக வழங்க ஆணையிட்டுள்ளார்கள். இதன்படி, இவருக்கு ஓய்வூதியமாக மாதம் ஒன்றிற்கு 3,000 ரூபாயும், மருத்துவப் படியாக மாதம் ஒன்றிற்கு 15 ரூபாயும், ஆக மாதந்தோறும் மொத்தம் 3,015 ரூபாய் அவரது வாழ்நாள் வரை வழங்கப்படும்.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்றுச் சிறையில் அடைக்கப்பட்டுத் துன்பம் அனுபவித்த விடுதலைப் போராட்ட வீரரான திரு.வி.எஸ்.வேதமணி அவர்களது தியாகத்திற்கு மதிப்பளித்துக் கௌரவிக்கும் வகையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், வழங்கிட ஆணையிட்டுள்ள இந்த ஓய்வூதியத்திற்கான அரசு ஆணையை, மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் அமைச்சர் மற்றும் சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர் அவருக்கு நேரில் வழங்கினார்கள்.

* * *

ஈரோடு மாவட்டம்

# பர்கூர் மலைப்பகுதியில் ரோஸ்மேரி பயிர்ச்சாகுபடி

விவசாயிகளுக்கு வருமானம் தரக்கூடிய பயிர்வகைகள் பல இருந்தாலும், மலைப்பகுதியில் உள்ள மலைவாழ் மக்களுக்கு வருமானம் தரக்கூடிய ஒரு நறுமணப் பயிர் ரோஸ்மேரி ஆகும். ஈரோடு மாவட்டம், அந்தியூர் ஊராட்சி ஒன்றியம், பர்கூர் மலைப்பகுதியில் ரோஸ்மேரி பயிர்ச் சாகுபடியை, மலைப்பகுதி மக்கள் மிகுந்த ஆர்வத்துடன் செய்து வருகிறார்கள்.



ஈரோடு மாவட்டம், அந்தியூர் வட்டாரம், பர்கூர் மலைப்பகுதியில் 25 ஏக்கர் நிலப்பரப்பில், சுய உதவிக் குழுவினர் கூட்டமைப்பான சர்வசக்தி கூட்டமைப்பு மூலமாக, ரோஸ்மேரிப் பயிரை விவசாயிகள் பயிர் செய்துள்ளனர். ரோஸ்மேரி ஒரு வாசனைத் திரவியப் பயிராகும். இது ஒரு பல்லாண்டுப் பயிருமாகும். புதர் போல் 1 மீட்டர் உயரம் வளரக் கூடியது இது. இச்செடி எல்லாப் பருவங்களிலும் பசுமையாகக் காணப்படும். இதில் எண்ணெய் சுரப்பிகள் இலைகளின் கீழ்ப்பகுதியில் இருக்கும். இதன் பூக்கள் கொத்துக் கொத்தாக நீல நிறத்தில் உள்ளது. இதன் சிற்றிதழ்களும் அதிக அளவில் வாசனை எண்ணெயைக் கொண்டதாகும். உணவு வகைகள், குளிர்பானங்கள், ஊறுகாய் போன்றவற்றில் இதன் இலைகள், நறுமணப் பொருள்களாக பயன்படுத்தப்படுகிறது. இதன் எண்ணெய் வாசனையூட்டும் பொருளாக 230 வகையான வாசனைத் திரவியங்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது. நல்ல வடிகால் வசதியுள்ள மண், கார அமில நிலை 6.5.7.0 உடன் இருந்தால் இதன் வளர்ச்சிக்கு உகந்தது. கடல் மட்டத்திலிருந்து 700 மீட்டர் உயரம் முதல் மலைப்பாங்கான பகுதிகளில் பயிர் செய்ய இது மிகவும் ஏற்றது. அதிகபட்ச வெப்பநிலை 26 டிகிரி செல்சியஸ் முதல் 32 டிகிரி செல்சியஸ் வரையிலும், குறைந்தபட்ச வெப்ப நிலையாக 10 டிகிரி செல்சியஸ் முதல் 12 டிகிரி செல்சியஸ் வரை உள்ள இடங்களில் இச்செடி நன்கு செழித்து வளரும். ஜூன், ஜூலை மற்றும் அக்டோபர், நவம்பர் மாதங்கள் நடவு செய்ய ஏற்ற பருவமாகும். தேர்வு செய்த நிலத்தை 2 அல்லது 3 முறை உழவு செய்து, கடைசி உழவின் போது ஏக்கருக்கு 10 டன் நன்கு மட்கிய தொழுஉரம் மற்றும் 200 கிலோ வேப்பம்புண்ணாக்கு இட்டு, நன்கு மண் கலங்கும்படி உழவு செய்ய வேண்டும். வேர்விட்ட செடிகளை வரிசைக்கு வரிசை 45 செ.மீ. செடிக்குச் செடி இடைவெளியில் நடவு செய்ய வேண்டும். ஏக்கருக்கு 20,000 வேர்விட்ட செடிகள் தேவைப்படும். இந்தப் பயிர் நன்கு வளர ஒரு ஏக்கருக்கு அடியுரமாக 12 கிலோ தழைச்சத்து, 18 கிலோ மணிச்சத்து மற்றும் 12 கிலோ சாம்பல் சத்து இட வேண்டும். வேர்விட்ட செடிகளை நடும் சமயத்தில் குறைந்தபட்சம் ஒரு ஏக்கருக்கு ஒரு டன் மண்புழு உரமிடுதல் மிகவும் அவசியம். மண்ணின் ஈரப்பதம் பாதுகாக்கப் பஞ்சகவ்யத்தை 10 லிட்டர் நீரில் 250 மி.லி. வீதம் கலந்து 15 நாட்கள் இடைவெளியில் பயிர்களுக்குத் தெளிக்கலாம். இதன் மூலம் பயிர் வளர்ச்சி ஊக்குவிக்கப்படுகிறது. மேலும், இது புழு பூச்சி விரட்டியாகச் செயல்பட்டு, பயிருக்கு நோய் தாக்கும் சக்தியைத் தருகிறது. இப்பயிர் வறட்சியைத் தாங்க வல்லது. ஆதலால் மழை இல்லாத காலங்களில் 15 நாட்களுக்கு ஒருமுறை நீர்ப் பாய்ச்சினால் போதுமானது. இப்பயிரை எவ்வித பூச்சியும் தாக்குவதில்லை. ஆனால் மழைக்காலங்களில் இலைக்கருகுதல் போன்ற நோய் தாக்கப்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த சூடோமோனாஸ், புளோரசன்ஸ் ஏக்கருக்கு 1 கிலோ வீதம் தண்ணீருடன் கலந்து செடி நனையும்படி தெளிக்க வேண்டும். பயிர் நட்ட 6–ஆவது மாதத்திலிருந்து அறுவடைக்குத் தயாராகிறது. ஒரு ஆண்டிற்கு 100 முதல் 120 நாட்கள் இடைவெளியில் 3 முறை அறுவடைச் செய்யலாம். ரோஸ்மேரி பயிர் 10 ஆண்டுகள் வரை வளர்ந்து மகசூல் தரவல்லது.

இந்தப் பயிரின் மூலம் தயாரிக்கப்படுகின்ற ரோஸ்மேரி எண்ணெய், ஏக்கர் ஒன்றிற்கு 70 முதல் 75 லிட்டர் வரை கிடைக்கும். ஒரு லிட்டர் விலை ரூ.1,400 ஆகும். சராசரியாக ஏக்கர் ஒன்றிற்கு ரூ.85,000 வரை வருமானம் கிடைக்கக் கூடியதாகும். ஒரு நாற்றின் விலை ரூ.1.50 காசு. சாகுபடியாளர்கள் சங்கத்தின் மூலம் நாற்றுப் பண்ணையை அமைக்கத் திட்டமிடப் பட்டுள்ளது. அதனால் ஒரு நாற்றின் விலை 50 காசுக்குக் கிடைக்கும். இதனால் சாகுபடிச் செலவு குறைகின்ற வாய்ப்பு ஏற்படுகிறது. பர்கூர் மலைப்பகுதியில் ரோஸ்மேரி எண்ணெய் தொழிற்சாலை ரூ.3 இலட்சம் செலவில் அமைக்க மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் மலைப்பகுதியில் உள்ள மலைவாழ் மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காக, ரோஸ்மேரி பயிர்ச் சாகுபடியை அதிகரிக்க மானிய விலையில் வேளாண்மைப் பொறியியல் துறை மூலம், சொட்டு நீர்ப் பாசனம் அமைத்திடவும், பயிர்ச் சாகுபடி செய்வதற்கு ஏக்கர் ஒன்றிற்கு ரூ.4,000 வரை மானியம் வழங்கவும், மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்.

வறட்சியைத் தாங்கும் திறன் கொண்டதுடன் அதிக வாசனையும் உள்ள, மலைவாழ் மக்களுக்கு வருமானம் தரக்கூடிய இந்த ரோஸ்மேரி பயிர்ச் சாகுபடி, அந்தியூர் மலைப்பகுதி மட்டுமன்றி, தாளவாடி மற்றும் இதர மலைப்பகுதியின் தட்பவெப்ப நிலைக்குத் தக்கவாறுபயிர் செய்ய விவசாயிகளுக்கு மாவட்ட நிருவாகம் அனைத்து முயற்சிகளையும் செய்து வருகிறது.

– மு.ரா.லிங்கம்,
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
ஈரோடு.

* * *

## கழுகாசலம் குடைவரை

கழுகுமலை. கோயில்பட்டியிலிருந்து சங்கரன் கோயில் போகும் வழியில் 21 கி.மீ. தூரத்திலுள்ளது. முன்னூறு அடி உயரமுள்ள ஒரு மலையடி வாரத்திலுள்ளது, இந்த ஊர். இங்குள்ள முருகன் கோயில் தென் பாண்டி நாட்டில் பிரசித்தி பெற்ற கோயில். இந்த மலையிலே ஒப்பற்ற கலைச் செல்வங்கள் உள்ளன.

பல்லவர் காலத்திற்கு முன்னரே இப்பகுதிக்கு வந்த சமணத் துறவிகள் மலைச்சரிவிலே சமண தீர்த்தங்கரர்களின் உருவங்களை வடிவமைத்தனர். சிறு சிறு மாடங்களில் சம்மணமிட்டுக் கொண்டு கைகளை மடியில் வைத்தபடி இரண்டிரண்டு உருவங்களாகச் செதுக்கினர். மலையின் கீழ்ப்புறச் சரிவில் ஒரு மாடத்தில் இருபத்து நான்கு துறவிகள்; அதற்குக் கீழே இன்னொரு மாடம்; அதிலே பத்து துறவிகள்; அதற்கு அடுத்து ஒரு தடுப்புச் சுவர் அமைத்து, அதிலே தனியாக ஒரு துறவி. இதேபோல் மாடங்கள் அமைத்த பல துறவிகள் என்று ஏராளமான புடைப்புரு சிற்பங்கள் உள்ளன. ஒரு மாடத்தில் ஒரு தென்னை மரம்; மகுடம்; மகர குண்டலம் தரித்த ஒரு தேவி ஒரு சிறு பெண்ணின் தலையில் வலது கையை வைத்துக் கொண்டிருப்பது போன்ற ஒரு சிற்பம் ஒரு மாடத்தில். இம்மாதிரி வனப்பு மிகு சிற்பங்களும் உள்ளன.

இதைப் பார்த்த பாண்டிய மன்னன் ஒருவன் அங்கே குடைவரைக் கோயில் ஒன்றைக் கட்ட ஆரம்பித்தான். மேலே இருந்து கீழாகக் குடைந்து கோயில் உருவாக ஆரம்பித்தது. முதலில் விமானம்; அதைச்சுற்றி அழகு மணி மாடங்கள்; விமானத்தின் நான்கு மூலைகளிலும் நான்கு குறத்திகள். அதற்குக் கீழே ஒரு அடுக்கு.இப்படியாக ஒரு பிரகாரமே உருவாயிற்று. முப்பதடி தூரம் வரை குடைந்தெடு[illegible]க்கிறார்கள். ஆனால் இரண்டு நிலை அடு[illegible]ன் வேலை நின்றுவிட்டது. வளைவுகளும், போதிகைகளும், மிக நுட்பமாகச் செதுக்கப்பட்டிருக்கின்றன. நடு அடுக்கைச் சுற்றி வரிசையாக பூத கணங்கள் தாங்கியிருப்பது போல் உருவாக்கப்பட்டுள்ளது.

இக்கோயிலை உருவாக்கும் பொறுப்பை ஏற்றிருந்த தலைமைச் சிற்பி ஒரு நாள் தனியாக ஒரு உருவத்தைச் செதுக்கிக் கொண்டிருந்தான். திடீரென்று அவன் கை உளியை கீழே வைத்தபோது மறுபுறத்திலிருந்து செதுக்கொலி ஒன்று கேட்டது. தன்னைத் தவிர வேறு யாரும் அங்கில்லாதபோது இந்த சத்தம் எங்கிருந்து வருகிறது என்று பார்க்க சத்தம் வந்த திக்கை நோக்கிச் சென்றான். அங்கே ஒரு இளைஞன் இவன் செதுக்கிய சிற்பத்தை விட மிக அழகான சிற்பம் ஒன்றைச் செதுக்கிக்கொண்டு வருவது தெரிந்தது. பொறாமை கொண்ட சிற்பி ஆத்திரத்தில் வெட்டுக் கத்தியை அந்த இளைஞனை நோக்கி வீச அது அவன் கழுத்தில் பாய்ந்து வெட்டித் தள்ளிவிட்டது. அந்த இளைஞன் சிற்பியின் சொந்த மகன்தான். அதனால்தான் இதற்கு வெட்டுவான் கோயில் என்ற பெயர் வந்தது என்று ஒரு கதை வழங்கப்படுகிறது. இந்த மலை அடிவாரத்தில் முருகனுக்கு ஒரு குடைவரைக் கோயிலுள்ளது. அதுதான் கழுகாசல மூர்த்தி குடைவரைக் கோயில்.

*– "நம்மவர் செய்த விந்தைகள்" – எனும் நூலிலிருந்து*

### வங்காள தேசத்தில்

# இந்திய மருத்துவர்கள், செவிலியர்களுக்கு வேலைவாய்ப்பு!

அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் பங்களாதேஷ் ZHS மருத்துவமனையிலிருந்து உடனடியாக கீழ்க்காணும் மருத்துவர்களும், செவிலியர்களும் பணியமர்த்துவதற்குத் தேவையென கோரிக்கையைப் பெற்றுள்ளது.

1) நெப்ரோலஜி (Nephrology)
2) நியூரோலஜிஸ்ட் (Neurologist)
3) நியூரோ சர்ஜன் (Neuro Surgeon)
4) அனஸ்தீசியா (ஜெனரல்) (Anaesthesia (General)
5) அனஸ்தீசியா (கார்டியாக்) (Anaesthesia (Cardiac)
6) காஸ்ட்ரோ என்டிரியோலாஜி (மெடிக்கல்) (Gastro entrology (Medical)
7) காஸ்ட்ரோ என்டிரியோலாஜி (சர்ஜிகல்) (Gastro entrology (Surgical)
8) இ[illegible]வென்ஷனல் கார்டியலாஜி (Interventional Cardiology)
9) ஆப்ஸ்டிரிக் மற்றும் கைனகாலாஜி (Obsterics & Gynaecology)

**முன் அனுபவம்**

3 முதல் 5 வருடம் வரை முன் அனுபவமுள்ளவர்களுக்கு, மாதச் சம்பளம் இந்திய ரூ.90,000 முதல் ரூ.1,50,000 வரை, 5 முதல் 10 வருடம் முன் அனுபவமுள்ளவர்களுக்கு, மாதச் சம்பளம் இந்திய ரூ.1,50,000 முதல் ரூ.2,00,000 வரை, 10 வருடத்திற்கு மேல் முன் அனுபவமுள்ளவர்களுக்கு இந்திய ரூ.2,00,001க்கு மேல்.

மேற்கண்ட சிறப்பு மருத்துவர்கள் டிப்ளமோ, பட்டப்படிப்பு முதுகலைப் பட்டப்படிப்பு, வெளிநாட்டு பட்ட மேற்படிப்பு (Diploma, MD, DNB, DM, MS, FRCS, etc) பயின்றவர்கள் விண்ணப்பிக்கலாம்.

**இதர சலுகைகள்**

வசதிகள் செய்யப்பட்ட இலவச அடுக்ககங்கள், சென்னையிலிருந்து சென்று திரும்ப இலவச விமானப் பயணச்சீட்டு, மருத்துவர்களுக்கும், அவரைச் சார்ந்த குடும்பத்தினருக்கும் இலவச மருத்துவம், தங்கும் இடத்திலிருந்து மருத்துவமனை சென்று திரும்ப இலவச போக்குவரத்து வசதி மற்றும் ZHS பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள இதர வசதிகள், இலவச விசா மற்றும் உத்தரவாத அனுமதி. பங்களாதேஷ் வரி ZHSம் மருத்துவர்களும் சரிபாதியாக (50–50) ஏற்றுக் கொள்ள வேண்டும்.

**செவிலியர்கள்**

3 வருடம் வரை முன் அனுபவமுள்ளவர்களுக்கு மாதச்சம்பளம் இந்திய ரூ.12,000 முதல் ரூ.15,000 வரை, 3 முதல் 5 வருடம் வரை முன் அனுபவமுள்ளவர்களுக்கு இந்திய ரூ.15,000 முதல் ரூ.25,000 வரை.

டிப்ளமோ, பட்டப்படிப்பு மற்றும் முதுகலைப் பட்டப்படிப்பு (Diploma Nursing, B.Sc. Nursing, M.Sc Nursing) பயின்றவர்கள் உடனடியாக விண்ணப்பிக்கலாம்.

**இதர சலுகைகள்**

இலவசச் சீருடை, காலணி, பங்கிட்டுத் தங்கக்கூடிய அடுக்ககங்கள், சென்னையிலிருந்து கொல்கத்தா வரை செல்லக்கூடிய குளிர்சாதன வசதி கொண்ட ரயில்வே பயண வசதி மற்றும் கொல்கத்தாவிலிருந்து டாக்கா செல்ல விமானப் பயணச்சீட்டும் வழங்கப்படும். அடுக்ககத்திலிருந்து மருத்துவமனை சென்று திரும்ப, இலவசப் போக்குவரத்து வசதி மற்றும் உள்ள இதரப் பணியாளர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள இதர வசதிகள்.

மேற்காணும் பணிகளில் தகுதியும் தேர்ச்சியும் பெற்று, ZHS பங்களாதேஷில் பணிபுரிய விருப்பமுள்ளவர்கள், மேலாண்மை இயக்குநர், அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் (தமிழக அரசு நிறுவனம்), 41, மெக்னிக்கல்ஸ் சாலை, 2ஆவது சந்து, சேத்துப்பட்டு, சென்னை – 600 031 என்ற முகவரியில் உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். தொலைபேசி எண்கள் 28385099 / 28365188. *




நீலகிரி மாவட்ட வாழ் மக்களுக்கு வாழ்வாதாரம் அளிக்கின்ற மிக இன்றியமையாத் தொழிலாக தேயிலைத் தொழில் விளங்கி வருகின்றது. தேயிலைத் தொழில் சந்தித்து வருகின்ற பல்வேறுபட்டப் பிரச்சனைகளைத் தீர்த்து வைத்திடவும், தங்களது நிலைத்தப் பொருளாதார வளர்ச்சிக்கும், வாழ்வாதாரத்திற்கும் இத்தொழிலையே நம்பியுள்ள 60,000க்கும் மேற்பட்டத் தேயிலை விவசாயிகளுக்கு நல்வாழ்வு அளித்திடவும், என்னுடைய அரசு உறுதி பூண்டுள்ளது.

என்னுடைய அரசு 2001–ஆம் ஆண்டில் மீண்டும் ஆட்சிப் பொறுப்பை ஏற்றது முதலே, நீலகிரி மாவட்டத்தில் தேயிலைத் தொழிலைப் பாதித்து வருகின்ற பிரச்சினைகளுக்கானக் காரணங்களை ஆராய்ந்து, அப்பிரச்சினைகள் அனைத்தையும் திறம்படச் சமாளிப்பதற்கானத் தொடர்ச்சியானப் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

சந்தையில் நிலவும் தேக்க நிலை, குறைவான விலை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, தேயிலை விவசாயிகள் பயன்பெறும் [illegible] கூடுதலான விற்பனை வாய்ப்புகள் ஏற்படுத்தித் தருவதற்கு வகை செய்யும் நவீன விற்பனை வசதித் திட்டம் ஒன்றை என்னுடைய அரசு கொண்டு வந்தது.

அதன்படி, நீலகிரித் தேயிலையின் உள்ளூர் விற்பனையைப் பெருக்குவதற்காகத் தயாரிக்கப்பட்டத் தேயிலையை, "INDCO SERVE" நிறுவனத்தின் மூலமாக ஏல விற்பனை மையங்களிலிருந்து வாங்கிப் பதப்படுத்தி, அவற்றைச் சிப்பங்களில் அடைத்து, 'ஊட்டி டீ' என்ற வாணிகப் பெயரில், மாநிலத்தில் கூட்டுறவுத் துறையால் நடத்தப்படுகின்றப் பொது விநியோகத் திட்ட நியாய விலைக் கடைகள் மூலம் விற்பனை செய்ய என்னுடைய அரசு நடவடிக்கை எடுத்தது. 'ஊட்டி டீ' யின் விற்பனையை 28.8.2001 அன்று நான் தொடங்கி வைத்தேன். இதனால், நீலகிரியைச் சேர்ந்தச் சிறு தேயிலை விவசாயிகளுக்கு நிவாரணம் கிடைத்தது.

இதே போன்று, சிறு தேயிலை விவசாயிகளின் தேயிலைக்கு நல்ல விலை கிடைப்பதற்கு ஏதுவாகவும், தேயிலை ஏலத்தில் இடைத் தரகர்களை ஒழிப்பதற்காகவும், 1 கோடி ரூபாய் செலவில், இந்த வகையில் முதலாவதான "TEA SERVE" என்று அழைக்கப்படும், கணினி மயமாக்கப்பட்ட மின் – ஏல மையம் ஒன்றை 13.9.2003 அன்று நான் தொடங்கி வைத்தேன். உலகிலேயேத் தேயிலை விற்பனைக்கு என ஏற்படுத்தப்பட்டுள்ள முதலாவது மின் – ஏல மையம் இதுவே ஆகும். இந்த மின் – ஏல மையத்தில் நடைபெறும் அனைத்து விற்பனைகளுக்கும் தமிழ்நாடு விற்பனை வரியில் 50 சதவிகிதமும், மத்திய விற்பனை வரியில் 50 சதவிகிதமும், தள்ளுபடி செய்து நான் ஆணையிட்டேன்.

பசுந் தேயிலையின் விலைக் கடுமையாகச் சரிந்து, அதனால் தேயிலை விவசாயிகள் பெரும் நெருக்கடியைச் சந்தித்த போது, மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டச் சிறு தேயிலை விவசாயிகளுக்கு மானிய உதவி வழங்கிட வேண்டும் என, நான் 1.6.2002 அன்று அப்போதைய பாரதப் பிரதமருக்குக் கடிதம் எழுதினேன். என்னுடைய முயற்சிகளின் பயனாக, மத்திய அரசு, 2004 பிப்ரவரி திங்கள் முதல் 2004 மே திங்கள் வரையிலான நான்கு மாத காலத்தில் விற்பனை செய்யப்பட்ட பசுந் தேயிலைக்கு, கிலோ ஒன்றுக்கு 2 ரூபாய் வீதத்தில் மானியம் வழங்கியது.

தேயிலை விலையின் [illegible] நிலவி வந்த [illegible]

தான், விலை நிலை நிறுத்தல் நிதித் திட்டம் ("PRICE STABILISATION FUND SCHEME") ஒன்றைக் கொண்டு வர வேண்டும் என மத்திய அரசை வலியுறுத்தியது.

இத்திட்டம் தேயிலை விலை வீழ்ச்சி அடையும் போதெல்லாம், சிறு தேயிலை விவசாயிகளுக்கு ஆதரவு வழங்குவதற்காக 2003–ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. மத்திய அரசு அறிவித்த விலை நிலை நிறுத்தல் நிதித் திட்டம், நமது தேவைக்கு ஏற்ப அமையாவிட்டாலும் கூட, சிறு தேயிலை விவசாயிகள் இத்திட்டத்தில் சேர ஆதரவு அளிப்பது என என்னுடைய அரசு முடிவு செய்தது. இத்திட்டத்தில் சேர, சிறு தேயிலை விவசாயிகள் தொடக்க வைப்புத் தொகை செலுத்த வேண்டும்.

சிறு தேயிலை விவசாயிகள் இத்திட்டத்தில் சேருவதற்கு ஏதுவாக, சிறு தேயிலை விவசாயி ஒருவருக்கு 500 ரூபாய் என்ற விகிதத்தில் தொடக்க வைப்புத் தொகை செலுத்துகின்ற முழு பொறுப்பையும் என்னுடைய அரசு ஏற்றுக் கொண்டது. நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த 23,000 சிறு தேயிலை விவசாயிகள் இத்திட்டத்தில் சேருவதற்கு ஏதுவாக, என்னுடைய அரசு 1.15 கோடி ரூபாய் வழங்கியது.

இவ்வாறாகப் பாதகமானச் சந்தை நிலைமைகளினால் ஏற்படும் பாதிப்பில் இருந்து சிறு தேயிலை விவசாயிகளைப் பாதுகாத்து, அவர்களது வாழ்வாதாரங்களையும், நல்வாழ்வையும் காத்திட என்னுடைய அரசு தொடர்ந்து பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

அண்மையில் சந்தை விலையில் ஏற்பட்ட கடும் வீழ்ச்சியின் காரணமாகத் தங்களது வாழ்வாதாரங்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருப்பதாகவும், இந்த விலை வீழ்ச்சியினால் ஏற்பட்டுள்ளப் பாதகமான விளைவுகளில் இருந்து தங்களைக் காத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், நீலகிரி சிறு தேயிலை விவசாயிகள் 5.7.2005 அன்று என்னிடம் கோரிக்கை வைத்தனர்.

நீலகிரி மாவட்டத்தைச் சேர்ந்த 60,000–க்கும் மேற்பட்ட சிறு தேயிலை விவசாயிகளின் இந்தப் பிரச்சினையை நான் மிகவும் கவனமாகவும், பரிவுடனும் பரிசீலித்தேன். தேயிலை விலையில் அண்மையில் ஏற்பட்டுள்ள கடும் வீழ்ச்சியில் இருந்து அவர்களைப் பாதுகாத்திடவும், அவர்களது நலனை உறுதிப்படுத்திடவும், நீலகிரி மாவட்ட சிறு தேயிலை விவசாயிகளின் நலனுக்காக "சிறு தேயிலை விவசாயிகள் பாதுகாப்புத் திட்டம் என்னும் திட்டம்" ஒன்றைச் செயல்படுத்திட நான் முடிவு செய்துள்ளேன்.

இந்தத் திட்டத்தின் கீழ், சிறு தேயிலை விவசாயிகள் அனைவருக்கும், அவர்கள் உற்பத்தி செய்து விற்பனை செய்யும் பசுந் தேயிலைக்கு, கிலோ ஒன்றுக்கு 2 ரூபாய்



என்ற வீதத்தில் மானியம் வழங்கப்படும். இது ஏக்கர் அடிப்படையில் கணக்கிட்டு வழங்கப்படும்.

இந்த மானியம், 2005 – ஜூலை மாதம் முதல் ஆறு மாத காலத்திற்கு வழங்கப்படும். ஆறு மாத கால அளவில், ஏக்கர் ஒன்றில் சராசரியாக 1,400 கிலோ பசுந் தேயிலை உற்பத்தி ஆகும் என்று கணக்கிட்டு, ஒவ்வொரு சிறு தேயிலை விவசாயிக்கும், ஏக்கர் ஒன்றுக்கு மொத்தம் 2,800 ரூபாய் மானியமாக வழங்கப்படும்.

25 ஏக்கர் அளவுக்குத் தேயிலைத் தோட்டம் சொந்தமாக வைத்திருக்கிற / பயிரிடுகிற விவசாயி, 'சிறு தேயிலை விவசாயி' என அழைக்கப்படுவார். இந்த மானியத் தொகை, தேயிலை விவசாயிகளுக்கு நேரடியாக வழங்கப்படும். இத்திட்டம் உடனடியாக அமலுக்கு வரும். இதன் மூலம், 60,000 சிறு தேயிலை விவசாயிகள் பயன் பெறுவர். சிறு தேயிலை விவசாயிகளுக்கு மானியம் வழங்கும் வகையில், மாநில அரசுக்கு 28 கோடி ரூபாய் செலவாகும்.

நம்முடைய சிறுதேயிலை விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, இதில் தலையிட வேண்டியிருக்கிற அவசர அவசியத்தைக் கருதி இந்த மானியம், தகுதியுடைய அனைத்துத் தேயிலை விவசாயிகளுக்கும் உடனடியாக வழங்கப்பட வேண்டும் என நான் ஆணையிட்டுள்ளேன். மத்திய அரசின் விலை நிறுத்தல் நிதித் திட்டம் கடுமையான நிபந்தனைகளைக் கொண்டிருப்பதால், இத்திட்டத்தின் மூலம் நீலகிரி மாவட்டச் சிறு தேயிலை விவசாயிகளுக்கு உண்மையான பயனோ, பாதுகாப்போ கிடைக்க வாய்ப்பில்லை. இந்தத் திட்டத்தின் கீழ் பின்பற்றப்படுகின்ற விலை நிர்ணய முறை, நீலகிரி மாவட்டத்தில் நிலவுகின்ற நிலைமையைக் கருத்தில் கொண்டதாக இல்லை.

இந்தத் திட்டத்தின் கீழ், சிறு தேயிலை விவசாயிகளுக்கு, நபர் ஒருவருக்கு 1,000 ரூபாய் மட்டுமே நிவாரணமாகக் கிடைக்கும். தற்போதுள்ள சூழ்நிலையில் இது அறவே போதாது. எனவே, தாராளமானதொரு அணுகுமுறையுடன் இத்திட்டம் முற்றிலுமாக மாற்றி அமைக்கப்பட வேண்டும்.

இன்றைய சூழ்நிலையில், தமிழ்நாடு அரசு இந்த புதிய "சிறு தேயிலை விவசாயிகள் பாதுகாப்புத் திட்டத்தை" உடனடியாக தொடங்கி உள்ளது என்று தெரிவித்து, இன்று (11.7.2005) நான் பாரதப் பிரதமருக்கு கடிதம் எழுதி உள்ளேன்.

இத்திட்ட வகையில், மாநில அரசுக்கு ஏற்படுகின்ற செலவை மத்திய அரசு ஈடு செய்ய வேண்டும் எனவும், நான் பாரதப் பிரதமரைக் கேட்டுக் கொண்டுள்ளேன். தேயிலை அந்நிய செலாவணி ஈட்டுகின்ற உற்பத்திப் பொருளாகவும் நீலகிரி மாவட்டத்தின் ஒரே வாழ்வாதாரமாகவும் இருப்பதால், நான் தொடங்கியுள்ள இந்தத் திட்டத்திற்கு ஆகும் செலவை ஈடுசெய்ய வேண்டும் என்ற என்னுடைய கோரிக்கையை மத்திய அரசு ஏற்றுக் கொள்ளும் என்று நம்புகிறேன்.

சிறு தேயிலை விவசாயிகளின் நலனை உறுதிப்படுத்துவதற்கான ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை என்னுடைய அரசு எப்போதுமே எடுத்து வருகிறது. இதனை மனதில் கொண்டே கடந்த காலங்களில் பல்வேறு நடவடிக்கைகளை எனது அரசு மேற்கொண்டுள்ளது. சிறு தேயிலை விவசாயிகளின் நலனுக்காக அயராது தொடர்ந்து உழைத்திட என்னுடைய அரசு உறுதி பூண்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்களின்
அறிக்கை 11–7–2005

227157
600 008

அடக்கி ஒடுக்கப்பட்ட
சமுதாயத்தில் இருந்துதான்
உன்னதமான மனிதர்கள்
தோன்றுவார்கள்!

வைரம் என்பது நீண்ட
நெடுங்காலத்திற்கு முன்பு
பூமியின் அழுத்தத்தால் கீழே
அடங்கி ஒடுங்கிக் கிடந்த
கரித்துண்டுதான்!

அதுபோல், நெடுங்காலமாக
அடக்கி ஒடுக்கப்பட்ட
சமுதாயத்தில் இருந்து
தோன்றிய வைர மணிகளில்
ஒருவரே காமராசர்!

– பேரறிஞர் அண்ணா

## வங்காள தேசத்தில்

# இந்திய மருத்துவர்கள், செவிலியர்களுக்கு வேலைவாய்ப்பு!

அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் பங்களாதேஷ் ZHS மருத்துவமனையிலிருந்து உடனடியாக கீழ்க்காணும் மருத்துவர்களும், செவிலியர்களும் பணியமர்த்துவதற்குத் தேவையென கோரிக்கையைப் பெற்றுள்ளது.

1) நெப்ரோலஜி (Nephrology)
2) நியூரோலஜிஸ்ட் (Neurologist)
3) நியூரோ சர்ஜன் (Neuro Surgeon)
4) அனஸ்தீசியா (ஜெனரல்) (Anaesthesia (General)
5) அனஸ்தீசியா (கார்டியாக்) (Anaesthesia (Cardiac)
6) காஸ்ட்ரோ என்டிரியோலாஜி (மெடிக்கல்) (Gastro entrology (Medical)
7) காஸ்ட்ரோ என்டிரியோலாஜி (சர்ஜிகல்) (Gastro entrology (Surgical)
8) இ[illegible]வன்ஷனல் கார்டியலாஜி (Interventional Cardiology)
9) ஆப்ஸ்டிரிக் மற்றும் கைனகாலாஜி (Obsterics & Gynaecology)

**முன் அனுபவம்**

3 முதல் 5 வருடம் வரை முன் அனுபவமுள்ளவர்களுக்கு, மாதச் சம்பளம் இந்திய ரூ.90,000 முதல் ரூ.1,50,000 வரை, 5 முதல் 10 வருடம் முன் அனுபவமுள்ளவர்களுக்கு, மாதச் சம்பளம் இந்திய ரூ.1,50,000 முதல் ரூ.2,00,000 வரை, 10 வருடத்திற்கு மேல் முன் அனுபவமுள்ளவர்களுக்கு இந்திய ரூ.2,00,001க்கு மேல்.

மேற்கண்ட சிறப்பு மருத்துவர்கள் டிப்ளமோ, பட்டப்படிப்பு முதுகலைப் பட்டப்படிப்பு வெளிநாட்டு பட்ட மேற்படிப்பு (Diploma, MD, DNB, DM, MS, FRCS, etc) பயின்றவர்கள் விண்ணப்பிக்கலாம்.

**இதர சலுகைகள்**

வசதிகள் செய்யப்பட்ட இலவச அடுக்ககங்கள், சென்னையிலிருந்து சென்று திரும்ப இலவச விமானப் பயணச்சீட்டு, மருத்துவர்களுக்கும், அவரைச் சார்ந்த குடும்பத்தினருக்கும் இலவச மருத்துவம், தங்கும் இடத்திலிருந்து மருத்துவமனை சென்று திரும்ப இலவச போக்குவரத்து வசதி மற்றும் ZHS பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள இதர வசதிகள், இலவச விசா மற்றும் உத்தரவாத அனுமதி. பங்களாதேஷ் வரி ZHSம் மருத்துவர்களும் சரிபாதியாக (50–50) ஏற்றுக் கொள்ள வேண்டும்.

**செவிலியர்கள்**

3 வருடம் வரை முன் அனுபவமுள்ளவர்களுக்கு மாதச்சம்பளம் இந்திய ரூ.12,000 முதல் ரூ.15,000 வரை, 3 முதல் 5 வருடம் வரை முன் அனுபவமுள்ளவர்களுக்கு இந்திய ரூ.15,000 முதல் ரூ.25,000 வரை.

டிப்ளமோ, பட்டப்படிப்பு மற்றும் முதுகலைப் பட்டப்படிப்பு (Diploma Nursing, B.Sc. Nursing, M.Sc Nursing) பயின்றவர்கள் உடனடியாக விண்ணப்பிக்கலாம்.

**இதர சலுகைகள்**

இலவசச் சீருடை, காலணி, பங்கிட்டுத் தங்கக்கூடிய அடுக்ககங்கள், சென்னையிலிருந்து கொல்கத்தா வரை செல்லக்கூடிய குளிர்சாதன வசதி கொண்ட ரயில்வே பயண வசதி மற்றும் கொல்கத்தாவிலிருந்து டாக்கா செல்ல விமானப் பயணச்சீட்டும் வழங்கப்படும். அடுக்ககத்திலிருந்து மருத்துவமனை சென்று திரும்ப, இலவசப் போக்குவரத்து வசதி மற்றும் உள்ள இதரப் பணியாளர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள இதர வசதிகள்.

மேற்காணும் பணிகளில் தகுதியும் தேர்ச்சியும் பெற்று, ZHS பங்களாதேஷில் பணிபுரிய விருப்பமுள்ளவர்கள், மேலாண்மை இயக்குநர், அயல்நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம் (தமிழக அரசு நிறுவனம்), 41, மெக்னிக்கல்ஸ் சாலை, 2ஆவது சந்து, சேத்துப்பட்டு, சென்னை – 600 031 என்ற முகவரியில் உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். தொலைபேசி எண்கள் 28385099 / 28365188. *



# சிறு தேயிலை விவசாயிகள் பாதுகாப்புத் திட்டம்

நீலகிரி மாவட்ட வாழ் மக்களுக்கு வாழ்வாதாரம் அளிக்கின்ற மிக இன்றியமையாத் தொழிலாக தேயிலைத் தொழில் விளங்கி வருகின்றது. தேயிலைத் தொழில் சந்தித்து வருகின்ற பல்வேறுபட்டப் பிரச்சனைகளைத் தீர்த்து வைத்திடவும், தங்களது நிலைத்தப் பொருளாதார வளர்ச்சிக்கும், வாழ்வாதாரத்திற்கும் இத்தொழிலையே நம்பியுள்ள 60,000க்கும் மேற்பட்டத் தேயிலை விவசாயிகளுக்கு நல்வாழ்வு அளித்திடவும், என்னுடைய அரசு உறுதி பூண்டுள்ளது.

என்னுடைய அரசு 2001–ஆம் ஆண்டில் மீண்டும் ஆட்சிப் பொறுப்பை ஏற்றது முதலே, நீலகிரி மாவட்டத்தில் தேயிலைத் தொழிலைப் பாதித்து வருகின்ற பிரச்சினைகளுக்கானக் காரணங்களை ஆராய்ந்து, அப்பிரச்சினைகள் அனைத்தையும் திறம்படச் சமாளிப்பதற்கானத் தொடர்ச்சியானப் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

சந்தையில் நிலவும் தேக்க நிலை, குறைவான விலை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, தேயிலை விவசாயிகள் பயன்பெறும் [illegible] விற்பனை வாய்ப்புகள் ஏற்படுத்தித் தருவதற்கு வகை செய்யும் நவீன விற்பனை வசதித் திட்டம் ஒன்றை என்னுடைய அரசு கொண்டு வந்தது.

அதன்படி, நீலகிரித் தேயிலையின் உள்ளூர் விற்பனையைப் பெருக்குவதற்காகத் தயாரிக்கப்பட்டத் தேயிலையை, "INDCO SERVE" நிறுவனத்தின் மூலமாக ஏல விற்பனை மையங்களிலிருந்து வாங்கிப் பதப்படுத்தி, அவற்றைச் சிப்பங்களில் அடைத்து, 'ஊட்டி டீ' என்ற வாணிகப் பெயரில், மாநிலத்தில் கூட்டுறவுத் துறையால் நடத்தப்படுகின்றப் பொது விநியோகத் திட்ட நியாய விலைக் கடைகள் மூலம் விற்பனை செய்ய என்னுடைய அரசு நடவடிக்கை எடுத்தது. 'ஊட்டி டீ' யின் விற்பனையை 28.8.2001 அன்று நான் தொடங்கி வைத்தேன். இதனால், நீலகிரியைச் சேர்ந்தச் சிறு தேயிலை விவசாயிகளுக்கு நிவாரணம் கிடைத்தது.

இதே போன்று, சிறு தேயிலை விவசாயிகளின் தேயிலைக்கு நல்ல விலை கிடைப்பதற்கு ஏதுவாகவும், தேயிலை ஏலத்தில் இடைத் தரகர்களை ஒழிப்பதற்காகவும், 1 கோடி ரூபாய் செலவில், இந்த வகையில் முதலாவதான "TEA SERVE" என்று அழைக்கப்படும், கணினி மயமாக்கப்பட்ட மின் – ஏல மையம் ஒன்றை 13.9.2003 அன்று நான் தொடங்கி வைத்தேன். உலகிலேயேத் தேயிலை விற்பனைக்கு என ஏற்படுத்தப்பட்டுள்ள முதலாவது மின் – ஏல மையம் இதுவே ஆகும். இந்த மின் – ஏல மையத்தில் நடைபெறும் அனைத்து விற்பனைகளுக்கும் தமிழ்நாடு விற்பனை வரியில் 50 சதவிகிதமும், மத்திய விற்பனை வரியில் 50 சதவிகிதமும், தள்ளுபடி செய்து நான் ஆணையிட்டேன்.

பசுந் தேயிலையின் விலைக் கடுமையாகச் சரிந்து, அதனால் தேயிலை விவசாயிகள் பெரும் நெருக்கடியைச் சந்தித்த போது, மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டச் சிறு தேயிலை விவசாயிகளுக்கு மானிய உதவி வழங்கிட வேண்டும் என, நான் 1.6.2002 அன்று அப்போதைய பாரதப் பிரதமருக்குக் கடிதம் எழுதினேன். என்னுடைய முயற்சிகளின் பயனாக, மத்திய அரசு, 2004 பிப்ரவரி திங்கள் முதல் 2004 மே திங்கள் வரையிலான நான்கு மாத காலத்தில் விற்பனை செய்யப்பட்ட பசுந் தேயிலைக்கு, கிலோ ஒன்றுக்கு 2 ரூபாய் வீதத்தில் மானியம் வழங்கியது.

தேயிலை விலையின் நீண்ட காலமாக நிலவி வந்த [illegible]யைக் கருத்தில் கொண்டு, என்னுடைய அரசு





# பெருந்தலைவர் காமராஜர்

ஏறத்தாழ 9 ஆண்டுகாலம் தமிழகத்தின் முதலமைச்சராகப் பொறுப்பு வகித்த பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் ஏழை, எளிய மக்களுக்கு எல்லாம் இலவசக் கல்வி வழங்கும் பணிக்கு அடித்தளம் இட்டார்.

பதவிகள் இல்லாமலேயே மக்களுக்குத் தொண்டு செய்யலாம் – அவ்வாறு செய்ய முடியும் என்பது பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய நம்பிக்கையாக இருந்தது.

பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய அரசியல் ஞானத்தையும், சாதுர்யத்தையும், தன்னலமற்ற தன்மையையும் பாராட்டாதவர்களே இல்லை என்று நாம் சொல்லலாம். திராவிட இயக்கமும், இந்தியத் தேசிய காங்கிரசும், அரசியல் ரீதியாக முரண்பட்டு இருந்தாலும், தந்தை பெரியார் அவர்களோ, பேரறிஞர் அண்ணா அவர்களோ, புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களோ, பெருந்தலைவர் காமராஜர் அவர்களைப் பாராட்டத் தவறியதில்லை. அவருடைய தியாகத்தை மற்றவர்களைக் காட்டிலும் மிகச் சிறப்பாகவே எடுத்துரைத்தார்கள்.

மக்களுக்காகவே, சட்டம் என்பதையும், மக்களுக்காகவே திட்டங்கள் என்பதையும், மனதில் கொண்டு, புதியச் சட்டங்களையும், புதியத் திட்டங்களையும் வகுத்துச் செயல்படுபவர்கள் எல்லாம், மக்கள் மனதில் நிலையாக வாழ்கிறார்கள் என்பதை நான் நன்கு அறிவேன். அந்த வகையில் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் பிறந்து நூறாண்டுகள் கடந்த போதிலும் நம்முடைய நினைவிலே

*அவருடைய எளிமையால் –*<br>
*தன்னலமற்ற தொண்டால் –*<br>
*நாட்டுப் பற்றால்*<br>
*புரிந்த தியாகத்தால் –*

வாழ்ந்து கொண்டிருக்கிறார் என்றால், அது மிகையாகாது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
ஆற்றிய உரையிலிருந்து...

# பாதிக்கப்பட்ட வெங்காயப் பயிர் விவசாயிகளுக்கு நிவாரண உதவி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்
அறிக்கை (7–7–2005)

**தே**னி மாவட்டம் ஆண்டிபட்டி, உத்தமபாளையம், பெரியகுளம் ஆகியப் பகுதிகளில், இவ்வாண்டு மே மற்றும் ஜூன் மாதங்களில் பெய்த கோடை மழையின் காரணமாக, இப்பகுதிகளில் பயிரிடப்பட்டிருந்த வெங்காயப் பயிர்களில் அழுகல் ஏற்பட்டுள்ளது. இவ்வாண்டு கோடைப் பருவத்தில் தாங்கள் நடவு செய்த வெங்காயப் பயிர், கடும் வெப்ப நிலையில் திடீரென பெய்த மழையால் அழுகி வீணாகி விட்டது என்று தெரிவித்து, தங்களுக்கு ஏற்பட்டுள்ளப் பாதிப்புக்கு நிவாரணம் வழங்கி, உதவ வேண்டும் என்று இப்பகுதி விவசாயிகளிடம் இருந்து எனக்குக் கோரிக்கைகள் வரப் பெற்றுள்ளன.

தேனி மாவட்டத்தில், இவ்வாண்டு 1,605 ஏக்கர் பரப்பில் வெங்காயம் பயிரிடப்பட்டதில், சுமார் 710 ஏக்கர் அளவுக்குப் பயிர்கள் மழையினால் பாதிப்பு அடைந்துள்ளன. வெங்காயம் பயிரிட்டு, கோடை மழையால் பாதிப்பு அடைந்துள்ள விவசாயிகளின் துன்பத்தை நீக்கும் வகையில், அவர்களது கோரிக்கையைப் பரிவுடன் பரிசீலித்துப் பாதிப்பு அடைந்த விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க நான் முடிவெடுத்துள்ளேன். இதன்படி, வெங்காயம் பயிரிட்டுப் பாதிப்பு அடைந்துள்ள விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 1,000 ரூபாய் வீதம் நிவாரணம் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன். இதன் மூலம் சுமார் 1,000 விவசாயிகள் பயன் பெறுவர்.

# கார் பருவச் சாகுபடிக்குத் தண்ணீர் திறப்பு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்
அறிக்கை (8.7.2005)

**தி**ருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ராமநதி நீர்த்தேக்கம், கருப்பாநதி நீர்த்தேக்கம், வடக்குப் பச்சையாறு நீர்த்தேக்கம் மற்றும் குண்டாறு நீர்த்தேக்கம் ஆகிய நீர்த்தேக்கங்களிலிருந்து, கார் பருவச் சாகுபடிக்குத் தண்ணீர் திறந்து விடுமாறு விவசாயப் பெருமக்களிடமிருந்து எனக்குக் கோரிக்கைகள் வந்துள்ளன. விவசாயப் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, 8.7.2005 முதல் ராமநதி நீர்த்தேக்கம், கருப்பாநதி நீர்த்தேக்கம், வடக்குப் பச்சையாறு நீர்தேக்கம் மற்றும் குண்டாறு நீர்த்தேக்கம் ஆகிய நீர்த்தேக்கங்களிலிருந்து, கார் பருவச் சாகுபடிக்குத் தண்ணீர் திறந்துவிட நான் ஆணையிட்டுள்ளேன். இதனால், ராமநதி நீர்த்தேக்க ஆயக்கட்டுப் பகுதிகளில் 1,008 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும். கருப்பாநதி நீர்த்தேக்கத்தின் கீழுள்ள பெருங்கால், பாப்பான்கால் மற்றும் சீவலங்கால் ஆகியவற்றின் ஆயக்கட்டில் உள்ள 1,082 ஏக்கர் நேரடிப் பாசன நிலங்கள் பாசன வசதி பெறும். வடக்குப் பச்சையாறு நீர்த்தேக்கத்திலிருந்து மடத்துக்கால் பாசனம் மற்றும் பச்சையாறு பாசனக் கால்வாய்களின் ஆயக்கட்டுப் பகுதிகளிலுள்ள 881 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும். குண்டாறு நீர்த்தேக்கத்தின் ஆயக்கட்டுப் பகுதியில் 1,122 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும். இந்த 4 நீர்த்தேக்கங்களில் இருந்து தண்ணீர் திறந்து விடுவதால், திருநெல்வேலி மாவட்டத்தில் மொத்தம் 4,093 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.



## “ரமோன் மகசேசே” விருது பெற்ற சாதனையாளர் மருத்துவர் வி. சாந்தா அவர்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வாழ்த்து

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை 4.8.2005 அன்று தலைமைச் செயலகத்தில், சென்னை அடையாறு புற்றுநோய் மருத்துவமனையின் தலைவரும், “ரமோன் மகசேசே” விருது (Ramon Magsaysay Award) பெறத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளவருமான டாக்டர் வி. சாந்தா அவர்கள் நேரில் சந்தித்தார். அப்போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், விருது பெறவிருக்கும் டாக்டர் வி. சாந்தா அவர்களுக்குத் தமிழக அரசின் சார்பில், பொன்னாடை அணிவித்து, மலர்க்கொத்து வழங்கி தனது வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்தார்கள்.

ஒவ்வொரு ஆண்டும் சிறந்த முறையில் பொதுச் சேவை செய்யும் சாதனையாளருக்கு உலகளாவிய “ரமோன் மகசேசே” என்னும் விருது, பிலிப்பைன்ஸ் அரசால் வழங்கப்பட்டு வருகிறது. 2005ஆம் ஆண்டிற்கு இந்தச் சிறப்புமிகு விருது பெற்றிட, கடந்த 50 ஆண்டுகளாகப் புற்றுநோய் சிகிச்சை அளித்து, இந்நோய் குறித்த விழிப்புணர்ச்சியைப் பொதுமக்கள் மத்தியில் சிறப்புடன் ஏற்படுத்தி வரும் சென்னை அடையாறு புற்றுநோய் மருத்துவமனையின் தலைவர், டாக்டர் வி. சாந்தா அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு டாக்டர் வி. சாந்தா அவர்கள் ரமோன் மகசேசே விருது வழங்கப்பட தேர்ந்தெடுக்கப் பட்டச் செய்தியை அறிந்ததும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தமது இதயப்பூர்வமான வாழ்த்துகளை 2.8.2005 அன்று தெரிவித்துக் கொண்டார்கள். *

## ஏற்காடு சுற்றுலாத்தலம் மேம்பாடு பெற 4.49 கோடி ரூபாய்

மலைகளும், மலைவாழ் மக்களும் அதிகமாக உள்ள சேலம் மாவட்டத்தில், வரலாற்றுச் சிறப்புமிக்கது சேர்வராயன் மலை. இந்த மலையில் தான், ஏழைகளின் ஊட்டி என்று அழைக்கப்படும் இயற்கை எழில் கொஞ்சும் ஏற்காடு அமைந்துள்ளது. 67 மலைக் கிராமங்களில், சுமார் 41 ஆயிரம் பேர் வசிக்கும் இப்பகுதியில் காபி, கமலா ஆரஞ்சு, பேரிக்காய், நாவல், மா, மாதுளை, மிளகு ஆகியவை அதிக அளவில் பயிர் செய்யப்படுகின்றன.

ஊட்டி, கொடைக்கானல் போன்ற சுற்றுலா இடங்களுக்குச் செல்லப் பயண நேரம் அதிகமாக உள்ளதால், அனைவரின் பார்வையும் ஏற்காடு பக்கமே திரும்பியுள்ளது. தற்பொழுது ஏற்காட்டில் சுற்றுலாப் பயணிகளுக்கு ஏற்ற தட்பவெப்பநிலை நிலவுகிறது. இந்த ஆண்டு அதிக அளவில் கோடைமழை பெய்துள்ளதால், குளுமையானத் தட்பவெப்பநிலை நிலவி வருகிறது. காலை, மாலை நேரங்களில் மேகக்கூட்டம் தவழ்ந்து வருவது கண்கொள்ளாக் காட்சியாகும். சுற்றுலாப் பயணிகளை மிகவும் கவரும் இந்த இயற்கைச் சூழ்நிலை, சுற்றுலாத் தலங்களான லேடீஸ்சீட், ஜென்ஸ்சீட், அரசு பழப்பண்ணை, ஏரிப்பூங்கா, படகு இல்லம், வனத்துறையின் மான் பூங்கா, கிளியூர் அருவி, மான்போர்டு பள்ளி, பக்கோடாபாயின்ட், சேர்வராயன் கோயில், தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், தாவரவியல் பூங்கா, ரெட்ரீட் ஆகிய பகுதிகள் முக்கிய இடங்களாகும். ஆண்டு முழுதும் இலட்சக்கணக்கில் சுற்றுலாப் பயணிகள் வந்து செல்லும் ஏற்காடு பகுதிக்கு, கடந்த ஆண்டு சுற்றுலாத்துறையின் மூலம் வழங்கப்பட்ட



ரூ.11 இலட்சத்தில் பல்வேறு அடிப்படை வசதிகளை மாவட்ட நிருவாகம் செய்து கொடுத்துள்ளது.

மேலும், ஏற்காடு சுற்றுலாத்தலத்தை மேம்படுத்திச் சுற்றுலாப் பயணிகளுக்கு, அடிப்படை வசதிகளைச் செய்து கொடுத்திட, மாவட்ட நிருவாகம் மூலம் "சிறப்புத் திட்டம்" ஒன்றைத் தயாரித்து அரசின் அனுமதிக்காகக் கடந்த நவம்பர் 2004இல் அனுப்பப்பட்டதையடுத்துத் தமிழக அரசின் சுற்றுலாத்துறை இத்திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கி மத்திய அரசிற்கு அனுப்பியிருந்தது. மத்திய அரசு அதனை ஏற்று, ஏற்காடு சுற்றுலா மேம்பாட்டிற்காக ரூ.4.49 கோடி நிதியைத் தமிழக அரசிற்கு வழங்கியது. தமிழக அரசு உடனடியாக மேம்பாட்டுப் பணிகளைச் செய்திட 6.4.2005 அன்று ரூ.4.49 கோடி நிதியை வழங்கி உத்தரவிட்டதன் அடிப்படையில் பணிகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

ஏற்காடு ஏரி மற்றும் அண்ணா பூங்காவில் ரூ.9.55 இலட்சத்தில் உயர் மின் கொத்து விளக்கு (High mast Lamp) அமைக்கும் பணியும், ஏற்காடு மஞ்சக்குட்டையில் புதிய பார்வைமுனை (View Points) ரூ.11.15 இலட்சத்திலும், சேர்வராயன் கோயிலில் உள்ள பார்வை முனையில் சுற்றுலா வசதிகள் மற்றும் மேம்பாட்டுப் பணிகள் ரூ.14.80 இலட்சத்திலும், ஏற்காடு மலைப் பாதை ரூ.14.60 இலட்சத்தில் சீரமைக்கும் பணியும், ஏற்காடு ஜென்ஸ்சீட் பகுதியில் மேம்பாடு மற்றும் சுற்றுலா வசதிகள் ரூ.6.11 இலட்சத்திலும், லேடீஸ் சீட் பகுதியில் சுற்றுச்சூழல் அழகுபடுத்துதல் மற்றும் சுற்றுலா வசதிகள் ரூ.2.35 இலட்சத்திலும், பகோடா பாயிண்ட் பகுதியில் ஓய்வுக் கூடம் மற்றும் பார்வை முனை ரூ.5.52 இலட்சத்திலும், ஏரிப்பூங்கா அருகில் கான்கிரீட் நடைமேடை ரூ.3.15 இலட்சத்திலும், கோடை விழாத் திடலில் கான்கிரீட் பாதை அமைத்து அழகுபடுத்திட ரூ.8.22 இலட்சத்திலும், கலையரங்கம் புதுப்பிக்கும் பணி ரூ.12.60 இலட்சத்திலும், ஏற்காடு ஏரியிலிருந்து காந்தி பார்க் மற்றும் அலங்கார ஏரி வரை உள்ள 2 கி.மீ. சாலை மேம்படுத்தித் தார்ச் சாலை ரூ.16.40 இலட்சத்திலும், ஏற்காடு முழுதும் அலங்கார அமைப்புடன் கூடிய குப்பைத் தொட்டிகள் ரூ.2.40 இலட்சத்திலும், மீன் காட்சியகம் ரூ.25.70 இலட்சத்திலும், ரூ.20.75 இலட்சத்தில் அண்ணா பூங்காவை மேம்படுத்தும் பணிகளும், ரூ.3.70 இலட்சத்தில் ஏரிப்பூங்கா அழகுபடுத்தும் பணியும், ரூ.1.20 இலட்சத்தில் படகு இல்லம் அருகில் சுற்றுச்சூழல் அழகுபடுத்தும் பணியும், வனத்துறையின் மான் பூங்காவை ரூ.49.92 இலட்சத்தில் மேம்படுத்திடவும், ஏரியில் உள்ள ஆகாயத் தாமரையை அகற்றிட ரூ.7.10 இலட்சமும், ஏற்காடு மற்றும் அதன் சுற்றுப்பகுதிகளில் பல்வேறு உள் கட்டமைப்பு வசதிகளைச் செய்திட ரூ.108.78 இலட்சமும், ஏற்காடு ஏரியில் புதிய படகு குழாம் அமைத்து, புதிய படகுகள் வாங்கிட ரூ.29 இலட்சமும், ஆக மொத்தம் ரூ.449 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

இந்தப் பணிகள் அனைத்தும், எதிர்வரும் மார்ச் 2006க்குள் முடித்திடத் திட்டமிடப்பட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதற்கிடையில் மே, ஜூன் திங்களில் கோடைவிழாத் தொடங்குவதாலும், அளவுக்கு அதிகமாக சுற்றுலாப் பயணிகளின் வருகை இந்த ஆண்டு அதிகரிப்பதாலும், போர்க்கால அடிப்படையில் மேட்டூர் மால்கோ நிறுவனத்தின் உதவியுடன் ஏரியில் உள்ள ஆகாயத் தாமரைகள் அகற்றும் பணி, தற்சமயம் நடைபெற்று வருகிறது. இப்பணி சில நாட்களில் நிறைவு பெற்றதும் படகுச் சவாரி செய்யும் சுற்றுலாப் பயணிகள், மான் பூங்காவைப் படகு மூலம் சுற்றிப் பார்த்திடும் வாய்ப்பு கிடைக்கும்.

ஏற்காடு சுற்றுலாத் தலத்தை மேம்படுத்தி, சுற்றுலாப் பயணிகளுக்கு அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்து கொடுத்திட ரூ.4.49 கோடி நிதியை வழங்கி உத்தரவிட்ட தமிழக அரசிற்கும், சுற்றுலாத்துறைக்கும், மாவட்ட நிருவாகத்திற்கும், சேர்வராயன் மலை வாழ் மக்களும், சேலம் மாவட்ட மக்களும், சுற்றுலாப் பயணிகளும் பாராட்டையும், நன்றியும் தெரிவித்துள்ளார்கள்.

— [illegible]
செய்தி – மக்கள் தொடர்பு அலுவலர்,
சேலம்.

# நலிந்த நிலையில் வாழும் கலைஞர்களுக்கு நிதி உதவி



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தமிழகத்தில் நலிந்த நிலையில் வாழும் கிராமியக் கலைஞர்கள் உட்பட பல்வேறு கலைஞர்களுக்கு மாதந்தோறும் 500 ரூபாய் நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ், 2005–2006ஆம் ஆண்டு கூடுதலாக மேலும் 1,000 நலிந்த நிலையில் வாழும் கலைஞர்களுக்கு நிதியுதவி வழங்கவும், இந்த நிதியுதவி பெறுவதற்கான கலைஞர்களின் ஆண்டு வருமான வரம்பை 6,000 ரூபாயிலிருந்து 12,000 ரூபாயாக உயர்த்தியும் ஆணை பிறப்பித்துள்ளார்கள். இதன்மூலம் இத்திட்டத்தின் கீழ், நிதியுதவி பெற்று வரும் நலிந்த நிலையில் வாழும் கலைஞர்களின் எண்ணிக்கை 5,150ஆக உயரும்.

கலைத்துறையில் ஈடுபட்டு, நலிந்த நிலையில் வாழ்ந்து வரும் கிராமியக் கலைஞர்கள் உட்பட பல்வேறு கலைஞர்களுக்கு, அவர்கள் வாழ்க்கை நடத்த உதவிடும் வகையில் மாதந்தோறும் 500 ரூபாய் வீதம் தமிழக அரசு நிதி உதவி வழங்கி வருகிறது. இதன்படி, தமிழ்நாட்டில் தற்போது 4,150 கலைஞர்கள் மாதந்தோறும் 500 ரூபாய் வீதம் நிதியுதவி பெற்று வருகிறார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆணைப்படி, தமிழக சட்டப்பேரவையில் 6.4.2005 அன்று, நலிந்த நிலையில் வாழும் கலைஞர்களுக்கு மாதந்தோறும் 500 ரூபாய் நிதியுதவி வழங்கும் திட்டத்தின் கீழ் கூடுதலாக மேலும் 1,000 கலைஞர்களுக்கு நிதி உதவி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இதனை நிறைவேற்றும் வகையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இந்த ஆண்டு கூடுதலாக மேலும் 1,000 நலிந்த நிலையில் வாழும் கலைஞர்களுக்கு, மாதம் 500 ரூபாய் வீதம் நிதியுதவி வழங்க ஆணையிட்டு அதற்காக 60 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கி ஆணையிட்டுள்ளார்கள். மேலும், நலிந்த நிலையில் வாழும் கலைஞர்கள் நிதியுதவித் திட்டத்தின்கீழ் நிதியுதவி பெறுவதற்கான கலைஞர்களின் ஆண்டு வருமான வரம்பை 1.4.2005 முதல் 6,000 ரூபாயிலிருந்து 12,000 ரூபாயாக உயர்த்தி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், ஆணை யிட்டுள்ளார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் இந்த ஆணைப்படி, தமிழகத்தில் இனி மொத்தம் 5,150 கலைஞர்கள் மாதந்தோறும் 500 ரூபாய் நிதி உதவி பெறுவார்கள்.

❖ ❖ ❖



# நகரப் பகுதிகளிலும், கிராமப் பகுதிகளிலும் மேம்பட்ட சாலை வசதிகள் கொண்ட முன்னோடி மாநிலமாகத் தமிழகம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்களின்
அறிக்கை 5–8–2005

**ஒ**ரு நாட்டின் முன்னேற்றத்திற்குச் சாலை வசதிகளே வழி அமைத்துத் தருகிறது. மாநிலத்தில் தொழில் வளம் பல்கிப் பெருகவும், அதன் மூலம் வேலை வாய்ப்புகள் அதிக அளவில் உருவாகவும், மேம்பட்ட வசதிகளுடன் சாலைப் போக்குவரத்து இருக்க வேண்டியது இன்றியமையாதது ஆகும். இதனைக் கருத்தில் கொண்டே புதிய சாலைகள் அமைக்கவும், பழைய சாலைகளை புதுப்பிக்கவும், சாலைகளின் தரம் உயர்த்தி மேம்படுத்தவும், இணைப்புச் சாலைகளை உருவாக்கவும் நான் மிகுந்த முக்கியத்துவம் அளித்து, திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறேன். மாநில அரசின் பல்வேறு திட்டங்கள் வாயிலாகவும், நபார்டு வங்கிக் கடன், உலக வங்கிக் கடன் ஆகியவற்றின் மூலமாகவும், வாய்ப்புள்ள அனைத்து வகையிலும் செம்மையான திட்டங்களைத் தீட்டி சாலைகள் மேம்பாட்டுப் பணிகளை எனது அரசு திறம்படச் செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாட்டில் உள்ள சாலைகளை அகலப்படுத்தி, மேம்படுத்தி, மாநிலத்தின் சாலைக் கட்டமைப்பினை மேலும் வலுவுள்ளதாக்கும் நோக்கத்துடன் மாநில நெடுஞ் சாலைகள் (State Highways), மாவட்ட பெரிய சாலைகள் (Major District Roads), மாவட்ட இதர சாலைகள் (Other District Roads), ஆகியவற்றை மேம்படுத்தும் வகையில் ஒருங்கிணைந்த சாலைக் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (Comprehensive Road Infrastructure Development Programme), என்னும் புதிய திட்டத்தின் கீழ், முதற்கட்டமாக, 200 கோடி ரூபாய் மதிப்பில் 1,227.42 கி.மீ. நீளச் சாலை மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளவும், 30 கோடி ரூபாய் மதிப்பில் 52 பழுதடைந்தப் பாலங்களைத் திரும்பக் கட்டவும் நான் ஒப்புதல் அளித்தேன். தொடர்ந்து, அடுத்த கட்டமாக, 820 கோடி ரூபாய் மதிப்பில் 6,693 கி.மீ. நீளமுள்ள மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட பெரிய சாலைகள், மாவட்ட இதர சாலைகளை மேம்படுத்த 10.7.2005 அன்று நான் ஆணையிட்டேன்.

தமிழ்நாட்டில் பாதுகாப்பான, வேகமான வாகனப் போக்குவரத்தை உறுதி செய்யும் விதத்தில், எனது ஆணையின் பேரில், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் மூலம், அதாவது, Urban Local Bodies வாயிலாகக் கடந்த நான்கு ஆண்டுகளில், 294.96 கோடி ரூபாய் மதிப்பில் 4,329 கி.மீ. நீளமுள்ள சாலைகள் மேம்படுத்தப்பட்டன. மேலும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் – 2005 (Tamil Nadu Urban Local Bodies Road Development Project-2005) –ன் கீழ் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள சாலைகளை 400.81 கோடி ரூபாய் மதிப்பில் மேம்படுத்த 23.7.2005 அன்று நான் ஆணையிட்டேன். இப்பணிகளைச் செம்மையாகவும், சிறப்பாகவும் விரைந்து நிறைவேற்று வதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

மேலும், தமிழ்நாட்டில் ஊரகப் பகுதிகளில் உள்ள மக்கள் பயன் அடையும் வகையில், சாலை வசதிகளை மேம்படுத்திட நான் ஆணையிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன்படி, தமிழ்நாட்டில் உள்ள ஊராட்சி ஒன்றியங்கள் (Panchayat Unions), சிறப்பு சிற்றூராட்சிகள் (Special Village Panchayats), ஊராட்சிகள் (Village Panchayats) ஆகியவற்றில், 7,848 கி.மீ. நீளமுள்ள மொத்தம் 5,859 சாலைகள் 500 கோடி ரூபாய் மதிப்பில் உடனடியாகச் செப்பனிட்டு, மேம்படுத்தப்படும்.

இந்தப் பணிகள் அனைத்தையும் விரைவாகவும், சிறப்பாகவும் செய்து முடிக்க சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு, நான் தக்க ஆணைகள் பிறப்பித்துள்ளேன். இந்த அனைத்து சாலை மேம்பாட்டுப் பணிகளின் பலனாக, "நகரப் பகுதிகளிலும், கிராமப் பகுதிகளிலும் மேம்பட்ட சாலை வசதிகள் கொண்ட முன்னோடி மாநிலமாகத் தமிழகம் திகழும்" என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

□ □ □



# பதிவகங்கள் அனைத்தும் கணினி மயம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்
அறிக்கை – 6.8.2005

**த**கவல் தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்தி பொதுமக்களுக்கு விரைவான மற்றும் வெளிப்படையான சேவை அளிக்கும் நோக்கத்துடன், அரசு அலுவலகங் களைக் கணினிமயமாக்கும் திட்டத்தை எனது அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது. இதன்படி, பொதுமக்கள் விரைவாகவும், எளிதாகவும் ஆவணப்பதிவு மற்றும் அது தொடர்பான பிற சேவைகளைப் பெற்றிட ஏதுவாக, இதுவரை 50 கோடி ரூபாய் செலவில் பதிவுத் துறை (Registration Department) அலுவலகங்கள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தில் இதுவரை, 300 சார்பதிவகங்கள் (Sub-Registrar Offices) கணினிமயமாக்கப்பட்டுச் சொத்துக்கள் குறித்த ஆவணங்களைப் பதிவு செய்தல் மற்றும் அதன் நகல்களை வழங்குதல், வில்லங்கச் சான்றுகள் வழங்குதல், சொத்துக்களின் வழிகாட்டி மதிப்பு (Guideline Value) விவரம் அளித்தல் முதலான பல்வேறு பணிகள் விரைவாகவும், ஒளிவுமறைவற்றும் நடைபெற்று வருகின்றன. மேலும், தமிழகத்தில் உள்ள 50 மாவட்டப் பதிவகங்கள் (District Registrar Offices) முழுமையாகக் கணினிமயமாக்கப்பட்டுள்ளன.

சார்பதிவகங்கள் இவ்வாறு கணினிமயமாக்கப்பட்டதன் விளைவாகப் பதிவுத் துறையின் சேவைத் தரம் பல மடங்கு மேம்பட்டுள்ளது. கணினிமயம் ஆவதற்கு முன்னதாக, பொது மக்கள் வில்லங்கச் சான்று பெறுவதற்கு 8 நாட்களும், சான்று நகல் பெற்றிட 4 நாட்களும், சொத்து மதிப்புச் சான்று பெற்றிட 30 நிமிடங்களும் ஆகும். ஆனால், இந்தச் சான்றுகள் யாவும் தற்போது 5 நிமிடங்களில் வழங்கப்படுகின்றன. மேலும், ஆவணப்பதிவு திரும்பப் பெற 4 நாட்கள் ஆன நிலை மாறி, 1 மணி நேரத்திற்குள்ளேயே வழங்கப்படுகிறது. அதேபோல், திருமணப்பதிவுச் சான்று பெற 1 நாள் காத்திருக்க அவசியமின்றி, 15 நிமிடங்களில் வழங்கிட வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், http://www.tnreginet.net இணையதளத்தின் வாயிலாக வழிகாட்டி மதிப்பு மற்றும் ஆவணப்பதிவு தொடர்பான நடைமுறைகளை அறிந்து கொள்வதுடன், இந்த



இணையதளம் வாயிலாக விண்ணப்பித்து வில்லங்கச் சான்றை வீட்டிலிருந்தே பெற்றிடவும் வசதி செய்யப் பட்டுள்ளது.

சார்பதிவகங்கள் கணினிமயமாக்கப்பட்டதன் பயனாகப் பொதுமக்கள் பெறுகின்ற நன்மைகளைக் கருத்தில் கொண்டு, தற்போது மேலும் 150 சார்பதிவகங்கள் மற்றும் பதிவுத்துறை உயர் அலுவலகங்கள் ஆகியவற்றை 19.21 கோடி ரூபாய் செலவில் கணினிமயமாக்கிட நான் ஆணையிட்டுள்ளேன் என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதன் மூலம், பெருமளவில் ஆவணப்பதிவுகள் நடைபெறுகின்ற சார்பதிவகங்கள் அனைத்தும் கணினிமயமாக்கப்பட்டுவிடும் என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவற்றின் பயனாக, நிருவாகம் வெளிப்படையாகவும், பொதுமக்கள் அணுகுவதற்கு தடையின்றியும் அமைவதுடன், ஆவணப்பதிவு மற்றும் அதன் தொடர்பான பணிகளுக்கு ஆகும் காலம் வெகுவாகக் குறைந்து பொதுமக்கள் நல்ல முறையில் பயன் பெறுவார்கள். ❖

# தமிழகக் காவல் துறையின் சாதனைக் கிரீடத்தில் மின்னிடும் 15 வைரக் கற்கள்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை – 29.7.2005**



தமிழகக் காவல் துறையினர், மிகுந்தக் கடமை உணர்வுடன் மக்கள் நலன் காக்கும் பாதுகாவலர்களாகப் பரிவும், மனித நேயமும் கொண்டு ஆபத்தில் உதவுபவர்களாகத் தேவைப்படும் நேரத்தில் தேடாமலேயே வருகின்ற நண்பர்களாகப், பொதுமக்களுக்குக் குறிப்பாகப் பெண்களுக்கு, நல் ஆலோசகர்களாக விளங்க வேண்டும் என்பதே எனது எண்ணமாகும். இதனைப் பிரதிபலிக்கும் வகையில் தமிழகத்திலுள்ள ஒவ்வொரு காவல் நிலையத்தையும் உலகத் தரம் வாய்ந்த அமைப்பாக உருவாக்கிட எனது அரசு மேம்பட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இதன் அடிப்படையில், முதல் கட்டமாகச் சென்னை மாநகரில் இரண்டு அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் உட்பட 15 காவல் நிலையங்களைத் தேர்ந்தெடுத்து ISO 9001:2000 தரச் சான்றிதழ் பெறும் வகையில் ஆயத்தப்படுத்த நான் ஆணையிட்டேன். மேலும், 18.2.2004 அன்று என்னால் தொடங்கி வைக்கப்பட்ட, நவீன மற்றும் உயர் தொழில் நுட்பத்துடன் கூடிய உபகரணங்களைக் கொண்ட நவீனக் காவல் கட்டுப்பாட்டு அறை, முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு வழக்குகளை மிகுந்த தொழில் திறனுடன் துப்புத் துலக்கிக் கண்டுபிடிக்கும் சென்னை மத்தியக் குற்றப் பிரிவு ஆகிய காவல் பிரிவுகளையும், ISO தரச் சான்றிதழ் பெறும் வகையில் தயார்படுத்த உத்தரவிட்டேன்.

மிகச் சிறப்புடன் செயல்பட்டு வருகின்ற பல்வேறு முதன்மை நிறுவனங்களையும், அமைப்புகளையும் ஆய்வு செய்து, தரம் மற்றும் சான்றினை நிர்ணயிக்கும் உலகளாவிய அமைப்பான, ஜெனீவாவைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்குகின்ற The International Organisation for Standardization அமைப்பு, பல்வேறு தர வரிசைகளை அடிப்படையாகக் கொண்டு இந்த ISO 9001:2000 தரச் சான்றிதழை வழங்குகிறது. இந்த அமைப்பின் ஆய்வுக்குழு இம்மாதம் 6, 7 மற்றும் 8 ஆகிய தேதிகளில் தமிழகத்திற்கு வருகை தந்து, சென்னையில் இக்காவல் நிலையங்களுக்கு நேரில் சென்று தனது ஆய்வை மேற்கொண்டது.

பொதுமக்களின் புகார்களுக்கு உடனுக்குடன் முறையாகத் தீர்வு காணுதல், பதிவேடுகளை நல்ல முறையில் பராமரித்தல், கடமைகளை நிறைவேற்றுவதில் தரமானச் செயல்முறைத் திட்டங்களை வகுத்துச் செயல்படுதல் முதலானவற்றின் அடிப்படையில் இக்குழுவினர் நுட்பமாக ஆய்வு மேற்கொண்டனர்.

இந்த ஆய்வின் அடிப்படையில்,

❖ 1992ஆம் ஆண்டு என்னால் தொடங்கி வைக்கப்பட்ட, நாட்டிலேயே முதன்முதல் என்ற பெருமை படைத்த அனைத்து மகளிர் காவல் நிலையமான ஆயிரம் விளக்கு அனைத்து மகளிர் காவல் நிலையம்



❖ அடையாறு அனைத்து மகளிர் காவல் நிலையம்
❖ ஜெ.ஜெ. நகர் காவல் நிலையம்
❖ தேனாம்பேட்டை காவல் நிலையம்
❖ அடையாறு காவல் நிலையம்
❖ வடபழனி காவல் நிலையம்
❖ புனிதத் தோமையார் மலை காவல் நிலையம்
❖ சிந்தாதிரிப்பேட்டை காவல் நிலையம்
❖ கீழ்ப்பாக்கம் காவல் நிலையம்
❖ அண்ணாநகர் காவல் நிலையம்
❖ எஸ்.ஆர்.எம்.சி. காவல் நிலையம்
❖ கொத்தவால்சாவடி காவல் நிலையம்
❖ வண்ணாரப்பேட்டை காவல் நிலையம்
❖ கொடுங்கையூர் காவல் நிலையம்
❖ மணலி காவல் நிலையம்

ஆகிய 15 காவல் நிலையங்களுக்கும்,

❖ மத்திய குற்றப்பிரிவு
❖ நவீன காவல் கட்டுப்பாட்டு அறை

ஆகிய இரு காவல் பிரிவுகளுக்கும் ISO 9001:2000 தரச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதை மிகுந்த பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். இது தமிழகக் காவல் துறையின் மெச்சத்தகு, மகத்தானதொரு சாதனை ஆகும்.

ISO 9001:2000 தரச் சான்றிதழைப் பெற்றதன் மூலம் இந்தக் காவல் நிலையங்களும், காவல் அமைப்புகளும், ஒட்டுமொத்தமாகத் தமிழகக் காவல் துறையும் உலகளாவிய அங்கீகாரமும், பொதுமக்களுக்கு மிகச் சிறந்த காவல் சேவை வழங்குகிறது என்பதற்கானச் சான்றும், மேம்பட்ட காவல் பணியை ஆற்றி வருகிறது என்பதற்கான ஒப்புதலும் பெற்று பெருமைப் படைத்துள்ளது.

தமிழகக் காவல் துறை, இந்தச் சீரிய பெருமையைப் பெற்றிடும் வகையில் அரும் பணியாற்றியக் காவல் துறைத் தலைமை இயக்குநர் திரு. ஏ.எக்ஸ். அலெக்ஸாண்டர் அவர்களுக்கும், சென்னை பெருநகரக் காவல் துறை ஆணையாளர் திரு. ஆர். நடராஜ் அவர்களுக்கும், அனைத்துக் காவல் துறை அலுவலர்களுக்கும், காவலர்களுக்கும் எனது மனமுவந்த நல்வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தில் குற்ற நிகழ்வுகள் நடைபெறாமல் இருக்க அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்வதுடன், அவ்வாறு குற்றங்கள் நிகழுமிடத்து, அவற்றை உடனுக்குடன் கண்டுபிடித்துக் குற்றம் இழைப்போருக்கு உரிய தண்டனைப் பெற்றுத் தரும் ஆற்றல் உடையதாகவும், குற்றங்கள் குறைய சிறப்புடன் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் திறன் படைத்ததாகவும், பொது மக்களின் சீரிய நண்பனாகவும், தமிழகக் காவல் துறை தொடர்ந்து விளங்கிட இந்த உலகளாவிய தரச்சான்று ஊக்கமும் உத்வேகமும் அளிப்பதாக அமையும். ✶



# காவிரி டெல்டா பகுதியில் சம்பாச் சாகுபடிக்குத் தண்ணீர் திறக்க

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவு

தமிழகத்தின் பெரும்பான்மையான மக்கள் தங்கள் வாழ்வாதாரத்திற்கு விவசாயத்தையே பெரிதும் நம்பி உள்ளனர். எனவே தான், எனது அரசு முதன்மைத் துறையான விவசாயம் மற்றும் அதனைச் சார்ந்த தொழில்களுக்கு மிகுந்த முன்னுரிமை அளித்து வருகிறது.

செயல்படுத்தி வருவதுடன், நீர் வளம் அற்ற இடங்களில் விரிவானத் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம், தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி, உயிரி எரிபொருள் சாகுபடி போன்ற பல்வேறு முன்னோடித் திட்டங்களை எனது அரசு செயல்படுத்தி வருகிறது.

தமிழகத்தின் உணவு உற்பத்திக்கு அடிப்படை ஆதாரமாகத் திகழும் காவிரி டெல்டா மாவட்டங்களில், கர்நாடகத்திலிருந்து விடுவிக்கப்படும் காவிரி நீரை நம்பியே விவசாயம் மேற்கொள்ள இயலும். எனவே தான், காவிரி நீரில் நமக்குச் சட்டப்படி சேர வேண்டிய பங்கில் நிலுவையாக உள்ள தண்ணீர் பற்றாக்குறையை ஈடு செய்யுமாறும், மேலும் காவிரி நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையில் வரையறுக்கப்பட்ட அட்டவணையின்படி, மாதாந்திர/வாராந்திர அடிப்படையில் தண்ணீரை





தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்தின் தனித் தன்மைகளுக்கு ஏற்ப திட்டங்களைத் தீட்டி, விவசாய உற்பத்தியில் புதிய சாதனைகளை எனது அரசு படைத்து வருகிறது. இதன் அடிப்படையில், தண்ணீர் எவ்வகையிலும் வீணாகாதவாறு தேக்குவதற்கென நீர்த்தேக்கங்களைக் கட்டுதல், மழை நீரைச் சேகரித்தல், பண்ணைக் குட்டைகள் அமைத்தல் போன்ற பல்வேறு திட்டங்களைத் தீட்டி

விடுவிக்கும்படியும் தெரிவித்து, அதனை நடைமுறைப்படுத்தத் தேவையான ஆக்கப்பூர்வமான அனைத்து நடவடிக்கைகளையும் எனது தலைமையிலான அரசு மேற்கொண்டு வருகிறது.

26.7.2005 அன்று நான் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை நேரில் சந்தித்து, தமிழகத்திற்குக் காவிரி நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையில் வரையறுக்கப்பட்ட அட்டவணையின்படி, மாதாந்திர/வாராந்திர அடிப்படையில் காவிரி நதி நீர் உடனடியாக திறந்து விடப்பட வேண்டும் என்றும், ஏற்கெனவே வழங்கப்பட வேண்டிய நீரில் உள்ள பற்றாக்குறையும் உடனடியாக வழங்கப்பட வேண்டும் என்றும், கர்நாடக அரசுக்கு ஆணையிடக் கோரி மனு ஒன்றினை அளித்தேன். மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுடனான இந்தச் சந்திப்பின் போது, ஆகஸ்டு மாதம் 10ஆம் தேதிக்குள் மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டால் தான் விவசாயப் பணிகளை உடனடியாக மேற்கொள்ள இயலும் என்றும் எடுத்துக் கூறி, அதற்கான ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று நான் வலியுறுத்தினேன். இதனைத் தொடர்ந்து இந்த மாதம் 2ஆம் தேதி அதாவது 2.8.2005 அன்று தமிழக அமைச்சர்கள் தலைமையிலான குழு ஒன்று மாண்புமிகு கர்நாடக முதலமைச்சர் அவர்களைப் பெங்களூரில் சந்தித்து, அவர்களிடம் காவிரி நடுவர் மன்றத்தின் இடைக்கால உத்தரவின்படி தமிழகத்திற்கு உரிய காவிரி நீரை உடனடியாக வழங்கும்படி கேட்டுக் கொண்டது.

கடந்த சில நாட்களாகக் கர்நாடகத்தில் உள்ள நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் நல்ல மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு உபரி நீர் பெரும் அளவில் தமிழகத்திற்கு வந்து கொண்டிருக்கிறது. 4.8.2005 அன்று காலை நிலவரப்படி மேட்டூர் அணையில் 102.8 அடி உயரத்திற்குத் தண்ணீர் இருப்பு உள்ளது. அதாவது, 68.52 டி.எம்.சி. அடி தண்ணீர் இருப்பு உள்ளது. மேலும், நீர்வரத்து அதிக அளவில் வந்து சேரும் என்றும், இதனால் மேட்டூர் அணை அதன் முழுக் கொள்ளளவான 120 அடியை விரைவில் எட்டிவிடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இதனால், இவ்வாண்டு சம்பா சாகுபடியை மேற்கொள்வதற்கு ஏதுவாக உடனடியாக நாற்றங்கால் தயாரிக்க நல்ல வாய்ப்பு ஏற்பட்டு உள்ளது. சம்பாச் சாகுபடி தற்போது தொடங்கப்பட்டால் விவசாயப் பெருமக்கள் மகத்தான மகசூல் பெற இயலும்.

எனவே, இந்த ஆண்டு காவிரி டெல்டா மாவட்டங்களான சேலம், ஈரோடு, நாமக்கல், கரூர், திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் கடலூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள விவசாயப் பெருமக்கள், சம்பாச் சாகுபடியை, விரைந்து தொடங்கி, மிகச் சிறப்பான விளைச்சல் பெற்றிட ஏதுவாக, மேட்டூர் அணையிலிருந்து பாசனத்திற்காக 4.8.2005 அன்று முதல் தண்ணீர் திறந்து விட நான் ஆணையிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதன்படி, மேட்டூர் அணையிலிருந்து விநாடிக்கு 18,000 கன அடி வீதம், அதாவது நாள் ஒன்றுக்கு 1.5 டி.எம்.சி. அடி வீதம் தண்ணீர் 4.8.2005 அன்று மாலை 6 மணி முதல் திறந்து விடப்படும். மேலும், காவிரி டெல்டா மாவட்டங்களின் சம்பா சாகுபடித் தேவைக்கேற்றவாறு, மேட்டூர் அணையிலிருந்து திறந்து விடப்படும் நீரின் அளவை முறைப்படுத்தவும் பொதுப்பணித் துறை அதிகாரிகளுக்கு நான் ஆணையிட்டுள்ளேன். விவசாயப் பெருமக்கள் தண்ணீரை நல்ல முறையில் பயன்படுத்திச் சிறப்பான முறையில் சம்பா சாகுபடி செய்து பயன் அடையுமாறு நான்கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்
அறிக்கை 4–8–2005

---

# கதிர் வீச்சு விழிப்புணர்வு குறித்த அவசர கால ஒத்திகை

அணுசக்தியை ஆக்கபூர்வமான முறையில் பயன்படுத்தி, அதன்மூலம் கிடைக்கும் ஆற்றலை, மின்சக்தியாக மாற்றியமைப்பதன் மூலம், தங்கள் நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்துவதில் உலக நாடுகள் முனைப்புடன் செயல்பட்டு வருகின்றன.

அந்தவகையில், அணுசக்தியைக் கையாளுவதிலும், அதனைப் பாதுகாப்பதிலும் வல்லமை பெற்ற நமது நாடு, அணுமின் நிலையங்களை நிறுவி நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தி வருகிறது.

இந்தியாவில், மகாராஷ்டிரா மாநிலம், தாராபூர் (Tarapur), இராஜஸ்தானில் ராவட்ப்பாடா–கோடா (Rawatbhata-Kota), தமிழ்நாட்டில் கல்பாக்கம் மற்றும் உத்தரபிரதேசத்தில் நரோரா (Narora) ஆகிய இடங்களில் அணுமின் நிலையங்கள் அமைக்கப்பட்டு, செயல்பட்டு வருகின்றன.

அணுவாற்றலைப் பயன்படுத்தும்போது, கதிர்வீச்சு ஏதேனும் நிகழ்ந்து விடுமோ என்ற அச்சம் கொள்ளத் தேவையில்லை; ஏனெனில் நமது விஞ்ஞானிகள், அதிக முக்கியத்துவம் வாய்ந்த உறுதியான பாதுகாப்பு விதிகளைக் கடைபிடித்து வருவதால் எந்தப் பாதிப்பும் வராது. இருப்பினும், கதிர்வீச்சு குறித்து மக்கள் தெரிந்து


தமிழரசு

கொள்ளுதல், பாதுகாப்பு வழிமுறைகளைக் கடைபிடித்தல், உள்ளிட்ட விழிப்புணர்வு முகாம்களை நடத்தி 'அவசர நிலை குறித்த ஒத்திகை' இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை கண்டிப்பாக நடத்த வேண்டும் என்று சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

கல்பாக்கம் அணுமின் நிலையத்தைச் சுற்றியுள்ள கிராமங்கள், 'ஏ'(A) – பிரிவு முதல் 'ஐ' (I) – பிரிவு வரை 9 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, 1985 முதல் 2001ஆம் ஆண்டு வரை முதல் சுற்று அவசர நிலை குறித்த ஒத்திகை நடத்தப்பட்டது.

இரண்டாவது சுற்று 'ஏ' – பிரிவு ஒத்திகை 23.8.2003 அன்று நடத்தப்பட்டது. 'பி' (B) – பிரிவு ஒத்திகை 2.7.2005 அன்று வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டது. இந்த ஒத்திகையில் கிராம மக்கள், மாணவர்கள், காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த மருத்துவத்துறை, போக்குவரத்துத்துறை, கால்நடைப் பராமரிப்புத்துறை, வருவாய்த்துறை, காவல்துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை உள்ளிட்ட அனைத்து அரசுத் துறையினரும் கலந்து கொண்டு பயிற்சியும் பெற்றனர்.

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் மாவட்ட நிருவாகமும், காவல் துறையும், கல்பாக்கம் அணுசக்தித் துறை மையத்துடன் ஒருங்கிணைந்து அவசர கால ஒத்திகையை நடத்தினர்.

1.6.2005 அன்று முதல் கிராம மக்களுக்கும், மாணவர்களுக்கும் மற்றும் அரசுத் துறை அலுவலர்களுக்கும் கல்பாக்கம் அணுமின் நிலையத்தைச் சுற்றிக் காண்பித்தல், பயிற்சி வகுப்புகள் உள்ளிட்டவை இந்த ஒத்திகையின் ஆரம்ப கட்ட நிகழ்வுகளாக அமைந்தன. ஒத்திகையின் இறுதிக் கட்டமாக 2.7.2005 அன்று காலை 6 மணியளவில் கல்பாக்கம் அணுமின் நிலையத்தில் கதிர்வீச்சு ஏற்பட்டதாக அணுமின் நிலையத்தினரால் செங்கல்பட்டில் உள்ள துணை ஆட்சியர் அலுவலகத்தில் இயங்கி வரும் கட்டுப்பாட்டு மையத்திற்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில், மாவட்ட நிருவாகமும், காவல் துறையினரும் ஒருங்கிணைந்து செயல்பட்டு, கிராம மக்களை வீட்டை விட்டு வெளியேற வேண்டாம் என்றும், திறந்தவெளிப் பகுதிகளில் உள்ளவர்களும் உடனடியாக வீடுகளுக்குச் சென்று கதவு, ஜன்னல்களை மூடிவிட்டு வீட்டிற்கு உள்ளே இருக்கும்படியும், வாகனங்களில் ஒலிபெருக்கி மூலம் எச்சரிக்கப்பட்டனர்.

பின்னர், காலை 11.15 மணியளவில் அணுமின் நிலையத்திற்கு 16 கி.மீ. சுற்றளவில் இருக்கும் 'பி' – பிரிவு பகுதியில் வரும் பையனூர், அதிகாமநல்லூர், கருங்குழிபள்ளம், சிறுதாவூர், ஆலத்தூர், வெங்கலேரி, மடையத்தூர் உள்ளிட்ட கிராம மக்களுக்கு ஸ்டேபிள் அயோடின் (Stable Iodine) மாத்திரைகள் வழங்கப்பட்டன.

ஒத்திகையின் அடுத்த கட்டமாக, கிராம மக்களைப் பேருந்துகள் மூலமும் மற்றும் பாதிக்கப்பட்டதாகக் கருதப்பட்டவர்கள், ஆம்புலன்ஸ் மூலமும் திருப்போரூர் அரசினர் மேல்நிலைப்பள்ளிக்கு அவசர அவசரமாக அழைத்து வந்து பாதுகாப்பாக அவர்களைத் தங்க வைத்து உணவு வழங்கப்பட்டது. அதேபோல் கால்நடைகளும், அப்புறப்படுத்தப்பட்டுப் பாதுகாப்பான இடத்திற்கு அனுப்பப்பட்டன. போக்குவரத்துத் தடை செய்யப்பட்டுக் கதிர்வீச்சு ஏற்பட்டதாகக் கருதப்பட்ட இடங்களில் இருந்து கடந்துவந்த அனைத்து வாகனங்களுக்கும், தீயணைப்புப் படை வீரர்கள், கதிர்வீச்சு, வாகனங்கள் மூலம் மற்ற பகுதிகளுக்குப் பரவாமல் தடுப்பதற்காகத் தண்ணீரைப் பீய்ச்சி அடித்து கதிர்வீச்சுத் தடுப்புப் பணிகளில் ஈடுபட்டனர்.

இறுதியாக மாலை 2 மணியளவில், நிலைமை சீரடைந்ததாக அணுமின் நிலையத்தினரால் அறிவிக்கப்பட்டதும், இயல்பு நிலை திரும்பியது. இதுபோன்ற அவசர கால ஒத்திகை, அணுமின் நிலையத்தைச் சுற்றி இருக்கும் கிராம மக்களுக்கு, கதிர்வீச்சு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதுடன், பதற்றம் அடையாமல் இருப்பதற்கும், வீண் புரளிகளைக் கேட்டு அஞ்சாமலும், பாதுகாப்பான இடங்களுக்குச் செல்வது குறித்துப் பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், கதிர்வீச்சு ஏற்பட்டதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்ட 36 மணி நேரத்திற்கு எந்தத் தீங்கும் உடனடியாக ஏற்படாது என்று அணுமின் நிலைய விஞ்ஞானிகளால், கிராம மக்களுக்குத் தெளிவுபடுத்தப்பட்டுள்ளதால், போதிய கால அவகாசத்தில் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல முடியும் என்றும் நம்பிக்கையூட்டப்பட்டுள்ளது. ஆக, ஆக்கபூர்வமானப் பணிகளுக்குப் பயன்படும் அணுமின் நிலையங்கள் அருகில் வாழும் மக்கள் இதுபோன்ற அவசர கால ஒத்திகை தங்களுக்குத் தேவை என உணர்ந்துள்ளனர்.

❒ ❒ ❒




# தமிழரசு

ஆகஸ்ட் - செப்டம்பர் 2005



# மகாநதி - காவிரி - குண்டாறு நதிகளை இணைத்திட வேண்டும்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர்**
**செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்**

**தே**சிய ஒருமைப்பாட்டுக் குழுவின் 13ஆவது கூட்டத்திற்காகவும், திருத்தி அமைக்கப்பட்ட தேசிய ஒருமைப்பாட்டுக் குழுவின் முதல் கூட்டத்திற்காகவும், இங்கே நாம் கூடியிருக்கிறோம்.

நம் நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள சமூக விரோத சக்திகளுடன் கைகோர்த்துக் கொண்டு அந்நிய நாட்டுத் தீவிரவாதச் சக்திகள், தீவிரவாதச் செயல்களில் ஈடுபட்டதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ள ஒரு சூழ்நிலையில் இங்கே கூடியிருக்கிறோம். நாம் அதைப்பற்றியெல்லாம் விவாதிக்க வேண்டும்.

**உறுதியான செயல்பாடு**

சாதி, சமய எல்லைகளைக் கடந்து தேசிய அடையாளம் ஒன்றை ஏற்படுத்த இந்த ஒருமைப்பாட்டுக் குழு கூடியுள்ளது. 'டிஸ்கவரி ஆப் இந்தியா' என்ற புத்தகத்தில் பண்டித ஜவகர்லால் நேரு, இந்திய அடையாளம் குறித்து விரிவாக குறிப்பிட்டுள்ளது நிதர்சனமில்லா மாயை போன்றது. நமது நாட்டில் சிற்றூர்களைப் போல் உள்ள பல்வேறு மத, இன மற்றும் கலாச்சார வேறுபாடுகளை இணைத்து ஒரு மாபெரும் நதியாக மாற்ற முடியுமா? இதுபோன்ற ஒன்றை, தேசிய ஒருமைப்பாட்டுக் குழு கூட்டத்தில் சாதிக்க முடிந்தால் நமது நாடு உலக நாடுகள் மத்தியில் தலை நிமிர்ந்து நிற்கும்.



நோபல் பரிசு பெற்ற புகழ்பெற்ற அமர்த்தியாசென், தனது 'தி ஆர்குயுமென்டேடிவ் இந்தியன்' என்ற புத்தகத்தில் இந்தியக் கலாச்சாரம் குறித்து விரிவான கலந்துரையாடல்கள் மற்றும் விவாதங்கள் மூலமே நிலை நாட்ட முடியும் என்பதையும், ஜனநாயகத்திற்கு அது இன்றியமையாதது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

எந்தவிதப் பயனும் இல்லாத் தேவையற்ற விவாதங்களில் நாம் காலத்தை வீணாக்குகிறோம் என்று பெரும்பாலான மக்களிடையே ஒரு பலமான கருத்து உள்ளது. இந்தியச் சமூகத்தில் உள்ள பல்வேறு அம்சங்கள் குறித்துச் சரியாகப் புரிந்து கொள்ள, விரிவான விவாதம் தேவை என்ற, அமர்த்தியாசென்னின் கருத்தை ஆதரிக்கும் அதே நேரத்தில், இந்திய அடையாளங்களுடன் கூடிய நாகரிக சமுதாயத்தை அமைக்க நாம் உறுதியுடன் செயல்பட வேண்டும்.

**உறுதியான திட்டம்**

சட்டம், ஒழுங்கு, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம், ஏழைகளின் வாழ்க்கைத்தர உயர்வு, பெண்களுக்கு உண்மையான சமத்துவம் இவை எல்லாவற்றையும் விட முக்கியமாக, தீவிரவாதிகள் மற்றும் சமூக விரோதிகளால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பயத்தைப் போக்க உறுதியான திட்டம் வகுக்கப்பட வேண்டும். தலித்துகளின் முன்னேற்றத்திற்கு நாம் முழுமையாகப் பாடுபட வேண்டும். அனைத்து மதங்களுக்கும் மரியாதை அளித்தல் வேண்டும். நாம் இவற்றை, தமிழ்நாட்டில் கடைப்பிடித்து வருவதன் பயனாக தமிழகம் அமைதிப் பூங்காவாகத் திகழ்கிறது.

**அமைதியான சொர்க்கம்**

தமிழகம் சட்டம் – ஒழுங்கைப் பராமரிப்பதில் சாதனை படைத்துள்ளது. அமைதியான சொர்க்கம் என தமிழ்நாட்டைப் பற்றி தேசிய அளவில் பேசுகிறார்கள்.

தமிழ்நாட்டில் சட்டம் – ஒழுங்கு சீர்குலையும் வகையில், எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை. தமிழ்நாட்டில் வாழும் சிறுபான்மை இன மக்கள் தாங்கள் பாதுகாப்பாக வாழ்வதாக நினைக்கிறார்கள்.



இந்த அமைதியான சூழ்நிலை தற்செயலாக ஏற்பட்ட ஒன்றல்ல. கலாச்சாரம், மொழி, மதத்தால் பிரிந்திருந்தாலும் நல்லிணக்கத்தைக் கடைப் பிடிப்பதில் நீடிக்கும் இந்த நல்லிணக்கம் நினைவில் கொள்ளத்தக்கது.

**அனைத்து மகளிர் காவல் நிலையங்கள்**

அரசியல் துணிச்சலுடனும் மத நல்லிணக்கத்தைப் பாதுகாக்க வேண்டும் என்கிற உறுதியான எண்ணத்துடனும் தமிழக அரசு செயல்பட்டதன் விளைவாகத்தான் அமைதியை நிலைநாட்ட முடிந்தது. தமிழ்நாட்டில் சட்டம், ஒழுங்கைப் பராமரிக்க எனது அரசு முன்னுரிமை அளித்து வருகிறது.

அச்சமின்றியும், நடுநிலையுடனும் செயல்பட காவல்துறைக்கு முழு அதிகாரம் தரப்பட்டுள்ளது.

தமிழ்நாடு காவல்துறையை வலுப்படுத்தவும் நவீனப்படுத்தவும் திட்டமிடப்பட்டு, சக்திவாய்ந்த ஆயுதங்கள், தகவல் தொடர்பு சாதனங்கள் அளிக்கப்பட்டதுடன், வாகன வசதிகளும் செய்து தரப்பட்டுள்ளன.

தேவையான உயர் தொழில்நுட்பத்துடன் கூடிய கருவிகளை, தமிழகக் காவல்துறைக்கு வாங்கிக் கொடுத்திருப்பதோடு, சமுதாயத்தின் நலிந்த பிரிவினர்கள் குறிப்பாக, தாழ்த்தப்பட்ட, பழங்குடியின மக்களுக்கு உதவும் வகையில் பயிற்றுவிக்கப்படுகிறார்கள்.

பெண்களுக்கு எதிரான குற்றங்கள் குறைவதற்கும் அது தொடர்பான புகார்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கவும், அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் தமிழ்நாட்டில் தொடங்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன.

**சட்டம்–ஒழுங்கு மேம்பட்டுள்ளது**

அனைத்து மகளிர் காவல் நிலையங்களுக்கென அதிகாரிகளையும் பெண் காவலர்களையும் அதிக அளவில் நியமித்துள்ளோம். மனச்சிதைவுக்கு ஆளாகி விரக்தி அடைந்துள்ள பெண்களுக்கு 'கவுன்சிலிங்' கொடுத்து அவர்களுக்கு நம்பிக்கையை ஊட்டுவதற்காக, நடமாடும் 'கவுன்சிலிங்' மையங்களும் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

இதுபோன்ற உறுதியான நடவடிக்கைகளின் விளைவாகப் பாராட்டத்தக்க அளவுக்குப் பெண்களுக்கு எதிரான வன்செயல்கள் குறைந்துள்ளன.

தமிழக அரசின் தொடர் நடவடிக்கைகளால் இன, மத, அடிப்படைவாதிகளினால் ஏற்படும் அச்சுறுத்தல்கள்






# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2036
ஆடி–ஆவணி–புரட்டாசி
மலர்: 37 இதழ்: 2&3
ஆகஸ்ட் – செப்டம்பர் 2005
விலை ரூ.20

## இந்த இதழில்...

★ மகாநதி–காவிரி – குண்டாறு நதிகளை இணைத்திட வேண்டும்
(தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டத்தில்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரை) ...... 2

★ ஆசிரியர்களுக்கு கணிப்பொறிப் பயிற்சி அளிக்க மைக்ரோ சாஃப்ட் நிறுவனத்துடன் ஒப்பந்தம் ...... 7

★ மகளிர் சுயஉதவிக் குழு இயக்கத்தின் ஒவ்வொரு பெண் உறுப்பினரும், இரண்டு பெண்களை உறுப்பினர்களாகச் சேர்க்க வேண்டும் (மகளிர் சுய உதவிக் குழுக்களின் மாநில மாநாட்டில்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரை) ...... 9

★ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆசிரியர் தின வாழ்த்து ...... 16

★ உலக வங்கி உதவியுடன் "புது வாழ்வு" திட்டம்
(மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரை) ...... 17

★ தமிழக வரலாற்றில் முதன்முறையாக வங்கி உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை
(மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரை) ...... 21

★ 11 மற்றும் 12ஆம் வகுப்புப் பயிலும் அனைத்து மாணவ – மாணவியருக்கும்
இலவச சைக்கிள் வழங்கும் திட்டம் ...... 25

★ உலகத் தர்மான திறன்மிக்க கைவினைஞர்களை உருவாக்க புதிய தொழிற்பயிற்சி மையங்கள் ...... 27

★ தமிழகத்தில் பள்ளிக் கல்வியை மேலும் மேம்படுத்தும் வகையில் முக்கிய அறிவிப்புகள் ...... 29

★ வேலூர் மாவட்ட குடிநீர்ப் பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு ...... 30

★ கால்நடை மேம்பாட்டுக்கு ரூ.59.79 கோடியில் திட்டங்களை நிறைவேற்ற
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவு ...... 31

★ சென்னையில் புதிதாக 115 ஆட்டோ நிறுத்தங்கள் ...... 33

★ மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்
சுதந்திரத் திருநாள் வாழ்த்துச் செய்தி ...... 36

★ மக்களே தேசம்! அவர்களது நலனே நமது இலட்சியம்!
(மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய சுதந்திர தின உரை) ...... 37

★ குழந்தைப் பருவத்தில் பார்வை இழப்பு ...... 45

★ பல்வேறு துறைகளைச் சேர்ந்த திட்டப்பணிகள் ...... 49

★ முப்பது திருக்கோயில்களின் அன்னதானத் திட்டத்திற்கு
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் நன்கொடை ...... 54

★ தமிழகத்தின் பொருளாதார நிலையை முறைப்படுத்துவதில் சாதனை படைத்துள்ளோம் ...... 57
(மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரை)

★ காவல்துறை உதவி ஆணையாளர்களுக்குப் புதிய குடியிருப்புகள் ...... 62

★ 383 கோடி ரூபாய் மதிப்பில் 150 மெகாவாட் திறனுடைய பைக்காரா
இறுதி நிலை புனல் மின் நிலையம்
(மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரை) ...... 65

★ ரூ.209 கோடி மதிப்பில் பத்து துணை மின் நிலையங்கள் ...... 71

★ கோவையில் முதல் தகவல் தொழில்நுட்பப் பூங்கா
(மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரை) ...... 74

### அட்டைப்பட விளக்கம்

முதலாம் பக்க அட்டை : சுதந்திர தின விழா

இரண்டாம் மற்றும் நான்காம் பக்க அட்டை : மகளிர் சுயஉதவிக் குழுக்களின் மாநில மாநாடு

ஆசிரியரும் வெளியிடுபவரும்: சி. முத்துக்குமாரசாமி, இ.ஆ.ப., இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு கூடுதல் செயலாளர், தமிழ்நாடு அரசு
சென்னை– தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி: 25368926/25364906 தொலைநகல்: 25364906
மின் அஞ்சல் : tamilarasu2@yahoo.com

அடியோடு நின்று போனதுடன் ஒட்டுமொத்த சட்டம் ஒழுங்கு நிலையும் மேம்பட்டுள்ளது. என்னுடைய கருத்து என்னவென்றால், குற்றங்கள் நிகழ நாற்றங்கால் அமைவதற்கு இடம் கொடுத்து விட்டு, பின்னர் அதற்காக வருத்தப்படக்கூடாது என்பதுதான்.

உள்நாட்டுப் பாதுகாப்புக்குப் பெரும் அச்சுறுத்தலாக ஜாதி, மத ரீதியிலான அடிப்படைவாதம் வளர்ந்து வருகிறது.

ஜாதி மற்றும் அடிப்படைவாத அமைப்புகளின் நடவடிக்கைகள் தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டு மாநிலத்தின் அமைதியைக் கெடுத்து ஜாதி, மத மோதல்களை ஏற்படுத்தி அதன் மூலம் ஒரு பதற்றத்தை ஏற்படுத்துவது முன்கூட்டியே தடுக்கப்படுகிறது.

மத ரீதியான அடிப்படைவாதிகளின் செயல்பாடுகள் குறித்து மத்தியப் புலனாய்வு அமைப்புகளுடனும், அண்டை மாநிலப் புலனாய்வு அமைப்புகளுடனும் அவ்வப்போது தொடர்பு கொண்டு தகவலறியப்படுகிறது.

ஆத்திரமூட்டும் பேச்சுக்கள், வன்முறையைத் தூண்டும் பிரசுரங்கள், புத்தகங்கள் கண்காணிக்கப்பட்டு தேவைப்படும் போது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

## மோதல்கள் இல்லை

கோயம்புத்தூர் தொடர் குண்டுவெடிப்புடன் தொடர்புடையது என தெரியவந்ததை அடுத்து அல்-உம்மா, அகில இந்திய ஜிகாத் கமிட்டி போன்ற அமைப்புகள் தடை செய்யப்பட்டுள்ளன.

இன்றும் அந்தத் தடை நடைமுறையில் உள்ளது.

1967ஆம் ஆண்டு சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் கீழ் இந்த அமைப்புக்களைத் தடை செய்ய வேண்டும் என மத்திய உள்துறை அமைச்சகத்துக்கு வேண்டுகோள் விடுத்தும், அதற்கான பதில் இன்னமும் கிடைக்கவில்லை. அதற்காகக் காத்திருக்கிறோம்.

'சிமி'க்கு எதிரான தடை உறுதியுடன் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இதுபோன்ற உறுதியான நடவடிக்கைகளின் காரணமாக, தமிழ்நாட்டில் அழிவுசக்திகள் ஒடுக்கப்பட்டுள்ளன. ஒரு சில சிறு சிறு சம்பவங்களைத் தவிர இன ரீதியான மோதல்கள் எதுவும் இல்லை.

2001ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை ஜாதி மோதல்களால் 6 பேர் மட்டுமே கொல்லப்பட்டுள்ளனர். இது உற்சாகமூட்டுவதாக இருக்கிறது.

விரிவானப் பாதுகாப்பு ஏற்பாடுகளின் காரணமாகவும் சம்பந்தப்பட்ட இன மக்களின் கூட்டுக் கூட்டத்தைக் கூட்டுவதன் மூலமும் செப்டம்பர் மாதம் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இந்து அமைப்புகள் நடத்தும் விநாயகர் சதுர்த்தி ஊர்வலம் மற்றும் சிலைகள் கரைப்பு நிகழ்ச்சிகள் எந்தவித அசம்பாவிதமுமின்றி நடந்துள்ளன.

கோயம்புத்தூர் தொடர் குண்டு வெடிப்பு சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவர்கள் இப்போது வழக்கைச் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள்.

கடந்த நான்கு ஆண்டுகளில் ஜாதிக் கலவரங்கள் தொடர்பாக 52 வழக்குகளில் 119 பேருக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

## தமிழகம் அமைதியான மாநிலம்

இது, முந்தைய அரசின் காலத்தில் இருந்த சூழ்நிலைக்கு முற்றிலும் மாறானது. 1998ஆம் ஆண்டு, கோவை குண்டுவெடிப்புச் சம்பவத்தில் ஏராளமானோர் உயிரிழந்த துயரச் சம்பவம் நடந்தது. இங்கே நான் குறிப்பிட விரும்புவது என்னவென்றால், எனது அரசு எடுத்த உறுதியான நடவடிக்கை மற்றும் காவல் துறையினருக்கு விடுத்த கட்டளைகளின் விளைவாக தீய சக்திகளை அடக்க முடிந்தது. தமிழகம் அமைதியான மாநிலமாகத் திகழ்கிறது. தீவிரவாதத்தை ஒடுக்குவதில் கணக்கும் காட்டக்கூடாது.

இந்தியாவில் தற்போது நிலவிவரும் மாறுபட்ட உள்நாட்டுப் பாதுகாப்புச் சூழ்நிலையில் நான் பொடா சட்டம் போன்ற ஒரு சிறப்புச் சட்டத்தைக் கொண்டுவர வேண்டும் என்று வலியுறுத்தினேன். நமது நாட்டின் பாதுகாப்பிற்கும், அமைதிக்கும் பங்கம் ஏற்படுத்தும் எந்த ஒரு சக்தியையும் எதிர்த்து உறுதியான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். ஆரம்பக் கட்டத்தில் கால் பதிக்க அனுமதித்து விட்டால், பின்னர், அவற்றைக் கட்டுப்படுத்துவது என்பது முடியாத காரியமாகி விடும். அதற்காகத்தான் பொடா போன்ற சிறப்புச் சட்டம் கொண்டு வரவேண்டும் என்பதை நான் மீண்டும், மீண்டும் வலியுறுத்தி வருகிறேன்.

## சிறுபான்மையின மக்களுக்குப் பாதுகாப்பு

சிறுபான்மையின மக்களிடையே பாதுகாப்பு உணர்வும், நல்லிணக்கமும், சகோதரத்துவமும் உருவாக எனது அரசு சிறுபான்மையினர் ஆணையம் ஒன்றை அமைத்து, அதன்மூலம் அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும், தேவையான மேம்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

அவர்களின் கோரிக்கைகளை ஆராயவும், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் அவர்களைச் சேர்க்கவும், நீக்கவும் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் என்ற ஒன்றையும் உருவாக்கியுள்ளோம்.

இதுதவிர, பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கவும், அவர்களிடையே நல்லிணக்கம் வளரவும், பல்வேறு கூட்டங்கள் நடத்தப்படுவதுடன் அவர்களின் நலனுக்காகப் பாடுபட்ட தலைவர்களின் பிறந்தநாள் கொண்டாட்டங்களும் தொடர்ந்து நடத்தப்படுகின்றன.



## தேசிய ஒருமைப்பாட்டுக்கு கல்வியின் பங்கு

மேலும், தமிழக அரசு சமூக சேவகர்கள், என்.ஜி.ஓ.க்கள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆகியோர் நலனுக்காகப் பாடுபட்டவர்களுக்கு விருதுகளும், பண முடிப்பும் அளிக்கப்படுகின்றன. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆகியோர் நலனுக்காகப் பாடுபட்டு வருபவர்களுக்கு ஆண்டுதோறும் டாக்டர் அம்பேத்கர் விருது என்ற பெயரில் தங்கப்பதக்கமும், ஒரு இலட்சம் ரூபாய் பண முடிப்பும் வழங்கப்படுகிறது. சமூக நீதிக்காகப் போராடுபவர்களுக்கு தந்தை பெரியார் சமூகநீதி விருது என்ற பெயரில் தங்கப்பதக்கமும், ஒரு இலட்சம் ரூபாய் பணமுடிப்பும் அளிக்கப்படுகிறது.

மதநல்லிணக்கத்திற்காகப் பாடுபடுவோருக்கு கோட்டை அமீர் மதநல்லிணக்க விருது என்ற பெயரில் தங்கப்பதக்கமும், ரூ.25 ஆயிரத்திற்கான காசோலையும் வழங்கப்படுகிறது.

மதநல்லிணக்கம் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டுக்கு கல்வி மிகவும் முக்கியப் பங்கு வகிக்கிறது என்பதுதான் எனது திடமான கருத்து. தமிழ்நாட்டில் மதநல்லிணக்கம், தேசிய ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் வகையில் எல்லா வகுப்புகளிலும் பாடம் இடம்பெற்றுள்ளது. தேசிய ஒருமைப்பாடு, அமைதி ஆகியவை பற்றி வகுப்புகளில் மாணவ, மாணவிகளுக்குக் கற்றுத் தரப்படுகிறது.

## இலவச சைக்கிள் வழங்கல்

1982ஆம் ஆண்டு, புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் கொண்டுவரப்பட்ட புரட்சிகரமான திட்டமான சத்துணவுத் திட்டம் பற்றி இங்குள்ள அனைவருக்கும் நன்கு தெரியும். தமிழ்நாட்டில் உள்ள பள்ளிகளில் மொத்தம் 84 இலட்சத்து 50 ஆயிரம் குழந்தைகள் மதிய உணவு சாப்பிடுகிறார்கள். இதன் மூலம் நாம் அனைவரும் ஒன்று; ஒருவருக்கொருவர் சமம் என்ற உணர்வு அனைத்துக் குழந்தைகளுக்கும் ஏற்பட்டுள்ளது.

சாதி வேறுபாடின்றி 11 மற்றும் 12ஆம் வகுப்புப் படிக்கும் அனைத்து மாணவ, மாணவிகளுக்கும் இலவச சைக்கிள் வழங்கியுள்ளேன். இதன்மூலம் மாணவர்களுக்குப் பிரகாசமான எதிர்காலம் ஏற்படும். நாம் அனைவரும் ஒன்று, அனைவரும் சமம் என்ற நிலை மாணவர்களிடையே ஏற்படும்.

## மாநில அரசுக்கு அதிகாரம்

தாழ்த்தப்பட்ட வகுப்பினர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆகியோருக்கு 69 சதவிகித இடஒதுக்கீடு கிடைக்கும் வகையில் 1994ஆம் ஆண்டு, எனது அரசு தமிழக சட்டப்பேரவையில் சட்டம் இயற்றியது. அரசியல் சட்டத்தில் 9ஆவது அட்டவணையில் சேர்க்கவும் எனது அரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டது.

இந்தச் சூழ்நிலையில் உச்சநீதிமன்றத்தில் ஏழு நீதிபதிகள் அடங்கிய பெஞ்ச் வழங்கிய தீர்ப்பு குறித்து மிகவும் கவனத்துடன் பரிசீலனை செய்ய வேண்டும். தாழ்த்தப்பட்ட, பழங்குடியின, பிற்படுத்தப்பட்ட, மிகவும்

பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினருக்கு அரசு நிதி உதவி பெறாத தனியார் தொழில்நுட்பக் கல்லூரிகளில் இட ஒதுக்கீடு வழங்கவும், கல்லூரிகளை ஒழுங்குபடுத்தவும், மாநில அரசுக்கும் அதிகாரம் வழங்கும் இந்திய அரசியல் சட்டம் 31–பி பிரிவுகள் வழங்கும் பாதுகாப்பை உறுதிபடுத்த மத்திய சட்டத்தை உருவாக்க விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று நான் நம்புகிறேன்.

### நதிகள் இணைப்பு

இன்றைய இந்தக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலில் ஆண், பெண் சமத்துவம் என்பதும் இடம் பெற்றிருக்க வேண்டும் என்பதை நான் உணர்கிறேன். நாடாளுமன்ற மக்களவை, மாநிலங்களவை மற்றும் மாநில சட்டப் பேரவைகளில் பெண்களுக்கு 33 சதவிகித இட ஒதுக்கீடு என்பதை இதனாலேயே நான் வலுவாக ஆதரித்து வருகிறேன். சுழற்சி முறையில் இரட்டை உறுப்பினர் தொகுதிகள் அமைக்கப்பட வேண்டும் என்று நான் ஓர் யோசனை கூறியிருக்கிறேன். இந்தக் கூடுதல் இடங்களில் இப்போதுள்ளபடி இடஒதுக்கீட்டு விதியையும் நாம் சேர்த்திட வேண்டும். சமுதாய நல்லிணக்கம், அமைதிக்கு வழி என்பதில் பத்திரிகைகள் மற்றும் தொலைக்காட்சி ஆகியவற்றின் பங்கும் மிக முக்கியமானது. சட்டம், ஒழுங்கை சிறந்த முறையில் பராமரிப்பதில் பொதுமக்கள் நலன் கருதி செய்திகள் வெளியிடுவதிலும், ஒளி, ஒலி பரப்புவதிலும், பத்திரிகை, தொலைக்காட்சி உள்ளிட்ட ஊடகங்கள் தங்களுக்கான சொந்த நடத்தை நெறிமுறைகளின்படி கண்டிப்புடன் செயல்பட வேண்டும்.

ஒன்றுபட்டிருக்கும் உணர்வையும், ஒருவர் இன்னொருவரைச் சார்ந்திருக்கும் உணர்வையும் உருவாக்குவதற்கு ஒரு நேர்த்தியான நடவடிக்கை நதிகளை இணைப்பதாகும். இப்படி நதிகளை இணைப்பதன் மூலம், அதனால் பொருளாதார ஆதாயம் என்பது அங்கீகரிக்கப்பட்ட ஒரு உண்மையாகும். நாடாளுமன்றத்தில் 1984இல் இது குறித்து நான் பேசியிருக்கிறேன்.

### தேசிய ஒருமைப்பாடு

உத்தரப்பிரதேசம் மற்றும் மத்தியப்பிரதேசம் ஆகிய மாநிலங்களுக்கு இடையில் கென்–பெட்வா இணைப்புக்கான நடவடிக்கைக்காக உள்ளபடியே பிரதமரை நான் மனம் திறந்து பாராட்டுகிறேன். மகாநதி–காவிரி–குண்டாறு நதிகளை இணைத்திட வேண்டும். இப்படி ஒரு நடவடிக்கையைத் தேசியத் திட்டமாக நிறைவேற்ற முன்வரும்போது அது இந்தியாவின் தேசிய ஒருமைப்பாட்டு ஒற்றுமை உணர்வில் புதியதோர் எழுச்சியை ஊட்டும் நடவடிக்கையாக அமையும்.

சமூகத்தில் அனைத்துப் பிரிவினருக்கும் பாதுகாப்பு உணர்வை ஏற்படுத்துவதன் மூலம் சமுதாய நல்லிணக்கம், தேசிய ஒருமைப்பாட்டுக்கு வழிகாண முடியும் என்று நான் வலியுறுத்த விரும்புகிறேன். நாட்டின் ஒற்றுமை, ஒருமைப்பாட்டுக்கு ஊறுவிளைவிக்கும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சக்திகளை இனியும் அனுமதிக்க முடியாது என்பதும் உறுதி செய்யப்பட வேண்டும். மதச்சார்பற்ற கொள்கையைத் தொடர்ந்து பின்பற்றி அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டிருக்கும் பாதுகாப்புக்கு வழி காண முடியும் என்ற ஒரு நம்பிக்கையையும் சிறுபான்மையினருக்கு ஏற்படுத்திட வேண்டும்.

நமது நாடு, பல மதங்கள் வேரூன்றி உள்ள நாடு என்பதை மறுப்பதற்கில்லை. நான் ஏற்கெனவே கூறியுள்ளது போல் ஒவ்வொரு மதத்திற்கும் அதற்குரிய இடம் அளிக்க வேண்டும். ஒரு மதம் மற்றொரு மதத்தின் வழியில் குறுக்கிடக் கூடாது. பெரும்பான்மையின மக்கள் பெறும் அனைத்து சலுகைகளும், உரிமைகளும், சிறுபான்மையினருக்கும் கிடைக்க வேண்டும் என்பதே நமது மதச்சார்பற்ற அரசியலமைப்புச் சட்டத்தின் சாராம்சம்.

சிறுபான்மை மற்றும் மற்ற சமூகத்தினரிடையே பாதுகாப்பு உணர்வை ஏற்படுத்த சட்டம், ஒழுங்கு உறுதியுடன் நிலைநாட்டப்பட வேண்டும்.

நாட்டின் ஒற்றுமைக்கும், எல்லைக்கும் ஊறுவிளைவிக்கும் உள்நாட்டு, வெளிநாட்டு சக்திகள் இரும்புக் கரம் கொண்டு ஒடுக்கப்படும் என்ற நம்பிக்கையை ஆட்சியில் உள்ளவர்கள் ஏற்படுத்த வேண்டும்.

நமது நாட்டில் உள்ள அனைவருக்கும், நமது நாட்டின் மேலாண்மையைக் காப்பதில் பொறுப்பு உள்ளது. ஊடகங்களும் நாட்டில் ஒற்றுமையை மேம்படுத்துவதில் பெரும் பங்கு வகிக்கலாம்.

மத வேறுபாடுகள், சண்டை சச்சரவுகள் ஆகியவற்றைத் தவிர்த்து, பல மத, கலாச்சார, மொழி பேசுபவர்கள் ஒன்றாகச் செயல்பட்டு, பரஸ்பர நம்பிக்கையும் ஒத்துழைப்பையும் உருவாக்குவதே தற்போதைய நாட்டின் தேவை.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்,
31–8–2005 அன்று, புதுதில்லியில் நடைபெற்ற
**தேசிய ஒருமைப்பாட்டுக் குழுக்**
கூட்டத்தில் கலந்துகொண்டு ஆற்றிய
ஆங்கில உரையின் தமிழாக்கம்.

# ஆசிரியர்களுக்கு கணிப்பொறிப் பயிற்சி அளிக்க மைக்ரோ சாஃப்ட் நிறுவனத்துடன் ஒப்பந்தம்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் முன்னிலையில் கையெழுத்தானது

**த**மிழ்நாட்டில், கல்வியை மேம்படுத்த தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதன் ஒரு கட்டமாக, அரசுப் பள்ளிகளின் ஆசிரியர்களுக்கு கணிப்பொறிப் பயிற்சி அளிப்பதற்காக, தமிழக அரசுக்கும், மைக்ரோசாஃப்ட் நிறுவனத்திற்கும் இடையே சென்னையில் 22.8.2005 அன்று, ஒப்பந்தம் கையெழுத்தானது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் முன்னிலையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், தமிழக அரசின் சார்பில், பள்ளிக் கல்வித்துறைச் செயலாளர் கிரிஜா வைத்தியநாதனும், மைக்ரோசாஃப்ட் நிறுவனத்தின் சார்பில், அதன் இந்தியப் பிரிவு இயக்குநர் ரவி வெங்கடேசனும் கையெழுத்திட்டனர்.

இந்தப் புதிய ஒப்பந்தத்தின்படி, சென்னையில் தகவல் தொழில்நுட்பக் கழகத்தை ஏற்படுத்தி, 5 ஆண்டுகளுக்குச் செயல்படுத்த தமிழக அரசுக்கு மைக்ரோ சாஃப்ட் நிறுவனம் உதவும். தொழில்நுட்பக் கழகத்திற்கான கட்டடத்தைத் தமிழக அரசு வழங்கும். அதில், சர்வதேசத் தரத்துடன் கூடிய தகவல் தொழில்நுட்ப ஆய்வு மையத்தை மைக்ரோசாஃப்ட் நிறுவனம் இலவசமாக அமைத்துத் தரும். இதன் மூலம் ஆசிரியர்களுக்கு இந்த நிறுவனம் கணிப்பொறிப் பயிற்சியை அளிக்கும். இங்கு தரமான கணிப்பொறிக் கருவிகள், கணிப்பொறிப் பயிற்சியளிக்க நிபுணர்கள் மற்றும் உலகத்தரம் வாய்ந்த வசதிகளை இலவசமாக மைக்ரோசாஃப்ட் நிறுவனம் ஏற்படுத்தித் தரும்.

கற்கும் திட்டத்தில் பங்குதாரர்கள் என்று (partners in Learning Programme) அழைக்கப்படும் இந்தத் திட்டத்தில் ஆசிரியர்கள் கணிப்பொறிப் பயிற்சி பெறுவார்கள். அதாவது, ஒரு பிரிவுக்கு 40 பேர் வீதம்

தேர்ந்தெடுக்கப்பட்டு பயிற்சி அளிக்கப்படும். அடுத்த 5 ஆண்டுகளுக்கு இந்தப் பயிற்சி ஒவ்வொரு பிரிவாக அளிக்கப்படும். ஒவ்வொரு பிரிவினரும் 12 நாட்கள் தங்கியிருந்து படிக்க வேண்டும். பாடத் திட்டம் வடிவமைப்பு, மாணவர்களுக்கு கணிப்பொறிப் பாடப் புத்தகம் வடிவமைப்பு போன்றவற்றுக்கு அரசுக்கு மைக்ரோ சாஃப்ட் நிறுவனம் உதவி செய்யும்.

இதுதவிர, 5 மாவட்ட கல்விப் பயிற்சி மையங்களில் மைக்ரோசாஃப்ட் நிறுவனம் தேவையான பயிற்சி அளிக்கும். இங்கு ஒவ்வொரு பிரிவுக்கும் 20 பேரை தேர்வு செய்து பயிற்சி அளிப்பார்கள்.

இவ்வாறாக, 5 ஆண்டுகளுக்கான இந்த ஒப்பந்தப்படி மொத்தம் 20 ஆயிரம் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படும். மொத்தமாக 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவர்களும் பயன்பெறுவார்கள். ஒருங்கிணைந்த ஆசிரியர் பயிற்சித் திட்டம் அளிப்பதும், ஆசிரியர்கள், மாணவர்கள் கல்வி உதவித்தொகைத் திட்டம், ஆசிரியர்களுக்கான வழிகாட்டி அமைப்பு ஏற்படுத்த அரசுக்கு உதவிபுரிவது போன்றவற்றுக்கும் இந்த ஒப்பந்தத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலனுக்காக மிகவும் குறைந்த விலையில் தரமான கணிப்பொறிக் கருவிகளை மைக்ரோ சாஃப்ட் நிறுவனம் வழங்கும் என்று மைக்ரோ சாஃப்ட் நிறுவனத் தலைவர் ரவி வெங்கடேசன் கூறினார்.

தமிழ்நாட்டில் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் எடுத்த தீவிர முயற்சிக்கு நன்றி தெரிவிப்பதாகவும் அவர் கூறினார்.

தமிழ்நாட்டில் இந்தத் திட்டத்தை அமல்படுத்த மைக்ரோசாஃப்ட் நிறுவனம் எடுத்த முயற்சிக்குப் பாராட்டு தெரிவித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், இந்தத் திட்டம் வெற்றிபெற தனது வாழ்த்துகளைத் தெரிவித்தார்கள்.

இந்த ஒப்பந்தம் கையெழுத்தான நிகழ்ச்சியில் மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு.டி. ஜெயக்குமார், மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. சி.வி.சண்முகம், தலைமைச் செயலாளர் திரு.என்.நாராயணன், இ.ஆ.ப., நிதித்துறைச் செயலாளர் திரு.ஞானதேசிகன், இ.ஆ.ப., தகவல் தொழில்நுட்பத் செயலாளர் சி.சந்திரமவுலி, இ.ஆ.ப., மைக்ரோ சாஃப்ட் நிறுவன நிருவாகி திரு. ரோஹித்குமார், அனைவருக்கும் கல்வித் திட்ட மாநில திட்ட இயக்குநர் திரு.டி.கே.ராமச்சந்திரன் ஆகியோர் உடன் இருந்தனர்.

* * *



**தந்தை பெரியார் பிறந்த நாள் : செப்டம்பர் 17**

- உலக உயிர்களில் அறிவு நிரம்பப் பெற்ற உயிர் – பகுத்தறிவுள்ள உயிர் மனிதன்தான். அவன் தன் அறிவைப் பயன்படுத்தினால் மிகச் சிறந்த காரியங்களை எல்லாம் சாதிக்க முடியும்.
- சீர்திருத்தங்கள் – மக்களுக்கு ஒழுக்கத்தைக் கற்பிக்கவும், அறிவை விசாலப்படுத்தவும், உயிர்களிடத்தில் அன்பும் இரக்கமும் காட்டவும், சமத்துவத்தையும் சுயமரியாதை உணர்ச்சியையும் அதிகப்படுத்தவுமே அமையவேண்டும்.
- நாளைக்கு வேண்டும் என்று தேடும் தன்னம்பிக்கையற்ற தன்மையும், எவ்வளவு கிடைத்தாலும் போதாது என்கிற ஆசை அடிமைத்தன்மையும், மனிதனின் பிறப்புரிமையாகிய தன்மானத்திற்கு இயற்கைத் தடைகள்.
- ஒரு நாட்டில் பிறந்த மக்களுக்கு வேண்டப்படும் பற்றுகளுக்குள் தலையாயப் பற்று மொழிப்பற்றேயாகும். மொழிப்பற்று இல்லாதவனிடத்து தேசப்பற்று இராதென்பது நிச்சயம். தேசம் என்பது மொழியை அடிப்படையாகக் கொண்டு இயங்குவது.



# மகளிர் சுயஉதவிக் குழு இயக்கத்தின் ஒவ்வொரு பெண் உறுப்பினரும், இரண்டு பெண்களை உறுப்பினர்களாகச் சேர்க்க வேண்டும்

**25.8.2005 அன்று, சென்னையில் நடைபெற்ற மகளிர் சுயஉதவிக் குழுக்களின் மாநில மாநாட்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரை.**

மக்களைச் சந்திப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன் என்பதை இந்த மாநிலம் அறியும். அதிலும் இன்று மகளிர் சுயஉதவிக் குழுக்களின் மாநில மாநாட்டில் உங்களைச் சந்திப்பதில் நான் எல்லையில்லா மகிழ்ச்சி அடைகிறேன்.

இத்தனைப் பெண்களை ஒரே இடத்தில் சந்திக்கிற மகிழ்ச்சி!

இத்தனைத் தமிழ்ப் பெண்களை ஒரே இடத்தில் சந்திக்கிற மகிழ்ச்சி!

இத்தனை வெற்றி பெறும் தமிழ்ப் பெண்களை ஒரே இடத்தில் சந்திக்கிற மகிழ்ச்சி!

இப்படி, எனது மகிழ்ச்சி எல்லையில்லா மகிழ்ச்சியாக விளங்குகிறது.

"நோக்கு திசை எல்லாம் நாம் அன்றி வேறில்லை!" என்று பாரதியார் சொன்ன வாசகத்திற்கு இதுதான் அர்த்தமோ என்று இப்போது நான் எண்ணுகிறேன்!

பெண்ணை "சக்தி" என்று அழைக்கிறோம். அவள் சக்தியின் பிறப்பிடம் – சக்தியின் இருப்பிடம் – சக்தியின் சிறப்பிடம்!

அந்தச் சக்திகள் எல்லாம் ஒரே இடத்தில் கூடி இருந்தால், அந்த இடம் சக்திகளின் சாம்ராஜ்யமாக அல்லவா திகழும்!



இது சக்திகளின் சாம்ராஜ்யம்! பெண்மையின் ராஜாங்கம்!

பெண்மைக்கு முதன்மை அளிப்பதில் தமிழகம் எப்போதும் முன்னோடி மாநிலமாகவே விளங்கி வருகிறது!

ஒரு பெண்ணை முதலமைச்சராகத் தேர்ந்து எடுத்தது தமிழகம் தானே!

ஒரு பெண்ணைத் தலைவியாகக் கொண்ட இயக்கத்திற்குப் பெரு வெற்றி அளித்தது தமிழகம் தானே!

என்னை முதலமைச்சராகத் தேர்ந்தெடுத்தது என்பதைவிட, பெண்மை தன்னை முதலமைச்சராகத் தேர்ந்தெடுத்தது என்பதுதான் உண்மை!

நான் உங்களில் என்னைப் பார்க்கிறேன்! நீங்கள் என்னில் உங்களைப் பார்க்கிறீர்கள்!

இதைச் சொல்லுகிறபோது மனோன்மணியம் ஆசிரியர் சுந்தரம்பிள்ளை சொல்லுவாரே அந்தக் கவிதை வரிதான் என் கவனத்திற்கு வருகிறது.

'இப்படை தோற்கின் எப்படை வெல்லும்'!

– இது நமக்காகவே உருவாக்கப்பட்ட வைர வரி அல்லவா!

'இப்படை தோற்கின் எப்படை வெல்லும்' என்பது மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு மிகப் பொருத்தமான தாரக மந்திரம் அல்லவா!

அத்தனை வெற்றிகளைக் குவித்திருக்கிற வீர மங்கையர்கள் நீங்கள்!

உலக வரலாற்றில், உயர்ந்த நாடுகள் எல்லாம் பெண்மைக்குச் சிறப்பு அளித்த நாடுகள்தான்!

பெண்ணுக்கு மரியாதை தருவதிலும், பெண்கள் முன்னேற்றத்திற்குப் பாடுபடுவதிலும் உங்கள் அன்புச் சகோதரியாகிய நான் எப்போதும் எவரைக் காட்டிலும் முன் நிற்கிறேன் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

இதன் அடிப்படையில்தான், பெண்ணுரிமை காக்கவும், பெண்மை நலம் பேணவும் எனது முந்தைய ஆட்சிக் காலத்திலும் சரி, தற்போதைய ஆட்சியிலும் சரி, அடுக்கடுக்கான பல மகளிர் நலத் திட்டங்களை நான் செயல்படுத்தி வருகிறேன்.

ஆண்களோடு பெண்கள் சரிநிகர் சமானமாக வாழ வேண்டும் என்றால், அதற்குப் பெண்கள் பொருளாதார ரீதியாக வலிமை பெற்றவர்களாக விளங்க வேண்டும்; அதற்கான தன்னம்பிக்கையை அவர்கள் பெற வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு பெண்களுக்குப் பொருளாதார வலிமை அளிக்கும் ஒரு மாபெரும் திட்டத்தை 1992ஆம் ஆண்டு நான் அறிமுகப்படுத்தினேன்.

மகளிர் சுய உதவிக் குழு என்பதே அந்த மகத்தான திட்டம் ஆகும்.

தமிழகத்தின் பெண்கள் எல்லோரும் இன்புற்று வாழ வேண்டும் என்று எண்ணுகின்ற மனித நேயம் கொண்டவர்கள் மட்டும் அல்ல; தடைகளைத் தகர்த்து, எடுத்த செயலை வெற்றிகரமாக முடிப்பதிலும் வல்லவர்கள். எனவேதான் சிந்தனை ஆற்றலும், செயல் திறனும் மிக்க தமிழகப் பெண்களின் திறமையை வெளிக் கொணர்ந்து, சமுதாயத்தில் உரிய அதிகாரம் அளித்து; ஒரு சமூக அந்தஸ்தை அவர்களுக்குப் பெற்றுத் தர வேண்டும் என்பதற்காக நான் கொண்டு வந்த சுய உதவிக் குழுத் திட்டத்தைச் சிக்கெனப் பற்றிக் கொண்டார்கள்.

தமிழக மகளிர் நலன் பேணும் தனிப் பெரும் திட்டமான சுய உதவிக் குழுத் திட்டம், இன்று ஆல்போல் தழைத்து அறுகு போல் வேர் விட்டு 2 இலட்சத்து 11 ஆயிரத்து 152 சுய உதவிக் குழுக்களாகப் பரிணமித்து உள்ளது. இன்றைய நிலவரப்படி, இந்தக் குழுக்களில் 35 இலட்சத்து 42 ஆயிரம் பெண்கள் உறுப்பினர்களாக உள்ளார்கள் என்பது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது.

தமிழகத்தில் உள்ள மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் தங்களது ஒட்டு மொத்த சேமிப்புத் தொகையாக 754.39 கோடி ரூபாயை வங்கிகளில் சேமிப்புக் கணக்கில் சேர்த்து வைத்துள்ளார்கள் என்பதையும்; அவர்கள் வியாபாரம் மற்றும் சிறுதொழில்கள் செய்ய 1,295.08 கோடி ரூபாய் அளவுக்குக் கடன் உதவி பெற்றுத் தங்களது வாழ்க்கையை வளமாக்கிக் கொண்டதுடன், நாட்டின் பொருளாதாரம் மேம்படவும் பேருதவி புரிந்துள்ளனர் என்பதையும் இந்த நேரத்தில் மிகுந்த பெருமிதத்தோடும், மனநிறைவோடும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு மகளிர் சுய உதவிக் குழுக்கள் ஈடுபடாத தொழிலே இல்லை என்கின்ற அளவுக்கு அவர்கள் அனைத்துத் துறைகளிலும் தங்கள் திறமையை வெளிப்படுத்திக்காட்டி வருகின்றனர். குறிப்பாக, கைவினைப் பொருட்கள் தயாரித்தல், உணவுப் பொருட்களைப் பதப்படுத்துதல், இயற்கை நாரினால் ஆன பொருட்களைத் தயாரித்தல், கைத்தறித் துணிகளை உற்பத்தி செய்தல், கணினி சார்ந்த மற்றும் பிற சேவைப் பணிகளில் ஈடுபடுதல், மூலிகைச் செடிகளைப் பயிரிடுதல், பால் பண்ணை நடத்துதல் முதலான வேளாண் சார்ந்த தொழில்களையும், வேளாண் சாராத இன்ன பிற தொழில்களையும் மேற்கொண்டு அவற்றை அவர்கள் வெற்றிகரமாக நடத்தி வருகின்றனர்.

இவ்வாறு, அவர்கள் உற்பத்தி செய்கின்ற பொருட்களை விற்பனை செய்திட மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் ஏற்படுத்தப்பட்டுள்ள மகளிர் சுய உதவிக் குழு விற்பனைச் சங்கங்கள்; மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவிலான கண்காட்சிகளில் பங்கேற்றல்; இந்தியத் தொழில் கூட்டமைப்புடன் சார்ந்த பல்வேறு வர்த்தக நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுதல்; மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் தங்களது தேவைகளுக்கு சுயஉதவிக் குழு உற்பத்திப் பொருட்களையே வாங்குதல்; ஊரக வளர்ச்சித் திட்டங்களில் சுய உதவிக்குழு பொருட்களைப் பயன்படுத்துதல்; Rural Bazaar என்னும் ஊரகச் சந்தை இணைய தளம் என பல்வேறு சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு, மகளிர் சுயஉதவிக் குழு உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்துவதில் எனது அரசு பெரும் வெற்றியைப் பெற்றுள்ளது.

மகளிருக்கு வாழ்வின் மீது ஒரு பற்றுதலை ஏற்படுத்தி எதிர்காலத்தின் மீது நம்பிக்கையை வழங்குகின்ற மகளிர் சுய உதவிக் குழுக்களை மேலும் மேம்படுத்த வேண்டும் என்பதும்; இதுவரை சுயஉதவிக் குழு இயக்கத்தில் இணைந்து பயன்பெற முடியாமல் விடுபட்டுள்ள ஏழை, எளிய பெண்கள் அனைவரையும் சுயஉதவிக் குழு இயக்கத்தில் இணைத்திட வேண்டும் என்பதும் எனது எண்ணம் ஆகும். இதன் அடிப்படையில், இவ்வாண்டு, அதாவது, 2005–2006ஆம் ஆண்டில் அனைத்துக் கிராமங்களிலும் மற்றும் பழங்குடியினர் வாழும் பகுதிகள், மீனவக் கிராமங்கள், நெசவாளர்கள் வாழுமிடங்கள் மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள குடிசைப் பகுதிகள் முதலான இடங்களிலும் வாழுகின்ற பெண்கள், புதிய மகளிர் சுயஉதவிக் குழுக்களைத் தொடங்கிடத் தேவையான அனைத்து உதவிகளையும் எனது அரசு வழங்கும்.

மகளிர் சுயஉதவிக் குழுக்கள் மேம்பட நான் அளித்து வரும் ஆக்கத்தாலும், ஊக்கத்தாலும் தாங்களும் தொழில் தொடங்கிப் புதுவாழ்வு காண முடியும் என்ற உத்வேகம் பெற்று ஏராளமான மகளிர் சுயஉதவிக் குழுக்கள் தொடங்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு மகளிர் சுயஉதவிக் குழுக்கள் தொடங்கப்படும் நோக்கத்தை வெற்றிகரமாக்கும் வகையில், நல்ல முறையில் இயங்கி வரும் சுயஉதவிக் குழுக்களுக்கான சுழல் நிதியை விரைந்து வழங்க நான் முடிவெடுத்து உள்ளேன். இதன்படி, 50,000 குழுக்களுக்கு குழு ஒன்றுக்கு 10,000 ரூபாய் வீதம் சுழல் நிதி வழங்கப்படும். இதற்காக, 50 கோடி ரூபாயை எனது அரசு வழங்கும் என்பதை அறிவிப்பதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

கடந்த ஆண்டில், மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ஏறத்தாழ 500 கோடி ரூபாய் வங்கிகள் மூலமாகக் கடன் வசதி செய்து தரப்பட்டது. முன்னேற வேண்டும் என்ற துடிப்போடும், தன்னம்பிக்கையோடும் தொழில் தொடங்க முன் வரும் அனைத்து மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கும் கடன் வழங்கப்பட வேண்டும் என்பதற்காக, தமிழக வரலாற்றிலேயே முதல் முறையாக அனைத்து வங்கியாளர்களின் சிறப்புக் கூட்டம் ஒன்றை நடத்தி அவர்களோடு நான் கலந்துரையாடினேன். இக்கூட்டத்தில், சுயஉதவிக் குழுக்களுக்கு வழங்குகின்ற கடன் உதவியை இரட்டிப்பாக்கி 1,000 கோடி ரூபாய் அளவுக்கு கடன் உதவி வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். இந்த உயர்ந்த இலக்கை எட்டுவதற்குத் தேவையான அனைத்து உதவிகளையும், வங்கியாளர்களுக்கு நல்குமாறு சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு நான்




ஆணையிட்டுள்ளேன். எனவே, தொழில் செய்து முன்னேற வேண்டும் என்ற துடிப்புடன் செயல்படும் சுய உதவிக் குழு மகளிர், தங்களுக்குத் தேவையான கடன் உதவியை நிச்சயம் பெற முடியும்.

இப்போது மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான புதிய திட்டங்களைப் பற்றி நான் எடுத்துரைக்க விரும்புகிறேன்.

சுயஉதவிக் குழு மகளிரது திறமைகளை முழுமையாக வெளிக் கொணர்ந்து, சுயமாகத் தொழில் செய்து வருவாய் ஈட்டிட ஏதுவாக, ஆண்டு ஒன்றுக்கு 1 இலட்சம் பெண்கள் வீதம் 5 ஆண்டுகளில் 5 இலட்சம் பெண்களுக்கு தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கும் திட்டத்தை 2001 ஆம் ஆண்டில் நான் தொடங்கி வைத்தேன். இந்த இலக்கு கடந்த நான்கு ஆண்டுகளிலேயே எய்தப்பட்டு சாதனைப் படைக்கப் பட்டுள்ளது என்பதை மிகவும் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். தற்போது 5.78 கோடி ரூபாய் செலவில் மேலும் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் மகளிருக்கு தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி அளித்திட நான் ஆணையிட்டுள்ளேன் என்பதை, மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு,

* நேர்த்தியான காலணிகள் மற்றும் தோல் பொருட்கள் தயாரித்திடும் வகையில் 56.70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், மத்திய காலணிப் பயிற்சி நிறுவனம், அதாவது, Central Footwear Training Institute (CFTI) மூலம் சிறப்புத் திறன் பயிற்சி;

* தகவல் சேகரிப்பு, மின் அஞ்சல் மற்றும் நிகரி ஆகியவை அடங்கிய 'Kiosk' அமைப்புகள் உருவாக்கிப் பயன்பெறும் வகையில் 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அண்ணா பல்கலைக்கழகம் மூலம் தகவல் தொழில்நுட்பப் பயிற்சி;

* 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், மத்திய பிளாஸ்டிக் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம், அதாவது, Central Institute of Plastics Engineering and Technology (CIPET) நிறுவனத்தின் மூலம் பிளாஸ்டிக் கழிவுச் சேகரிப்பு மற்றும் மறுசுழற்சிப் பயிற்சி;

* புது வகை ஆயத்த ஆடைகளைத் தயாரித்திட 21.36 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தேசிய ஆடை வடிவமைப்பு நிறுவனம், அதாவது National Institute of Fashion Technology (NIFT) நிறுவனத்தின் மூலம் மேம்படுத்தப்பட்ட நவீன ஆடை வடிவமைப்புப் பயிற்சி;

* பொதுவாக ஆண்களே பங்கேற்கின்ற இரும்புப் பட்டறைத் தொழிலில் தடம் பதிக்க விரும்பும் மகளிர் பயன்பெறும் வகையில், கோயம்புத்தூர் தொழில் வர்த்தகக் கூட்டமைப்பின் உதவியுடன் லேத் பயிற்சி;

* 10.20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கைவினைப் பொருள் சிறப்புத் திறன் பயிற்சி;

* கிராமப்புற சுயஉதவிக்குழு மகளிர், தன்னார்வலர்களை ஒருங்கிணைத்து குடும்ப சுகாதாரத்தைப் பேணி முன்னேற்றம் அடையச் செய்திட, ஒரு கோடியே 3 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குடும்ப சுகாதாரத் தன்னார்வச் சேவைப் பயிற்சி;

* ஊரகப் பகுதிகளில் உள்ள 18 வயது முதல் 35 வயதுக்குள்ளான இளையோர் அடிப்படைக் கணினி மற்றும் இதர சேவைகளுக்கான பயிற்சியையும்; தொழிலகங்களில் பணியாற்றுவதற்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சியையும் பெறும் வகையிலான 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வாழ்வாதாரத் திறன் பயிற்சி;

* 1.33 கோடி ரூபாய் மதிப்பீட்டில், தமிழ்நாட்டில் உள்ள இருளர் பழங்குடி இனத்தவரின் பொருளாதார மேம்பாட்டுக்கு வகைச் செய்திட இருளர் பழங்குடியின சுய உதவிக் குழுக்களுக்கு மூலிகைப் பொருட்களை உற்பத்தி செய்திடவும், விற்பனை செய்திடவும் மூலிகைப் பொருள் உற்பத்தி மற்றும் விற்பனைப் பயிற்சி

ஆகிய திட்டங்களை, இன்று இந்த இனிய விழாவில் நான் தொடங்கி வைத்துள்ளேன்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் வகையில் கட்டப்படும் புதிய வீடுகளுக்கான Micro Compressed Roofing Tiles என்னும் நுண் கான்கிரீட் கூரை ஓடுகளைச் சுயஉதவிக் குழுக்கள் மூலமாகத் தயாரிக்கும் திட்டத்தை இன்று நான் தொடங்கி வைத்துள்ளேன் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கான உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கிடவும் மற்றும் பயிற்சிக்காகவும், 2.53 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், இவ்விழாவில், 95 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கானப் பயிற்சி மற்றும் விற்பனை மையங்களையும், வட்டார சுயஉதவிக்குழுக் கூட்டமைப்புக்கான கட்டடத்தையும் திறந்து வைத்ததிலும்; மாவட்டங்களில் மகளிர் சுயஉதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களைத் தரமான முறையில் சிப்பங்களாகக் கட்டுதல் முதலான பணிகளை மேற்கொள்ளும் வகையில், 3 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பொது உட்கட்டமைப்பு வசதிகளுக்கும்; 3 கோடியே 45 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான அங்கன்வாடி மையங்கள்; மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கான பயிற்சி மற்றும் விற்பனை மையங்கள்; நூலகம் முதலான கட்டடங்களுக்கும் அடிக்கல் நாட்டியதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

மகத்தான வெற்றிகளை யாரும் ஈட்டலாம்! உள்ளத்தில் உறுதி இருந்தால் எந்தத் தடையையும் உடைக்கலாம்! நம்பிக்கையும் விடாமுயற்சியும் இருந்தால் நோயை வெல்லலாம்; ஏன், உடல் ஊனத்தையும் வெல்லலாம்!

இதற்கு எத்தனையோ எடுத்துக்காட்டுகளைக் கூறலாம் என்றாலும், வில்மா ருடால்ப் (Wilma Rudolph) என்னும் ஏழைச் சிறுமியின் வரலாற்றை எடுத்துச் சொல்லுவதே பொருத்தமாக இருக்கும் என்று எண்ணுகிறேன்.

அமெரிக்காவில் டென்னசி மாநிலத்தில், ஒரு ஏழைக் குடும்பத்தில் பிறந்த பெண் வில்மா! ஒரு நீக்ரோ குடும்பத்தில் இருபத்திரண்டு குழந்தைகள் பிறந்தன; அதில் இருபதாவது குழந்தைதான் வில்மா ருடால்ப்!

குறைமாதக் குழந்தையாக, குறைந்த எடையோடு அவள் பிறந்தாள். அவள் பிறக்கும் போதே ஏராளமான நோய்களோடு பிறந்தாள். மருத்துவமனைக்கு அவளோ, அவளுடைய தாயோ போக முடியாது. ஏன் என்றால், மருத்துவமனை வெள்ளையர்க்கே உரியது. கருப்பு இனத்தைச் சேர்ந்த அவளோ, அவளுடைய தாயோ உள்ளூர் மருத்துவமனையில் காலடி வைக்கக் கூடாது. போலியோ நோயால் அவள் கால் ஊனமுற்று இருந்தாள்.



**கல்லாதவர்களே தமிழகத்தில் இருக்கக் கூடாது என்பது எனது கோட்பாடு – அரசின் இலட்சியம்**

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் ஆசிரியர் தின வாழ்த்து**

அறிவுக் கண் திறக்கும் அரிய பணியில் தங்களை அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் ஆசிரியப் பெருமக்கள் அனைவருக்கும், என் அகம் நிறைந்த ஆசிரியர் தின வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

'கற்றோர்க்குச் சென்ற இடம் எல்லாம் சிறப்பு' என்பதே நம் தமிழக மக்களின் ஆண்டாண்டு காலச் சிந்தனை. அவ்வாறு சென்ற இடமெல்லாம் சிறப்பளிக்கும் கல்வியை, எந்த விதத்திலாவது பெற வேண்டும் என்பது நம் நாட்டின் புலவர் பெருமக்களின் அறிவுரையாக இருந்து வந்தது. ஆனால், கல்வி தனி மனித முயற்சியாக இருந்ததே தவிர, மக்கள் அனைவரின் இலட்சியமாக மாறவில்லை.

அந்த இலட்சியத்தை ஈடேற்றுவதில் புதிய பொற்காலம் தற்போது மலர்ந்திருக்கிறது. கல்லாதவர்களே தமிழகத்தில் இருக்கக் கூடாது என்பதே எனது கோட்பாடாகவும் எனது அரசின் குறிக்கோளாகவும் அமைந்துள்ளது.

'அனைவர்க்கும் கல்வி' என்னும் இலட்சியத்தில் இன்று தமிழ்நாடு பெற்றிருக்கும் வெற்றி மகத்தானதாகும்.

குடியிருப்புகளுக்கு அருகிலேயே பள்ளிகள், 1 முதல்12 ஆம் வகுப்பு முடிய அனைத்து மாணவ – மாணவியருக்கும் இலவசப் பாட நூல்கள், மேல்நிலை மாணக்கர் யாவருக்கும் இலவச மிதிவண்டிகள், இலவச– சத்துணவு, சீருடை, உதவித் தொகைகள், கல்வி பயிலும் காலத்தில் பெற்றோர் உயிர் இழக்க நேரிட்டாலோ அல்லது முடக்கம் அடைந்து விட்டாலோ, அக்குழந்தைகளின் கல்வி தடைபடா வண்ணம் 50 ஆயிரம் ரூபாய் நிதி உதவி முதலான பல்வேறு பயன்மிகு திட்டங்களை நிறைவேற்றி வருவதன் மூலம்,

'பயிற்றுப் பல கல்வி தந்து – இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்'

– என்னும் பாரதியின் கனவை, நனவாக்கி வருகிறது எனது அரசு.

தலைசிறந்த தத்துவஞானி டாக்டர் சர்வபள்ளி எஸ்.ராதாகிருஷ்ணன் அவர்களது பிறந்த தினம் ஆகிய செப்டம்பர் – 5 ஆம் நாளான ஆசிரியர் தினத்தில்,

சிறக்கட்டும் ஆசிரியர் வாழ்வு!
செழிக்கட்டும் தமிழகக் கல்வி!

– என்ற என் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

◆ ◆ ◆

# உலக வங்கி உதவியுடன் "புதுவாழ்வு" திட்டம்



தமிழக 'சமச்சீர் வளர்ச்சி முன் முயற்சித் திட்டத்தை' தமிழக மக்களுக்கு அர்ப்பணிப்பது எனக்கு அளவற்ற மகிழ்ச்சியை அளிக்கிறது. தமிழக அரசின் உண்மையான இந்த வரலாற்று முயற்சி திட்டக் கொள்கை வரவேற்பதிலும், நிருவகிப்பதிலும், முன்னேற்றப் பாதையில் முக்கியப் பங்காகும்.

வளர்ச்சியில் அனைவரது பங்கேற்பிலும் தேர்ந்தெடுக்கும் சுதந்திரத்திலும் ஒரு கூட்டுப் பார்வையை இது எடுத்துக்காட்டுகிறது. நிருவாகத்தின் முன்னேற்றத்தை இது காட்டுகிறது என்று நான் உளமாற நம்புகிறேன். இந்த முன் முயற்சித் திட்டத்தைத் தொடங்கி வைப்பதில் உலக வங்கியின் இந்திய இயக்குநர் மைக்கேல் எஃப் கார்ட்டர் நம்முடன் கைகோர்த்து நிற்கிறார் என்பதற்காக நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

வளர்ச்சி என்றால் என்ன? புதிய விருப்பத் தேர்வுகளை உருவாக்குவதும் மக்களுக்கு மேலும் வாய்ப்புகளை விரிவுப்படுத்துவதும்தான் வளர்ச்சி என்று நான் நம்புகிறேன். 'சுதந்திரமான முறையில் முன்னேற்றம்' என்ற நூலில் நோபல் பரிசு பெற்ற மேதை அமர்த்தியா சென் கூறுகிறார்: மக்களின் தகுதிகளை விரிவுப்படுத்துவது, அதனால் அவர்கள் பெற்றுள்ள தகுதிகளை வழிநடத்துவது, அந்தத் தகுதிக்கான ஆதாரங்களைப் பெற்றிருப்பது என்கிற இலக்கண அடிப்படையில் வளர்ச்சி முன்னேற்றம் காண வேண்டும்' என்றார்.

அமர்த்தியா சென்னின் வாதத்தில் முக்கிய அம்சம் இரண்டு கட்டமாக உள்ளது. முதலாவதாக, செயல்களைச் செய்வதற்கு மக்களின் தகுதிகளை விரிவுப்படுத்துவதே வளர்ச்சி, அதனால் ஓர் உத்தியை தங்கள் தகுதிகளுக்காக வளர்த்துக் கொள்வது மற்றும் தடையற்ற குறிப்பிடத்தகுந்த பொருளாதார வளர்ச்சியை உறுதிப்படுத்துவது என்பதாகும். மேலும், இத்தகைய வளர்ச்சி உத்தியைத் தேர்ந்தெடுக்கும் முறை ஜனநாயக ரீதியாக வளர்ச்சியின் சவால்களை முறியடிப்பதில் மக்கள் ஈடுபாடு, அரசின் பொருளாதாரச் சலுகைகளை முறைப்படுத்துவது ஆகியவனவாகும்.



அவளால் நடக்க முடியாது; அது மட்டுமல்ல, அவள் நடக்கக் கூடாது என்றும் எச்சரிக்கப்பட்டு இருந்தாள். இத்தகைய சூழலில் பிறந்து வளர்ந்த அந்தக் குழந்தைக்கு எத்தனையோ ஆசைகள். இத்தகைய சூழலில் பிறந்து வளர்ந்த அந்தக் குழந்தை நடக்க ஆசைப்பட்டாள். அவளைப் பொறுத்தவரை நடக்க நினைப்பதே பேராசை. ஆனால், அதைவிடப் பெரிய பேராசைகள் அவளிடம் இருந்தன! அவள் ஓட்டப் பந்தயத்தில் உலக சாதனை படைக்கும் பெண்ணாக ஆக விரும்பினாள்!

பதின்மூன்றாம் வயதில் அவள் தனது முதல் ஓட்டப் பந்தயத்தைத் தொடங்கினாள்; அதில் அவள் கடைசியாக வந்தாள். மறுபடி மறுபடி ஓடினாள். ஒவ்வொரு தடவையும் அவள் கடைசியாகவே வந்தாள். எனினும் விடா முயற்சியுடன் பயிற்சியில் ஈடுபட்டாள்.

"உலகத்திலேயே தடகளப் போட்டியில் சிறந்த வீராங்கனையாக நான் ஆக விரும்புகின்றேன்" என்று அவள் பயிற்சியாளரிடம் சொன்னாள்! அதற்கு அந்தப் பயிற்சியாளர் என்ன பதில் சொன்னார் தெரியுமா? "உனக்கு இருக்கும் துடிப்பைப் பார்க்கும் போது எவராலும் உன்னைத் தடுத்து நிறுத்த முடியாது" என்று ஊக்கம் அளித்தார் அந்தப் பயிற்சியாளர்.

வில்மா பயிற்சி செய்தாள்; உலகத்திலேயே மிக விரைவாக ஓடும் ஓட்டப் பந்தய வீராங்கனையாக உருவாக வேண்டும் என்னும் உள்ளத்து வேட்கை அவளை ஓடச் செய்தது.

அவள், ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொண்டாள். அப்போது அவளுக்குப் பதினாறு வயது. 1956ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவில், மெல்போர்னில் நடைபெற்ற அந்த ஒலிம்பிக் போட்டியில் அவளது குழு 4 X 100 மீட்டர் தொடர் ஓட்டத்தில் வெண்கலப் பதக்கத்தை வென்றது!

அது மட்டுமா? நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு ரோம் நகரில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் அவள் கலந்து கொண்டாள். ஒரே ஒலிம்பிக் விளையாட்டில் மூன்று தங்கப் பதக்கங்களை வென்ற முதல் அமெரிக்கப் பெண்மணி என்ற சிறப்பைப் பெற்றாள்! உலகப் புகழ் பெற்றாள்!

இப்படியும் நடக்குமா? நடக்க முடியுமா என்று நாம் இன்று ஆச்சரியப்படுகிறோம்.

ஓர் அடி கூட நடக்க முடியாத ஒரு பெண், ஓட்டப் பந்தயத்தில் கலந்து கொண்டதே ஆச்சரியம்!

ஓட்டப் பந்தயத்தில் கலந்து கொண்ட அந்தப் பெண், உலகத்தின் மிக வேகமாக ஓடும் வீராங்கனை ஆனது உலக மகா ஆச்சரியம்!

ஆச்சரியங்கள் நடக்குமா? நடக்கும்!

உள்ளத்தில் உறுதி மட்டும் இருந்தால் – ஆச்சரியங்கள் நடக்கும்; அதிசயங்கள் அன்றாட சம்பவங்கள் ஆகும்!

'நடப்பதே ஆச்சரியம்!' என்று எந்தப் பெண் கருதப்பட்டாளோ, அந்தப் பெண் ஆச்சரியங்களை நடத்திக் காட்டினாள்!

எதனால்? உள்ளத்தின் உறுதியினால்!

"ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவு இன்றித்
தாழாது உஞற்று பவர்!"

சோர்வு இல்லாமலும், காலம் தாழ்த்தாமலும் யார் முயல்கிறார்களோ, அவர்கள் விதியையும் வெல்வார்கள் என்பது வள்ளுவப் பெருமானின் வாக்கு. அதை அமெரிக்காவில் பிறந்த ஒரு நீக்ரோ பெண் செயல்படுத்திக் காட்டினாள்! வெற்றி பெற்றாள்!

எனது அருமைத் தமிழ்ப் பெண்களாகிய நீங்கள் உங்கள் முயற்சிகளில் வெல்ல வேண்டும். நீங்கள் வெல்வீர்கள்! ஏனென்றால், நீங்கள் மகளிர் சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்தவர்கள்! நீங்கள் நிச்சயம் வெல்வீர்கள்! ஏனென்றால், நீங்கள் என்னுடைய சகோதரிகள்! அதனால் நீங்கள் நிச்சயம் வெல்வீர்கள்!

உங்கள் வெற்றி, உங்கள் அன்புச் சகோதரியாகிய எனது வெற்றி!

எனது வெற்றி, என் அன்புச் சகோதரிகளாகிய உங்களுடைய வெற்றி!

இந்த வெற்றி தான் தமிழ்ப் பெண்மையின் வெற்றி!

இந்த வெற்றி தான் தமிழகத்தின் வெற்றி!

– என்பதைத் தெரிவித்துக் கொள்வதோடு, வெற்றி வீராங்கனைகளாகிய உங்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டு, இந்த நேரத்தில் உங்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன்.

இன்றைய தினம், தங்கள் அனுபவங்களைப் பற்றி சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 6 பெண்கள் இந்த மேடையில் வந்து உரையாற்றினார்கள். முதலில் இப்படி 6 பெண்கள் வந்து உரையாற்றப் போகிறார்கள் என்று கேள்விப்பட்டதும், இவர்கள் என்ன பேசுவார்களோ, எப்படிப் பேசுவார்களோ என்று நான் யோசித்தேன். ஆனால், அவர்கள் பேச்சைக் கேட்ட பின்பு – அது பேச்சல்ல, சொற்பொழிவு. அவர்களுடைய சொற்பொழிவைக் கேட்ட பின்பு எனக்கு ஏற்பட்ட வியப்பை வருணித்துச் சொல்ல வார்த்தைகளே இல்லை, அகராதியில் வரர்த்தைகளே இல்லை. அவ்வளவு அற்புதமாக, அவ்வளவு தன்னம்பிக்கையோடு, அவ்வளவு ஆணித்தரமாக அவர்கள் பேசினார்கள். நம்முடைய அமைச்சர்கள் கூட சொற்பொழிவில் அவர்களிடம் பாடம் கற்கும் அளவுக்கு அவர்கள் பேசினார்கள். இவர்கள் எல்லாம் கிராமத்துப் பெண்கள். இந்த அளவுக்கு அவர்கள் முன்னேறி, அவர்கள் இவ்வளவு பெரிய கூட்டத்தில் நின்று, இந்த மேடையில் நின்று, இத்தனை ஆயிரம் பேர்களுக்கு முன்னால் இவ்வளவு தைரியமாக, ஆணித்தரமாக பேசுகிறார்கள் என்று சொன்னால் எனக்கு எவ்வளவு பெருமையாக இருக்கிறது தெரியுமா! பெண்கள் நினைத்தால் எதையும் சாதிக்கலாம் என்பதற்கு இவர்களே எடுத்துக்காட்டு. நீங்கள் அனைவருமே எடுத்துக்காட்டு. ஆகவே, இந்த நேரத்தில் உங்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன் என்று கூறினேன். அந்த வேண்டுகோள் என்ன? இதுதான். உங்களைப் பார்க்கின்ற போது எனக்கு எவ்வளவு உள்ளப் பூரிப்பு ஏற்படுகிறது தெரியுமா! ஆனால், இன்னும் எத்தனையோ பெண்கள் வாழ்க்கையில் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள், தங்களுக்கு என்னென்ன வாய்ப்புகள் உள்ளன. இந்த அரசில் அவர்களுக்கு என்னென்ன வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன என்பதை உணராமல் அவர்கள் இன்னும் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

ஆகவே, இந்த சுயஉதவிக் குழு இயக்கத்தில் இருக்கின்ற ஒவ்வொரு பெண் உறுப்பினரும், இன்னும் இரண்டு பெண்களையாவது இந்த சுய உதவிக் குழு இயக்கத்தில் சேர்த்துவிட வேண்டும் என்பது தான் என்னுடைய வேண்டுகோள். இன்றைக்கு உங்களைப் பார்க்கும் போது எவ்வளவு பெருமையாக இருக்கிறது! நீங்களும் எவ்வளவு தன்னம்பிக்கையோடு இருக்கிறீர்கள். வாழ்க்கையில் எவ்வளவு சாதித்து இருக்கிறீர்கள். இன்னும் எவ்வளவோ சாதிக்கப் போகிறீர்கள். சாதிக்கப் பிறந்தவர்கள் நீங்கள். தமிழகத்தில் உங்களுடைய மற்ற சகோதரிகளும், இந்த வாய்ப்புக் கிடைக்காத சகோதரிகளும் உங்களைப் போலவே சாதிக்க வேண்டும், அதற்கு நீங்களே அவர்களுக்கு வழிகாட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஆகவே, இன்றைய தினம் தமிழகத்தில் சுய உதவிக் குழு இயக்கத்தில் இருக்கின்ற ஒவ்வொரு பெண்ணும் இன்னும் குறைந்தபட்சம் இரண்டு பெண்களையாவது இந்த இயக்கத்தில் சேர்த்துவிட வேண்டும் என்ற வேண்டுகோள் விடுக்கிறேன். உங்கள் அன்புச் சகோதரியின் வேண்டுகோளை நீங்கள் நிச்சயம் நிறைவேற்றி வைப்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு 100 சதவிகிதம் உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொண்டு, நீங்கள் இன்னும் மென்மேலும் வளர வேண்டும், மென்மேலும் சாதிக்க வேண்டும், நீங்கள் நினைத்தால் வானமே எல்லை என்பதைத் தெரிவித்துக் கொண்டு, வாழ்க, வளர்க என்று வாழ்த்திவிட்டு, அண்ணா நாமம் வாழ்க! புரட்சித் தலைவர் நாமம் வாழ்க! என்று கூறி விடை பெறுகிறேன். நன்றி வணக்கம். ❖

தமிழகம் சமச்சீர் வளர்ச்சி, முன் முயற்சி மேற்கண்டவற்றைச் சரியாக சாதிக்கவே முனைகிறது. திட்டக் கொள்கையின் முன்னேற்றத்தில் இது ஓர் அறிவுபூர்வமான புதிய நடவடிக்கையாகும். இதனால் பொது விவாதத்திற்கு வழி ஏற்படுகிறது. நம்மை எதிர்நோக்கி உள்ள சவால்களைப் பற்றியும், விவாதிக்க வழி வகுக்கிறது. வளர்ச்சி நடவடிக்கையில் பங்கு பெறவும், அதன் விளைவுகளில் பங்கு பெறவும், மக்களைத் தகுதி பெற்றவர்களாக மாற்ற இது தூண்டுகிறது.

நான்கு ஆண்டுகளாக என்னுடைய அரசின் செயல்பாடுகளை நான் திரும்பிப் பார்க்கிறேன். அதில் முன்னேற்றமும் திருப்தியும் என்ற அர்த்தம் உள்ளது. தமிழகம் மீண்டும் முன் நிறுத்தப்பட்டுள்ளது. வளர்ச்சியின் பாதிப்பில் இருந்தும், மோசமான நிதி நிலைமையில் இருந்தும் தமிழகம் [illegible]. இத்தகைய நிலை இதுவரையில் காணப்பட்டதில்லை. மீண்டும் தமிழகம் உயர் வளர்ச்சிப்பாதையில் நடைபோடுகிறது.

அடுத்தடுத்த மோசமான வறட்சிகள், அதனைத் தொடர்ந்த அழிவு தரும் சுனாமி ஆகியவற்றில் இருந்தும் நாம் வெற்றிகரமாக மீண்டுள்ளோம். கடந்த காலத் துயரங்களைத் [illegible] அனைத்துத் தடைகளையும் [illegible] பறவையைப் போல் தமிழகம் மீண்டும் [illegible]. இலாபங்களைக் [illegible], முன்னேற்ற நடவடிக்கையை [illegible] இது ஒரு நல்ல நேரமாகும்.

நாட்டில் வேகமாக வளர்ந்து வரும் பொருளாதார நிலைகளில் தமிழகம் ஒன்றாகும். இந்திய அளவிலான செயல்பாட்டில் 2004–2005ஆம் ஆண்டில் தமிழகம் உள்நாட்டுப் பொருள் உற்பத்தியில் முன்னணியில் உள்ளது. அதன் ஆண்டு வளர்ச்சியானது குறிப்பிடத்தக்க அளவில் 8.73 சதவிகிதமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. மனிதவள வளர்ச்சியில் தமிழகத்தின் செயல்பாடு எல்லாத் தரப்புப் பாராட்டுதல்களையும் பெற்றுள்ளது. நடுத்தர மனிதவள மேம்பாட்டு வகைப்பாட்டிலும் முக்கிய இடத்தைப் பெற்று தமிழகம் முன்னோக்கிச் செல்கிறது.

தனிநபர் வருமானத்தை மேம்படுத்துவதில் சிறப்பானச் சாதனைகளைப் புரிந்துள்ளது. பிறப்பு சதவிகிதம் மற்றும் பிரசவகால மரணம் ஆகியவற்றைக் குறைத்தல், எல்லோருக்கும் கல்வி ஆகியவற்றிலும் சாதனை புரிந்துள்ளோம். இந்தியாவின் 15 பெரிய மாநிலங்களில் தமிழகம் 3ஆவது இடத்தில் உள்ளது. தெற்காசிய நாடுகளான பாகிஸ்தான், நேபாளம், பூட்டான் மற்றும் வங்காளதேசத்தை விட தமிழகம் முக்கியச் சாதனைகள் பலவற்றைப் புரிந்துள்ளது. அவை அப்படியே இருந்தாலும் அவை அப்படியே இருக்கட்டும்.

மேலும், சிறப்பான சாதனைகளில் தமிழகம் முன் நிற்கிறது. இந்தியாவில் அதிக பொருளாதார நிலையைக் கொண்டதாகத் தமிழகம் சிறப்பாக மதிப்பிடப் பட்டிருந்தாலும் கூட இன்னும் இங்கே வறுமை உள்ளது. மாநிலப் பொருளாதாரம் மாற்றம் காணும் வகையில், முன்னர் நிலவி வந்த எதேச்சதிகார நிலையில் இருந்து மாறுபட்டு, தயாரிப்பு மற்றும் சேவை மையங்களில் முறையான வளர்ச்சிப் பாதையை நோக்கிச் செல்கிறது. [illegible] வேலைவாய்ப்புத் தத்துவம் முடுக்கி விடப்பட்டுள்ளது.

மாவட்டங்களுக்கு இடையே மனிதவள வளர்ச்சி முறைப்படுத்தப்பட்டுள்ளது. சவால்களின் தன்மையை எடுத்துக்கொண்டால் தமிழகத்தின் வளர்ச்சிக் கொள்கை, உயர்ந்த பொருளாதார வளர்ச்சி விதம் என்பதை விட அதிக நோக்கம் கொண்டதாகும்.

உயர் பொருளாதார வளர்ச்சியைச் சாதிப்பது என்பது மிக முக்கியமானது. அப்படி இல்லையென்றால் பொருளாதாரச் சீர்குலைவும், பொருளாதார வாய்ப்புகள் குறைவும் ஏற்பட்டு அவை மக்களின் வருமானத்தைக் குறைத்துவிடும். எனவே, வறுமையைக் குறைக்கவும், வேலைவாய்ப்பை முடுக்கி விடவும், வளர்ச்சி மட்டும் போதாது, மறுவிநியோக வளர்ச்சி இல்லையென்றால் ஏழைகளிலிருந்து ஏழையை உண்டாக்கி வளர்ச்சிப் பாதை அதன் விளைவுகளிலிருந்து அவர்களை ஒதுக்கி வைத்து விடும்.

உலக வங்கியின் உதவியோடு நடைபெறும் 'நமது கிராமம் திட்டம்' புதுவாழ்வு என்னும் வறுமை குறைப்புத் திட்டம் ஆகிய புதிய திட்டங்களை நான் வலியுறுத்த விரும்புகிறேன். மிகவும் வறியவர்களுக்காக ஒரு புதிய திட்டத்தைக் கொண்டு குறிப்பிட்டத்தகுந்த வளர்ச்சியைச் சாதிக்க நான் வலியுறுத்துகிறேன்.

சுயஉதவிக் குழுக்களுக்கு சிறுகடன் வழங்கும் திட்டம் மாபெரும் வெற்றியைக் கண்டுள்ளது. தமிழகத்தில் சமச்சீர் வளர்ச்சிக்கு மக்களும், அரசும் ஒருங்கிணைந்து செயல்படக்கூடிய திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

மனிதவள வளர்ச்சி முக்கிய அம்சமாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. இந்த நடவடிக்கைகளுக்கு உலக வங்கி உதவ முன் வந்திருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது. வளர்ச்சிக்குத் தடையான அம்சங்களைக் களைய ஏற்கெனவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. தமிழக சமச்சீர் வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கும் திட்டத்தின்கீழ் 6 முக்கிய அம்சங்கள் வளர்ச்சிக் குறிக்கோள்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன.

அடுத்த 9 முதல் 12 மாதத்தில் மையக் குழுக்கள் பிரச்சினைகளையும், அதற்கான தீர்வுகளையும் கண்டறிந்து அரசுக்கு அறிக்கை சமர்ப்பிக்கும். இந்த ஒருங்கிணைந்த அமைப்பு மூலம் அரசு, மக்கள், நிபுணர்கள் கலந்துரையாடி வளர்ச்சித் திட்டங்களை உருவாக்கும் முறை அமைக்கப்படும். இந்தத் திட்டத்தின் மூலம் ஏழைகள் பயன் பெறுவர். மாநிலத்தின் பொருளாதாரம் உயரும். சமச்சீர் வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கும்.

தமிழகம் வளர்ச்சி அடைவதற்கு எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் குறித்து விவாதம் நடத்துவதற்கு எனது கருத்துகளைத் தெரிவிக்க இதனை நல்வாய்ப்பாக நான் எடுத்துக் கொள்கிறேன். இந்த நடவடிக்கையில், ஆய்வு மற்றும் திட்டம் வகுப்பதை முக்கிய அம்சமாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

தமிழகப் பொருளாதார வளர்ச்சியை உறுதி செய்ய மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவது மிக அவசியம். நாம் சந்திக்கும் முக்கியப் பிரச்சினைகளில் இதுவும் ஒன்று. எனது அரசு பொருளாதார வித்தியாசங்களைக் களைய பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இதற்காகப் புதிய அண்ணா மறுமலர்ச்சி திட்டம் செயல்படுத்தப்படுகிறது. விவசாயம் சார்ந்த தொழில்களில் தனியார் முதலீட்டுக்கு ஊக்கம் அளிக்கப்படுகிறது.

சுயஉதவிக் குழுக்கள் மூலம் பொருளாதார வளர்ச்சி மேற்கொள்ளப்படுகிறது. சிறுகடன் வழங்கப்படுகிறது. வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறது. உற்பத்தித் துறையில் மாபெரும் வளர்ச்சி உள்ளது. புதிய முதலீடுகள் செய்யப்பட்டுள்ளன. இதனால் வேலைவாய்ப்புகளோடு ஊக்கம் அளிக்கப்படுகிறது. அதுமட்டுமின்றி சேவைத் துறைகளிலும் வேலைவாய்ப்புகள் பெருமளவில் பெருகியுள்ளன.

தகவல் தொழில்நுட்பத்தில் தமிழ்நாடு மகத்தான சாதனை புரிந்துள்ளது. அதுமட்டுமல்ல, தகவல் தொழில்நுட்ப சேவை, வெளிநாடுகளில் உள்ள வணிக வாய்ப்புகளை இங்கிருந்தே பெறுவது போன்ற துறைகளிலும் தமிழகம் முன்னணியில் உள்ளது. மேலும், சென்னையில் மிகப்பெரிய தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் முதலீடு செய்துள்ளன. இங்கு முதலீடு செய்துள்ள சிறிய நிறுவனங்கள் பெரிய நிறுவனமாக வளர்ந்துள்ளன. சென்னை மட்டுமின்றி கோவை, திருச்சியிலும் புதிய வளர்ச்சிக்கான நடவடிக்கைகள் தொடங்கி உள்ளன. தகவல் தொழில்நுட்ப விரைவுப் பாதை வேகமாக உருவாகி வருகிறது. இதன்மூலம் அறிவுசார் தொழில் நகரம் என்ற நமது கனவு உண்மையிலேயே உருவாகி வருகிறது.

இதன் வளர்ச்சி எப்படி உள்ளது என்றால், குறிப்பிட்ட திறனுடன் கூடிய ஆட்களுக்கான தேவை என்பது அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. எனவே, வளர்ந்து வரும் சந்தைக்கு அதாவது தேவைக்கேற்ப திறனுடையவர்களை உருவாக்கும் பொறுப்பு அரசைச் சார்ந்துள்ளது. அதன் காரணமாக, அரசுப் பள்ளிக் கல்வி மற்றும் தொழிற் கல்விகளில் மாற்றங்கள் கொண்டு வருவதற்கான சூழல் ஏற்பட்டுள்ளது. இதன்மூலம் திறனாளிகள் உருவாவது அதிகரிக்கும் வகையில் உள்ளது.

2004–2005ஆம் ஆண்டில் கடும் வறட்சி ஏற்பட்ட போதிலும் விவசாயத் துறையில் முன்னேற்றம் கண்டோம். 2005–2006ஆம் ஆண்டும் விவசாயத் துறையில் ஏற்படும் வளர்ச்சி நம்பிக்கையூட்டுவதாக உள்ளது. இந்த ஆண்டு நல்ல மழை பெய்யும், விவசாயம் சிறப்பாக இருக்கும் என்று நான் தீர்க்க தரிசனத்துடன் குறிப்பிட்டதாக தலைமைச் செயலாளர் நாராயணன் இங்கே குறிப்பிட்டார். நான் பழைய வரலாற்றைப் படித்துப் பார்த்துக் கூறுகிறேன். ஓர் ஆண்டை 12 மாதங்களாகப் பிரித்துள்ளோம். ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு

பெயரைக் கொண்டிருக்கிறது. வாரம் என்பது ஏழு நாட்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அதேபோன்று ஒவ்வொரு நாளுக்கும் தனித்தனி பெயர்களும் உண்டு. தமிழ் ஆண்டில் 60 ஆண்டுகள் உள்ளன. ஒவ்வொரு ஆண்டுக்கும் தனித்தனி பெயரும் உண்டு. அவை சவுமிய ஆண்டு, தாரண ஆண்டு, விஜய ஆண்டு எனப் பெயரிட்டு அழைக்கப்படுகின்றன.

நான் கடந்த காலத்தில் நடந்ததைப் பற்றிப் படித்து அறிந்ததைக் குறிப்பிட்டேன். 60 ஆண்டுகளுக்கு ஒருமுறை இந்த பார்த்திப ஆண்டு வரும் போதெல்லாம் நல்ல மழை பெய்யும், விவசாயம் பெருகும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, இதுவே எனது தீர்க்கத் தரிசனத்தின் சூட்சமம் ஆகும். எனவே, விவசாயத் துறையில் தேவைக்கு ஏற்ப மாற்றங்களைச் செய்வதில் ஈடுபட்டு வருகிறோம். மாற்றுப் பயிர்ச் சாகுபடி, பயிர்த்திறன் மேம்பாட்டுச் சாகுபடி, தரிசுநில மேம்பாடு ஆகியவை விவசாயத்துறை முன்னேற்றத்திற்கு வழிகாட்டும் திட்டங்கள் ஆகும். எதிர்பார்க்கும் கணிசமான வளர்ச்சியை அடையும் விதத்தில் ஆயிரம் பண்ணைக் குட்டைகள் அமைக்கும் திட்டமும் ஆக்கப்பூர்வமான திட்டங்களில் ஒன்றாக உள்ளது.

கடந்த காலங்களைவிட கடந்த 4 ஆண்டுகளில் சாலை, மின்சாரம், குடிநீர் ஆகிய அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டில் அதிக முதலீடு செய்யப்பட்டுள்ளது. அரசு மட்டுமே இதற்கானச் செலவுகளைச் செலவழிப்பது சிரமம். எனவே, அரசு மற்றும் தனியார் துறை பங்களிப்பில் திருப்பூர் குடிநீர்த் திட்டம், சென்னை எக்ஸ்பிரஸ்வே டைசல் திட்டம் உருவாக்கப் பட்டுள்ளன.

மனிதவள மேம்பாட்டில் நமது சாதனை மகிழ்ச்சிக்குரியது. மாநிலத்தில் குடியிருப்புப் பகுதிகள் அனைத்திலும் கல்வி வழங்கப்படும் சில மாநிலங்களில் தமிழகம் ஒன்றாகும். பள்ளிகளில் சேருவோர் எண்ணிக்கை இங்கு அதிகரித்துள்ளது. பாதியில் படிப்பை நிறுத்துவோரின் எண்ணிக்கையும் குறைந்துள்ளது.

சுகாதாரச் சேவைத் தரத்தை மேம்படுத்தவும் நடவடிக்கைகள் எடுத்து வருகிறோம். உலக வங்கி நிதியுதவியுடன் தமிழ்நாடு சுகாதாரத் திட்டம் முடுக்கி விடப்பட்டுள்ளது. 2015ஆம் ஆண்டுக்குள் மில்லினியம், மேம்பாட்டு இலக்குகளை அடைவதில் நாம் வேகமாகச் செயல்பட்டு வருகிறோம். கல்வி, சுகாதாரம் ஆகியவற்றில் தமிழகத்தை மேம்படுத்துவதில் நாம் கவனம் செலுத்த வேண்டும். இதன்மூலம் மனிதவள மேம்பாட்டில் முன்னிலை வகிக்கும் நாடுகளில் நாமும் இடம் பெற முடியும்.

கப்பலில் திசை திருப்பும் கட்டை அதாவது, சுக்கான் கருவி இல்லை என்றால், அது எப்படி கவனிக்கப்படா நிலைக்குத் தள்ளப்பட்டு விடுகிறதோ, அதைப்போன்று நிதி நெருக்கடியில் சிக்கித்தவிக்கும் அரசும் தள்ளப்பட்டு விடும்.

தமிழ்நாடு கடந்த 4 ஆண்டுகளில் நிதிநிலை விவகாரத்தில் மாபெரும் சாதனை படைத்துள்ளது. வளர்ச்சிக்குத் தொடர்புடைய முதலீடுகளில் நிதி வழங்கிடும் வகையில் நிதிநிலை சிறப்பான நிலைக்குத் திரும்பியது. 2001–2005ஆம் ஆண்டு வளர்ச்சித் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு ரூ.5,200 கோடியாக இருந்தது. 2005–2006ஆம் ஆண்டில் ரூ.9,100 கோடியாக உயர்ந்துள்ளது. இதைப்போல மாநில அரசின் மூலதன முதலீட்டின் ஒதுக்கீடு 3 மடங்காக அதிகரித்தது. 2001–2002இல் ரூபாய் 1,778 கோடியாக இருந்த மூலதன முதலீடு நடப்பு நிதியாண்டில் ரூ.4,792 கோடியாக அதிகரித்தது.

சுகாதாரம், கல்வி, போக்குவரத்து, மின்சாரம் ஆகியவை மக்களுக்கான அரசின் சேவைகளாகும். பொதுமக்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்ப இத்தகைய சேவைகளை அவர்களுக்கு அளித்து மேம்படுத்துவதன் மூலமே நாம் எதிர்பார்க்கிற முன்னேற்றத்தை எட்ட முடியும்.

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர்**
**செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்,**
**தமிழ்நாடு சமச்சீர் வளர்ச்சிக்கான**
**முன்முயற்சித் திட்டத்தை 3–8–2005 அன்று**
**தொடங்கி வைத்து ஆற்றிய**
**ஆங்கில உரையின் தமிழாக்கம்.**

# தமிழக வரலாற்றில் முதன்முறையாக வங்கி உயர் அதிகாரிகளுடன் ஆலோசனை

விவசாயிகள் மற்றும் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு
கூடுதல் கடன் வழங்க
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்தல்




வங்கி அதிகாரிகளின் சிறப்புக் கூட்டத்தில் கலந்துகொள்வதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சி விகிதம் என்பது 8.73 சதவிகிதமாக உள்ளது என்பதைத் தெரிவிப்பதிலும் நான் பெருமகிழ்வு அடைகிறேன்.

கடன் வழங்கும் திட்டம் பொருளாதார சமச்சீர் வளர்ச்சியை மேம்படுத்துவதில் பெரும்பங்கு வகிக்கிறது. மேலும், விவசாயத் துறைக்கும், விவசாயத் துறை அல்லாதவற்றுக்கும் கடன் வழங்குவதில் வங்கிகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

கிராமப் பகுதிகள் மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள ஏழை, எளிய மக்களுக்காகவும் விவசாயம் மற்றும் விவசாயம் சாராத மற்ற தொழில்களுக்கும் கடன் உதவிகளை அதிகப்படுத்த, புதிய திட்டங்களைக் கொண்டுவர வேண்டும்.

இந்த ஆண்டு, தென்மேற்குப் பருவமழை காரணமாக அணைகளில் தண்ணீர் சேமிப்பு அளவு தாராளமாக உள்ளது. இதன் காரணமாக விவசாயிகள் பெரிய அளவில் சம்பா சாகுபடிக்குத் தயாராகி உள்ளார்கள். எனவே, இந்த நேரத்தில் விவசாயிகளுக்குப் போதுமான அளவுக்குக் கடன் வழங்கவேண்டும்.

2005–2006ஆம் ஆண்டுக்கு 22,036 கோடி ரூபாய் கடன் வழங்க வங்கிகள் திட்டமிட்டிருப்பதாக அறிகிறேன். இதில் 12,345 கோடி ரூபாய் கடனை விவசாயத் துறைக்கு வழங்கவும் திட்டமிட்டிருப்பதாக அறிகிறேன். இந்தச் சமயத்தில் 2004–2005ஆம் ஆண்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட கடனை மேலும், 30 சதவிகிதம் உயர்த்தி வழங்க வேண்டும் என்றும் நான் கருதுகிறேன். இவ்வாறு உயர்த்தி வழங்குவது இன்னும் 3 ஆண்டு காலத்திற்குள் விவசாயக் கடன்களின் அளவை இரு மடங்காக உயர்த்தவேண்டும் என்ற இலக்கை எட்டுவதற்கு மிகவும் அவசியமாகும்.

## விவசாயிகளுக்குத் தாராள கடன் உதவி

விவசாயத்தைப் பாதுகாக்க மாற்றுப் பயிர்த் திட்டத்தை எனது அரசு துவங்கி இருப்பதை நீங்கள் அறிவீர்கள். குறைந்த தண்ணீரைக் கொண்டு மாற்றுப் பயிரிடும் திட்டமாகும் இது. விவசாயிகளின் வருமானத்தைப் பெருக்க மேலும் பல்வேறு முயற்சிகளை எடுத்துள்ளோம். எனவே, விவசாயிகளை ஊக்கப்படுத்த தாராளமாக வங்கிகள் கடன் உதவி வழங்க அந்தந்த வங்கிக் கிளை மேலாளர்களுக்கு உத்தரவிட வேண்டும்.

ஏழை, எளிய மக்கள் பொருளாதாரத்தில் முன்னேற்றம் காண எனது அரசு பல்வேறு புதிய சிறுகடன் திட்டங்களையும் செயல்படுத்தியுள்ளது. எனவே நீங்களும், வளர்ச்சித் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு அளிக்கவேண்டும்.



மனித ஆற்றலை ஒன்று திரட்டாத வரை ஏழ்மை மற்றும் மனித இழப்பை அகற்றுவது இயலாத காரியம் என நான் கருதுகிறேன். குறிப்பாக, அடிமட்ட நிலையிலுள்ள பெண்கள் ஏழ்மையின் சுமை தாங்க முடியாமல் துயரத்தை அனுபவிக்கிறார்கள்.

ஏழைப் பெண்களுக்கு அதிகாரம் அளித்தால்தான் அந்த நாடு உண்மையான வளர்ச்சியைக் காணமுடியும். எனவேதான் நான், 1992ஆம் ஆண்டு தமிழகத்தில் சுயஉதவிக் குழு இயக்கத்தைத் துவக்கிவைத்தேன்.

10 ஆண்டுகளுக்கு முன் நான் விதைத்த விதை, அதாவது பெண்களுக்கு அதிகாரம் கொடுக்கவேண்டும் என்ற அந்த விதை ஊன்றப்பட்டு இன்று அது, நல்ல பலனைத் தந்துள்ளது. சுயஉதவிக் குழு என்கிற இந்த இயக்கம் இன்று மிகப் பெரிய அளவில் சமுதாய இயக்கமாக வளர்ந்துள்ளது. அந்த சுயஉதவிக் குழுக்களில் 34 இலட்சத்துக்கும் மேற்பட்ட பெண்கள் இருக்கிறார்கள்.

அவர்களது வாழ்க்கையில் நம்பிக்கை பிறந்திருக்கிறது. 2 இலட்சத்துக்கும் மேற்பட்ட அந்த சுயஉதவிக் குழுவினர் இன்று 720 கோடி ரூபாய் அளவுக்கு மேலாக சேமித்திருக்கிறார்கள் என்று நினைக்கும்போது, அது எனக்கு மிகுந்த மனநிறைவைத் தருகிறது. பெண்களுக்கு வாய்ப்பு அளித்து அவர்களுக்கான வேலைவாய்ப்பையும் உருவாக்கிக் கொடுத்ததன் மூலம், சுயஉதவிக் குழு திட்டம் இன்று தலைசிறந்த உதாரணமாக விளங்குகிறது.

### மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு கடன் உதவி

இந்தத் திட்டத்தைப் பல்வேறு மாநிலங்களும் போட்டி போட்டுக் கொண்டு செயல்படுத்த முன் வந்திருக்கின்றன. மத்திய அரசும் இதனைத் தத்தெடுத்துக் கொண்டுள்ளது. எங்களது முயற்சிக்கு வங்கிகள்தான் பெருமைமிகு பங்குதாரர்கள் ஆவார்கள். இந்தத் திட்டம் வெற்றி பெற உங்களது பங்களிப்பும் முக்கியமானதாக இருந்தது. இதற்காக வங்கிகளைப் பாராட்டப் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன். இந்தத் திட்டத்திற்கு இந்த ஆண்டும் அதிக அளவில் கடன் உதவி வழங்க வேண்டும் என இந்தச் சந்தர்ப்பத்தில் உங்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு நீங்கள் அளித்து வரும் ஆதரவு ஒரு வழிப்பாதை அல்ல, சுயஉதவிக் குழுவினரும் உங்களுக்கு உதவி செய்திருக்கிறார்கள். அவர்கள், உங்களது வாடிக்கையாளர்களாக இருந்து வங்கி வளர்ச்சிக்கும் உதவி செய்கிறார்கள்.

மகளிர் சுயஉதவிக் குழுவினர் தாங்கள் வாங்கிய கடனில் 98 சதவிகிதத்துக்கு மேல் திருப்பிச் செலுத்தியிருக்கிறார்கள். இந்தக் கடன் உதவித் திட்டத்தின் மூலம் ஏழைகளுக்கு அதிகாரம் மட்டும் வழங்கவில்லை. நாட்டின் வளர்ச்சிக்கும் உதவுகிறார்கள். வர்த்தக ரீதியாகவும் நன்றாக உள்ளது.

### கந்துவட்டி முறையை ஒழித்த மகளிர் சுயஉதவிக்குழுக்கள்

சுவர்ண ஜெயந்தி கிராம சுவ்ரோஜ்கார் யோஜனா (சுயவேலைவாய்ப்புத் திட்டம்) திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடனில், வாராக் கடன் சதவிகிதம் அனைத்து மாநிலங்களையும் எடுத்துக்கொண்டால், தமிழ்நாட்டில் தான் மிகக் குறைவு. அதாவது, 0.53 சதவிகிதம் தான். இது சமீபத்தில் எடுக்கப்பட்ட ரிசர்வ் வங்கியின் ஆய்வில் தெரியவந்துள்ளது. மிகவும் பாராட்டும் வகையில் சுயஉதவிக் குழுக்கள் கடனைத் திருப்பிச் செலுத்தியிருப்பதில் நீங்கள் பூரணமாக மகிழ்ச்சி அடைய முடியும். எனவே, சுயஉதவிக் குழுவினருக்கு வழங்கும் கடனை அதிகப்படுத்த வேண்டியது அவசியமாகிறது.

மிகவும் கொடுமையான கந்து வட்டி முறையை ஒழிப்பதில், மகளிர் சுயஉதவிக் குழு இயக்கம் வெற்றி கண்டுள்ளது என்பது பெரும் சாதனையாகும். உண்மையான சுதந்திரம் என்பது பொருளாதார சமூக மேம்பாடாகும். சுயஉதவிக் குழுக்கள் வெறும் சேமிப்பு, கடன் பெறும் இயக்கமாக இல்லாமல் அவர்கள் சிறு நிறுவனங்களாக மாறவேண்டும்.

### ஏழை, எளியவர்களுக்குக் கூடுதல் வருமானம்

2001–2002ஆம் ஆண்டில் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தை நான் துவக்கிவைத்தேன். கடந்த 4 ஆண்டுகளில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம் சார்பில் 4 இலட்சத்து 97 ஆயிரம் பெண்களுக்குத் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு மேலும், கூடுதலாக 1 இலட்சத்து 50 ஆயிரம் பெண்களுக்குப் பயிற்சி அளிக்கவும் நான் உத்தரவிட்டிருக்கிறேன். இந்த சாதனைகள் முன்னோடியாக இருந்த போதிலும் பாராட்டுகள் கிடைத்துவிட்டது என்று ஓய்ந்துவிட முடியாது. இந்த வெற்றியில், மேலும் மேலும் ஏராளமான பெண்களைச் சேர்க்க வேண்டும். இதற்கென வரையறையை நிர்ணயித்து நாம் அடைய வேண்டிய இலக்கை அடையும்போது நாம் எல்லோரும் மிகவும் மகிழ்ச்சி அடைவோம் என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பொருளாதார வளர்ச்சிக்கு இன்னும் ஏராளமான சுயஉதவிக் குழுக்கள் கடன் பெற இயலவில்லை. எனவே, இந்த சுயஉதவிக் குழுக்களுக்கும் விரைந்து கடன் வழங்கவேண்டும் என்று வங்கி அதிகாரிகளை நான் கேட்டுக் கொள்கிறேன். இந்தக் கடன் பெற வங்கிக் கிளை மேலாளர்களுடன் எங்களது அதிகாரிகளும் இணைந்து செயல்படும்படி உத்தரவிட்டிருக்கிறேன்.

கிராமம் மற்றும் நகர்ப்புறங்களில் உள்ள ஏழைகளுக்கு கூடுதலாக வருமானம் வேண்டும். எனவே, சுயஉதவிக் குழுக்களில் மிகவும் ஏழை, எளியவர்களைச் சேர்க்க வேண்டும். அவர்களுக்குக் கூடுதல் வருமானம் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும். எனவேதான் இந்த ஆண்டு பெரிய அளவில் புதிதாக சுயஉதவிக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

புதிய குழுக்களை உருவாக்கவும் அவற்றுக்கு விரைவாகக் கடன் உதவிகளை வழங்கவும் நாம் உறுதி மேற்கொள்ளவேண்டும். இந்த இலக்கை அடைய தடைகளாக உள்ளவற்றை அகற்றி, செயல்பாடுகளை நிறைவேற்ற வேண்டி உள்ளது. குறைந்தபட்சம் 6 மாத காலத்திற்குள் உதவிகளைப் பெறுவதில் உள்ள விதிகளையும் மற்ற கடுமையான விதிகளையும் பரிசீலிக்க வேண்டும். நல்ல திறமையாகச் செயல்படும் சுயஉதவிக் குழுக்களுக்குக் குறைந்த காலத்தில் சுழல் நிதி மற்றும் கடன் உதவிகள் அளிப்பதன் மூலம் அவை சிறப்பாகச் செயல்பட வைக்க முடியும்.

தற்போது, சுயஉதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் கடன் உதவி 1:1.6 என்ற விகிதத்தில் மானியும் வழங்கப்படுகிறது. இதனை 1:3 என்ற விகிதத்துக்கு மாற்ற வேண்டும். சரியான பாதையில் பொருளாதார



மாணவர்களுக்கும் இலவச சைக்கிள்கள் வழங்கவும், அத்துடன் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் சுயநிதி அடிப்படையில் நடத்தப்படும் வகுப்புகளிலும், 11 மற்றும் 12ஆம் வகுப்பு பயிலுகின்ற மாணவ மாணவியருக்கும் இலவச சைக்கிள்கள் வழங்கிடவும் இவ்வாண்டு ஜூலை மாதம் நான் ஆணையிட்டேன்.

இந்த ஆணைகளின்படி, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளிலும், அப்பள்ளிகளில் சுயநிதி அடிப்படையில் நடத்தப்படும் வகுப்புகளிலும், 11 மற்றும் 12ஆம் வகுப்பு பயிலுகின்ற, ஆதிதிராவிட, பழங்குடியின, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினைச் சார்ந்த 5.75 இலட்சம் மாணவ – மாணவியர் இந்த ஆண்டு பயன் பெறுவர்.

தமிழகத்தில் மேல்நிலைக் கல்வி பயிலுகின்ற ஆதிதிராவிட, பழங்குடியின, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினைச் சார்ந்த மாணவ மாணவியருக்கு இலவச சைக்கிள்கள் வழங்கப் படுவதைப் போலவே, தாங்களும் தொடர்ந்து ஊக்கமுடன் கல்வி கற்க வகை செய்யும் விதமாகவும், எளிதில் கல்விக் கூடங்களுக்கு சென்று வர ஏதுவாகவும், தங்களுக்கும் இலவச சைக்கிள் வழங்க வேண்டும் என்று சமுதாயத்தின் ஏனைய பிரிவுகளைச் சேர்ந்த மாணவ மாணவிகள் என்னிடம் கோரிக்கை வைத்துள்ளனர்.

தமிழகத்தில் உள்ள மாணவ மாணவியர், முழு ஈடுபாட்டுடன் தொடர்ந்து மேல்நிலைக் கல்வியைக் கற்க ஊக்கம் அளிக்கும் வகையில், சமுதாயத்தின் பிரிவுகளைக் கணக்கில் கொள்ளாமல், கல்வி கற்கின்ற உற்சாகம் ஒன்றை மட்டுமே கருத்தில் கொண்டு, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளிலும் மற்றும் இப்பள்ளிகளில் சுயநிதி அடிப்படையில் நடத்தப்படும் வகுப்புகளிலும், 11 மற்றும் 12ஆம் வகுப்பு பயிலுகின்ற மாணவ – மாணவியர் அனைவருக்கும் இலவச சைக்கிள் வழங்கிட நான் தற்போது ஆணையிட்டுள்ளேன். இத்திட்டம் உடனடியாக, அதாவது நடப்புக் கல்வி ஆண்டு முதலே செயல்படுத்தப்படும்.

இந்த விரிவுபடுத்தப்பட்ட திட்டத்தின் மூலம் 11 மற்றும் 12ஆம் வகுப்பு பயின்று வரும் மேலும், 39,000 மாணவ – மாணவியர் பயன் பெறுவர். இதனால், அரசுக்கு இந்த ஆண்டு 7.02 கோடி ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும். மொத்தத்தில், நடப்புக் கல்வி ஆண்டில், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் இப்பள்ளிகளில் சுய நிதி அடிப்படையில் நடத்தப்படும் வகுப்புகளில், 11 மற்றும் 12ஆம் வகுப்பு பயிலும் 6.14 இலட்சம் மாணவ மாணவியருக்கு இலவச சைக்கிள்கள் வழங்கப்படும். இத்திட்டத்திற்காக, இந்த ஆண்டு அரசு மொத்தம் 110.52 கோடி ரூபாய் செலவு செய்யும்.

வறுமையின் காரணமாக, எந்த ஒரு மாணவ மாணவியும் மேல்நிலைக் கல்வியைப் படிக்க இயலவில்லை என்ற நிலை, தமிழ்நாட்டில் அறவே இல்லை என்ற நிலையை உருவாக்க வேண்டும் என்பதுதான் எனது தலைமையிலான அரசின் இலட்சியம் ஆகும். அந்த இலட்சியத்தின் அடிப்படையில் தான், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள் மற்றும் அப்பள்ளிகளில் சுய நிதி அடிப்படையில் நடத்தப்படும் வகுப்புகளில் பயிலும் அனைத்து மாணவ – மாணவியருக்கும் இலவச பாட புத்தகங்கள் வழங்க நான் ஆணையிட்டேன். அதே அடிப்படையில் தற்போது, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளிலும் மற்றும் இப்பள்ளிகளில் சுய நிதி அடிப்படையில் நடத்தப்படும் வகுப்புகளிலும் 11 மற்றும் 12ஆம் வகுப்புப் பயிலும் அனைத்து மாணவ மாணவியருக்கு இலவச சைக்கிள்கள் வழங்கும் திட்டத்தை இன்று நான் விரிவுபடுத்தி அறிவித்துள்ளேன்.

இலவச சைக்கிள்களைப் பெற்ற மாணவ மாணவியர் இந்தச் சைக்கிள்களைப் பள்ளிக் கல்வி முடித்த பின்னரும் பல ஆண்டுகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதே எனது விருப்பம் ஆகும். எனவே, மாணவ மாணவியர் தாங்கள் தற்போது பெற்றுள்ள இலவச சைக்கிள்களைப் பள்ளிகளில் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள ஏதுவாக, ஒவ்வொரு மேல்நிலைப் பள்ளியிலும் சைக்கிள் நிறுத்தங்கள் (Cycle Stand) ஏற்படுத்திட நான் ஆணையிட்டுள்ளேன்.

மாணவ மாணவிகள் தங்களது படிப்பை பாதியிலேயே நிறுத்தாமல் தொடர்ந்து கல்வி கற்க ஊக்கம் அளிப்பதுடன் சமுதாயத்தில் சுதந்திரமாகவும், தன்னம்பிக்கையுடனும், துணிவுடனும் செயல்பட அடித்தளம் அமைத்துத் தருகின்ற இந்த இலவச சைக்கிள் வழங்கும் திட்டம் விரிவுபடுத்தப்படுவதன் மூலம் தமிழகத்தில் பள்ளிக் கல்வி மேலும் மேம்பாடு அடையும் என்பது உறுதி.

◆ ◆ ◆



# உலகத்தரமான திறன்மிக்க கைவினைஞர்களை உருவாக்க புதிய தொழிற்பயிற்சி மையங்கள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்
அறிக்கை – 19.8.2005

தொழிற்சாலைகளின் உற்பத்தித் திறனை உயர்த்தும் வகையில் திறன் மிக்க தொழில்நுட்பக் கைவினைஞர்களை உருவாக்குவதையும், பள்ளிப்படிப்பு பயின்ற, பொருளாதாரத்தில் அடித்தட்டில் இருக்கும் இளைஞர்கள் ஆண், பெண் இருபாலருக்கும் சிறந்த பயிற்சி அளித்து, அவர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதையும், நோக்கமாகக் கொண்டு, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் பயிற்சிப் பிரிவு செயல்பட்டு வருகிறது.

தற்போது, மாறி வரும் தொழில் நுட்பத்திற்கேற்றபடியும், நவீனமயமான தொழிற்சாலைகளின் தேவைக்கேற்ற வாறும், புதிய தொழிற் பிரிவுகள் தொடங்கப்பட வேண்டியதும், ஏற்கெனவே நடைமுறையில் உள்ள பயிற்சித் திட்டங்களை நவீனகால மாற்றத்திற்கேற்ப மேம்படுத்தி, நடைமுறைப்படுத்த வேண்டியதும் மிக அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு, கடந்த நான்கு ஆண்டுகளில் இந்தத் துறையின் மேம்பாட்டிற்காக அடுக்கடுக்காக பல ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை எனது அரசு மேற்கொண்டுள்ளது. 6.60 கோடி ரூபாய் மதிப்பில் தலைமை அலுவலகக் கட்டடம் மற்றும் தொழிற்பயிற்சி நிலையக் கட்டடங்கள் கட்டப்பட்டதுடன், தொழிற்பயிற்சி நிலையக் கட்டடங்களின் சிறப்புப் பராமரிப்பிற்காக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தொழிற்சாலைகளின் நவீனத் தேவைக்கேற்றவாறு பாடத்திட்டத்தினை மாற்றி அமைத்து, அதற்கு ஏற்றவாறு நவீன இயந்திரங்கள் கொள்முதல் செய்வதற்கும், புதிய தொழிற்பிரிவுகள் தொடங்குவதற்கும் மற்றும் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கும் கணினிகள் வழங்கிடவும் 10.76 கோடி ரூபாய் வழங்கப்பட்டுப் பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

மகளிர் மேம்பாட்டைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்கு உயர்தரமான பயிற்சி வழங்குவதற்காக கணினி, மின்னணுவியல் மற்றும் தையற் பயிற்சி ஆகிய



தொழிற் பிரிவுகளுடன் மகளிருக்கு என்றே தனியாக கரூர், நாமக்கல் மற்றும் ஆண்டிபட்டி ஆகிய இடங்களில் அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களும், தஞ்சாவூர், ஒசூர் மற்றும் இராமநாதபுரம் ஆகிய இடங்களில் உள்ள அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் மகளிர் தனிப் பயிற்சி பிரிவுகளும் (women wings) மொத்தம் 2 கோடியே 78 இலட்சம் ரூபாய் மதிப்பில் எனது ஆணையின் பேரில் 1.2.2004 அன்று தொடங்கப்பட்டு, சிறப்புடன் செயல்பட்டு வருகின்றன என்பதை, இந்த நேரத்தில் நினைவு கூர்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணவ, மாணவியருக்குத் தொழிற்சாலைகளுடன் இணைந்து சிறந்த தொழில்நுட்பப் பயிற்சி அளித்து, அவர்களை திறன்மிகு கைவினைஞர்களாக உருவாக்கிட மேலும் ஒரு புதிய திட்டத்தை எனது அரசு செயல்படுத்த உள்ளது என்பதை அறிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இதன்படி, உலகத் தரமான (world class) திறன்மிக்க கைவினைஞர்களை உருவாக்கும் நோக்கத்துடன், முதற்கட்டமாக நான்கு திறன்மிகு தொழிற்பயிற்சி மையங்களை (Centres of Excellence), ஒவ்வொன்றும் ஒரு கோடியே 60 இலட்சம் ரூபாய் மதிப்பில் அம்பத்தூர், ஒசூர், கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப் பள்ளி ஆகிய இடங்களில் உள்ள அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில், அமைத்திட நான் தற்போது ஆணையிட்டுள்ளேன் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதன்படி, அம்பத்தூர் அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தில் தானியங்கி ஊர்தி (Automobile) தொழிற்பிரிவிலும், ஒசூர், கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளியில் உள்ள அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களில் உற்பத்தி மற்றும் தயாரிப்பு (Production and Manufacturing) தொழிற்பிரிவிலும் மேம்பட்ட தொழிற் பயிற்சி வழங்க இத்திறன்மிகு தொழிற் பயிற்சி மையங்கள் (Centres of Excellence) அமைக்கப்படும். இத்திறன்மிகு பயிற்சி மையங்கள் புதிய கட்டடங்களோடும், நவீன கருவிகள் மற்றும் இயந்திரங்களோடும் (Tools, Equipment and Machinery) அமைக்கப்படும்.

மாணவ, மாணவியர் இந்த உயர்தரமான பயிற்சியைப் பெறுவதன் மூலமாக உலகளாவிய அளவில் வேலைவாய்ப்பைப் பெற்றிட வாய்ப்பு ஏற்படும் என்பதுடன், அவர்கள் பல்வகைத் தொழிற்திறன் ஒருங்கே அமையப் பெற்று, அதன் மூலம் உற்பத்தித் திறன் (Productivity) உயர்ந்திட ஏதுவாகும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். □

## விவசாயப் பெருமக்களின் கோரிக்கையை ஏற்று பேச்சிப்பாறை நீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீர் திறப்பு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை
(19.8.2005)



கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள பேச்சிப்பாறை நீர்த்தேக்கத்தில் 18.8.2005 அன்றைய நிலவரப்படி 3,180 மில்லியன் கன அடி (3.180 TMC ft) தண்ணீர் இருப்பு உள்ளது. பேச்சிப்பாறை நீர்த்தேக்கத்திலிருந்து ராதாபுரம் கால்வாயில் தண்ணீர் திறந்து விடுமாறு விவசாயப் பெருமக்களிடமிருந்து எனக்குக் கோரிக்கைகள் வந்துள்ளன.

விவசாயப் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, பேச்சிப்பாறை நீர்த்தேக்கத்திலிருந்து ராதாபுரம் கால்வாயில் 19.8.2005 முதல் தண்ணீர் திறந்து விட நான் ஆணையிட்டுள்ளேன்.

இதனால், ராதாபுரம் கால்வாயின் கீழுள்ள 52 பாசன குளங்கள் மூலமாக மொத்தம் 17,012 ஏக்கர் நிலங்கள் பயனடையும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

❖ ❖ ❖

## தமிழகத்தில் பள்ளிக் கல்வியை மேலும் மேம்படுத்தும் வகையில் முக்கிய அறிவிப்புகள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை – 20.8.2005

கல்வித் துறைக்கு எனது அரசு மிகுந்த முன்னுரிமை அளித்து, மேற்கொண்ட பல்வேறு சிறப்பு நடவடிக்கைகளின் பயனாக, பள்ளிக் கல்வியில் இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாகத் தமிழகம் திகழ்கிறது. தமிழகத்தில் பள்ளிக் கல்வியை மேலும் மேம்படுத்தும் வகையில், சில முக்கிய அறிவிப்புகளை தற்போது வெளியிடுவதில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

### நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப்பள்ளிகளாகவும் தரம் உயர்வு



தமிழகத்தில் உள்ள அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் கீழ் செயல்பட்டு வரும் பள்ளிகளில் பயிலுகின்ற மாணவ, மாணவியருக்குத் தரமான கல்வியைச் சிறப்புடன் வழங்கும் வகையில், இந்த ஆண்டு அதாவது, 2005–2006ஆம் ஆண்டில் 90 நடுநிலைப்பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், 60 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்தி ஏற்கெனவே நான் ஆணை யிட்டுள்ளேன். தற்போது, மேலும் 10 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், 10 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப்பள்ளி களாகவும் நிலை உயர்த்த நான் ஆணைமிட்டுள்ளேன். இதன் மூலம் இவ்வாண்டில் (2005–2006) மட்டும் 100 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 70 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும், தரம் உயர்த்தப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

### கல்வி உறுதியளிப்பு மையங்களை ஆரம்பப் பள்ளிகளாக நிலை உயர்த்தல் மற்றும் ஆசிரியர் நியமனம்

நடப்புக் கல்வி ஆண்டில், அதாவது 2005–2006 ஆம் ஆண்டில், அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் (Sarva Shiksha Abhiyan) கீழ் நிறுவப்பட்டுள்ள 162 கல்வி உறுதியளிப்புத் திட்ட மையங்களை (Education Guarantee Scheme Centres) 1 முதல் 5 வகுப்புகள் உள்ள ஆரம்பப் பள்ளிகளாக தரம் உயர்த்தவும், இவ்வாறு தரம் உயர்த்தப்பட்ட ஒவ்வொரு ஆரம்பப் பள்ளிக்கும் தொடக்கப்பள்ளி தலைமை யாசிரியர் மற்றும் ஓர் இடைநிலை ஆசிரியர் வீதம் கூடுதல் பணியிடங்கள் ஏற்படுத்தவும் நான் ஆணை யிட்டுள்ளேன்.

### அனைவருக்கும் கல்வி திட்டத்தின் கீழ், நடுநிலைப் பள்ளிகளுக்கு கூடுதல் ஆசிரியர் பணியிடங்கள்

மேலும், அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழ் 2003–2004 ஆம் ஆண்டில், நடுநிலைப் பள்ளியாக நிலை உயர்த்தப்பட்ட 399 பள்ளிகளுக்கு, பள்ளிக்கு ஒன்று வீதம் 399 இளநிலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களையும், 2004–2005ஆம் ஆண்டில் நடுநிலைப் பள்ளியாக நிலை உயர்த்தப்பட்ட 1009 பள்ளிகளுக்கு, பள்ளிக்கு ஒன்றாக 1009 இளநிலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங் களையும் ஆக மொத்தம் 1408 இளநிலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை ஏற்படுத்த ஆணை யிட்டதுடன், தரம் உயர்த்தப்படும் 399 நடுநிலைப் பள்ளிகளிலும் உள்ள ஆரம்பப் பள்ளி தலைமையாசிரியர் பணியிடங்களை நடுநிலைப் பள்ளித் தலையாசிரியர் பணியிடங்களாக நிலை உயர்த்தவும் நான் தற்போது உத்தரவிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

### ஆரம்பப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தி கூடுதல் பணியிடங்களை உருவாக்குதல்

கிராமப்புற மாணவர்கள் தங்கள் கல்வியைத் தடையின்றித் தொடரும் வகையில், அனைவருக்கும் கல்வி திட்டத்தின் கீழ் செயல்படும் 684 ஆரம்பப் பள்ளிகளை, நடப்புக் கல்வியாண்டு, அதாவது, 2005–2006ஆம் ஆண்டு முதல் நடுநிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தவும், தரம் உயர்த்தப்பட்ட அனைத்துப் பள்ளிகளுக்கும் பள்ளிக்கு ஒன்று வீதம் 684 இளநிலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை ஏற்படுத்திடவும் நான் உத்தரவிட்டுள்ளேன் என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு, பள்ளிகள் தரம் உயர்த்தப்பட்டு, கூடுதல் பணியிடங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதன் பயனாக மாணவ, மாணவியர் தரமான கல்வி பெற ஏதுவாகும் என்பதுடன் தமிழகத்தில் பள்ளிக் கல்வி மேலும் மேம்பாடு அடையவும் உறுதுணையாக அமையும். ❖



# வேலூர் மாவட்ட குடிநீர்ப் பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்
அறிக்கை 20-8-2005

தமிழகத்தில் உள்ள நகர்ப் பகுதிகளுக்கும், கிராமப்புறக் குடியிருப்புகளுக்கும், பாதுகாக்கப்பட்ட குடிநீர், தேவையான அளவு தடையின்றி வழங்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தில் அந்தந்தப் பகுதிகளுக்கு ஏற்ற குடிநீர்த் திட்டங்களை அறிவித்து, தேவையான நிதியை ஒதுக்கி அந்தந்த மாவட்டங்களின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்து வருகிறேன்.

வேலூர் மாவட்டத்தின் குடிநீர்ப் பற்றாக்குறையைச் சமாளிக்க, 21.2.2005 அன்று ரூபாய் 1 கோடி ஒதுக்கீடு செய்து குடிநீர் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளுமாறு ஆணையிட்டேன். இதனையடுத்து, 7.4.2005 அன்று சட்டமன்றத்தில் நான் உரையாற்றும்போது, வேலூர் மாவட்டத்தில் அதன் கிழக்குப் பகுதிகளில் ஓரளவுக்கு மழை பெய்திருந்தாலும், அதன் மேற்குப் பகுதிகளில் அவ்வளவாக மழை பெய்யாததால் இந்தப் பகுதிகளில் தொடர்ந்து நிலவி வரும் குடிநீர்த் தட்டுப்பாட்டைச் சமாளிக்க, கூடுதலாக 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்க நான் ஆணையிட்டதுடன், மேலும், தேவைக்கேற்ப கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்றும் அறிவித்தேன். இதன்படி, வேலூர் மாவட்டத்தில் உள்ள கிராமப் பகுதிகளுக்கு 2.75 கோடி ரூபாயும், நகராட்சிப் பகுதிகளுக்கு 1.50 கோடி ரூபாயும் மற்றும் சிறப்பு சிற்றூராட்சிகளுக்கு 75 இலட்சம் ரூபாயும் ஆக மொத்தம் 5 கோடி ரூபாய் 11-4-2005 அன்று விடுவிக்கப்பட்டு, குடிநீர் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.



தற்போது, வேலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பகுதி மக்களுக்கும் போதிய அளவில் குடிநீர் தடையின்றி வழங்கப்படுவதை உறுதிப்படுத்தும் வகையில், குடிநீர் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள மேலும் 4 கோடி ரூபாய் வழங்கி நான் உத்தரவிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதன்படி, வேலூர் மாவட்டத்தில் உள்ள கிராமப் பஞ்சாயத்துப் பகுதிகளுக்குக் குடிநீர் வழங்க 1 கோடியே 95 இலட்சம் ரூபாய் சிறப்புச் சிற்றூராட்சிப் பகுதிகளுக்குக் குடிநீர் வழங்க 35 இலட்சம் ரூபாய், நகராட்சிப் பகுதிகளுக்குக் குடிநீர் வழங்க 1 கோடியே 70 இலட்சம் ரூபாய் ஆக மொத்தம் 4 கோடி ரூபாய் இயற்கை இடர்ப்பாடு நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும். இதனையும் சேர்த்து வேலூர் மாவட்டத்தில் குடிநீர் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்வதற்காக மொத்தம் 10 கோடி ரூபாய் வழங்கி நான் உத்தரவிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிதியைப் பயன்படுத்தி வேலூர் மாவட்டத்தில் குடிநீர்த் தட்டுப்பாட்டைச் சமாளிக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு மாவட்ட நிருவாகத்திற்கு நான் உத்தரவிட்டுள்ளேன்.

• • •

# கால்நடை மேம்பாட்டுக்கு ரூ.59.79 கோடியில் திட்டங்களை நிறைவேற்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவு

மனித இனம் செழித்திட பேருதவி புரிகின்ற கால்நடைகளின் நலன் பேணுவதில், தனி அக்கறை கொண்ட அரசாக எனது அரசு திகழ்ந்து வருகிறது. கிராமப்புற பொருளாதாரம் மேம்படுவதில் கால்நடைகளின் பங்கு மிக மிக இன்றியமையாததாகும் என்பதால், மாநிலத்தில் உள்ள கால்நடைகள் மற்றும் கோழிகள் உற்பத்தித் திறனை மேம்படுத்தவும், தமிழகத்தில் உள்ள அனைத்து கால்நடைகளுக்கும் தேவையான மருத்துவ வசதிகளை அளிக்கவும் எனது அரசு, மிகச் சிறப்பான நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

கால்நடைகளின் நலன் பேண, கடந்த நான்கு ஆண்டுகளில் இவ்வாறு மேற்கொண்ட தீவிர நடவடிக்கைகளின் பயனாக, எனது அரசு பல வியத்தகு சாதனைகளைப் படைத்துள்ளது. குறிப்பாக கால்நடைகளுக்கு ஏற்படும் வெக்கைநோய் (RINDERPEST) என்னும் கொடிய தொற்றுநோய்த் தமிழகத்தில் அறவே ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை மிகுந்த பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

## மேய்ச்சல் நிலங்கள் பராமரிப்பு

கிராம மக்களின் பொருளாதாரம் மேம்பாடு அடையும் வகையில் கால்நடைகள் பல்கிப் பெருகிட அடிப்படையாக அமைவது கிராமப்புறங்களில் உள்ள மேய்ச்சல் நிலங்களே ஆகும். தமிழ்நாட்டில் உள்ள மேய்ச்சல் நிலம் மற்றும் இதர மேய்ச்சல் புல்வெளிகள் ஆண்டாண்டு குறைந்து கொண்டே போவதைக் கருத்தில் கொண்டு, அவற்றைப் பாதுகாக்கும் வகையில், மேய்ச்சல் நிலத்தை வேறு எந்த வகை நிலமாகவும் மாற்றக்கூடாது என்று, 2001ஆம் ஆண்டில் ஒரு தடை ஆணையை நான் பிறப்பித்தேன். மேலும், கிராமப்புற மேய்ச்சல் நிலங்களை வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் மேம்படுத்திடவும் ஆணையிட்டேன். இதன்படி, 1 கோடியே 68 இலட்சம் ரூபாய் செலவில் கிராமப்புற மேய்ச்சல் நிலங்கள் மேம்படுத்தப் பட்டதுடன், 2,725 ஏக்கர் நிலப்பரப்பில் தீவனப்புல் விதைகள் விதைக்கப்பட்டு மேய்ச்சல் நிலங்கள் பராமரிக்கப்பட்டுள்ளன. இப்பணியில், மகளிர் சுயஉதவிக் குழுக்கள் பயன்படுத்தப்பட்டன என்பதையும், அதன் மூலம் கிராமப்புற மகளிர் பயன் பெற்றனர் என்பதையும் தெரிவிப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

மேலும், கால்நடைகளுக்கு குடி தண்ணீர் வசதி செய்து தரவும், பசும்புல் தீவன உற்பத்தியைப் பெருக்கிடவும், இதுவரை இல்லாத அளவுக்கு, 24 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதுவன்றி, கால்நடை நிலையங்களில் 5 கோடியே 45 லட்சம் ரூபாய் செலவில் 784 ஆழ்குழாய் கிணறுகள் அமைக்கப்பட்டு கால்நடைகளுக்கு குடிநீர் வசதி ஏற்படுத்தப்பட்டு உள்ளது. இதன் மூலம், வறட்சிக் காலங்களிலும் கால்நடைகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கிடும் வகையில் நீர்நிலைத் தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன.

2001-ஆம் ஆண்டில் நான் ஆட்சிப் பொறுப்பேற்றதும், அதற்கு முன்னால் 5 மாவட்டங்களில் மட்டும் செயல்படுத்தப்பட்டு வந்த டேனிடா திட்டத்தைக் கால்நடைகளின் விரிவான மேம்பாடு கருதி, மாநிலத்தின் ஏனைய அனைத்து மாவட்டங்களிலும் பரவலாக செயல்படுத்த ஆணையிட்டேன். இந்த டேனிடா பிரதிபலிப்புத் திட்டத்தின் (Replication of Danida Project) வாயிலாக, இதுவரை 3 கோடியே 36 இலட்சம் ரூபாய் செலவில் 5,161 தொடர்புப் பணி தம்பதிகள் (Link Worker Couples) தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு கால்நடைப் பராமரிப்பு முறைகள் பற்றிய பயிற்சி அளிக்கப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டில் 1 கோடியே 75 இலட்சம் ரூபாய் செலவில் மேலும் 3,482 தொடர்புப் பணி தம்பதிகளுக்குப் பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

அதிக அளவில் பால் தருகின்ற தரம் உயர்ந்த பசுக்கள் மற்றும் எருமைகளை இனவிருத்தி செய்யும் வகையில், கால்நடைகளுக்கு செயற்கைமுறைக்



கருவூட்டல் திட்டத்தை, 20.28 கோடி ரூபாய் செலவில் எனது அரசு செயல்படுத்தியது. மேலும், கால்நடை வளர்ப்போரின் வீடுகளுக்கே சென்று அவர்களது கால்நடைகளுக்கு கருவூட்டல் பணி மேற்கொள்ளும் திட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டது. இவற்றின் பயனாக, தமிழகத்தில் வருடத்திற்கு 44 இலட்சம் செயற்கை முறைக் கருவூட்டல் நடைபெற்று இந்தியாவிலேயே முதலிடத்தைத் தமிழகம் பெற்றுள்ளது. கால்நடைப் பாதுகாப்புத் திட்டத்தின் மூலம், கிராமப்புறத்தில் கால்நடை மருத்துவ வசதி இல்லாத கிராமங்களுக்கே சென்று செயற்கைமுறைக் கருவூட்டல், குடற்புழு நீக்கம், தடுப்பூசிப் பணிகள் மற்றும் தேவையான அனைத்து மருத்துவ வசதிகளையும் இலவசமாக அளிக்கும் வகையில், மாநிலம் முழுவதும் 21,084 சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, 2 கோடியே 47 இலட்சம் கால்நடைகள் பயனடைந்துள்ளன. இதற்கென 9 கோடியே 93 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. மேலும், தீவிர தடுப்பூசி முகாம்கள் மூலம், 25 கோடி ரூபாய் செலவில் 2 கோடியே 17 இலட்சம் கால்நடைகளுக்குத் தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

தமிழகத்தின் வரலாற்றிலேயே இல்லாத அளவுக்கு 316 கால்நடை மருந்தகங்கள் புதிதாகத் தொடங்கப் பட்டுள்ளன. மேலும், 250 புதிய கால்நடை உதவி மருத்துவர்களைப் பணி நியமனம் செய்திடவும் நான் ஆணையிட்டு இதற்கானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

கிராமப்புறங்களில் கால்நடைச் சந்தைகள் நடைபெறும் இடங்களில் கால்நடைகள் திடீரென சுகவீனம் அடையும்போது, உடனடியாகச் சிகிச்சை அளித்திட எவ்வித வசதியும் அந்தச் சந்தைகளில் இருப்பதில்லை என்பதை அறிந்து, தேவையான சிகிச்சைகளை அங்கேயே உடனுக்குடன் வழங்கும் வகையில் மாநிலத்திலுள்ள முக்கியச் சந்தைகளில் கால்நடை முதலுதவி மையம் அமைக்கப்பட வேண்டும் என்று நான் 2004–ஆம் ஆண்டு மே மாதத்தில் ஆணையிட்டேன். இதன்படி, 2004–2005–ஆம் ஆண்டில் ஒவ்வொரு மையமும் 2 இலட்சம் ரூபாய் மதிப்பில் 10 சந்தைகளில் முதலுதவி மையங்கள் கட்டி முடிக்கப்பட்டன. இவ்வாண்டு, அதாவது, 2005–2006–ஆம் ஆண்டில் மேலும் 10 சந்தைகளில் முதலுதவி மையங்கள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வளர்ந்து வரும் அறிவியல் யுகத்திற்கேற்ப விரைந்து செயல்பட துறையின் கண்காணிப்பு அலுவலகங்கள் அனைத்தும் கணினிமயமாக்கப்பட்டுள்ளன.

**கிராமப் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் எனது அரசு மேற்கொண்டு வருகின்ற இந்தச் சீரிய நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக கால்நடைகளின் நலனை மேலும் சிறப்புடன் பேணிக் காக்கும் வகையில், 59 கோடியே 79 இலட்சம் ரூபாய் மதிப்பில், தமிழகத்தில் உள்ள கால்நடை மருத்துவமனைகள், கால்நடை மருந்தகங்கள் மற்றும் களப்பணி கண்காணிப்பு மையங்கள் முதலானவற்றின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த நான் தற்போது ஆணையிட்டுள்ளேன் என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டம், நபார்டு வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும்.**

**நவீன உபகரணங்கள்**

இதன்படி, 48 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பில், 13 கால்நடை மருத்துவமனைகள், 89 கால்நடை மருந்தகங்கள், 23 களப்பணி கண்காணிப்பு மையங்கள், 9 உறைவிந்து வங்கிகள், 97 சிகிச்சைக் கூடங்கள், 152 உள்நோயாளிகள் பிரிவுகள், 19 மாவட்ட தலைமையிட கால்நடை மருத்துவமனைகளில் கதிரியக்க இருட்டறைகள், 4 மண்டல கால்நடை நோய் கண்டறியும் ஆய்வுக்கூடங்கள், 4 கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவுகள் மற்றும் 2 கோழி நோய் கண்டறியும் ஆய்வுக் கூடங்கள் ஆகியவற்றிற்கான புதிய கட்டடங்கள் அனைத்து அடிப்படை வசதிகளுடன் கட்டப்படும். 2 கோடியே 24 இலட்சம் ரூபாய் மதிப்பில், இவற்றுக்குத் தேவையான அனைத்து அறைகலன்களும் வழங்கப்படும்.

மேலும், சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் செயல்பட்டு வரும் பன்முக மருத்துவமனைகளில் அல்ட்ரா சவுண்ட் மற்றும் லாப்ராஸ்கோப் கருவிகள் 30 இலட்சம் ரூபாய் மதிப்பில் நிறுவப்படும். இத்துடன், அனைத்துக் கால்நடை நிலையங்கள் மற்றும் நோய் கண்டறியும் ஆய்வுக் கூடங்கள் ஆகியவற்றுக்குத் தேவையான அனைத்து உபகரணங்களும் 13 கோடியே 45 இலட்சம் ரூபாய் மதிப்பில் வழங்கப்படும்.

கால்நடைகளின் நோய் தீர்த்து, அவற்றின் நலனைப் பேணிக் காக்கும் கால்நடை மருத்துவமனைகள், கால்நடை மருந்தகங்கள், மற்றும் களப்பணி கண்காணிப்பு மையங்கள், முதலானவற்றின் உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படுவதன் மூலம் கால்நடைகளை வளர்க்கும் கிராமப்புற மக்கள் குறிப்பாக, சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த மகளிரும், விவசாயத் தொழிலாளர்களும் மற்றும் சிறு/குறு விவசாயிகளும் பெரிதும் பயனடைவார்கள் என்பதுடன் அவர்களது பொருளாதாரம் மேம்பட்டு வாழ்க்கைத் தரம் உயரும் என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

– மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை
– 21.8.2005

* * *

# சென்னையில் புதிதாக 115 ஆட்டோ நிறுத்தங்கள்





**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 17.8.2005 அன்று தலைமைச் செயலகத்தில், சென்னை மாநகரின் பல்வேறு குடியிருப்புப் பகுதிகளில் புதிதாக 115 ஆட்டோ நிறுத்தங்கள் அமைப்பதற்கான அரசிதழ் அறிவிக்கைகளை வழங்கினார்கள்.

ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கு வாழ்க்கை அளிக்கின்ற ஆட்டோ வாகனப் போக்குவரத்தை மேம்படுத்தவும், அவ்வாகனங்களை ஓட்டுகின்ற தொழிலாளர்கள் வாழ்க்கை மேம்படவும், ஆட்டோ வாகனத் தொழிலாளர்கள் விடுத்த கோரிக்கைகளை ஏற்று, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், கடந்த 26.5.2005 அன்று, பல்வேறு மேம்பாட்டுத் திட்டங்களை அறிவித்தார்கள். இதன்படி, 7 ஆண்டுகளுக்கு மேலான ஆட்டோ வாகனங்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு விதிக்கப் படும் பசுமை வரியை 500 ரூபாயிலிருந்து 200 ரூபாயாகக் குறைத்தும், 5,000 புதிய ஆட்டோ அனுமதி வழங்கியும், பள்ளி செல்கின்ற 16 வயதுக்குட்பட்ட சிறுவர், சிறுமியர் 5 பேர் வரையில் ஒரு ஆட்டோவில் பயணம் செல்ல அனுமதித்தும், ஆட்டோ உரிமையாளரே ஓட்டுநராக இருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் மானியத்துடன் கூடிய கடன் உதவித் திட்டத்தைச் செயல் படுத்தவும் ஆணையிட்டார்கள்.

மேலும், சென்னை மாநகரில் பெருகிவரும் குடியிருப்பு எண்ணிக்கைகளைக் கருத்தில் கொண்டு, அவற்றின் அருகே, புதிய ஆட்டோ நிறுத்தங்களை அமைத்திட அனுமதி அளிக்க வேண்டும் என்ற கோரிக்கையைப் பரிவுடன் பரிசீலித்து, போக்குவரத்துக்கு இடையூறு இல்லாத வகையில், ஆட்டோ நிறுத்தங்கள் அதிகம் தேவைப்படும் இடங்களை ஆய்வு செய்து அவற்றிற்கு அனுமதி அளிக்க உத்தர விட்டதுடன், இவ்வகையில் சென்னையில் சுமார் 100 புதிய ஆட்டோ நிறுத்தங்கள் அமைத்திட அனுமதி வழங்கப்படும் என்றும்



# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் சுதந்திரத் திருநாள் வாழ்த்துச் செய்தி

உலக நாடுகளின் திலகமாய் விளங்கும் உன்னத பூமியாம் நமது பாரதத்தில், சுதந்திர சொர்க்கம் உதித்த திருநாள் இந்நாள்! இந்தத் திருநாளில் எனதருமைத் தமிழக மக்கள் அனைவருக்கும் எனது இதயம் கனிந்த சுதந்திரத் திருநாள் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

**'பாருக்குள்ளே நல்ல நாடு'** என்ற புகழினைப் பெற்ற நமது பாரதம், அந்நிய ஏகாதிபத்திய இருளில், வீழ்ந்து கிடந்த வேளையில்,

**"என்று எமது அன்னை கை விலங்குகள் போகும்?**

**என்று எமது இன்னல்கள் தீர்ந்து பொய்யாகும்?"** என்று ஏங்கிய ஏக்கம் போக்க எழுந்த நாள் தான் இந்தச் சுதந்திரத் திருநாள். இந்த எழுச்சித் திருநாளைக் கண்ணாரக் காண்பதற்கு முன், விழி மூடி விட்ட வீரர்கள் எத்தனை பேர்! தியாகிகள் எத்தனை பேர்!

அந்தப் பெருமக்கள் கனவில் கண்ட காட்சியை, நனவில் காணும் பேறு பெற்றவர்கள் நாம்!

பெற்ற சுதந்திரத்திற்குத் தன்னை முற்றிலும் தகுதியாக்கிக் கொள்ள வேண்டியது இன்றைய இந்தியர் ஒவ்வொருவரது கடமையாகும்.

அன்னை நாடு விடுதலை பெற்று அரை நூற்றாண்டுக்கு மேல் ஆன போதிலும், ஏழ்மை, இந்தியாவில் இன்னும் இருந்து கொண்டுதான் இருக்கிறது!

'ஏழ்மை கொண்ட மனிதர் என்பது இந்தியாவில் இல்லையே!' என்று நாம் மகிழ்ச்சிப் பண் பாட வேண்டும்! அந்த நாள் வர வேண்டும்!

அதற்கான முயற்சிகளில் முனைப்போடு ஈடுபட்டு வருகிறது எனது தலைமையிலான தமிழக அரசு! முற்போக்குத் திட்டங்களை, மக்கள் நலனை முன்னிறுத்திச் செயல்படுத்தி வரும் தமிழக அரசு தனது இலட்சியத்தில் வெற்றி பெற்றே தீரும். இந்த உறுதிப்பாட்டுக்கு உள்ளார்ந்த வலிமை அளிப்பது, என் அன்பிற்கினிய தமிழ் மக்களாகிய உங்களின் உறுதுணை தான்!

உங்கள் அனைவருக்கும் என் உளமார்ந்த சுதந்திரத் திருநாள் வாழ்த்துகளை மீண்டும் ஒரு முறை உரித்தாக்கிக் கொள்வதில் உவகை கொள்கிறேன்.

**வாழ்க பாரதம்! வளர்க தமிழகம்!**



# மக்களே தேசம்! அவர்களது நலனே நமது இலட்சியம்!

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்

தமிழக மக்களின் மனங்களிலும், முகங்களிலும் ஒரு மகிழ்ச்சிப் பிரவாகம் பொங்கிப் பெருகுவதை, இன்று நாம் கண்கூடாகக் காண்கிறோம். கடந்த ஆண்டுகளில், தமிழகம் கண்ட வறட்சி நிலை மாறி, காவிரி நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் பெய்த பெருமழையின் காரணமாக, மேட்டூர் அணை கிட்டத்தட்ட நிரம்பி காவிரி டெல்டா மாவட்டங்களில், சம்பா பயிர் சாகுபடி செய்திட தண்ணீர் திறந்துவிடப்பட்டுக் காவிரி நதியில் தண்ணீர் இரு கரை தொட்டு ஓடிக் கொண்டிருக்கிறது. இதனால் காவிரி டெல்டா மாவட்டங்களில், சம்பா சாகுபடியில் மகத்தான மகசூல் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தொழில் முதலீட்டுக்கு எல்லா வகையிலும் உகந்த மாநிலம் தமிழகமே என்ற நிலை உருவாகி வெகுவான வெளிநாட்டு முதலீடுகளும், நிறைவான உள்நாட்டுத் தொழில் வளமும் பெருகிக் கொண்டிருக்கிறது. முந்தைய ஆட்சி விட்டுச் சென்ற நிதிச் சீரழிவு, இயற்கையால் ஏற்பட்ட வறட்சி நிலை போன்ற இன்னல்களை எல்லாம் தாண்டித் திறன்மிகு நடவடிக்கைகளாலும், திறமைமிகு நிருவாகத்தாலும், தமிழகத்தின் பொருளாதாரம் மிக வேகமாக



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை, 30.8.2005 அன்று தலைமைச் செயலகத்தில், பி.எம்.டபிள்யு கார் நிறுவனத்தின் சார்பில், அதன் வாரிய உறுப்பினர் டாக்டர் நார்பெர்ட் ரெய்த்தோஃபெர் தலைமையிலான 8 உறுப்பினர் குழு சந்தித்துப் பேசியது. அப்போது, சென்னையில் செயல்படுத்தப்படவுள்ள பி.எம்.டபிள்யு கார் நிறுவனத்தின் புதிய திட்டம் பற்றி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் அக்குழுவினர் விளக்கினார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 26.5.2005 அன்று அறிவித்திருந்தார்கள்.

இந்த உத்தரவின்படி, சென்னை மாநகரக் காவல் துறையினர் பொது மக்களின் தேவை மற்றும் போதிய இடவசதி ஆகியவற்றின் அடிப்படையிலும், போக்குவரத்திற்கு இடையூறு இல்லாத வகையிலும் ஆட்டோ நிறுத்தங்களை அமைத்திட ஆய்வு மேற்கொண்டனர். இந்த ஆய்வின் அடிப்படையில், சென்னை மாநகரில் 115 இடங்களில் ஆட்டோ நிறுத்தங்கள் அமைத்திட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், ஆணையிட்டார்கள்.

இவ்வாறு ஆட்டோ நிறுத்தங்கள் அமைப்பதற்கான அரசிதழ் அறிவிக்கைகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 17.8.2005 அன்று தலைமைச் செயலகத்தில், அந்தந்த ஆட்டோ நிறுத்தங்களைச் சேர்ந்த ஆட்டோ ஓட்டுநர்களிடம் வழங்கினார்கள்.

சென்னை உயர்நீதிமன்றம் – பெருநகர் போக்குவரத்துக் கழகப் பேருந்து நிலையம், இராஜாஜி சாலை – கடற்கரை இரயில் நிலையம் எதிரில், ஆனை நெடுஞ்சாலை – சாமிப்பிள்ளை தெரு சந்திப்பு, பெரம்பூர் பேரக்ஸ் ரோடு – ஜோன்ஸ் ரோடு சந்திப்பு, அரும்பாக்கம் என்.எஸ்.கே.நகர், கீழ்ப்பாக்கம் செக்கரடேரியட் காலனி 4ஆவது தெரு, கோயம்பேடு காவல் நிலையம் எதிரில், கோயம்பேடு ஹாரிங்டன் டவர் அருகில், தாம்பரம் பேருந்து நிலையம், தாம்பரம் தடம் 70 பேருந்து நிறுத்தம் அருகில், பல்லாவரம் ஜி.எஸ்.டி.சாலை, சாத்தாங்காடு சத்தியமூர்த்தி நகர், கோடம்பாக்கம் அக்பராபாத் இரண்டாவது தெரு, இராஜா அண்ணாமலைபுரம் 6 மற்றும் 7 குறுக்குச் சாலை சந்திப்பு, ஹோமா மருத்துவமனை அருகில் – ஒய்.எம்.சி.ஏ. அருகில் ஆகிய 15 ஆட்டோ நிறுத்தங்களுக்கான அரசிதழ் அறிவிக்கைகளை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், நேரில் வழங்கினார்கள். மீதமுள்ள 100 ஆட்டோ நிறுத்தங்களுக்கான அரசிதழ் அறிவிக்கைகளும் அந்தந்த ஆட்டோ நிறுத்தங்களைச் சார்ந்த ஆட்டோ ஓட்டுநர்களிடம் வழங்கப்பட்டது.

தாங்கள் விடுத்த கோரிக்கையை ஏற்று, ஆட்டோ நிறுத்தங்கள் அமைத்திட அனுமதி அளித்து, அதற்கான அரசிதழ் அறிவிக்கைகளை வழங்கிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களுக்கு, ஆட்டோ ஓட்டுநர்கள் தங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர். *

# 540 முறைசாரா சிறுபாசன ஏரிகளைப் புனரமைக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணை



மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்
அறிக்கை – 23.8.2005

தமிழகத்தில் நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்திடவும், அனைத்து ஏரிகளிலும் சிறந்த முறையில் நீரைத் தேக்கிடவும், மாநிலத்தில் உள்ள ஏரிகளைத் தூர் வாரி, வரத்துக் கால்வாய்களை ஆழப்படுத்தி, ஏரிகளைச் சீரமைத்திடத் தொடர்ந்து எனது அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

இதன் அடிப்படையில்தான், வேலூர், தூத்துக்குடி, விருதுநகர், சிவகங்கை, புதுக்கோட்டை, இராமநாதபுரம், திருவண்ணாமலை, விழுப்புரம், பெரம்பலூர் மற்றும் தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் நபார்டு வங்கி நிதியுதவியுடன், 14 நீர்ப்பாசனத் திட்டங்களை மொத்தம் 44 கோடியே 82 இலட்சம் ரூபாய் மதிப்பில் செயல்படுத்த 9.7.2005 அன்று, நான் உத்தரவிட்டேன்.

இதனைத் தொடர்ந்து, தற்போது, தமிழகத்தில் நிலத்தடி நீர்வளத்தைப் பெருக்கவும், விவசாய நிலங்களுக்குப் பாசன வசதியை மேம்படுத்தவும், விவசாய உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் உள்ள 540 முறை சாரா சிறு பாசன ஏரிகளை, அதாவது Non-System (Rainfed) Minor Irrigation Tanks தூர்வாரி, புனரமைத்து, மேம்படுத்தும் பணிகளை மேற்கொள்ள, நான் தற்போது உத்தரவிட்டுள்ளேன் என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மொத்தம் 130.52 கோடி ரூபாய் மதிப்பில் இப்பணிகள் நிறைவேற்றப்படும். இந்தப் பணிகள் மாநில நிதி மற்றும் நபார்டு வங்கி நிதியுதவியுடன் நிறைவேற்றப்படும்.

இதன்படி, சென்னை, நீலகிரி, கன்னியாகுமரி, திருவாரூர் ஆகிய மாவட்டங்களைத் தவிர்த்த ஏனைய 26 மாவட்டங்களிலும் உள்ள 290 முறை சாரா சிறு பாசன ஏரிகள் (Non-System Minor Irrigation Tanks) 62.50 கோடி ரூபாய் மதிப்பில் தூர்வாரி, புனரமைத்து மேம்படுத்தப்படும். இதன் மூலம், இந்த மாவட்டங்களில் உள்ள 82,408 ஏக்கர் நிலங்களின் பாசன வசதி உறுதி செய்யப்படும்.

மேலும், காஞ்சிபுரம், தருமபுரி, திண்டுக்கல், விருதுநகர், மதுரை, நாகப்பட்டினம், சிவகங்கை, புதுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி, கடலூர், திருநெல்வேலி, திருவண்ணாமலை, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, வேலூர், திருவள்ளூர், விழுப்புரம், பெரம்பலூர், கரூர், தேனி, நாமக்கல் மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய 23 மாவட்டங்களில் 61,986 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் வகையில், இம்மாவட்டங்களில் உள்ள 250 முறை சாரா சிறு பாசன ஏரிகளை 68.02 கோடி ரூபாய் மதிப்பில் தூர்வாரி, புனரமைத்து மேம்படுத்தும் பணிகளை உடனடியாக மேற்கொள்ளவும் நான் ஆணையிட்டுள்ளேன்.

விவசாயப் பெருங்குடி மக்கள் மிகவும் பயன்பெறும் வகையில் நான் அறிவித்துள்ள இப்பணிகள் அனைத்தையும் சிறப்பான முறையில், விரைவில் செய்து முடித்திட வேண்டும் என்று பொதுப்பணித்துறை அதிகாரிகளுக்கு நான் தக்க ஆணைகள் பிறப்பித்துள்ளேன். ♦




வளர்ந்து வருகிறது. தமிழகத்தின் வளர்ச்சி விகிதம் நாட்டின் ஒட்டுமொத்த, வளர்ச்சி விகிதத்தை விஞ்சி மாநில மொத்த உற்பத்தி மதிப்பு 8.73 சதவிகிதம் என்ற அளவு உயர்ந்துள்ளது. தமிழகம், இவ்வாறு வளர்ச்சிப் பாதையில் பீடுநடை போடுவதால், மனம் நிறைந்து மகிழ்ந்து கொண்டிருக்கும் தமிழக மக்களின் பூரிப்பை எண்ணி, அதனைச் சாதிக்க எனக்கு வாய்ப்பளித்தமைக்கு எனது நன்றியைக் காணிக்கையாக்கி, இரட்டிப்பு மகிழ்ச்சியுடன் நமது சுதந்திரக் கொடியை இன்று நான் ஏற்றி வைத்துள்ளேன்.

உயர்ந்த கோட்டைக் கொத்தளம்! அதில் ஓங்கி வளர்ந்த கம்பம்! அந்தக் கம்பத்தின் உச்சியில் பட்டொளி வீசிப் பறக்கும் பாரத மணிக்கொடி!

காற்றோடு கைகுலுக்கிக் கொண்டு ககனப் பரப்பிலே, கம்பீரமாகப் பறக்கிறது தேசியக் கொடி!

இந்த மூவண்ணக் கொடிக்கு உயிர்த் துடிப்பைத் தருவது கடற்காற்றா? இல்லை! தியாகிகளின் மூச்சுக் காற்று!

நாம் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க வேண்டும் என்பதற்காகத் தங்களது மூச்சுக் காற்றை நிறுத்திக் கொண்டார்களே தியாகச் செம்மல்கள் – அவர்கள் விழி மூடிவிட்ட பின்னால் காற்றோடு காற்றாய்க் கலந்து விட்டார்கள்!

அந்தக் காற்றே தேசியக் கொடிக்குத் துடிப்பைத் தருகிறது.

அந்தக் காற்றே சுதந்திரப் பாடத்தை நமக்குச் சொல்கிறது!

அந்தச் சுதந்திரப் போராளிகளுக்கு எல்லாம் நாம் நமது வீர வணக்கத்தைச் செலுத்துகின்ற நாள் – இந்நாள்!

"சுதந்திரம்" என்னும் சொல்லை 'உரிமை' என்று அர்த்தப்படுத்திக் கொள்வதை விட, 'கடமை' என்று பொருள்படுத்திக் கொண்டால் தான் பெற்ற சுதந்திரத்துக்குப் பெருமை! அதைப் பெற்றுத் தந்தவர்களுக்கும் மரியாதை!

நமது கடமை இரு வகைப்பட்டது. ஒன்று – எதிர்த்துப் போராட வேண்டிய கடமை! இன்னொன்று – ஏற்று நடத்த வேண்டிய கடமை!

அன்று நம் முன்னோர் எதிர்த்துப் போராட வேண்டியிருந்தது – அந்நியர் ஆதிக்கத்தை மட்டும் தான்! இன்று எதிர்த்துப் போராட வேண்டியவை – தீவிரவாதம், பயங்கரவாதம், பிரிவினைவாதம் என்று பல திறப்பட்டவை! அன்றைவிட நாம் எதிர்த்துப் போராட வேண்டியவை இன்று எண்ணிக்கையில் அதிகம். இதை உணர்ந்து செயல்பட வேண்டியது நமது முதற் கடமை.

நமது இரண்டாவது கடமை – ஏற்று நடத்த வேண்டிய கடமை!

மக்களுக்காக, ஒரு வளர்ச்சிப் புரட்சியை நாம் ஏற்று நடத்த வேண்டும். இது ஆக்கப்பூர்வமான கடமை! இந்தக் கடமையை நாம் உடனே செய்தாக வேண்டும்! என்னைப் பொறுத்தவரை, வளர்ச்சி என்பது மக்களுக்குப் புதிய சந்தர்ப்பங்களை உருவாக்குதல் மற்றும் வாய்ப்புகளை விரிவுபடுத்துதல் என்பதாகும்.

உங்கள் அன்புச் சகோதரியின் அரசு செயல்படுத்தி வரும் ஒவ்வொரு திட்டமும் இந்தக் கடமையை முன்னிறுத்தியே அமைந்துள்ளது. எனவேதான், முதன்மைத் துறையான வேளாண்மை மற்றும் வேளாண்மை சார்ந்த தொழில்கள், ஊரக வளர்ச்சி மற்றும் மனித வள மேம்பாடு ஆகியவற்றிற்கு எனது அரசு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகிறது.

மனித வள மேம்பாட்டிற்கு முக்கியமாகத் திகழ்வது கல்வியே என்ற காரணத்தால், கல்வித் துறைக்கு எனது அரசு முன்னுரிமை அளித்து வருகிறது. எனவேதான், தமிழகத்திலுள்ள அனைத்துக் குடியிருப்புகளுக்கும், 1 கிலோ மீட்டர் தொலைவுக்குள் தொடக்கப் பள்ளி வசதியும்; 3 கிலோ மீட்டர் தொலைவுக்குள் நடுநிலைப்பள்ளி வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கடந்த நான்கு ஆண்டுகளில், 1,112 பள்ளிகள் புதிதாகத் தொடங்கப்பட்டதுடன், 2,106 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 385 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 395 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப் பட்டுள்ளன. அரசுப் பள்ளிகள் மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவ மாணவியருக்கும் இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்கப்படுவதுடன், 11 மற்றும் 12ஆம் வகுப்புப் பயிலும்



ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபைச் சார்ந்த மாணவ மாணவியருக்கு இலவச சைக்கிள்களும் வழங்கப்படுகின்றன. இதுவன்றி, இலவச சத்துணவு, இலவச சீருடை, கல்வி உதவித் தொகை ஆகியவையும் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், 720 கோடி ரூபாய் செலவில் வகுப்பறைக் கட்டடங்கள், ஆய்வுக் கூடங்கள், குடிநீர், கழிப்பறை போன்ற அடிப்படை வசதிகள் ஏற்படுத்த, பணிகள் மேற்கொள்ளப்பட்டுப் பெரும்பாலான பணிகள் முடிவடைந்துள்ளன. இதன் காரணமாகத் தான், தமிழகம் இன்று கல்வித் துறையில் முன்னிலை மாநிலமாகத் திகழ்கிறது.

பிணியற்ற சமுதாயத்தை உருவாக்கவும், குறைவற்ற செல்வமென நோயற்ற வாழ்வை, தமிழக மக்களுக்கு வழங்கிடவும், என்னுடைய அரசு வகுத்துத் தந்த திட்டங்களும், பகுத்துச் செயல்படுத்திய பணிகளும், தொகுத்து மேற்கொண்ட நடவடிக்கைகளும் ஏராளம்.

இதன் காரணமாக, இன்றைக்குத் தமிழகத்தில் எந்தப் பகுதியிலிருந்தும், ஒரு மணி நேரத்தில் தாய்மார்கள் அனைத்து வசதிகளைக் கொண்ட மருத்துவ மனைகளுக்கு மகப்பேறு சிகிச்சைக்காகச் சென்றடையும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கிராமப்புறங்களில் வசிக்கும் மக்களுக்கு திறம்பட்ட மருத்துவ வசதி கிடைக்கும் வகையில்; மாவட்ட மருத்துவமனைகளோ, வட்ட மருத்துவ மனைகளோ, வட்டம் சாரா மருத்துவ மனைகளோ அல்லது மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களோ இல்லாத ஊராட்சி ஒன்றியங்கள் ஒவ்வொன்றிலும் 30 படுக்கை வசதி கொண்ட ஒரு மருத்துவ நிலையமாவது அமைத்திட வேண்டும் என்று நான் ஆணையிட்டதன் அடிப்படையில், கடந்த நான்கு ஆண்டுகளில், 105 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன. ஒட்டு மொத்தமாக, சுகாதாரத் துறையில் சிறந்த குறியீடுகளை அடைந்த மாநிலமாகத் தமிழகம் இன்று விளங்குகிறது.

தமிழகத்திலுள்ள நகர்ப் பகுதிகளுக்கும், கிராமப்புறக் குடியிருப்புகளுக்கும் பாதுகாக்கப் பட்ட குடிநீர் வழங்கப்படுவதை உறுதி செய்திடத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எனது அரசு எடுத்து வருகிறது. சென்னை மாநகரக் குடிநீர்த் தேவைக்காக, புதிய வீராணம் திட்டத்தை நிறைவேற்றியதோடு கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தையும் எனது அரசு மேற்கொண்டுள்ளது. தமிழகத்தின் ஏனைய பகுதிகளில், கடந்த நான்கு ஆண்டுகளில், 3,300 கோடி ரூபாய் செலவில், பல்வேறு குடிநீர்த் திட்டங்களை எனது அரசு நிறைவேற்றி உள்ளது. 2003ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் நிலவரப்படி, தமிழகத்தில் மொத்தம் உள்ள 81,787 ஊரகக் குடியிருப்புகளில், போதிய அளவு குடிநீர் வழங்கப்படாத குடியிருப்புகள், அதாவது, நபர் ஒன்றுக்கு, நாள் ஒன்றுக்கு, 10 லிட்டர் என்ற அளவுக்கும் குறைவாக குடிநீர் வழங்கப்படும் குடியிருப்புகளின் எண்ணிக்கை 11,790 ஆக இருந்தது. எனது அரசு மேற்கொண்ட, பல்வேறு குடிநீர் வழங்கு திட்டங்களின் பயனாக, இவற்றில் 8,566 குடியிருப்புகளில் தற்போது முழுமையான அளவு அதாவது, நபர் ஒன்றுக்கு, நாள் ஒன்றுக்கு 40 லிட்டர் என்ற அளவுக்கு மேலாக குடிநீர் வழங்கப்படுகிறது. எஞ்சியுள்ள 3,224 குடியிருப்புகளுக்கும் நடப்பு நிதி ஆண்டுக்குள்ளாகவே, இதே போல, முழுமையான அளவு குடிநீர் வழங்கப்பட்டு விடும்.

ஊரகப் பகுதிகளில் உண்மையான வளர்ச்சியையும், முன்னேற்றத்தையும் காணும் வகையில், வேளாண் சார்ந்த சிறு தொழில்களுக்கு ஊக்கம் அளிக்க வேண்டும் என்ற அடிப்படையில், புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை 2002–ஆம் ஆண்டு நான் தொடங்கி வைத்தேன். இதன்படி, இதுவரை 183.87 கோடி ரூபாய் செலவில், 284 தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன என்பதையும், மேலும், 200 தொழிற்சாலைகள் அமைப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதையும் தெரிவிப்பதில் பெருமை அடைகிறேன். மேலும், 1992ஆம் ஆண்டு சுயவேலைவாய்ப்புக்காக என்னால் துவங்கப்பட்ட மகளிர் சுயஉதவிக் குழுக்கள் இன்று ஆல் போல் தழைத்து, அறுகு போல் வேர்விட்டு 2 இலட்சத்து 5 ஆயிரத்து 553 குழுக்களாகப் பரிணமித்துள்ளன. இந்தக் குழுக்களில் உறுப்பினர்களாக உள்ள 34 இலட்சத்திற்கும் மேற்பட்ட மகளிர், தங்களது வாழ்வின் மேம்பாட்டிற்கு ஒரு நம்பிக்கையைப் பெற்று வளமான எதிர்காலத்தை உருவாக்கிக் கொண்டு வருகின்றனர். 720 கோடி ரூபாய்க்கு மேலாக இவர்கள் வங்கிகளில் சேமிப்புக் கணக்கில் சேர்த்து வைத்துள்ளனர் என்பதும், 1,216 கோடி ரூபாய்க்கும் மேலாக வங்கிகளில் கடன் உதவி பெற்று சிறு தொழில்கள் தொடங்கி உள்ளனர் என்பதும் இதனை உள்ளங்கை நெல்லிக்கனி போல் எடுத்துக்காட்டும். இவற்றால் ஊரகப் பொருளாதாரம் குறிப்பிடத்தக்க அளவில் மேம்பாடு அடைந்து வருகிறது.





தமிழகத்தின் வளர்ச்சிப் பணிகளில் உங்கள் அன்புச் சகோதரியின் அரசு பதித்த முத்திரைகள் சிலவற்றைத்தான் பதச் சோறாக இப்போது உங்கள் பார்வைக்கு வைத்திருக்கிறேன்.

மக்கள் தங்கள் திறனை வெளிப்படுத்திச் சமூகத்தில் மதிப்புடனும் மரியாதையுடனும் வாழத் தேவையான வாய்ப்புகளையும், வசதிகளையும் வழங்கும் இந்த முயற்சி தொடரும். இந்த முயற்சியும், முயற்சிக்கான வெற்றியும் தான் சுதந்திரம் என்னும் சொல்லுக்குரிய முழுப் பொருள் என்பது எனது அசைக்க முடியாத நம்பிக்கை!

## தமிழக முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம்

தங்களது வாழ்வாதாரத்திற்கு வேளாண் தொழில் ஒன்றையே நம்பி வாழ்ந்து கொண்டிருக்கும் 86 இலட்சம் விவசாயத் தொழிலாளர்களும் 51 இலட்சம் சிறு மற்றும் குறு விவசாயிகளும் அவர்களது வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் பயன் அடையும் வகையில், ஒரு புதிய சமூகப் பாதுகாப்புத் திட்டத்தை இன்று அறிவிப்பதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

விவசாயத் தொழிலாளர்களுக்கு என 2001–ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் முந்தைய அரசால் ஒரு திட்டம் அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்தில் சேர்ந்து பயன் அடைய ஒவ்வொருவரும் ஒரு முறை செலுத்துத் தொகையாக 100 ரூபாய் செலுத்த வேண்டும் என்றும் நிர்ணயிக்கப்பட்டது. ஆனால், இதன் மூலம் விவசாயத் தொழிலாளர்களுக்குப் பலன் அளித்திடத் தேவையான நிதி ஆதார வழிவகை செய்யப்படவில்லை. இதுவரை, இத்திட்டத்தில் பங்கு பெற 7.32 இலட்சம் விவசாயத் தொழிலாளர்கள் மட்டுமே பதிவு செய்துள்ளனர் என்பதில் இருந்து இத்திட்டம் பரவலாக, விவசாயத் தொழிலாளர்களுக்குப் பயன் அளிக்கக்கூடிய திட்டமாக அமையவில்லை என்பதும், இத்திட்டம், விவசாயத் தொழிலாளர்களின் நம்பிக்கைக்கு உரியதாக இல்லை என்பதும் தெளிவாகும். எனவே தான், தமிழகத்தில் உள்ள விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் சிறு/குறு விவசாயிகள் அனைவரும் பயன் அடையும் வகையில் ஒரு புதிய திட்டத்தைச் செயல்படுத்த எனது அரசு முடிவெடுத்துள்ளது என்பதை இந்த நேரத்தில் தெரிவிப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

"தமிழக முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டம்" என்னும் பெயரில் இத்திட்டம் அமையும்.

தமிழ்நாட்டில் உள்ள 18 வயது முதல் 65 வயது உடைய விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் சிறு/குறு விவசாயிகள் அனைவரும் இந்தத் திட்டத்தில் உறுப்பினர்களாகச் சேர்க்கப்படுவார்கள். விவசாயத் தொழிலாளர்களும், சிறு மற்றும் குறு விவசாயிகளும் ஆண், பெண் வேறுபாடின்றி இந்தத் திட்டத்தில் சேர்ந்து பயன் அடையலாம். இத்திட்டத்தில் உறுப்பினராக அவர்கள் செலுத்த வேண்டிய தொகை 10 ரூபாய் என்று நிர்ணயிக்கப் பட்டுள்ளது. விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் சிறு/குறு விவசாயிகளின் நலன் ஒன்றையே கருத்தில் கொண்டு அவர்கள் இத்திட்டத்தின் சலுகைகளைத் தவறாமல் பெற்றிட வழி அமைத்துத் தரும் வகையில், இந்த 10 ரூபாய் கட்டணத்தையும் விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் சிறு/குறு விவசாயிகள் சார்பாக தமிழக அரசே செலுத்தும். இந்த வகையில் இதற்கென 13 கோடியே 70 இலட்சம் ரூபாயை எனது அரசு உடனடியாக ஒதுக்கீடு செய்யும். விவசாயத் தொழிலாளர்களும், சிறு மற்றும் குறு விவசாயிகளும் மற்றும் அவர்தம் குடும்பத்தினரும் தக்க பாதுகாப்பைப் பெறும் வகையில், அவர்களது வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் இத்திட்டத்தின் மூலமாக உதவிகள் வழங்கப்படும்.

- ★ இந்தத் திட்டத்தில் உறுப்பினராக உள்ள விவசாயத் தொழிலாளியோ அல்லது சிறு/குறு விவசாயியோ விபத்தில் இறக்க நேரிட்டால் அவரது குடும்பத்திற்கு, ஒரு இலட்சம் ரூபாய் நிதி உதவி அளிக்கப்படும். விபத்தில் உடல் உறுப்பு இழப்பு ஏற்பட்டால் இழப்பின் தன்மைக்கேற்ப ஒரு இலட்சம் ரூபாய் வரை நிதி உதவி வழங்கப்படும்.
- ★ விபத்தினால் அன்றி, உறுப்பினர் இயற்கை மரணம் எய்தினால் அவரது குடும்பத்திற்கு 10,000 ரூபாய் இழப்பீடு வழங்கப்படும்.
- ★ மேலும், ஈமச் சடங்கு செலவிற்காக 2,500 ரூபாய் வழங்கப்படும். இத்திட்டத்தில் உறுப்பினராக உள்ள விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் சிறு / குறு விவசாயிகளின் பிள்ளைகள் இடைநிற்றல் இன்றி பள்ளிக் கல்வி பயில்வதை ஊக்குவிக்கும் வகையிலும், அவர்கள் தொடர்ந்து உயர் கல்வி பயின்றிட உற்சாகம் அளிக்கும் வகையிலும் உதவித் தொகைகள் வழங்கப்படும்.
- ★ உறுப்பினரின் மகன், அதாவது மாணவர், பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றால் 1,000 ரூபாயும்; உறுப்பினரின் மகள், அதாவது மாணவி, பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றால் 1,250 ரூபாயும் வழங்கப்படும்.
- ★ 12ஆம் வகுப்பு, அதாவது பிளஸ் 2 தேர்ச்சி பெறும் மாணவருக்கு 1,500 ரூபாயும்; மாணவிக்கு 1,750 ரூபாயும் வழங்கப்படும்.
- ★ இளங்கலை வகுப்பு, அதாவது Bachelor Degree படிக்கும் மாணவருக்கு, ஆண்டு ஒன்றுக்கு 1,500 ரூபாயும்; மாணவிக்கு 2,000 ரூபாயும், உதவித் தொகையாக வழங்கப்படும். அவர்கள் விடுதியில் தங்கிப் படித்தால் இந்த உதவித் தொகை மாணவருக்கு 1,750 ரூபாயாகவும்; மாணவிக்கு 2,250 ரூபாயாகவும் வழங்கப்படும்.
- ★ முதுகலை வகுப்பு, அதாவது Post Graduate படிக்கும் மாணவருக்கு, ஆண்டு ஒன்றுக்கு 2,000 ரூபாயும்; மாணவிக்கு 2,500 ரூபாயும், உதவித் தொகையாக வழங்கப்படும். அவர்கள் விடுதியில் தங்கிப் படித்தால் இந்த உதவித் தொகை மாணவருக்கு 3,000 ரூபாயாகவும்; மாணவிக்கு 3,500 ரூபாயாகவும் வழங்கப் படும்.
- ★ சட்டம், பொறியியல், மருத்துவம், கால்நடை மருத்துவம் மற்றும் அவை சார்ந்த தொழிற்கல்வி பயிலும் மாணவருக்கு ஆண்டு ஒன்றுக்கு 2,000 ரூபாயும்; மாணவிக்கு 2,500 ரூபாயும் உதவித் தொகையாக வழங்கப்படும். அவர்கள் விடுதியில் தங்கிப் படித்தால் இந்த உதவித் தொகை மாணவருக்கு 4,000 ரூபாயாகவும்; மாணவிக்கு 4,500 ரூபாயாகவும் வழங்கப்படும்.
- ★ தொழிற்கல்வியில் பட்ட மேற்படிப்புப் பயிலும் மாணவருக்கு, ஆண்டு ஒன்றுக்கு 4,000 ரூபாயும்; மாணவிக்கு 4,500 ரூபாயும், உதவித் தொகையாக வழங்கப்படும். அவர்கள் விடுதியில் தங்கிப் படித்தால் இந்த உதவித் தொகை மாணவருக்கு 6,000 ரூபாயாகவும்; மாணவிக்கு 6,500 ரூபாயாகவும் வழங்கப்படும்.
- ★ தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் பல் தொழிற் பயிலகங்களில் பயிலும் மாணவருக்கு ஆண்டு ஒன்றுக்கு 1,000 ரூபாயும்; மாணவிக்கு 1,500 ரூபாயும், உதவித் தொகையாக வழங்கப்படும். அவர்கள் விடுதியில் தங்கிப் படித்தால் இந்த உதவித் தொகை மாணவருக்கு 1,200 ரூபாயாகவும்; மாணவிக்கு 1,700 ரூபாயாகவும் வழங்கப்படும்.
- ★ இத்திட்டத்தில் உறுப்பினராக உள்ளோர் திருமணம் செய்து கொண்டாலும் மற்றும் அவரது பிள்ளைகள் திருமணத்தின் போதும் இத்திட்டத்தின் கீழ், திருமண உதவித் தொகை வழங்கப்படும்.
- ★ இந்தத் திருமண உதவித் தொகை ஆண்களுக்கு 3,000 ரூபாயாகவும்; பெண்களுக்கு 5,000 ரூபாயாகவும் வழங்கப்படும்.
- ★ கருவுற்ற பெண் உறுப்பினர்களின் பிரசவ செலவை ஈடு செய்திட, இத்திட்டத்தின் கீழ் உதவித் தொகை வழங்கப்படும்.
- ★ உறுப்பினர்களாக உள்ள தாய்மார்களின் பிள்ளைப் பேற்றின் போது அவர்களுக்கு 2,000 ரூபாய் உதவித் தொகையாக வழங்கப்படும்.
- ★ தாமாகக் கருச்சிதைவு ஏற்படும் போதும் மருத்துவ அறிவுரைப்படி கருக்கலைப்பு மேற்கொள்ளும் போதும் ஏற்படும் மருத்துவச் செலவினத்தைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கும் இந்த உதவித் தொகை வழங்கப்படும்.





படுத்துவதனால் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு 250 கோடி ரூபாய் செலவாகும்.

'வெற்றியின் இரகசியம், கொண்ட இலட்சியத்தில் நிலைத்திருப்பதே ஆகும்' என்று சொன்னார் பெஞ்சமின் டிஸ்ரேலி.

'The secret of success is constancy of purpose' என்பது அவரது வாசகமாகும்.

உங்கள் அன்புச் சகோதரியின் அரசுக்கு ஒரு பெரும் இலட்சியம் உண்டு! அந்த இலட்சியத்தை நிச்சயம் நிறைவேற்ற வேண்டும் என்னும் உறுதியான நிலைப் பாடும் உண்டு. வாழ்க்கை ஆதாரங்களுக்கான வசதி களை மக்களுக்கு அறிமுகப் படுத்தி, வசதிகளை ஏற்படுத்தி அவர்கள் வளமோடு வாழ வகை செய்வதுதான் அந்த இலட்சியம்.

★ இந்தத் திட்டத்தில் உறுப்பினராக உள்ள, ஆதரவற்ற விவசாயத் தொழிலாளர்கள் 60 வயதை அடைந்து மூப்பின் காரணமாக வேலை செய்ய இயலாத நிலையில் இருப்பாரேயானால், அவர்களுக்கு பாதுகாப்பை அளிக்கும் வகையில் ஒய்வூதியம் வழங்கவும் இத்திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது.

★ இதன்படி, 60 வயதை அடைந்து வேலை செய்ய இயலாமல் ஆதரவற்ற நிலையில் உள்ள விவசாயத் தொழிலாளர்களுக்கு, இத்திட்டத்தின் கீழ், மாதம் 200 ரூபாய் ஒய்வூதியம் அவரது வாழ்நாள் முழுவதும் வழங்கப்படும்.

என்னால் இப்போது அறிவிக்கப்பட்டுள்ள இந்தப் புதிய திட்டம் விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் சிறு/குறு விவசாயி களுக்குச் சமூகப் பாதுகாப்பு வழங்கப்படுவதை உறுதி செய்யும். இத்திட்டத்தைச் செயல்

அந்த ஒரு பெரும் இலட்சியத்தை நோக்கிய கொள்கைப் பாதையில், இம்மியும் வழி பிசகாது ஏறுநடை போடுவோம்!

இதுதான் எனதருமைத் தமிழக மக்களுக்கு நான் வழங்கும் இதயப் பூர்வமான சுதந்திர தினச் செய்தி!

மக்களே தேசம்! அவர்களது நலனே நமது இலட்சியம்! வாழ்க பாரதம்! வளர்க தமிழகம்!

அண்ணா நாமம் வாழ்க! புரட்சித் தலைவர் நாமம் வாழ்க! என்று கூறி, விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**15.8.2005** அன்று,
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்,
ஆற்றிய சுதந்திர தின உரை



# குழந்தைப் பருவத்தில் பார்வை இழப்பு



சமூக, பொருளாதார ஏற்ற தாழ்வுகளிடையே வளர்ந்து வரும் நாட்டில், குழந்தைப் பருவத்தில் பார்வை இழப்பு என்பது, பொதுச் சுகாதாரத்தைத் தழுவிய முக்கியப் பிரச்சினையாகும். ஒவ்வொரு நிமிடத்துக்கும் ஒரு குழந்தைக்கு பார்வை இழப்பு ஏற்படுவதுடன், அதில் ஒன்று முதல் இரண்டு வயதுக்குட்பட்டவர்களில் 50 விழுக்காடு குழந்தைகள் இறந்து விடுகின்றன. இந்தியாவில், ஆயிரத்தில் ஒருவருக்கு குழந்தைப் பருவத்தில் பார்வை இழப்பு ஏற்படுவதாகப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. வயது முதிர்வில் ஏற்படும் பார்வையிழப்பினைக் காட்டிலும், குழந்தைப் பருவ பார்வை இழப்பு மிகக் குறைவானதாக இருந்தாலும், அக்குழந்தைகள் தங்கள் வாழ்க்கையில் அதிகமான ஆண்டுகளைப் பார்வையிழந்து கழிக்க வேண்டியுள்ளது. இந்த உண்மையே குழந்தைப் பருவ பார்வையிழப்பு குறித்து கவனம் செலுத்த வேண்டிய அவசியத்தை உணர்த்துகிறது.

குழந்தைப் பருவ பார்வையிழப்பிற்கான காரணங்கள் ஆராயப்பட்ட போது, அது கீழ்க்கண்டவாறு நிகழ்வதாகத் தெரிகின்றது.

| | | |
|---|---|---|
| 1. முழுகண் பாதிப்பு | – | 20 விழுக்காடு |
| 2. பிறவிக் கண்புரை | – | 11 விழுக்காடு |
| 3. கருவிழியில் வெண்மை ஆகுதல் | – | 27 விழுக்காடு |
| 4. விழித்திரை நோய் | – | 22 விழுக்காடு |
| 5. கண் நீர் அழுத்த நோய் | – | 3 விழுக்காடு |
| 6. பார்வை நரம்பு பாதிப்பு | – | 15 விழுக்காடு |

இவைகளில் 30 விழுக்காடு தடுக்கக் கூடியதாகவும் சிகிச்சை அளிப்பதன் மூலம் மேலும் 20 விழுக்காடும், ஆக மொத்தம் 50 விழுக்காடு வரை தவிர்க்க இயலும்.

**நோய்க்குரிய காரணங்களாவன :**

1. வைட்டமின் "ஏ" குறைபாடு
2. சத்துள்ள உணவு இல்லாமை
3. பிறந்த குழந்தைக்குரிய கண் நோய்
4. கண்ணில் தட்டம்மை
5. பிறப்பின்போது ஏற்படும் மூச்சுத்திணறல் மற்றும் குறைப்பிரசவம்
6. காயங்கள்
7. பாரம்பரிய நடைமுறையில் உள்ள தவறான மருந்துகளைக் கண்களில் உபயோகித்தல்.

வைட்டமின் "ஏ" குறைபாட்டை, கீழ்க்கண்ட வகைகளின் மூலம் தடுக்கலாம். அதாவது தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பற்றிய கல்வியினைப் போதிப்பதின் மூலம், குழந்தைகளுக்கு சமச்சீர் உணவு கிடைத்திட வழிவகுக்கலாம். தவிர, குழந்தைகளுக்குத் தாய்ப்பால் ஊட்டவேண்டிய அவசியத்தை வலியுறுத்தி, குறைந்தபட்சம் ஒரு வயது வரை தாய்ப்பால் ஊட்ட தாய்மார்களை வலியுறுத்த வேண்டும். 'ஏ' வைட்டமின் அதிகமுள்ள கேரட், பச்சைக்கீரை வகைகள், முருங்கைக்காய், பழவகைகள், முட்டை, மீன் போன்ற உணவு வகைகளைக் குழந்தைகளுக்கு வழங்கலாம். பார்வை இழப்பு வராமல் தடுக்கும் வண்ணம், வைட்டமின் 'ஏ' மருந்தை சாதாரணமாகவும் கொடுக்கலாம். புரதச்சத்துக் குறைபாடு மற்றும் வைட்டமின் "ஏ" குறைபாடுதான் சாதாரணமாக, கருவிழியில்

வெண்மை உண்டாகக் காரணமாகிறது. இக்குறைபாடு வயிற்றுப்போக்கு ஏற்படும் குழந்தைகளுக்கு அதிகமாக ஏற்படுகின்றது. எனவே, வயிற்றுப்போக்கிற்கு உடனடி சிகிச்சையளிப்பது அத்தியாவசியமாகிறது.காய்ச்சல் சம்பந்தப்பட்ட உடல் உபாதைகளின்போதும், அம்மை நோய் காணப்படும் போதும், கண்களைப் பரிசோதனை செய்து கொள்வது சாலச் சிறந்ததாகும். தடுப்பு மருந்துகள் செலுத்துவதின் மூலம் அம்மை நோயைத் தவிர்க்கலாம்.



சில குழந்தைகளுக்கு பிறந்த பிறகோ அல்லது பிறந்து ஒரு மாதத்திற்குள்ளோ கண்களில் நீர் வழியும் அல்லது கண்கள் வீங்கிக் காணப்படும். இதை குழந்தை பிறந்த உடனேயே, கண்களைச் சுத்தம் செய்வதினாலும், கண்களை நோய்த்தடுப்பிற்கான மருந்தை உபயோகிப்பதினாலும் தடுக்கலாம்.



கண்புரை

குழந்தைப் பருவத்திலேயே கண்புரை நோய் உண்டாக ருபெல்லா தட்டம்மை நோய் ஒரு காரணமாக அமைகிறது. மகளிர்க்கு பூப்பெய்துதலுக்கு முன்னரே ருபெல்லா தட்டம்மை தடுப்பு ஊசி போட்டுக் கொள்வதின் மூலம் இதனை கட்டுப் படுத்தலாம். நெருங்கிய இரத்த சம்பந்தப்பட்ட திருமணங்களினால் ஏற்படும் பரம்பரை வியாதிகளைக் குறித்த, விழிப்புணர்ச்சி உண்டாகும் வகையில் சுகாதாரக் கல்வியினை வழங்க வேண்டும். பிரசவ முன்பேறுகாலப் பராமரிப்பின் மூலமும், மருத்துவமனைகளில் பிரசவம் செய்வதின் மூலமும் பிறப்பின் போது ஏற்படும் மூச்சுத்திணறல் மற்றும் குறைப்பிரசவம் போன்றவற்றைத் தடுக்க இயலும்.



கருவிழியில் தழும்பு

கண்புரை, கருவிழியில் ஏற்படும் தழும்பு, பார்வை கோளாறு மற்றும் மாறுகண் ஆகியவை சிகிச்சைக்கு உட்பட்டதாகும். கண்ணில் உள்ள லென்ஸில் வெண்மைப் படுதலே கண்புரைக்கு வழிவகுக்கிறது. இதனால் கண்ணின் லென்ஸ் ஒளி ஊடுருவும் தன்மை குறைந்து பார்வை குறைகிறது. கண்களில் நீர் வடிதலில், சில தடங்கல்களினால் கண்களில் அழுத்தம் ஏற்படுவதினாலும், கண்களில் நீர் அழுத்த நோய் ஏற்படக் காரணமாகிறது. இதனால் பார்வை நரம்புகள் பாதிக்கப்பட்டு, பார்வைக் குறைவு ஏற்படுகிறது.

இவை அனைத்திற்கும் முன் எச்சரிக்கையாக விரைவான பரிசோதனையும் தொடர்ந்து சிகிச்சையும் தேவைப்படுகிறது.

கருவிழியின் சேதத்தாலோ அல்லது அதில் ஏற்படும் புண்ணினாலோ கருவிழியில் தழும்பு உண்டாகிறது. கூரிய முனையுள்ள பொம்மைகள், கூர்மையுள்ள கம்பு, வில், அம்பு மற்றும் பட்டாசுகள் போன்றவைகளுடன் விளையாடுவதினால், கண்களில் சேதம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. பெற்றோர்களின் மேற்பார்வையின் பேரில் இதனைத் தடுக்கலாம். கருவிழியில் உண்டாகும் சேதத்திற்கு முறையாக சிகிச்சை அளிக்காவிட்டால்



கருவிழியின் மாற்று அறுவை சிகிச்சைக்குப்பின்



23.8.2005 அன்று தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும், சென்னை பல்கலைக்கழக குற்றவியல் துறையின் முன்னாள் தலைவருமான பேராசிரியர் டாக்டர் க.சொக்கலிங்கம் அவர்கள், ஜப்பான் நாட்டின் டோக்கியோ பல்கலைக்கழகத்தில் உள்ள பன்னாட்டு பாதிக்கப்பட்டோரியல் ஆய்வு நிறுவனத்தில் பேராசிரியராக (Professor in Tokiwa International Victimology Institute of the Tokiwa University) பணியேற்பதை முன்னிட்டு, நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். அவரது மனைவி டாக்டர் விஜயலட்சுமி அவர்கள் உடன் உள்ளார்.

புண்ணாக மாறும். கருவிழியில் தழும்பு மற்றும் புண்ணை, கருவிழி மாற்று அறுவைச் சிகிச்சை செய்வதன் மூலம் குணப்படுத்தலாம்.



கண்ணில் நீர் அழுத்த நோய்

சராசரியாக, 7 சதவிகிதக் குழந்தைகளுக்கு பார்வைக் குறைபாடு காணப்படுகிறது. இக்குறை பாட்டினைக் கண்ணாடி பொருத்துவதின் மூலம் நிவர்த்தி செய்வது இன்றியமையாததாகும். இதன் மூலம் வளரும் பருவத்தில் குழந்தையின் திறமையை அதிகரிக்கச் செய்யலாம். கண்களை கசக்குவது, கண்களுக்கு மிக அருகில் புத்தகம் படிப்பது, தொலைக்காட்சியை அருகில் பார்ப்பது, ஒளி படும்போது கண் கூசுவது, கண்களில் நீர்வடிவது, மாறுகண் ஆகியவை பார்வைக் குறைபாடு உள்ள நிலையைக் காட்டுவனவாகும். கண்களில் புற்றுநோய் ஏற்படுவதினாலும், மாறுகண் அமைய வாய்ப்பு உண்டு. இவற்றை ஆரம்பக் கட்டத்திலேயே பரிசோதனை செய்து, சிகிச்சைகள் பெறுவதன் மூலம் மாறு கண்பார்வையை நீக்கி, இயல்பான பார்வை பெற வாய்ப்புகள் உள்ளன. குழந்தைகளைப் பொறுத்த மட்டில், ஐந்து வயதிற்குள் மாறுகண் சிகிச்சை பெறுவது சிறந்ததாகும்.

தவிர்க்கக்கூடிய பார்வை இழப்பிற்கு ஆரம்பக் கட்டத்திலேயே சிகிச்சையளித்தல், ஒருங்கிணைந்த மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல பராமரிப்பு, கண்பார்வை பரிசோதனைகள், சிகிச்சை மேற்கொள்ளல், நெருங்கிய இரத்த சம்பந்தப்பட்ட திருமணங்களைத் தவிர்த்தல், பரம்பரை நோய் குறித்த ஆராய்ச்சி போன்றவைகள் குழந்தைப் பருவத்தில் பார்வை இழப்பு ஏற்படுவதைக் குறைக்க உதவும் என்பதில் ஐயமில்லை.

– மரு.கு.மோகன்ராஜ்
இயக்குநர் மற்றும் கண்காணிப்பாளர்
மண்டல அரசு கண் மருத்துவமனை
சென்னை – 600 008.

* * *

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தெற்காசிய நாடுகளில் தொலைநிலைக் கல்வி மூலம் தொழிற் கல்வி மற்றும் பட்டமேற்படிப்புப் பயிலும் ஏழை, எளிய மாணவர்களுக்கு உதவுவதற்காக, யுனெஸ்கோவின் நல்லெண்ணத் தூதுவரும் தெற்காசியக் கூட்டமைப்பின் நிறுவனருமான திரு. மதன்ஜீத் சிங் அவர்களால் தொடங்கப்பட்ட, தெற்காசியக் கூட்டமைப்பு மதன்ஜீத் சிங் கல்வி உதவித் தொகை திட்டத்தைத் தொடங்கி வைத்து, தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழக மாணவ, மாணவியருக்கு உதவித் தொகைக்கான காசோலைகளை வழங்கினார்கள். இந்தத் திட்டத்தின்கீழ், தேர்ந்தெடுக்கப்படும் ஒவ்வொரு மாணவருக்கும் ஆண்டுக்கு ரூ.4,500 வீதம் உதவித் தொகை வழங்கப்படும்.

### பள்ளிக் கல்வித் துறை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் வழிகாட்டுதலின்படி, "அனைவருக்கும் கல்வி" இயக்கத்தினைச் செயல்படுத்துவதில் இந்தியாவிலேயே முதல் மாநிலமாகத் தமிழகம் திகழுகிறது. இந்த இயக்கத்திற்காக 70 கோடி ரூபாய் மதிப்பில் ஏற்படுத்தப்பட்டுள்ள 55 வட்டார வள மையக் கட்டடங்கள், 254 பள்ளித் தொகுப்புக் கருத்தாய்வு மையக் கட்டடங்கள், 4,062 வகுப்பறைக் கட்டடங்கள் ஆகியவற்றை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 9.8.2005 அன்று திறந்து வைத்தார்கள்.

தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப கணினி மூலம் பாடங்களைக் கற்கவும் தொலைநிலைக் கல்விக்காகவும் ரூபாய் 9.80 கோடி மதிப்பில் தமிழ்நாட்டில் உள்ள 412 வட்டார வள மையங்களிலும் கணினி வழிக் கற்றல் மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதற்கென 1,648 கணினிகள், 412 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் மற்றும் திரவப் படிகப் படக் கருவிகள் (LCDs) ஆகியவை வழங்கப்பட்டுள்ளன. இக்கல்வி மையங்கள் மூலமாக, 1 முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலுகின்ற மாணவ, மாணவியர்கள் பயன்பெறும் வகையில் அவர்களது பாடங்களில் உள்ள கடினமான பகுதிகள் கண்டறியப்பட்டு, அவை முப்பரிமாணமும், வரைகலையும் கலந்து கதை சொல்லும் முறையில் ஆசிரியர்கள், குழந்தை உளவியல் நிபுணர்கள், கணிப்பொறி வல்லுநர்கள் அடங்கிய குழுவினரால், அஜிம் பிரேம்ஜி பவுண்டேஷன் உதவியுடன் தமிழில் தயாரிக்கப்பட்டுள்ள 54 குறுந்தகடுகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், வெளியிட்டார்கள். மாண்புமிகு கல்வி மற்றும் வணிகவரித்துறை அமைச்சர் திரு. சி.வி. சண்முகம் அவர்கள், இக் குறுந்தகடுகளைப் பெற்றுக் கொண்டார்கள். கணினி வழி கற்றல் மையத்தின் மூலமாகப் பயிலும் 82,400 மாணவ, மாணவியர்கள் இந்த குறுந்தகடுகள் மூலம் பயன் பெறுவார்கள்.

பெண் கல்வியை மேம்படுத்தும் உயரிய நோக்குடன், பள்ளியில் சேராத மற்றும் பள்ளியை விட்டு இடையில் நின்று விட்ட பெண் குழந்தைகளை மீண்டும் கல்வியைத் தொடரும் பொருட்டு, பெண் கல்வியில் பின்தங்கியுள்ள 28 வட்டாரங்களில் ரூபாய் 8.6 கோடி மதிப்பில் கஸ்தூரிபா காந்தி பாலிகா வித்யாலயா என்ற பெயரில், புதிய உண்டு உறைவிடப் பள்ளிகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 9.8.2005 அன்று தொடங்கி வைத்தார்கள். இந்த உறைவிடப் பள்ளியில் பயிலும் மாணவிகளுக்கு உணவு, உடை, புத்தகங்கள், விளையாட்டுப் பொருட்கள் ஆகியவை இலவசமாக வழங்கப்படுவதோடு அம்மாணவிகளின் பெயரில் தொடர் வைப்பு நிதி தொடங்கி ஒவ்வொருவருக்கும் மாதம் 50 ரூபாய் வீதம் சேமிப்புக் கணக்கில் வைக்கப்பட்டு, அம்மாணவிகள் 8ஆம் வகுப்பு முடித்து பள்ளியை விட்டுச்செல்லும்போது சேமிப்புத் தொகை மொத்தமாக வழங்கப்படும். மேலும், இம்மாணவிகளுக்கு தையல், அலங்காரப் பொருட்கள், வடிவமைப்பு, தட்டச்சு போன்ற தொழிற்கல்வியும் கற்றுத் தரப்படும். இதன் மூலம் பள்ளி செல்லாத மற்றும் இடையில் நின்ற 1,900 பெண் குழந்தைகள் மீண்டும் கல்வி பெறும் வாய்ப்பைப் பெறுவார்கள்.

### சொற்பிறப்பியல் பேரகரமுதலி

தமிழ் மொழியின் தொன்மையையும், செழுமையையும் அறிந்துகொள்ளத் துணைபுரியும் வகையில் சொற்பிறப்பியல் பேரகரமுதலி (Etymological Dictionary) தயாரித்து வழங்கிட மொழிஞாயிறு தேவநேயப்பாவாணரை இயக்குநராகக் கொண்டு தொடங்கப்பட்ட "அகரமுதலி திட்ட" இயக்ககத்தின் சார்பில் சொற்பிறப்பியல் பேரகரமுதலி 12 மடலங்களில் (volumes) 31 பகுதிகளாகத் தொகுத்து வெளியிடப்பட்டு வருகிறது. இதுவரை 'அ' முதல் 'ஔ' முடிய உயிர் எழுத்துக்களில் 3 பகுதிகளும், 'க' முதல் 'கௌ' முடிய உயிர் மெய் எழுத்துக்களில் 3 பகுதிகளும் வெளியிடப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 25 பகுதிகளை விரைந்து தொகுத்து வெளிக் கொணர வேண்டும் என்று, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், ஆணையிட்டதின் பேரில் இலக்கு வரையறுக்கப்பட்டுத் தொகுப்புப் பணி விரைவுப்படுத்தப்பட்டது. தற்போது உயிர் மெய்யெழுத்துக்களின் வரிசையில் 'ச' மற்றும் 'த' எழுத்துக்களில் தொடங்கும் 6 பகுதிகளைத் தொகுக்கும் பணி முடிவடைந்து, இந்நூல்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 9.8.2005 அன்று வெளியிட்டார்கள். இவற்றை மாண்புமிகு கல்வி மற்றும் வணிகவரித் துறை அமைச்சர் திரு. சி.வி. சண்முகம் அவர்கள், பெற்றுக் கொண்டார்கள்.



### ஒருங்கிணைந்த தொற்று நோய் கண்காணிப்புத் திட்டம்

மக்களுக்கு ஏற்படும் நோய்களைத் தடுத்து அவற்றைக் கட்டுப்படுத்தவும், தொற்றும் மற்றும் தொற்றாத நோய்களினால் ஏற்படும் குறைபாடுகள், இழப்புகள் மற்றும் ஊனம் போன்றவற்றால் ஏற்படும் பிரச்சினைகளைக் குறைத்திடவும் மற்றும் அதன் தொடர்பான புள்ளிவிவரங்கள் சேகரித்தல், பகுப்பாய்வு செய்தல், திட்டமிடுதலைச் சீராக்குதல், வள ஆதாரங்களைச் சிறப்பான முறையில் பயன்படுத்தத் தகுந்த நடவடிக்கை எடுத்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ளவும் "ஒருங்கிணைந்த தொற்று நோய் கண்காணிப்புத் திட்டம்" என்னும் ஒரு புதிய திட்டத்தை, ரூ.25.42 கோடி மதிப்பில் தமிழ்நாடு அரசு செயல்படுத்த உள்ளது. உலக வங்கி மற்றும் உலகச் சுகாதார நிறுவனம் ஆகியவற்றின் உதவியோடு மைய அரசுடன் ஒருங்கிணைந்து நிறைவேற்றப்படவுள்ள இத்திட்டத்தை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 9.8.2005 அன்று தொடங்கி வைத்தார்கள்.

### பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்டம் – இரண்டாம் கட்டம்

மகளிரின் பேறுகாலத் தேவைகளை அடிப்படையாகக் கொண்டு தாய் சேய் ஆகியோரின் மேம்பாட்டுக்காகவும், மகளிர் நலம் பேணவும், பேறுசார் மற்றும் குழந்தை நலத்திட்ட இரண்டாம் கட்டத் திட்டத்தினைத் தமிழக அரசு செயல்படுத்த உள்ளது. இதன்மூலம், மகப்பேறு இறப்பு மற்றும் நலக்குறைபாடுகளைக் குறைத்தல், சிசு மரணத்தைக் குறைத்தல், கருவுறும் விகிதத்தைக் குறைத்தல், வளர் இளம் பெண்களின் நலத்தை மேம்படுத்துதல், இனப்பெருக்கப் பாதை தொற்று மற்றும் பால்வினை நோய்களைக் கட்டுப்படுத்துதல் ஆகிய மக்கள் நல்வாழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்படும். இத்திட்டம், 1,415 ஆரம்பச் சுகாதார நிலையங்கள், அவற்றுடன் இணைக்கப்பட்டுள்ள 8,682 துணைச் சுகாதார நிலையங்கள் மற்றும் நகர் நல மையங்கள் மூலமாகச் செயல்படுத்தப்படும். 426 கோடி ரூபாய் மதிப்பில் நிறைவேற்றப்படவுள்ள இத்திட்டத்தை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 9.8.2005 அன்று தொடங்கி வைத்தார்கள். மேலும் பேறுசார் மற்றும்

# திருக்கோயிலுக்குச் சுற்றுச்சுவர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவு



**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், சென்னை வில்லிவாக்கத்திலுள்ள அருள்மிகு முப்பிலியம்மன் திருக்கோயிலைச் சுற்றியுள்ள காலி இடத்தில் போடப்பட்டிருந்த குப்பைகளை உடனடியாக அகற்ற உத்தரவிட்டதோடு, கோயில் வளாகத்தின் தூய்மையை நிரந்தரமாகப் பாதுகாக்கும் வகையில், 10 இலட்சம் ரூபாய் மதிப்பில் சுற்றுச்சுவர் எழுப்பவும் உத்தரவிட்டுள்ளார்கள்.

சென்னை, வில்லிவாக்கத்திலுள்ள பழைமை வாய்ந்த அருள்மிகு முப்பிலியம்மன் திருக்கோயிலைச் சுற்றியுள்ள காலி இடத்தில், குப்பைகளைக் கொட்டுவதால் அந்தப் பகுதி முழுவதும் சுகாதாரமற்ற முறையிலும், சரியான பராமரிப்பின்றியும் இருப்பதாக, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் கவனத்திற்குத் தெரியவந்தது. இதனைத் தொடர்ந்து அருள்மிகு முப்பிலியம்மன் திருக் கோயிலைச் சுற்றியுள்ள குப்பைகளை உடனடியாக அகற்றிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டார்கள். இதன்படி, அங்கு போடப்பட்டிருந்த குப்பைகள் அகற்றும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

மேலும், அக்கோயில் பகுதியை நிரந்தரமாகத் தூய்மையாக வைத்துக் கொள்ளும் வகையில், அத் திருக்கோயிலைச் சுற்றி 10 இலட்சம் ரூபாய் மதிப்பில் சுற்றுச்சுவர் அமைக்கவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

இப்பணியை, மிக விரைந்து முடித்து அருள்மிகு முப்பிலியம்மன் திருக்கோயில் மற்றும் சுற்றுப்புறங்களின் தூய்மையை நல்ல முறையில் பாதுகாக்கவும், பராமரித்திடவும் இந்து சமய அறநிலையத் துறை அலுவலர்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

* * *

# பல்வேறு துறைகளைச் சேர்ந்த திட்டப் பணிகள்

– மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தொடங்கி வைத்தார்



**மா**ண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 9.8.2005 அன்று தலைமைச் செயலகத்தில், உயர் கல்வித் துறை, பள்ளிக் கல்வித் துறை, தமிழ் வளர்ச்சித் துறை, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை, போக்குவரத்துத் துறை, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மற்றும் கைத்தறி மற்றும் துணி நூல் துறை ஆகிய 7 துறைகளைச் சேர்ந்த பல்வேறு திட்டப் பணிகளைத் தொடங்கி வைத்தார்கள்.

**உயர் கல்வித் துறை:**
**தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்**

தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், 'எல்லோருக்கும் எப்போதும் கல்வி' என்ற உயரிய நோக்கோடு கிராமப்புறங்களிலும், பின்தங்கிய பகுதிகளிலும் வாழும் ஏழை, எளிய நலிவுற்ற மக்களுக்கும் தரமான உயர்கல்வியை மிகக் குறைவான கட்டணத்தில் கிடைக்கச் செய்திட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின், சீரிய முயற்சியால் தொடங்கப்பட்டது.

மூன்றாம் ஆண்டில் தற்போது அடியெடுத்து வைத்துள்ள தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் பாடப்பிரிவுகள், அவற்றில் சேருவதற்கான தகுதிகள், கல்வி மையங்கள் குறித்த விவரங்கள், தேர்வு அட்டவணை மற்றும் முடிவுகள் போன்ற செய்திகளை, மாணவ, மாணவிகள் எளிதாகப் பெற்றிடும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்திற்கான புதிய இணையதளத்தை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 9.8.2005 அன்று, தொடங்கி வைத்தார்கள். இதன் முகவரி www.tnou.ac.in ஆகும்.

மேலும், தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக் கழகத்தின் முக்கிய நிகழ்வுகள், மாணவ மாணவியரின் படைப்புத் திறன் ஆகியவற்றைச் சிறப்புடன் வெளிப்படுத்தும் வகையில், மூன்று மாதங்களுக்கு ஒரு முறை வெளிவர உள்ள பல்கலைக்கழகச் செய்தி இதழின் முதல் பிரதியை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 9.8.2005 அன்று வெளியிட்டார்கள்.

தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் சார்பில், தொலைநிலைக் கல்வி மூலம் பயிலும் மாணவ, மாணவியர்கள் பயன்பெறும் வகையில், முதன்முதலாக சுய கற்பித்தல் முறைப்படி (Self Instructional Mode) பாடநூல்கள் தயாரிக்கப் பட்டுள்ளன. இப்பாடநூல்களை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், திறந்தநிலைப் பல்கலைக்கழக மாணவ, மாணவியருக்கு 9.8.2005 அன்று வழங்கினார்கள்.



குழந்தை நலத் திட்ட இரண்டாம் கட்டத் திட்டத்தின் விளக்க கையேட்டினை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், வெளியிட்டார்கள். இதனை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. என். தளவாய் சுந்தரம் அவர்கள், பெற்றுக்கொண்டார்.

### மாவட்ட மன நல மருத்துவத் திட்டம் அரசு மருத்துவமனைகளில் மன நலப் பிரிவுகளை மேம்படுத்துதல்

மேலும், இதே நிகழ்ச்சியில், நாகப்பட்டினம், தருமபுரி, ஈரோடு ஆகிய மாவட்டங்களில் ரூ.2.5 கோடி செலவில் செயல்படுத்தப்படவுள்ள மாவட்ட மனநல மருத்துவத் திட்டத்தையும், சென்னை மருத்துவக் கல்லூரி, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மற்றும் செங்கற்பட்டு, மதுரை, திருநெல்வேலி ஆகிய இடங்களில் அமைந்துள்ள மருத்துவக் கல்லூரிகள் ஆக 6 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில், 3 கோடி ரூபாய் மதிப்பில், மனநோயாளிகளுக்கான மருத்துவப் பிரிவுகளை மேம்படுத்தும் திட்டத்தையும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 9.8.2005 அன்று தொடங்கி வைத்தார்கள்.

### சென்னை அரசு மன நலக் காப்பகத்தில் நிருவாக அலுவலகம் மற்றும் குடும்ப வழி மருத்துவக் கூடம்

மேலும், சென்னை அரசு மன நலக்காப்பகத்தில், ரூபாய் 1.80 கோடி செலவில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள நிருவாக அலுவலகம் மற்றும் குடும்ப வழி மருத்துவக் கூடம் (Family Therapy Ward) ஆகியவற்றையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 9.8.2005 அன்று திறந்து வைத்தார்கள்.

### ஒக்கியம் துரைப்பாக்கம் கண்ணகி நகர் புதிய பேருந்து நிலையம்

சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில், ஒக்கியம் துரைப்பாக்கம் கண்ணகி நகர் பகுதியில் வசிக்கும் மக்கள் பயன்பெறும் வகையில், சுமார் 1.60 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு புதிய பேருந்து நிலையம் கட்டப்பட்டுள்ளது. 75 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இந்த ஒக்கியம் துரைப்பாக்கம் கண்ணகி நகர் பேருந்து நிலையத்தை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 9.8.2005 அன்று திறந்து வைத்தார்கள்.

### ஆரம்ப நிலை கர்ப்பப்பைப் புற்றுநோய்த் தடுப்புத் திட்டம்

மகளிர் நலனைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், முனைப்புடன் செயல்படுத்தி வரும் நடவடிக்கைகளின் பயனாக மகளிர் மேம்பாட்டுத் திட்டங்களை நிறைவேற்றுவதில் இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாகத் தமிழ்நாடு திகழுகிறது என்ற பெருமையைப் பெற்றுள்ளது.

மகளிர் உடல்நலத்தைப் பேணிக் காக்கின்ற தமிழ்நாடு அரசின் மேலும் ஒரு சிறப்புத் திட்டமாக, சென்னை மாநகர்ப் பகுதியில் வாழுகின்ற 30 முதல் 45 வயது வரை உள்ள தாய்மார்களின் கர்ப்பப் பைகளை, மருத்துவப் பரிசோதனை செய்து சிகிச்சை அளிக்கும்



"ஆரம்பநிலை கர்ப்பப்பைப் புற்றுநோய்த் தடுப்புத் திட்டம்" என்னும் புதிய திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்தின் மூலம், தாய்மார்களுக்கு ஏற்படுகின்ற கர்ப்பப்பைப் புற்றுநோய் ஆரம்ப நிலையிலேயே கண்டறியப்பட்டு, அதற்குத் தக்க சிகிச்சைப் பெற இயலும். இதனால், தாய்மார்களிடையே ஏற்படுகின்ற கர்ப்பப்பைப் புற்றுநோயின் தாக்கம் வெகுவாகக் குறையும் என்பதுடன் மரண விகிதமும் குறைந்திடும். இத்திட்டத்திற்கென, சென்னை மாநகராட்சி மூலம் மேக்னாவிஷன் லென்ஸ் என்கிற 10 மருத்துவ உபகரணங்கள் வாங்கப்பட்டுள்ளன. இதனைக் கொண்டு, சென்னை மாநகரத்திலுள்ள 30 முதல் 45 வயது வரை உள்ள தாய்மார்களுக்கு, கர்ப்பப்பைப் புற்றுநோய்ப் பரிசோதனை செய்யப்படும். சென்னை மாநகராட்சியின் மாவட்ட குடும்பநலத் துறையின் மூலம் செயல்படுத்தப்படவுள்ள "ஆரம்ப நிலை கர்ப்பப்பைப் புற்றுநோய்த் தடுப்புத் திட்ட"த்தை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 9.8.2005 அன்று தொடங்கி வைத்தார்கள்.

### உயர் தொழில்நுட்ப நெசவுப் பூங்காக்கள்

தாராளமயமாக்கப்பட்ட பன்னாட்டுச் சந்தையில் பங்கேற்று உலகச் சந்தையில் போட்டியிடும் வண்ணம், உலகத் தரம் வாய்ந்த துணிகளை உற்பத்திச் செய்திட உயர் தொழில்நுட்பத்துடன் கூடிய நாடா இல்லாத விசைத்தறிகளை நிறுவுவது மிக அவசியம் என்பதால், விசைத்தறி தொழில் முனைவோர் பயன்பெறும் வகையில், உயர் தொழில்நுட்பப் பூங்காக்கள் அமைத்திட, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், ஆணையிட்டார்கள். இதன்படி, ஆண்டிபட்டி, பல்லடம், குமாரபாளையம் ஆகிய பகுதிகளில் உயர் தொழில்நுட்பப் பூங்காக்கள் அமைத்திட மத்திய அரசு ஒப்புதல் அளித்தது.

இதில், தேனி மாவட்டம் ஆண்டிபட்டியில் 40.86 ஏக்கர் நிலப்பரப்பில் ரூபாய் 96 கோடியே 21 இலட்சம் மதிப்பில் வைகை உயர் தொழில்நுட்பப் பூங்கா அமைத்திட 16.6.2005 அன்று, ஆண்டிபட்டியில் நடைபெற்ற அரசு விழாவில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், அடிக்கல் நாட்டினார்கள்.

இதனைத் தொடர்ந்து, கோயம்புத்தூர் மாவட்டம் பல்லடத்தில் 65 ஏக்கர் நிலப்பரப்பில் ரூபாய் 118 கோடியே 34 இலட்சம் மதிப்பீட்டில் பல்லடம் உயர் தொழில்நுட்ப நெசவுப் பூங்கா அமைப்பதற்கும், நாமக்கல் மாவட்டம் குமாரபாளையத்தில் 41.10 ஏக்கர் நிலப்பரப்பில் ரூபாய் 109 கோடியே 98 இலட்சம் மதிப்பீட்டில் காவிரி உயர் தொழில்நுட்ப நெசவுப் பூங்கா அமைப்பதற்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 9.8.2005 அன்று அடிக்கல் நாட்டினார்கள். இந்த உயர் தொழில்நுட்ப நெசவுப் பூங்காக்கள் அமைத்திட தமிழக அரசின் பங்காக, பல்லடம் உயர் தொழில்நுட்பப் பூங்காவுக்கு அதன் நிருவாக இயக்குநர் திரு. செந்தில்குமார் அவர்களிடம், 4.87கோடி ரூபாய்க்கான காசோலையையும், குமாரபாளையம், காவிரி உயர் தொழில்நுட்பப் பூங்காவுக்கு அதன் நிருவாக இயக்குநர் திரு. எம்.எஸ். மதிவாணன் அவர்களிடம், 3.98 கோடி ரூபாய்க்கான காசோலையையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், வழங்கினார்கள்.

இந்நிகழ்வுகளில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் திரு. என்.நாராயணன் இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * *

# முப்பது திருக்கோயில்களின் அன்னதானத் திட்டத்திற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் நன்கொடை



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 2005ஆம் ஆண்டிற்கான மார்ச், ஏப்ரல் மே மற்றும் ஜூன் ஆகிய 4 மாதங்களுக்குரிய தமது சம்பளத் தொகை மொத்தம் 52,860 ரூபாயையும், தனக்கு நிலுவை சம்பளத் தொகையாக அளிக்கப்பட்ட 2,54,741 ரூபாயையும் சேர்த்து மொத்தம் 3 இலட்சத்து 7 ஆயிரத்து 601 ரூபாயை, முப்பது திருக்கோயில்களின் அன்னதானத் திட்டத்திற்கு நன்கொடையாக 10.8.2005 அன்று, தலைமைச் செயலகத்தில் வழங்கினார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், கடந்த 2002ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல், தமது சம்பளத்தை, தமிழ்நாட்டில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட திருக்கோயில்களில் செயல்படுத்தப்படும் அன்னதானத் திட்டத்திற்காக, ஒவ்வொரு மாதமும் ஒரு திருக்கோயிலுக்கு என நன்கொடையாக வழங்கி வருகிறார்கள். அதன்படி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தனக்குக் கிடைக்கப் பெற்ற சம்பள உயர்வு நிலுவைத் தொகையான 2 இலட்சத்து 54 ஆயிரத்து 741 ரூபாயுடன், 2005ஆம் ஆண்டு மார்ச், ஏப்ரல், மே மற்றும் ஜூன் ஆகிய 4 மாதங்களுக்குரிய சம்பளத் தொகையையும் சேர்த்து மொத்தம் 3 இலட்சத்து 7 ஆயிரத்து 601 ரூபாயை, 29 திருக்கோயில்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபாய் வீதமும், தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர், சூரியனார்கோயில், அருள்மிகு சூரியநாராயணப் பெருமாள் திருக்கோயிலுக்கு 17,601 ரூபாயையும் வழங்கினார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களால், 10.8.2005 அன்று அன்னதானத் திட்டத்திற்காக, நன்கொடை வழங்கப்பட்ட திருக்கோயில்கள் வருமாறு:-

அருள்மிகு வடபழனி ஆண்டவர் திருக்கோயில், வடபழனி, சென்னை, அருள்மிகு தேவி கருமாரியம்மன் கோயில், திருவேற்காடு, அருள்மிகு தேவராஜசுவாமி திருக்கோயில், காஞ்சிபுரம், அருள்மிகு பாலமுருகன் திருக்கோயில், ரத்தினகிரி, வேலூர் மாவட்டம், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், புதூர், செங்கம், திருவண்ணாமலை மாவட்டம், அருள்மிகு தாயுமானவர்சுவாமி திருக்கோயில், மலைக்கோட்டை, திருச்சிராப்பள்ளி மாவட்டம், அருள்மிகு கல்யாண வெங்கட



ரமணசுவாமி திருக்கோயில், தான்தோன்றிமலை, கரூர் மாவட்டம், அருள்மிகு மதுர காளியம்மன் திருக்கோயில், சிறுவாச்சூர், பெரம்பலூர் மாவட்டம், அருள்மிகு வீரகாளியம்மன் திருக்கோயில், பெரம்பூர், புதுக்கோட்டை மாவட்டம், அருள்மிகு தேனுபுரீஸ்வரர் திருக்கோயில், பட்டீஸ்வரம், தஞ்சாவூர் மாவட்டம், அருள்மிகு சூரியநாராயணப் பெருமாள் திருக்கோயில், சூரியனார்கோயில், திருவிடைமருதூர், அருள்மிகு ஆபத்சகாயேஸ்வரர் திருக்கோயில், ஆலங்குடி, வலங்கைமான், திருவாரூர் மாவட்டம், அருள்மிகு நீலாயதாட்சியம்மன் உடனுறை காயாரோகணசுவாமி திருக்கோயில், நாகப்பட்டினம், அருள்மிகு அமிர்தகடேஸ்வரர் திருக்கோயில், திருக்கடையூர், நாகப்பட்டினம் மாவட்டம், அருள்மிகு சந்திரமௌலீஸ்வரர் திருக்கோயில், திருவக்கரை, விழுப்புரம் மாவட்டம், அருள்மிகு கூடலழகர் திருக்கோயில், மதுரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர்–தர்மசாஸ்தா திருக்கோயில், ஆண்டிபட்டி, தேனி மாவட்டம், அருள்மிகு குறிஞ்சி ஆண்டவர் திருக்கோயில், கொடைக்கானல், திண்டுக்கல் மாவட்டம், அருள்மிகு கற்பக விநாயகர் திருக்கோயில், பிள்ளையார்பட்டி, சிவகங்கை மாவட்டம், அருள்மிகு ராமநாதசுவாமி திருக்கோயில், இராமேஸ்வரம், இராமநாதபுரம் மாவட்டம், அருள்மிகு வன்னிவிநாயகர் திருக்கோயில், மடம் சின்ன ஓடைப்பட்டி, விருதுநகர் மாவட்டம்,. அருள்மிகு வைத்தியநாதசுவாமி திருக்கோயில், மடவார்வளாகம், விருதுநகர் மாவட்டம், அருள்மிகு நெல்லையப்பர் திருக்கோயில், திருநெல்வேலி, அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர், தூத்துக்குடி மாவட்டம், அருள்மிகு பகவதி அம்மன் திருக்கோயில், மண்டைக்காடு, கன்னியாகுமரி மாவட்டம், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், மருதமலை, கோயம்புத்தூர் மாவட்டம், அருள்மிகு வன்னி விநாயகர் திருக்கோயில், குன்னூர், நீலகிரி மாவட்டம், அருள்மிகு வரதராஜபெருமாள் திருக்கோயில், ஒருக்காமலை, சங்ககிரி நகர், சேலம் மாவட்டம், அருள்மிகு லக்ஷ்மி நரசிம்மசுவாமி திருக்கோயில், நாமக்கல் மற்றும் அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், தருமபுரி.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், தனது சம்பளத்திலிருந்து திருக்கோயில்களின் அன்னதானத் திட்டத்திற்கு வழங்கிய இந்த நன்கொடைக்கான காசோலைகளை, மேற்கண்ட திருக்கோயில்களின் சார்பில் அத்திருக்கோயில்களின் செயல் அலுவலர்கள் 10.8.2005 அன்று, பெற்றுக் கொண்டனர்.

❖ ❖ ❖

# விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு ஓய்வூதியம் வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணை



இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கு பெற்று, சுதந்திரம் அடைவதற்காகப் போராடி, துன்பம் அனுபவித்த விடுதலைப் போராட்ட வீரர்களான தங்களுக்கு, தமிழ்நாடு அரசு வழங்கும் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் வழங்கி உதவிட வேண்டுமெனக் கோரி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் மனு கொடுத்திருந்த மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த திரு. பி. அரியபுத்திரன், திரு. எஸ்.எம். பெரியகருப்பத்தேவர் மற்றும் வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. பி.என். விசுவநாதன் ஆகியோருக்கு மாநில அரசு விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் வழங்கி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த திரு. பி. அரியபுத்திரன் மற்றும் திரு. எஸ்.எம். பெரியகருப்பத்தேவர் ஆகியோர், 1942ஆம் ஆண்டு நடைபெற்ற 'வெள்ளையனே வெளியேறு' இயக்கத்தில் பங்கேற்று, சுதந்திரம் பெறுவதற்காகப் போராடி, சிறையில் அடைக்கப்பட்டுத் துன்பம் அனுபவித்ததாகவும் மற்றும் வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. பி.என். விசுவநாதன் அவர்கள், இதே இயக்கத்தில் பங்கேற்று, சுதந்திரம் பெறுவதற்காகப் போராடி, ஆங்கிலேயரிடம் பிடிபடாமல் தலைமறைவாக இருந்து கடும் துன்பம் அனுபவித்ததாகவும் தெரிவித்து, அதன் அடிப்படையில் தங்களுக்கு மாநில அரசின் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் வழங்க வேண்டுமெனக் கோரி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் கோரிக்கை மனு அளித்திருந்தார்கள்.

இந்த மனுக்களைப் பரிவுடன் பரிசீலனை செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இவர்களது தியாகத்தைப் போற்றி, மாநில அரசின் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியத்தை உடனடியாக வழங்க ஆணையிட்டுள்ளார்கள். இதன்படி, இவர்களுக்கு ஓய்வூதியமாக மாதம் ஒன்றிற்கு 3,000 ரூபாயும், மருத்துவப் படியாக மாதம் ஒன்றிற்கு 15 ரூபாயும், ஆக மாதந்தோறும் மொத்தம் 3,015 ரூபாய் அவர்களது வாழ்நாள் வரை வழங்கப்படும்.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்ற விடுதலைப் போராட்ட வீரர்களான மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த திரு. பி. அரியபுத்திரன், திரு. எஸ்.எம். பெரியகருப்பத்தேவர் மற்றும் வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. பி.என். விசுவநாதன் ஆகியோரது தியாகத்திற்கு மதிப்பளித்து கௌரவிக்கும் வகையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் வழங்கிட ஆணையிட்டுள்ள இந்த ஓய்வூதியத்திற்கான அரசு ஆணைகளை, விடுதலைப் போராட்ட வீரர்கள் சார்ந்துள்ள மாவட்டங்களைச் சேர்ந்த மாண்புமிகு அமைச்சர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர் நேரில் வழங்குவார்கள். ❖

# தமிழகத்தின் பொருளாதார நிலையை முறைப்படுத்துவதில் சாதனை படைத்துள்ளோம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரை**



இந்திய தொழில்துறையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியைப் பற்றிய சிறப்புக்களை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இந்தியத் தொழில் மற்றும் வர்த்தகம் விரைவில் உலகளாவிய வளர்ச்சியை எட்டும் என்பது ஆச்சரியப்படத்தக்க உண்மையாகும். இந்தியத் தொழில் நிறுவனங்கள் உலகின், பல்வேறு நாடுகளில் உள்ள நிறுவனங்களை வாங்குவது பற்றிய செய்திகளை நான் ஆர்வமுடன் அறிந்து வருகிறேன்.

## தமிழ்நாடு – முதலீட்டாளர்கள் விரும்பும் இடம்

உலக வர்த்தகத் துறையில் நாம் ஈடுபடும் இந்த நிலையானது பன்னாட்டுப் பொருளாதார வளர்ச்சியில் புதிய மாற்றத்தைக் கொண்டு வரும் இந்தியத் தொழில்துறையின் புதிய பரிமாணம் என்றே தெரிகிறது. எதிர்வரும் சவால்களைச் சந்திக்கும் நம்பிக்கை நம்மிடம் உள்ளதையே இது காட்டுகிறது. இந்தியத் தொழில்துறையில் 2001ஆம் ஆண்டு ஏற்பட்ட ஒரு தேக்கமான சூழ்நிலையை நீங்கள் கடந்து வந்திருப்பது உங்களது தேசிய நிருவாகக் கூட்டத்தில் தெரிகிறது.

'தமிழ்நாடு–முதலீட்டாளர்கள் விரும்பும் இடம் என கூட்டத்துக்குத் தலைப்பிட்டுள்ளீர்கள். முன்பெல்லாம் போதுமான தொழில் முதலீடு வரவில்லையே என்ற கேள்வி இருந்தது. ஆனால், தற்போது நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. தொழில் முதலீடுகள் வெள்ளமெனக் குவிகிறது. இப்படி வரும் தொழில் முதலீடுகளை எப்படிக் கையாள்வது என்ற கேள்வி இப்போது எழுந்துள்ளது. இன்னும் சொல்லப் போனால் தொழில் முதலீட்டாளர்களைச் சந்திப்பதற்குக் கூட நேரம் இல்லாத நிலை உள்ளது. அந்த அளவுக்கு ஏராளமான




நான் கடிதம் எழுதியிருக்கிறேன். இந்த வசதி, மோட்டார் வாகன சோதனை மையம் சென்னைக்கு அருகில் ஒரகடத்தில் அமைக்கப்படும் என்பதை உங்களுக்கு நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

கிண்டி மற்றும் அம்பத்தூரில் உள்ள தொழிற் பேட்டைகளை முழுவதுமாக மேல்நிலைப்படுத்து வதற்கானத் திட்டத்தை ஏற்கெனவே நாங்கள் இறுதி செய்திருக்கிறோம். இந்தத் திட்டம் முழுமையாகச் செயல்படுத்தப்படும்.

ஜவுளித் தொழிலுக்கு இன்றைய தேதியில் சிறந்த வாய்ப்பு இருக்கிறது. அதே நேரத்தில் மிகப்பெரிய சவால்களைச் சந்திக்க வேண்டியிருக்கிறது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆகவே, பல்வேறு புதிய ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள நான் உத்தரவிட்டிருக்கிறேன்.

முதலாவதாக, சிப்காட் நிறுவனத்தின் ஆதரவில் கடலூரில் புதிதாக ஜவுளி புராசசிங் மண்டலம் (Textile Processing Zone) அமைக்கப்படும். ஆடை, அலங்கார பூங்காக்கள் (Apparel Park) அமைக்கப்பட்டு வருகின்றன. கோயம்புத்தூர், ஈரோடு, கரூர் ஆகிய பாரம்பரிய மையங்களில் ஜவுளித் தொழிலை நவீனமயமாக்கும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டு இருக்கிறோம். ஜவுளித் தொழில் சம்பந்தமாக ஜவுளி ஏற்றுமதியைத் தொடர்ந்து நிருவகித்து நடத்துவது குறித்து பரிசீலிக்கச் செயற்குழு (Working Group) ஒன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மாறி வரும் சூழ்நிலைக்கேற்ப, இன்றைய தேதியில் தகவல் தொழில் நுட்பமும், தகவல் தொழில் நுட்பம் சார்ந்த சேவைகளும் அதிக முக்கியத்துவம் பெற்று துரித வளர்ச்சி கண்டு வருகிறது. தகவல் தொழில்நுட்பம் புதிய புரட்சியையும் உண்டு பண்ணியிருக்கிறது.

ஏற்கெனவே நான் உறுதியளித்தப்படி தகவல் தொழில் நுட்ப விரைவு பாதை (IT Express Way) உலகத் தரத்திற்கு ஏற்ப அமைக்கப்பட்டு வருகிறது. இந்த விரைவுப் பாதை உலக நாடுகளுக்கு இந்தியாவின் கிழக்கு வாசலாக சென்னையை உருமாற்றிக் காட்டும் என்பதில் சந்தேகமில்லை.

இந்த விரைவுப் பாதையையொட்டி இரண்டு பக்கங்களிலும் அறிவு சார் தொழில் நகரியம் (Knowledge Industries Township) உருவாகி வருகிறது. இந்த நகரியம் குறிப்பாக, விப்ரோ, ஹெச்சிஎல், சத்யம் ஆகிய பெரிய கணினி நிறுவனங்களுக்கு வரப்பிரசாதமாக அமையும். இந்த நிறுவனங்கள் எல்லாம் இப்பகுதியில் தங்களது மையங்களை அமைக்க உள்ளன.

டாடா கன்சல்டன்சி சர்வீசஸ் (TCS) சாலையையொட்டி அமைந்துள்ளது. மகேந்திரா தொழில் பூங்காவில் பெரிய மையத்தை இன்போசிஸ் நிறுவனம் அமைத்து வருகிறது. இது போன்ற பெரிய கணினி நிறுவனங்களெல்லாம் தொடர்ந்து வரவுள்ளன. சிறுசேரி அறிவியல் தொழில்நுட்பப் பூங்காவில் மேற்கொண்டு கணினி மையங்களை அமைப்பதற்கு இடமில்லை. வேறு இடத்தில் புதிய தொழில்நுட்பப் பூங்காவை அமைக்கும் நிலைக்கு தள்ளப்பட்டு இருக்கிறோம்.

இப்படி அமையவிருக்கும் தொழில்நுட்பப் பூங்கா பகுதிகளில் சாலைகள், போக்குவரத்து, வீட்டுவசதி, குடிநீர் விநியோகம் ஆகிய கட்டமைப்பு வசதிகள் திட்டமிடப்பட்டுள்ளன என்பது உங்களுக்கு மகிழ்ச்சி தரும் விஷயமாகும். இப்படி, தொழில்நுட்பப் பூங்காக்கள் அமைகிற இடத்தில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் இல்லாத ஒரு குறையைப் போக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம்.

**சென்னையில் தொழில் தொடங்க போட்டாபோட்டி**

2004–2005ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிலிருந்து 10,708 கோடி ரூபாய் மதிப்புக்கு கணினி மென் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. இது, இனி வரும் ஆண்டுகளிலும் பெருமளவிற்கு உயரும்.

கடின உழைப்பிற்கு அற்புதமான ஆள்பலமும், ஊக்கமூட்டும் விதத்தில் வர்த்தக பலமும் சென்னைக்கு இருப்பது மகிழ்ச்சிக்கு உரியது. இதன் காரணமாகவே, வெளிநாட்டு நிறுவனங்களும் இந்தியாவில் இருக்கும் முக்கிய கணினி நிறுவனங்களும் போட்டிப்போட்டுக் கொண்டு சென்னையில் இடம் பிடித்து வருகின்றன. இவர்கள் தவிர, சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களும் தாங்கள் செயல்படுவதற்கு சென்னை மிகச் சிறந்த இடம் என்று உணர்ந்து உள்ளனர்.

தமிழ்நாட்டில் சுற்றுலாத்துறையும் அதிக வளர்ச்சி பெறுவதற்குரிய ஒரு துறையாகும். 2003–ஆம் ஆண்டு அக்டோபர் 19ஆம் தேதி சென்னையில் நடைபெற்ற "ஸ்கால்"உலக மாநாட்டுக்குப் பிறகு தமிழ்நாடு சுற்றுலாத்துறையில் புதிய அங்கீகாரம் பெற்றுள்ளது.

சுற்றுலாத் துறைக்கும் உரிய அடிப்படை அத்தியாவசியத் தேவைகளை உருவாக்கித் தருவதின் மூலம் சுற்றுலாவையும் உன்னத இடத்திற்குக் கொண்டு வரும் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறோம்.

இன்றைய தேதியில் உலக...பட்டு தாராளமயமாக்கல் என்ற சித்த...சேஸ் பிரதேசம் வருகின்ற சூழ்நிலையில் உச்...லலை வரி விலக்கு போன்ற மாநிலங்க... மற்றும் வருமான வரி விலக்கு ஆகியவற்றை மத்திய அரசு அளித்துள்ளது. இதை, பிரதமர் மன்மோகன்சிங் வாபஸ் பெற வேண்டும் என்று வலியுறுத்தி நான் ஒரு கடிதம் எழுதியிருக்கிறேன்.

**ஒரு சாதனை வரலாறு**

இந்த 2 மாநிலங்களுக்கும் இத்தகைய சலுகைகள் அளித்திருப்பதால் தமிழ்நாட்டில் பெரும் முதலீடு குறையும். இங்கு முதலீடு செய்தவர்களும், அந்த மாநிலங்களுக்குச் செல்லும் நிலை உருவாகும் என்று பிரதமருக்கு நான் எழுதியிருக்கும் கடிதத்தில் சுட்டிக் காட்டியிருக்கிறேன்.

என்னைப்போலவே பெரும்பாலான மற்ற மாநிலங்களும் இந்த இரு மாநிலங்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் சலுகைகளைக் கண்டித்துள்ளன.

வெளிநாட்டு முதலீடு பெருமளவிற்குக் குவிந்து, வெளிநாட்டு நிறுவனங்களும் சென்னைக்கு வந்திருப்பது தமிழக வரலாற்றில், என்னுடைய அரசு சாதனையில், மாநில மக்களின் சாதனையில் உள்ளபடியே குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய ஒரு சாதனை வரலாறாகும்.

எதை நீங்கள் செய்தாலும் அல்லது எதை நீங்கள் கனவுகண்டாலும் அதை துவக்குங்கள். துணிச்சலாக ஒரு செயலை நிறைவேற்றும்போது அந்த துணிச்சலுக்குள் புத்திசாலித்தனம், ஆற்றல் அடங்கியிருக்கிறது என்று பிரபல பிரிட்டிஷ் அறிஞர் ஆல்பர்ட் நார்ட் ஒயிட்ஹெட் கூறியிருக்கிறார்.

எதிலும் ஆக்கப்பூர்வமான சிந்தனை ஒன்றே தாரக மந்திரமாக இருக்க வேண்டும். எதையும் பெரிதாக எண்ணுங்கள். எடுக்கும் முடிவில் திடமாக இருங்கள். இதன் மூலம் இந்தியத் தொழில் துறை...இப்போது இருப்பதைக் காட்டிலும் இன்னும் உயர்ந்து சிறக்க செயல்படுங்கள். உலக உற்பத்தியில் தொழில்துறையில் நமக்கென்று ஒரு இடத்திற்கு ...ந்து நில்லுங்கள்.

...05 அன்று, சென்னையில் நடைபெற்ற
2இந்தியத் தொழில் வர்த்தகக் கூட்டமைப்பின்
தேசிய நிருவாகக் குழுக் கூட்டத்தில்,
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்,
ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம்.

தொழில் முதலீட்டுடன் தொழில் அதிபர்கள் வருகிறார்கள். தொழிற்பேட்டைகளில் போதுமான இடம் இல்லை. எனவே, புதிய தொழிற்பேட்டைகளை உருவாக்க வேண்டிய நிலை உள்ளது. இந்தப் புதிய நிலையை எட்ட அரசு போதுமான நிதி ஆதாரத்தையும் திரட்ட வேண்டி உள்ளது.

தமிழகத்தில் பொருளாதார வளர்ச்சி குறிப்பிடத்தக்க அளவில் உயர்ந்துள்ளது. மாநிலத்தில் வளர்ச்சி விகிதம் 2004–2005இல் 8.73 சதவிகிதமாக இருந்தது. இந்த வளர்ச்சி விகிதம் 2005–2006இல் மேலும் அதிகரிக்கும். அதற்கான நல்ல சூழ்நிலை உள்ளது. உற்பத்தித்துறையில் 2004–2005ஆம் ஆண்டில் 8.7 சதவிகிதமாக இருந்த வளர்ச்சி, இந்த நிதி ஆண்டில் இரட்டை இலக்கமாக வளர்ச்சி இருக்கும். இந்த ஆண்டு உற்பத்தித் துறைக்கு சிறந்த ஆண்டாக இருக்கும்.

விவசாயிகளுக்கும் இந்த ஆண்டு மகிழ்ச்சி அளிக்கும் ஆண்டாக அமையும். மொத்தத்தில் தமிழகத்தில் பொருளாதார நிலைமை நன்றாக, வளமாக இருக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

மாற்றுப்பயிர்த் திட்டத்துக்கும் முக்கியத்துவம் கொடுத்து வருகிறோம். தோட்டப் பயிர் உள்பட விலை உயர்ந்த பயிர்ச் சாகுபடிக்கு ஊக்கம் அளித்து வருகிறோம். தரிசு நிலங்களை மட்டும் வைத்துக் கொண்டு ஏதும் செய்ய முடியாத நிலையில் இருப்பவர்கள். நான் ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தை கொண்டுவந்து நிறைவேற்றி வருகிறேன்.

## நுண்ணிய பண்ணைத் திட்டம்

நுண்ணிய பண்ணைத் திட்டம் என்கிற ஒரு முன்னோடித் திட்டத்தை தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் நான் துவக்கி வைத்தேன். அது வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது. இது மற்ற மாவட்டங்களிலும் விரிவுபடுத்தப்படும். சொட்டுநீர்ப் பாசன முறையை ஒருங்கிணைந்த திட்டமாக விரைவில் செயல்படுத்த இருக்கிறோம். டீசல், பெட்ரோல் விலை உயர்ந்து வருவதால் உயிரி எரிபொருள் தயாரிப்புக்கு ஊக்கப்படுத்தி வருகிறோம்.

தொழில் முதலீடு செய்பவர்கள் இன்று தமிழ்நாட்டின் மீது நம்பிக்கை வைத்து முதலீடு செய்ய வருகிறார்கள். நல்ல முறையில் சட்டம் ஒழுங்குப் பராமரிப்பு, உள்கட்டமைப்பு வசதிகள், நல்ல தொழிலாளர் உறவு, திறமையான வல்லுநர்கள் இருக்கிறார்கள். எனவே, தொழில் முதலீடு செய்ய தொழில் முதலீட்டாளர்கள் திரளாக வருகிறார்கள். தமிழ்நாட்டை அனைத்துத் துறையிலும் இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக்க வேண்டும் என்ற இலட்சியத்துடன் நான் செயல்பட்டு வருகிறேன். அந்த இலட்சியம் ஈடேறும் வகையில் தமிழ்நாடு முன்னேற்றப் பாதையில் செல்கிறது. எனவேதான், இந்தியாவில் இருந்து மட்டுமல்ல, உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்து தொழில் மற்றும் வர்த்தக முதலீட்டாளர்கள் தமிழ்நாட்டை நோக்கி வருகிறார்கள். தமிழ்நாட்டுக்குப் புதிய தொழில் முதலீடுகள் வெள்ளமென வந்து கொண்டிருக்கிறது.

தமிழ்நாட்டின் மூலதன பட்ஜெட் 2001–2002இல் ரூ.1777.91 கோடியாக இருந்தது. இது கிட்டத்தட்ட இப்போது மூன்று மடங்காக அதிகரித்துள்ளது. அதாவது 2005–2006ஆம் ஆண்டில் மூலதன பட்ஜெட் ரூ.4791.64 கோடியாக உயர்ந்துள்ளது. இது எதைக் காட்டுகிறது. சாலை வசதி, நகர்ப்புறங்களில் கட்டமைப்பு வசதிகள், மின்சாரம் உள்பட பல்வேறு துறைக்கு அதிக செலவு செய்திருக்கிறோம் என்பதையே காட்டுகிறது.

## கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம்

உலக வங்கி உதவியுடன் ரூ.2160 கோடி செலவில் மேம்பாட்டுப் பணியினைச் செய்து வருகிறோம். மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட சாலைகள், பிற சாலைகள் மேம்பாட்டுப் பணிகள் ரூ.1350 கோடி செலவில் நிறைவேற்றப்படும். உலக வங்கியுடன் பேசி முடிவு செய்து விட்டோம்.

சென்னை நகர மேம்பாட்டுக்கு என்னென்ன செய்ய முடியுமோ அத்தனைப் பணிகளும் செய்யப்பட்டுள்ளன. சென்னை நகரை இப்போது பார்ப்பவர்கள் இந்த நகரை மறக்க முடியாது. அப்படியே நினைவில் நிற்கும் வகையில் சென்னை நகரம் உருவாகி உள்ளது. கீழை நாடுகளின் விலை மதிக்க முடியாத வைரமாக – முக்கிய இடமாக இன்று சென்னை காட்சி அளிக்கிறது.

சென்னை நகரம் 30 ஆண்டுகளாகக் குடிநீர் தட்டுப்பாட்டை எதிர்நோக்கித்தான் இருந்து வந்தது. எனவேதான் சென்னை நகரின் குடிநீர்ப் பிரச்சினையை நிரந்தரமாகப் போக்க புதிய வீராணம் திட்டத்தைக் கொண்டு வந்து நான் நிறைவேற்றினேன். இன்று ஒரு நாளைக்கு 180 மில்லியன் லிட்டர் தண்ணீர் வீராணம் ஏரியிலிருந்து வருகிறது. சென்னையில் கடல் நீரை குடிநீராக்கும் திட்டத்தையும் நிறைவேற்ற இருக்கிறோம். இந்தியாவிலேயே சென்னை நகரில்தான் முதன்முதலாக இந்தத் திட்டத்தை நிறைவேற்ற இருக்கிறோம். இந்தத் திட்டப் பணிகள் விரைவில் துவங்கும்.

மாநிலத்தில் மின்துறைக்கு அதிக முக்கியத்துவத்தை நான் கொடுத்து வருகிறேன். 4000 மெகாவாட் திறன் கொண்ட மின் உற்பத்தித் திட்டங்கள், நிறைவேற்றப்பட இருக்கிறது. வடசென்னையில் 1000 மெகாவாட் திறன் கொண்ட அனல்மின் நிலையம், என்.எல்.சியுடன் சேர்ந்து தூத்துக்குடியில் 1000 மெகாவாட் திறன் கொண்ட மின் நிலையம், கூடங்குளத்தில் 2000 மெகாவாட் திறன் கொண்ட அணுமின் நிலையம் ஆகியவை அமைக்கப்படவிருக்கிறது. ஜெயங்கொண்டம் நிலக்கரிச் சுரங்கத்தைப் பயன்படுத்தி 1000 மெகாவாட் திறன் கொண்ட மின் உற்பத்தி நிலையம் அமைக்க வேண்டும் என்று என்.எல்.சி. நிறுவனத்தைக் கேட்டிருக்கிறோம்.

இப்படி, கூடுதல் மின்சாரம் உற்பத்தி செய்வதன் மூலம் தட்டுப்பாடில்லாமல் மின்சாரம் வழங்க நான் நடவடிக்கை எடுத்துள்ளேன். இதன் மூலம், தங்குதடையற்ற மின்சாரத்தை வழங்கும் ஒரே மாநிலம் என்கிற பெருமையைத் தமிழகம் தக்க வைத்துக் கொள்ளும்.

## புதிய திட்டங்கள் – சலுகைகள்

தொழிற்சாலைகளுக்கான அனைத்து வசதிகளையும் தமிழகத்தில் செய்து கொடுத்திருக்கும் அதே வேளையில், மனித வளர்ச்சியிலும் தமிழகம் முதல்நிலையில் இருக்கிறது என்பது பெருமைபடத்தக்க ஒன்று, 2015ஆம் ஆண்டுக்கு முன்பு இந்த இலக்கை முழுவதுமாக நிறைவேற்ற எனது அரசு உறுதி பூண்டுள்ளது.

பல விமர்சகர்கள் 2001ஆம் ஆண்டின் தமிழக நிலைபற்றி எழுதியுள்ளனர். அந்த நிலைகளையெல்லாம் வெற்றிகரமாகச் சமாளித்து தமிழகத்தின் பொருளாதார நிலையை முறைப்படுத்துவதில் சாதனை படைத்துள்ளோம். ஏழை, எளிய மக்களை ஒடுக்குவதாகப் புலம்பியவர்கள் இன்று புதிய சலுகைகளை ஏழை மக்கள் பயனடையும் வகையில் அறிவிக்கும் போது மாநிலத்தின் பொருளாதார நிலை பாதிக்கப்படும் என கோரசாகக் கூக்குரல் எழுப்புகிறார்கள்.

எனது அரசு, ஒவ்வொரு நாளும் ஏழை மக்களுக்கு புதிய புதிய திட்டங்கள், சலுகைகளை அளித்து வருகிறது. சமீபத்தில் நான் 'தமிழகத்தின் சமச்சீர் வளர்ச்சிக்கான நடவடிக்கையை'த் துவக்கி வைத்துள்ளேன்.

ஆறு முக்கியப் பிரச்சினைகள் கண்டறியப்பட்டு, அதுபற்றி முழு அளவிலான ஆய்வு நடத்தி வளர்ச்சி வேகத்தை அதிகப்படுத்த எனது அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. சென்னை நகரம் இந்திய நாட்டின் தொழில் நகரமாக மட்டுமல்லாமல் பன்னாட்டுத் தொழில் நகரமாகவும் உருவாகியுள்ளது.

நோக்கியா செல்பேசி நிறுவனம் தனது தொழிற்சாலையைச் சென்னையில் துவக்க முடிவு செய்திருப்பது என்பது, சென்னை நகரம், பன்னாட்டுத் தொழில் நகரமாக மாறியுள்ளது என்பதற்கு ஒரு அடையாளமாகும். சிறப்புப் பொருளாதார மண்டலங்களின் மேம்பாட்டுக்காகச் சமீபத்தில் சட்டம் ஒன்று கொண்டு வரப்பட்டுள்ளது. பன்னாட்டுத் தொழில் நகரமாக மாறி வரும் சென்னைக்கு இது மேலும் பயனளிக்கக் கூடியதாக இருக்கும்.

தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் சீர்திருத்த நடவடிக்கையால் தமிழகத்தில் பெரிய அளவுக்கு வளர்ச்சி ஏற்படும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். மனித வளத்தில் தமிழகம் எப்போதும் பெருமைப் படத்தக்கதாக உள்ளது.

தமிழ்நாட்டில் தொழில் துறையில் மின்னல் வேக வளர்ச்சிக்காக நீங்கள் வெளியிட்டிருக்கும் மதிப்புமிகு யோசனைகளைக் கவனத்தில் எடுத்துக் கொள்கிறேன். உங்களின் பெரும்பாலான யோசனைகளைக் கொண்டு நடவடிக்கைகளை எடுத்து வந்திருக்கிறேன்.

சென்னைக்கு அருகில் இருங்காட்டுக் கோட்டையில் காலணி கருவிகள் பூங்கா (Footware Component Park) ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகளை சிப்காட் நிறுவனம் எடுத்து வருகிறது என்பதை நான் இங்கே மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தெற்கு ஆசியாவின் டெட்ராய்ட் நகரம் சென்னை தான் என்பது கேள்விக்கு இடம் இல்லாத ஒன்று. (அமெரிக்காவில் உள்ள ஒரு நகரம் டெட்ராய்ட். இங்கு தான் மோட்டார் கார் நிறுவன தொழிற்சாலைகள் அதிகம்). இந்நிலையில் உலக அளவில் மோட்டார் வாகனக் கருவிகள் ஏற்றுமதி முன்னணி மையமாக சென்னை மாறும் என்பது எனது எதிர்பார்ப்பு.

இது விஷயத்தில் முழு அளவுக்கு நான் ஒத்துழைப்புத் தரவிருக்கிறேன். சென்னையில் மோட்டார் வாகனச் சோதனை மையத்தை அமைக்க வேண்டும் என்று வலியுறுத்தி, பிரதமர் மன்மோகன்சிங் அவர்களுக்கு



# காவல்துறை உதவி ஆணையாளர்களுக்குப் புதிய குடியிருப்புகள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 8.8.2005 அன்று, சென்னையில் நடைபெற்ற விழாவில், சென்னை வண்ணாரப்பேட்டையில் 1 கோடியே 64 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டுள்ள உதவி ஆணையாளர் குடியிருப்புகள், புனித தோமையார் மலையில் 87 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டுள்ள காவலர் மற்றும் தலைமைக் காவலர்களுக்கான குடியிருப்புகள், சென்னை மாநகரில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள எம்.ஜி.ஆர். நகர் காவல் நிலையம் மற்றும் தாம்பரத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள அனைத்து மகளிர் காவல் நிலை... ஆகியவற்றைத் திறந்து வைத்தார்கள்.

தமிழ்நாடு காவல் துறை... வீட்டு வசதியை உறுதி செய்து மேம்... வகையில், வண்ணாரப்பேட்டை தட்சிண் மூர்த்தி கோயில் தெருவில், 1,64,33,000 ரூபாய் செலவில் 16 உதவி ஆணையாளர் குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. இதில் உள்ள ஒவ்வொரு குடியிருப்பும் 1,141 சதுர அடி பரப்பளவு கொண்டவை ஆகும். தற்போது புதிதாகக் கட்டி முடிக்கப்பட்டுள்ள 16 உதவி ஆணையாளர் குடியிருப்புகளையும் சேர்த்து, சென்னை மாநகரத்தில் மொத்தம் 64 காவல் உதவி ஆணையாளர்களுக்கான குடியிருப்புகள் கட்டப் பட்டுள்ளன. இதுவன்றி, காவல் துறையை நவீனமயமாக்கும் திட்டத்தின் கீழ், புனித தோமையார் மலை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட வடக்கு ராஜ வீதியில் 24 காவலர் மற்றும் தலைமைக் காவலர் குடியிருப்புகள் 86.89 இலட்சம் ரூபாய் செலவில் கட்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், ஆணையிட்ட வண்ணம் இக்குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இதில் உள்ள ஒவ்வொரு குடியிருப்பும் 550 சதுர அடி கொண்டதாகும்.

சென்னை மாநகரில் கே.கே. நகர் பகுதியில் வாழும் மக்களுக்குக் காவல் துறையினரின் சீரிய பணிகள் துரிதமாகக் கிடைத்திடும் நோக்கில், கே.கே.நகர் காவல் நிலையத்திலிருந்துப் புதிதாக எம்.ஜி.ஆர் நகர் காவல் நிலையம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய காவல் நிலையம் சென்னை ஜாபர்கான்பேட்டை, சத்தியமூர்த்தி பிளாக், பாலகிருஷ்ணன் தெருவில் அமைந்துள்ளது. எம்.ஜி.ஆர். நகர் ...வல் நிலையத்தில் 2 காவல் ஆய்வாளர்கள், 4 காவல் காவல...வாளர்கள், 6 தலைமைக் காவலர்கள், 8 முதல்நிலைக் புதிதாக உ... 48 இரண்டாம் நிலைக் காவலர்கள் பணியாற்றுவர். நிலையத்தையும் ...ட்டுள்ள எம்.ஜி.ஆர். நகர் காவல் காவல் துறையில் 121 சட்... ...போது சென்னைப் பெருநகர, ...ல் நிலையங்கள் உள்ளன.



மகளிருக்கு எதிராக நிகழ்த்தப்படும் கொடுமைகளுக்கு ஒரு முடிவு கண்டு அவர்களுக்கு நியாயம் வழங்குகின்ற வகையில், ஒவ்வொரு காவல் துறை உட்கோட்டத்திலும் ஒரு அனைத்து மகளிர் காவல் நிலையம் அமைத்திட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், ஆணையிட்டவாறு இதுவரைத் தமிழகத்தில் மொத்தம் 195 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதே அடிப்படையில், புனித தோமையார் காவல் மாவட்டத்தில் புதிதாக ஏற்படுத்தப்பட்ட தாம்பரம் காவல் உட்கோட்டத்தில் அனைத்து மகளிர் காவல் நிலையம் ஒன்று தற்போது புதிதாக ஏற்படுத்தப் பட்டுள்ளது. தாம்பரம், குரோம்பேட்டை, பீர்க்கங் கரணை, சிட்லபாக்கம் மற்றும் சேலையூர் ஆகிய காவல் நிலைய ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகள் தாம்பரம் அனைத்து மகளிர் காவல் நிலையக் கட்டுப்பாட்டில் செயல்படும். இந்நிலையத்தில் 1 காவல் ஆய்வாளர், 1 காவல் உதவி ஆய்வாளர், 3 தலைமைக் காவலர்கள், 10 இரண்டாம் நிலைக் காவலர்கள் ஆகியோர் பணியாற்றுவர். புதிதாக உருவாக்கப்... அனைத்து மகளிர் காவல் நிலையம் சென்னை மாநகரின் 35ஆவது அனைத்து மகளிர் காவல் நிலையமாகவும், தமிழகத்தின் 196ஆவது அனைத்து மகளிர் காவல் நிலையமாகவும் திகழும்.



வண்ணாரப்பேட்டையில் கட்டப்பட்டுள்ள உதவி ஆணையாளர் குடியிருப்புகள், புனித தோமையார் மலையில் கட்டப்பட்டுள்ள காவலர் மற்றும் தலைமைக் காவலர்களுக்கான குடியிருப்புகள், சென்னை மாநகரில் புதிதாக அமைக்கப் பட்டுள்ள எம்.ஜி.ஆர். நகர் காவல் நிலையம் மற்றும் தாம்பரத்தில் புதிதாக அமைக்கப் பட்டுள்ள அனைத்து மகளிர் காவல் நிலையம் ஆகியவற்றை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 8.8.2005 அன்று, சென்னை வண்ணாரப்பேட்டை உதவி ஆணையாளர் குடியிருப்பில் நடைபெற்ற விழாவில் திறந்து வைத்தார்கள்.

இந்த விழாவில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் திரு. என். நாராயணன் இ.ஆ.ப., உள்துறை முதன்மைச் செயலாளர் திரு. பவன் ரெய்னா இ.ஆ.ப., காவல் துறை தலைமை இயக்குநர் திரு. ஏ.எக்ஸ். அலெக்சாண்டர் இ.கா.ப., தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தின் தலைவர் திரு. ஐ.கே. கோவிந்த் இ.கா.ப., சென்னை மாநகரக் காவல் ஆணையாளர் திரு. ஆர்.நடராஜ் இ.கா.ப., மற்றும் காவல் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * *



மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

## செல்வி ஜெ ஜெயலலிதா

அவர்களின்

# கிருஷ்ண ஜெயந்தி வாழ்த்துச் செய்தி

'அச்சுதன், அமரர் ஏறு, ஆயர்தம் கொழுந்து' என்று ஆழ்வார் பெருமக்களால் போற்றிப் பாடப்பட்ட ஸ்ரீகிருஷ்ணன் அவதாரம் செய்த திருநாளாம், கிருஷ்ண ஜெயந்தி திருநாளை, ஆர்வத்தோடும், மகிழ்வோடும் கொண்டாடும் அனைவருக்கும் எனது இனிய கிருஷ்ண ஜெயந்தி வாழ்த்துகளை இயம்புவதில் இதயம் மகிழ்கிறேன்.

நலம் தரும் சொல் 'நாராயணன்' எனும் சொல் என்பார்கள். அந்த நாராயணன் கண்ணனாக அவதரித்த திருநாள் கிருஷ்ண ஜெயந்தி! கிருஷ்ணன்என்றதும் நினைவுக்கு வருவது கீதை. உலகம் யாவையும் காத்து வரும் உலக முதல்வனாகிய கிருஷ்ணன் உலக குருவாய் வந்து உபதேசித்தான். அந்த உபதேசக் கவிதைகளின் உன்னதத் தொகுப்பே பகவத் கீதை!

பகவத் கீதை தெய்வீகத்துக்கு மட்டும் வழிகாட்டவில்லை; உலகியலுக்கும் வழிகாட்டுகிறது; வாழ்க்கை என்னும் போர்க்களத்தில் வாகை சூட வழியைச் சொல்லித் தருகிறது!

மனிதனை நிறை மனிதன் ஆக்கும் மகத்தான கீதையைத் தந்த பகவான் கிருஷ்ணன் பிறந்த நாளாகிய இன்று, மானுடம் மேனிலையை அடையப் பிரார்த்திப்போம்.

ஓங்கி உலகளந்த உத்தமன் திருவருளால், தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து, நீங்காத செல்வம் தமிழர் வாழ்வில் நிறையட்டும் என்று வாழ்த்துகிறேன்.

என் அருமைத் தமிழக மக்கள் அனைவருக்கும் என் இதயம் நிறைந்த கிருஷ்ண ஜெயந்தி வாழ்த்துகள்!

* * *



# 383 கோடி ரூபாய் மதிப்பில் 150 மெகாவாட் திறனுடைய பைக்காரா இறுதி நிலை புனல் மின் நிலையம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா
அவர்கள் திறந்து வைத்தார்கள்.

என் அன்புக்குரிய மக்களாகிய உங்களைக் காண்பதிலும், உங்கள் முன்னிலையில் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மகத்தான திட்டத்தைத் தமிழகத்திற்கு அர்ப்பணிப்பதிலும், நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

அந்தகாரத்தில் அழுந்திக் கிடந்த மனித இனத்துக்கு விமோசனம் அளித்தது வெளிச்சம். இயற்கை வெளிச்சம் பாதி நாள் தான். மீதி நாளில் இருளின் ஆட்சி தான் என்ற நிலையை மாற்றி இரவைப் பகல் ஆக்க மனிதன் முயன்றான் – மின்சாரத்தைக் கண்டுபிடித்தான்.

அந்த மின் ஆற்றல் மட்டும் கிடைத்திராவிட்டால் உலகம் இன்று பெற்றிருக்கும் எந்த வளர்ச்சியும் கனவாகவே இருந்திருக்கும். அந்த மின் ஆற்றல் தமிழகத்துக்குப் போதிய அளவு கிடைக்கவும், தமிழக மக்களின் வாழ்வில் அது ஒளியேற்றவும், வளத்துக்கு வழி காட்டவும், உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, அரிய பணி ஆற்றி வருவதை நீங்கள் அறிவீர்கள்.

நீலகிரி என்னும் மலை மாதாவின் மடியிலே இன்று நடைபெறுகின்ற இந்த விழா மகத்தான சிறப்பு வாய்ந்தது.

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மணிமுடியில் புதியதொரு வைரம் பதிக்கப்படுகின்ற திருநாள் இன்று! தமிழ்நாடு மின்சார வாரிய வரலாற்றிலும், தமிழ்நாட்டின் வரலாற்றிலும் பெரும் சிறப்பு வாய்ந்த பெருநாள் இந்த நாள்! இன்று, நான் 383 கோடி ரூபாய் மதிப்பில் 150 மெகாவாட் திறனுடைய பைக்காரா இறுதி நிலை புனல் மின் நிலையத்தைத் திறந்து வைத்திருக்கிறேன்.

தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கும், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மூலம் தமிழ்நாட்டுக்கும் பெருமை சேர்க்கும் இந்த விழா, என் அன்பிற்கினிய நீலகிரி மக்களாகிய உங்கள் முற்றத்தில் உங்கள் முன்னிலையில் நடைபெறுவது எனக்கு மிக்க மகிழ்ச்சியைத் தருகிறது.

நீலகிரி மலையிலிருந்து நீள் வகிடாக கீழ் இறங்கி ஓடி வரும் பைக்காரா நதி நீலகிரி மாவட்ட மலைவாழ் மக்கள் தங்களது குலதெய்வம் எனப் போற்றி வணங்கும் புகழ் மிகுந்த நதியாகும். உலகச் சுற்றுலா வரைபடத்தில் 'மலை வாசஸ்தலங்களின் ராணி' என்று எவ்வாறு ஊட்டி சிறப்பிடம் பெற்று இருக்கிறதோ; அதே போல, ஊட்டியில் உள்ள மனங்கவர் மகிழ்விடங்களில் பைக்காரா நீர் வீழ்ச்சி ஒரு தனி இடம் பெற்று இருக்கிறது. நீலகிரி மலையைச்



சுற்றி சுமார் 154 சதுர கிலோ மீட்டர் பரப்பில் பெய்கின்ற மழையால் பைக்காரா ஆற்றில் திரண்டு வருகிற தண்ணீரைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்கின்ற திட்டம், முதன் முதலாக 1932ஆம் ஆண்டு வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் தொடங்கப்பட்டது.

உதகமண்டலத்திலிருந்து 32 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள இந்த சிங்காரா என்னும் இடத்தில் 73 ஆண்டுகளுக்கு முன் அமைக்கப்பட்ட புனல்மின் நிலையத்தின் மூலம் 59.20 மெகாவாட் மின் உற்பத்தி செய்யப்படுகிறது. ஆண்டு ஒன்றுக்கு சுமார் 2,000 மில்லி மீட்டர் அளவுக்கு பெய்கின்ற மழை நீரைப் பயன்படுத்தி இன்னும் சிறப்புடன் மின் உற்பத்தி செய்திட வேண்டும் என்று இதயதெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஒரு திட்டத்தைத் தீட்டி அதனைச் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொண்டார். அதன் பயனாக, இந்தத் திட்டத்தைத் தொடங்குவதற்கான சுற்றுச்சூழல் ஒப்புதலை 1985ஆம் ஆண்டு மத்திய அரசு வழங்கியது.

இந்தத் திட்டத்திற்கு மத்தியத் திட்டக் குழுவின் ஒப்புதலும் 1988ஆம் ஆண்டு பெறப்பட்டது. எனது முந்தைய ஆட்சிக் காலத்தில் இத்திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கைகள் தயார் செய்யப்பட்டு அதற்கான மதிப்பீட்டிற்கு தமிழ்நாடு மின்சார வாரியக் குழுவால் 1994ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஒப்புதல் அளிக்கப்பட்டது. அதன் பின்னர், பணிகள் துவங்கப்பட்டன. ஆனால், 1996ஆம் ஆண்டு ஏற்பட்ட ஆட்சி மாற்றத்திற்குப் பின்னர் இப்பணிகள் மிகவும் மந்த கதியை அடைந்தன.

வனப் பகுதியில் அமைந்துள்ள பைக்காரா இறுதி நிலை புனல்மின் நிலையத்தில் தயாரிக்கப்படும் மின்சாரம், நாட்டில் உள்ள தொழிற்சாலைகளின் தேவைக்கும், மற்றும் நுகர்வோர் பயன்பாட்டிற்கும் விநியோகம் செய்யப்பட அங்கிருந்து 220 கிலோ வோல்ட் மின் கடத்திக் கம்பித் தொடர் (Transmission Lines) வழியாக கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள அரசூர் துணை மின் நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட வேண்டும். இதற்கு, சிங்காராவுக்கும், அரசூருக்கும் இடைப்பட்ட தூரமான 85 கிலோ மீட்டர் நீளத்திற்கு மின் கடத்திக் கம்பித் தொடர் அமைக்கப்பட வேண்டும். இதில், 14 கிலோ மீட்டர் அளவுக்கு கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி மாவட்டங்களில் உள்ள காப்புக் காடுகள் வழியாகச் செல்ல வேண்டும்.

இதற்காக, 49.78 எக்டேர் காப்புக் காடுகளை மாற்றி வழங்கிட வேண்டும் என்று தெரிவித்து, அதற்கு ஈடாக வேறு இடங்களில் காப்புக் காடுகளை ஏற்படுத்துவதற்கான செலவுத் தொகையை வழங்குவதற்கான உத்தரவாதத்தைத் தமிழக அரசு அளித்து மைய அரசின் ஒப்புதலுக்காக 1998ஆம் ஆண்டு கருத்துரு அனுப்பப்பட்டது. இதன்மீது ஆய்வு மேற்கொண்டு, மத்திய அரசு தெரிவித்த அறிவுரைகளுக்கும், வழங்கிய வழி காட்டுதலுக்கும் ஏற்ப மாற்றம் செய்யப்பட வேண்டிய காப்புக் காடுகளின் அளவை 49.78 எக்டேர் என்ற அளவில் இருந்து 29.94 எக்டேர் ஆகக் குறைத்து, தக்க திருத்தங்களுடன் 2003ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில், காப்புக் காடுகளை மாற்றம் செய்வதற்கான ஒப்புதலை வழங்கும்படி மத்திய சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறையை எனது அரசு கேட்டுக் கொண்டது. எனினும், வனப் பகுதி அல்லாத பிற பகுதிகளின் வழியாக மின் கடத்திக் கம்பிகளைக் கொண்டு செல்வதற்கான வழிமுறைகளை ஆராயும்படி மீண்டும், மீண்டும் மத்திய அரசின் சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை, தமிழக அரசைக் கேட்டுக் கொண்டது. பைக்காரா இறுதி நிலை புனல் மின் திட்டம் காடுகள் அடர்ந்துள்ள பகுதியிலேயே அமைந்திருக்கிறது என்பதையும், அங்கு உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் மக்கள் பயன்பாட்டிற்கு அளிக்கப்பட வேண்டுமெனில் மின் கடத்திக் கம்பித் தொடர் வனப்பகுதி வழியாகவே கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள அரசூருக்கு எடுத்துச் செல்லப்பட வேண்டும் என்பதையும், தமிழக அரசு திரும்பத் திரும்ப எடுத்துரைத்த போதும் கால தாமதம் செய்ய வேண்டும் என்பதற்காகவே மத்திய அரசின் சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை மீண்டும், மீண்டும் கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருந்தது.

இது குறித்து 2003ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் வன ஆலோசனைக் குழுக் கூட்டம் Forest Advisory Committee கூட்டம் நடைபெற்ற போது, மத்திய மின்சார ஆணையத்தின் இயக்குநர், Director, Central Electricity Authority காப்புக் காடுகள் வழியாக மின் கடத்திக் கம்பித் தொடர் அமைப்பதற்கு உடனடியாக ஒப்புதல் வழங்க வேண்டும் என்று எடுத்துக் கூறிய போதும், இதனை மத்திய சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை ஏற்காமல் மீண்டும் பல்வேறு புதிய தடை வினாக்களை எழுப்பியது. ஏற்கெனவே, பணி முடிக்கப்பட்ட சுரங்கப் பாதையால் முதுமலை வனச் சரணாலயத்திற்கு ஏற்படும் விளைவுகள் என்ன; காப்புக் காடுகளை மாற்றம் செய்ய வேண்டியதன் அவசியம் என்ன; என்பது போன்ற தேவையற்ற தடை வினாக்களை மத்திய அரசின் சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை அமைச்சகம் தொடர்ந்து எழுப்பியது.



எத்தகைய தேவையற்ற வினாக்களை மத்திய அரசின் சுற்றுச் சூழல் துறை எழுப்பியது என்பதற்கு ஒரே ஒரு உதாரணத்தை இங்கே எடுத்துக் கூற விரும்புகிறேன். 1920களில் பைக்காராவில் இருந்து துடியலூர் வரை காப்புக் காடுகள் வழியாக 110 கிலோ வோல்ட் மின் கடத்திக் கம்பித் தொடர் நிறுவ அரசின் ஒப்புதல் பெறப்பட்டமைக்கான, அத்தாட்சியை அளிக்கும்படி கேட்டுக் கொண்டது. 1920இல் அதாவது, வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் மின் கடத்தி கம்பித் தொடர் அமைக்க அளிக்கப்பட்ட ஒப்புதல் கடிதத்தை இப்போது காண்பிக்க வேண்டுமாம்! இந்தச் செய்தியைக் கேட்கும் போது எது நினைவுக்கு வரும்? தண்ணீர் குடித்துக் கொண்டிருந்த ஆட்டுக் குட்டியை அடித்துத் தின்ன விரும்பிய ஓநாய், "இந்தக் குட்டையை நீ கலக்கவில்லை என்றால் என்ன, உன் மூதாதையர் யாராவது கலக்கியிருப்பார்கள்" என்று விதண்டாவாதம் பேசிய கதைதான் யாருக்கும் நினைவுக்கு வரும். இவ்வாறு இந்த பைக்காரா இறுதி நிலை புனல்மின் திட்டத்தைத் தாமதப்படுத்த காரணம் என்ன என்பது எவருக்கும் எளிதில் விளங்கிவிடும். அப்போதும் சரி, இப்போதும் சரி, மத்திய அரசின் சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம் மத்தியக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் எந்தக் கட்சியிடம் உள்ளது என்பதை நாட்டு மக்கள் அனைவரும் நன்கு அறிவார்கள். எனவேதான் 383 கோடி ரூபாய் வீண் ஆனாலும் பரவாயில்லை; தமிழக மக்களுக்குத் தீமை ஏற்பட்டாலும் கவலையில்லை; இத்திட்டம் நிறைவேறக் கூடாது என்று கருதினார்கள். முறையான ஒப்புதலை உடனே வழங்காமல் இவ்வாறு

எத்தனை தடைகளை எனக்கு ஏற்படுத்தினாலும், எனக்குத் துணையாக மக்கள் என்னும் கிருஷ்ண பரமாத்மா இருக்கிறார் என்ற மகிழ்ச்சியும், மன நிறைவும் எனக்கு எப்போதும் உண்டு!

தன்னிகரற்ற தமிழகத்தை உருவாக்க 2002ஆம் ஆண்டில் 15 அம்சத் திட்டத்தை நான் வழங்கினேன். மிக முக்கியமான அந்தப் பதினைந்து அம்சங்களில் ஒன்று எரிசக்தி பாதுகாப்பு!

அனல், புனல், அணு சக்தி ஆகிய எரிசக்தி ஆதாரங்கள் மற்றும் காற்று, சூரிய சக்தி போன்ற புதுப்பிக்கத் தக்க வகையிலான எரிசக்தி ஆதாரங்கள் ஆகியவற்றில் தொடர்ந்து கவனம் செலுத்தி, நிலை பெற்ற ஆதாரங்களை ஏற்படுத்துதல், வேளாண்மை, தொழில் மற்றும் வீட்டுப் பயனுக்காக எரிசக்தியில் தன்னிறைவை அடைதல் ஆகியவை நமது குறிக்கோள் ஆகும்.

இந்த இலட்சியத்தை ஈடேற்ற, அரிய பெரிய திட்டங்களை நிறைவேற்றி வருகிறது உங்கள் அன்புச் சகோதரியின் அரசு!

தமிழக மின் கட்டமைப்பு, நான் முதலில் ஆட்சிப் பொறுப்பேற்ற 1991ஆம் ஆண்டு 6004 மெகாவாட் என்ற அளவில் தான் இருந்தது. 1991 முதல் 1996 வரையிலான எனது ஆட்சிக் காலத்தில் புதியதாக 1300 மெகாவாட் அளவிற்கு நிறுவு திறன் சேர்க்கப்பட்டது. 1996 முதல் 2001 வரையிலான தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நிறுவப்பட்ட திறன் 560 மெகாவாட் மட்டுமே ஆகும். ஆனால், 2001 முதல் இன்று வரை எனது ஆட்சிக் காலத்தில் 1897 மெகாவாட் நிறுவு திறன் சேர்க்கப்பட்டுள்ளது. அதாவது இன்றைய மின் கட்டமைப்பின் மொத்த நிறுவு திறனான 9761 மெகாவாட்டில் 33 சதவிகிதம் நிறுவு திறன், எனது ஆட்சிக் காலத்தில் தான் சேர்க்கப்பட்டது ஆகும் என்பதை மிகுந்த பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது தவிர, 2142 மெகாவாட் மின் நிறுவு திறன் கொண்ட காற்றாலைகளும்; 275 மெகாவாட் தொழிற்சாலை இணை உற்பத்தியும் Co-Generation-ம் உள்ளது. இதன் பயனாக உச்ச மின் தேவையான 7775 மெகாவாட் அளவை சுலபமாக நம்மால் நிறைவு செய்ய முடிகிறது. இந்த அளவு நிறுவு திறன் அதிகரித்துள்ளதால் தான் மின்வெட்டு இல்லாத ஒரே மாநிலமாக தமிழகம் இன்றைக்கு விளங்குகிறது.

வளர்ந்து வரும் மின் தேவையை ஈடுசெய்யவும்; தமிழகத்தில் என்றுமே மின் தட்டுப்பாடு வரக் கூடாது என்பதைக் கருத்தில் கொண்டும்; தூத்துக்குடியில் மேலும் 1000 மெகாவாட் திறனுடைய ஒரு அனல்மின் நிலையத்தை நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்துடன் கூட்டு முயற்சியில் நிறுவவும்; வடசென்னையில் 1000 மெகாவாட் திறனுடைய அனல் மின் நிலையத்தை தேசிய அனல்மின் கழகத்தோடு கூட்டு முயற்சியில் நிறுவவும்; எனது அரசு திட்டமிட்டு, இந்த நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. அது மட்டுமன்றி, கூடங்குளத்தில் அமைக்கப்பட்டு வரும் அணு மின் நிலையம் மூலமாக 2,000 மெகாவாட் மின்சாரமும்; ஜெயங்கொண்டத்தில் அமைக்கப்பட்ட உள்ள அனல் மின் நிலையம் மூலமாக 1,000 மெகாவாட் மின்சாரமும் நமக்குக் கிடைக்க உள்ளது. மேலும், சிறு புனல் மின் திட்டங்களைச் செயல்படுத்தி வருவதோடு, நிலக்கரி மற்றும் எரிவாயு மூலம் மின் உற்பத்தி செய்யவும் புதிய திட்டங்களைத் தீட்டி வருகிறோம்.

இவ்வாறு தொலைநோக்கோடு செயல்பட்டு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிற அதே வேளையில், திட்டங்களின் பயன்கள் ஏழை எளிய மக்களுக்குச் சென்று சேர வேண்டும் என்பதில் நான் உறுதியாக இருக்கிறேன். விவசாயிகளுக்கும், குடிசைகளுக்கும் இலவச மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. இந்தியாவிலேயே விவசாயிகள் அனைவருக்கும் இலவச மின்சாரம் வழங்கப்படுவதை உறுதி செய்துள்ள முன்னோடி அரசு உங்கள் அன்புச் சகோதரியின் அரசு தான். மேலும், வீட்டு உபயோகிப்பாளர்களின் கட்டணத்தை வெகுவாகக் குறைத்திடவும் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு எனது அரசு மானியம் வழங்கி வருகிறது.

தமிழகத்திலுள்ள 1 கோடியே 16 இலட்சத்து 57 ஆயிரம் வீட்டு உபயோகிப்பாளர்கள் பயன்பெறும் வகையில் ஆண்டுக்கு 910 கோடி ரூபாய் மானியத் தொகையை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு எனது அரசு வழங்கி வருகிறது. இத்தகைய நிவாரணத்தை இந்தியாவில் வழங்கி வரும் ஒரே அரசு உங்கள் அன்புச் சகோதரியின் அரசு தான் என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

எத்தனை தடைகளைத் தாண்டியும், உங்கள் அன்புச் சகோதரியின் பணிகள் தொடரும்.

"இங்கு, தடைக்கற்கள் உண்டு என்றாலும்
தடந்தோள் உண்டு"

– என்னும் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் பைந்தமிழ் வரிகளுக்கு இணங்க, என் அன்புக்குரிய தமிழக மக்களின் வாழ்வுக்கும், வளர்ச்சிக்கும் தடையாக நிற்கும் எந்த இடையூறுகளையும் பொடிப் பொடியாக்கும் உறுதிப்பாடு என் உள்ளத்தில் எப்பொழுதும் உண்டு என்பதைத் தெரிவித்துக் கொண்டு, அண்ணா நாமம் வாழ்க! புரட்சித் தலைவர் நாமம் வாழ்க! என்று கூறி விடை பெறுகிறேன். நன்றி வணக்கம்.

6.9.2005 அன்று நீலகிரி மாவட்டம்,
சிங்காராவில் நடைபெற்ற
பைக்காரா இறுதி நிலை புனல் மின் நிலைய
திறப்பு விழாவில்,
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்
ஆற்றிய உரை.

# ரூ.209 கோடி மதிப்பில் புத்து துணை மின்நிலையங்கள்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 2.9.2005 அன்று தலைமைச் செயலகத்தில், 15 கோடி ரூபாய் செலவில் நிறைவு செய்யப்பட்டுள்ள இரண்டு சிறு புனல் மின் திட்டங்கள், 12 கோடி ரூபாய் செலவில் புனல் மின் திட்ட புனரமைப்புப் பணிகள் மற்றும் 209 கோடி ரூபாய் மதிப்பிலான பத்து துணை மின் நிலையங்கள் ஆகியவற்றைத் திறந்து வைத்தார்கள்.

மேலும், 224 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 5 புனல் மின் நிலையங்களுக்கும் 222 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 30 துணை மின் நிலையங்களுக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 2.9.2005 அன்று அடிக்கல் நாட்டினார்கள்.

**சிறு புனல் மின் திட்டங்கள்**

2.5 மெகாவாட் திறன் கொண்ட ஆழியார் சிறு புனல் மின் திட்டம் 7 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ளது. 1.3 மெகாவாட் திறன் கொண்ட பெருஞ்சாணை சிறு புனல் மின் நிலையம் 8 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ளது. இந்த சிறு புனல் மின் திட்டங்கள் நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ளதன் மூலம், தற்போதைய மாநிலத்தின் புனல் மின் உற்பத்தி திறனான 1987.4 மெகாவாட் திறனுடன் 3.8 மெகாவாட் திறன் சேர்ந்து மொத்தம் 1991.2 மெகாவாட் ஆக உயரும்.

மேலும், 400 மெகாவாட் திறன் கொண்ட காடம்பாறை புனல் மின் நிலையத்தின் உற்பத்தித் திறன் மேம்படும் வகையில், 12 கோடி ரூபாய் மதிப்பிலான புனரமைப்பு மற்றும் புதுப்பித்தல் பணிகள் நிறைவு பெற்றுள்ளன. இப்பணிகளையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்கள்.

**துணை மின்நிலையங்கள்**

இதுவன்றி, கோயம்புத்தூர் மாவட்டம், ஒத்தக்கால் மண்டபத்தில் 26 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட்டுள்ள 230 கிலோ வோல்ட் திறன் கொண்ட துணை மின் நிலையம், தருமபுரி மாவட்டம், காரிமங்கலத்தில் 68 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட்டுள்ள 230 கிலோ வோல்ட் துணை மின் நிலையம், திருநெல்வேலி மாவட்டம், கொடிகுறிச்சியில் 36 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட்டுள்ள 230 கிலோ வாட் திறன் துணை மின் நிலையம், சென்னை மாவட்டம்,

வீண் கால தாமதம் செய்தது எதனால், என்பது உங்கள் அனைவருக்கும் நன்கு தெரியும். 383 கோடி ரூபாய் மதிப்பீடு கொண்ட இத்திட்டம் நிறைவேற்றப்பட்டு விட்டால் 150 மெகாவாட் மின் உற்பத்தி செய்யப்பட்டு அதன் மூலம் தொழில் வளம் பெருகி பொருளாதாரம் மேம்பட்டு எனக்குப் பெயரும், புகழும் கிடைத்து விடுமே! அதைத் தாங்க முடியுமா அவர்களால்? இத்திட்டம் வெற்றி பெற்றால், இதற்கான புகழ் எனக்கும் என்னுடைய அரசுக்குமே கிடைக்கும் என்ற காரணத்தாலேயே தங்களிடம் உள்ள ஆட்சி அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்து இதற்கு முட்டுக்கட்டை போட்டுக் கொண்டே இருந்தார்கள் அவர்கள்.

1998ஆம் ஆண்டு மாநிலத்தில் தி.மு.க. ஆட்சியின் போது அனுப்பப்பட்ட இதற்கான கருத்துருவின்படி, நீலகிரி காப்புக் காடுகளில் வெட்டப்பட வேண்டிய மரங்களின் எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா? நீலகிரி வனப் பகுதிகளில் அவ்வாறு வெட்டப்பட வேண்டிய மரங்களின் எண்ணிக்கை 19,200 ஆகும். மாற்றுத் திட்டத்திற்கு ஜனவரி 2003இல் நாங்கள் அனுப்பிய கருத்துருவின்படி, வெட்டப்பட வேண்டிய மரங்களின் எண்ணிக்கை வெறும் 4,177 மட்டும் தான். ஆனாலும், இதற்கான ஒப்புதலை வழங்க மத்திய சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை முன் வரவில்லை. அதற்குக் காரணம், ஒப்புதலை வழங்க முடியவில்லை என்பது அல்ல; சுற்றுப்புறச் சூழல் காரணம் என்பதும் சரியல்ல; அந்த ஒப்புதல் வழங்கிட அந்தத் துறையின் அமைச்சருக்கு மனம் வரவில்லை என்பது தான் உண்மை.

'மனம் இருந்தால் மார்க்கம் உண்டு' என்பார்கள். ஆனால், அப்படி நல்ல செயல் செய்ய வேண்டும் என்ற மனம் இல்லாதவர்களைத் திருத்தி திட்டத்தை நிறைவேற்ற ஒரு மார்க்கம் கண்டிட வேண்டும் என்ற நோக்கத்துடன் எனது அரசு நடவடிக்கை மேற்கொண்டது. கால தாமதம் செய்வது தமிழக நலனுக்கு எதிரானது என்ற காரணத்தால் காப்புக் காடுகள் வழியாக மின் கடத்திக் கம்பிகளை எடுத்துச் செல்ல அனுமதி வழங்க மத்திய சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்துக்கு ஆணையிடக் கோரி ரிட் மனு ஒன்றைச் சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது எனது அரசு. இதனை விசாரித்த உயர் நீதிமன்றம், தனது 31.12.2003 நாளிட்ட ஆணையில், மாநில அரசால் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுவை ஏற்று, 31.1.2004க்குள் தகுதியின் அடிப்படையில் உரிய உத்தரவைப் பிறப்பிக்குமாறு ஆணையிட்டது. இந்த ஆணையில், சென்னை உயர் நீதிமன்றம் "............ in matters like this, more particularly the project sought to be implemented by the Tamil Nadu Electricity Board for the welfare of the public, the proposals cannot be kept pending for consideration for years together" என்றது. "இது போன்ற விஷயங்களை, அதிலும் குறிப்பாக, தமிழ்நாடு மின்சார வாரியத்தால் செயல்படுத்தப்படும் மக்கள் நலன் பேணும் இந்தத் திட்டத்தை, பரிசீலனைக்காக ஆண்டுக் கணக்கில் நிலுவையில் வைத்திருக்கக் கூடாது" என்று குறிப்பிட்டுள்ளது. இதில் இருந்தே ஒப்புதல் அளிப்பதில் வீண் கால தாமதம் வேண்டுமென்றே ஏற்படுத்தப் பட்டிருக்கிறது என்பது தெளிவாகும்.

உயர் நீதிமன்றத்தின் இந்த ஆணையின்படி 2004ஆம் ஆண்டு மே மாதம் சுற்றுச் சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம் பல்வேறு நிபந்தனைகளின் அடிப்படையில் தனது ஒப்புதலை வழங்கியது.

இயற்கையாக வளர்ந்த மரங்களை வெட்ட வேண்டுமென்றால் உரிய அனுமதி பெற வேண்டும் என்ற உச்ச நீதிமன்றத்தின் ஆணைக்கு ஏற்ப உச்ச நீதிமன்றத்தில் எனது அரசு, மனு ஒன்றைத் தாக்கல் செய்து அதற்கான அனுமதியை இவ்வாண்டு ஜனவரி மாதம் பெற்றது. எனவே, இவ்வாண்டு மார்ச் மாதம், 29.94 எக்டேர் வன நிலங்களை மாற்றுவதற்கு ஒப்புதல் அளிக்க வேண்டிய நிர்ப்பந்தம் மத்திய சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறைக்கு ஏற்பட்டது. இன்றைக்கு இத்திட்டத்தை இங்கே தொடங்கி வைக்கிறோம் என்றால், அதன் பின்னணியில் எத்தகையதொரு மிகப் பெரும் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது என்பதை மக்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே, நான் இதனை இத்தனை விரிவாக எடுத்துக் கூறியுள்ளேன். உயர் நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றத்தில் இதனை எடுத்துக் கூறி அவர்களின் உத்தரவைப் பெற எனது அரசு மேற்கொண்ட முயற்சிகளினால்தான் தமிழ்நாட்டுக்குப் பயனளிக்கக் கூடிய ஒரு நல்ல திட்டம் இன்று கை கூடியுள்ளது.

சுற்றுச் சூழலைக் காப்பதற்கென்றே அவதாரம் எடுத்து வந்தாற் போல் வேடம் பூண்டு பைக்காரா இறுதி நிலை புனல்மின் திட்டம் அமைவதைத் தடுத்து நிறுத்துகின்ற தடைக் கல்லாக இருந்தவர்களின் சுயரூபம் என்ன என்பதைச் சேது சமுத்திரக் கால்வாய் திட்டம் வெட்ட வெளிச்சமாக்கிக் கொண்டிருக்கிறது. அரசியல் ஆதாயம் ஒன்றை மட்டுமே கருத்தில் கொண்டு, சுற்றுச் சூழல் பாதிப்புகளைப் பற்றி கிஞ்சித்தும் கவலைப்படாமல், கடல் வாழ் உயிரினங்களுக்கும், மதிப்பு வாய்ந்த பவழப் பாறைகளுக்கும் மற்றும் மீனவர்களின் வாழ்வாதாரங்களுக்கும் ஒட்டு மொத்த அழிவை ஏற்படுத்தி, மீனவர்களின் வாழ்க்கை முற்றிலும் அழிந்தாலும் பரவாயில்லை என்று சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டத்தைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இதன் மூலம், சுற்றுச் சூழல் காவலர் என்று அவர்கள் அணிந்திருந்த அழகு முகமூடி கிழிந்து போய் 'அரசியல் சந்தர்ப்பவாதம்' என்ற அவர்களது அலங்கோல உண்மை முகம் நாட்டு மக்களுக்கு தெளிவாக தெரிந்து கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன்.

இந்த இனிய நேரத்தில், இந்த மாபெரும் திட்டம் சீரிய முறையில் நிறைவேறுவதற்கும் மகத்தான வெற்றியை அடைவதற்கும் உறுதுணையாக இருந்து இத்திட்டத்தில் பணியாற்றிய தமிழக மின்சார வாரியப் பொறியாளர்கள், அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் ஆகியோரைக் கௌரவித்திடும் வகையில் அவர்களுக்கு 1 மாத அடிப்படை ஊதியம் மற்றும் அகவிலைப்படி ஊக்கத் தொகையாக வழங்கப்படும் என்பதைத் தெரிவிப்பதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

இவ்வாறு, தமிழக மக்களுக்கு வாழ்வும் வளமும் அளிக்கும் திட்டங்களை நிறைவேற்ற நான் அல்லும் பகலும் உழைத்து வருகிறேன். ஆனால், அந்த நல்ல காரியங்களை எல்லாம் நடக்க விடாமல் செய்வதற்கு நாளும் ஒரு தடையை ஏற்படுத்தி வரும் நயவஞ்சகர்களை நினைக்கும் போது எனக்கு மகாபாரதக் கதை ஒன்று தான் நினைவுக்கு வருகிறது.

துரியோதனன் வஞ்சகமே வடிவமானவன். சூழ்ச்சியால் பஞ்சபாண்டவர்களைக் காட்டிற்கு அனுப்பியதோடு அவனது வஞ்சகம் முடிந்து விடவில்லை.

வனவாசம் செய்து வந்த பாண்டவர்களை அழித்து விடுவதற்கும் அவன் வஞ்சகச் செயல்களைத் தொடர்ந்து செய்து வந்தான்.

ஒரு நாள் துர்வாச முனிவருக்கு துரியோதனன் விருந்து அளித்தான். மகிழ்ச்சியடைந்த முனிவர் "உனக்கு என்ன வரம் வேண்டும் கேள்!" என்று சொன்னார். துரியோதனன் நல்லவனாக இருந்தால், தனக்கு நன்மை அளிக்கும் நல்வரம் ஒன்றைக் கேட்டிருப்பான். அவன்தான் பிறப்பிலேயே தீயவன் ஆயிற்றே! நன்மையைக் கேட்பானா!

துர்வாச முனிவரிடம் துரியோதனன் சொன்னான்: "எனக்கு எந்த வரமும் வேண்டாம். நீங்கள் என் மாளிகையில் விருந்து உண்டது போல் பாண்டவர்கள் இருக்கும் இடத்திற்குச் சென்று அங்கும் விருந்து உண்ண வேண்டும்! இது தான் என் விருப்பம்!"

இப்படித் துரியோதனன் சொன்னதும் துர்வாச முனிவரும், அவருடைய சீடர்களும் பாண்டவர்களைத் தேடிப் போனார்கள்.

அடர்ந்த காட்டில், துறவிகளைப் போல் வாழ்ந்து வந்த பஞ்சபாண்டவர்கள், முனிவருக்கும், அவருடைய பரிவாரங்களுக்கும் என்ன விருந்தை வைக்க முடியும்? எப்படி வைக்க முடியும்?

எப்படியாவது முனிவர் கோபம் கொண்டு பாண்டவர்களைச் சபிக்க வேண்டும். அந்தச் சாபத்தால் பாண்டவர்கள் அழிய வேண்டும். இது தான் துரியோதனின் ஆசை! எப்படிப்பட்ட நல்ல ஆசை பார்த்தீர்களா?

துர்வாச முனிவரும், சீடர்களும் பாண்டவர்கள் இருக்கும் காட்டுக்கு வந்தார்கள். "நாங்கள் உன்னைக் கண்டு, விருந்துண்ண வந்திருக்கிறோம். எங்களுக்கு மிகவும் பசியாக இருக்கிறது. நாங்கள் நீராடி வருவதற்குள் நீ விருந்துக்கு ஏற்பாடு செய்" என்று தருமரைப் பார்த்துச் சொல்லிவிட்டுக் குளிக்கச் சென்றார் முனிவர்.

பாண்டவர்கள் நிலை பரிதாபத்துக்கு உரியதாய் இருந்தது. "நடுக்காட்டில் ராஜபோகமான விருந்துக்கு எப்படி ஏற்பாடு செய்ய முடியும்? அதுவும் மிகக் குறைந்த நேரத்தில் எப்படி ஏற்பாடு செய்வது? பொருள்களுக்கு எங்கே போவது?

"முனிவர் வந்து, விருந்து எங்கே என்றால் என்ன செய்வது? முனிவர்களிலே கோபக்கார முனிவர் அல்லவா இந்தத் துர்வாச முனிவர்! எதற்கெடுத்தாலும் 'பிடி சாபம்!' என்று சாபம் கொடுப்பதுதானே அவரது வழக்கம்! என்ன செய்யலாம்?" எனப் பாண்டவர்கள் நெஞ்சம் கலங்கிக் கொண்டு இருந்தார்கள்.

துர்வாச முனிவரின் சாபத்திலிருந்து தப்ப ஒரே வழி, கண்ணபிரானைச் சரண் அடைவது தான் என்று முடிவு செய்து கண்ணபிரானை நெஞ்சார்ந்த அன்போடு அழைத்தார்கள்.

ஆபத்துக் காலத்தில் உதவ கடவுளைத் தவிர யார் இருக்கிறார்கள்?

கண்ணபிரான் தோன்றினார். கவலைக்குக் காரணத்தை அறிந்தார். திரவுபதியைப் பார்த்து, "சமைத்த பாத்திரத்தில் ஏதாவது இருக்கிறதா பார்" என்று சொன்னார். அவர்கள் உண்பதே ஒரு வேளை. அந்த ஒரு வேளை உணவும் உண்டு முடிந்தாகி விட்டது. பாத்திரத்தில் ஒரே ஒரு சோற்றுப் பருக்கை மட்டும் தான் மீதம் இருந்தது.

அந்த ஒரு சோற்றைத் திரவுபதி அன்புடன் கிருஷ்ணருக்கு வழங்கினாள். கிருஷ்ண பரமாத்மா அந்த ஒற்றைப் பருக்கையை உண்டார்; மன நிறைவு கொண்டார்.

உடனே குளித்துக் கொண்டிருந்த துர்வாச முனிவருக்கும் அவருடைய கூட்டத்தினர்க்கும் வயிறு நிரம்பியது.

ஒற்றைப் பருக்கை கூட உண்ண முடியாது என்ற நிலை ஏற்பட்டது; அறுசுவை உணவு உண்ட ஆனந்தம் ஏற்பட்டது. துர்வாசரும், அவருடைய சீடர்களும் பாண்டவர்களிடம் வந்தார்கள். துரியோதனன் சூழ்ச்சியாகத் தங்களை அனுப்பியதைச் சொன்னார்கள்.

'தர்மரே! உமக்கு வேண்டிய வரத்தைக் கேளும்; பெற்றுக் கொள்ளும்!' என்றார் துர்வாசர்.

'துரியோதனனும் அவருடைய சகோதரர்களும் செய்த வஞ்சகச் செயலைப் பொருட்படுத்தாதீர்கள். அவர்கள் மீது நீங்கள் கோபம் கொண்டு சாபத்தைத் தந்து விடாதீர்கள்' என்று தருமர் கேட்டுக் கொண்டாராம்.

இன்றைய தமிழகத்திலும் அப்படிப்பட்ட துரியோதனர்களுக்குப் பஞ்சமே இல்லை. அவர்கள்

கீழ்பாக்கத்தில் 57 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட்டுள்ள 230 கிலோ வோல்ட் திறன் கொண்ட துணை மின் நிலையம், கரூர் மாவட்டம், தாந்தோணி மலையில் 4 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட்டுள்ள 110 கிலோ வாட் திறன் கொண்ட துணை மின் நிலையம், பெரம்பலூர் மாவட்டம், கூத்தூரில் 5 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றப் பட்டுள்ள 110 கிலோ வோல்ட் திறன் கொண்ட துணை மின் நிலையம், புதுக்கோட்டை மாவட்டம், ரகுநாதபுரத்தில் 1 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றப் பட்டுள்ள 33 கிலோ வோல்ட் திறன் கொண்ட துணை மின்நிலையம், இராமநாதபுரம் மாவட்டம், பெருநாழியில் 2கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றப் பட்டுள்ள 33 கிலோ வோல்ட் திறன் கொண்ட துணை மின் நிலையம், சென்னை மாவட்டம், ஆர்.ஆர்.காலனியில் 7 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றப் பட்டுள்ள 33 கிலோ வோல்ட் திறன் கொண்ட துணை மின் நிலையம், கோயம்புத்தூர் மாவட்டம், நல்லூரில் 3 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றப் பட்டுள்ள 33 கிலோ வோல்ட் திறன் கொண்ட துணை மின் நிலையம் ஆகிய 10 துணை மின்நிலையங்களையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 2.9.2005 அன்று திறந்து வைத்தார்கள். இந்தத் துணை மின் நிலையங்கள் திறந்து வைக்கப்பட்டதன் பயனாக அந்தந்தப் பகுதிகளுக்குத் தங்கு தடையற்ற மின்சாரம் சீராகக் கிடைக்கப்பெறும். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ள இந்த 10 துணை மின் நிலையங்களையும் சேர்த்து, தமிழ் நாட்டிலுள்ள துணை மின் நிலையங்களின் எண்ணிக்கை 1,092 ஆக உயர்ந்துள்ளது.

**புனல் மின் நிலையத்தில் உற்பத்தித் திறன் அதிகரிப்பு**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 2.9.2005 அன்று தலைமைச் செயலகத்தில், அடிக்கல் நாட்டிய 224 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 5 புனல் மின் திட்டப் பணிகள் மற்றும் 222 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 30 துணை மின் நிலையங்கள் பற்றிய விவரம் :

கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள சோலையார் புனல் மின் நிலையத்திலுள்ள மின் உற்பத்தி இயந்திரங்களை 65 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதுப்பித்தல் மற்றும் புனரமைத்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், அடிக்கல் நாட்டினார்கள். இந்தப் பணிகள் நிறைவேற்றப்படுவதன் மூலம் இந்த புனல் மின் நிலையத்தின் மின் உற்பத்தி நிறுவு திறன் 70 மெகா வாட்டிலிருந்து 84 மெகா வாட்டாக அதிகரிக்கும்.

தேனி மாவட்டத்திலுள்ள பெரியாறு புனல் மின் நிலையத்தின் மின் உற்பத்தி இயந்திரங்களை ரூபாய் 85 கோடி மதிப்பீட்டில் புதுப்பிக்கவும், புனரமைத்திடவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், இன்று அடிக்கல் நாட்டினார்கள். இப்பணிகள் நிறைவேற்றப்படுவதன் மூலம் இந்த புனல் மின் நிலையத்தின் உற்பத்தித் திறன் 140 மெகாவாட்டிலிருந்து 168 மெகாவாட்டாக உயரும்.

மேலும், தேனி மாவட்டத்தில் 14 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்றப்படவுள்ள 2.5 மெகாவாட் திறன் கொண்ட பெரியார் – வைகை – 2 சிறு புனல் மின் திட்டம், கோயம்புத்தூர் மாவட்டத்தில் 49 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்றப்படவுள்ள 10 மெகாவாட் திறன் கொண்ட பவானி தடுப்பணை – 2 புனல் மின் திட்டம், மற்றும் நீலகிரி மாவட்டத்தில் 11 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்றப் படவுள்ள முக்குறிச்சிஹல்லா புனல் நீரேற்றுத் திட்டம் ஆகிய மின் திட்டங்களுக்கும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 2.9.2005 அன்று அடிக்கல் நாட்டினார்கள்.

இந்தத் திட்டங்கள் நிறைவடையும்போது மாநிலத்தின் புனல் மின் திட்ட நிறுவுத்திறன் 54.5 மெகாவாட் அதிகரிக்கும்.

இதுவன்றி,

சென்னை மாவட்டத்தில், குக்ஸ் சாலை, தரமணி, பேசின்பாலம் ஆகிய இடங்களில் 76.19 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள துணை மின் நிலையங்கள், கடலூர் மாவட்டத்தில், எம். பரூர், கொண்டியாங்குப்பம், ஊமங்கலம் ஆகிய இடங்களில் 5.27 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள துணை மின் நிலையங்கள், காஞ்சிபுரம் மாவட்டத்தில் படப்பை, சாலவாக்கம், கோலூர், சிறுசேரி, சேலையூர், பெருங்குடி ஆகிய இடங்களில் 77.73 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள துணை மின் நிலையங்கள், புதுக்கோட்டை மாவட்டத்தில், நாகுடி, ஆவுடையார் கோயில் ஆகிய இடங்களில் 6.71 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள துணை மின் நிலையங்கள், சேலம் மாவட்டம், மேட்டூர் நகரில் 5.2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள துணை மின் நிலையம், தஞ்சாவூர் மாவட்டத்தில் பாப்பாநாடு, திருமங்கலக் கோட்டை, பூண்டி ஆகிய இடங்களில் 6.59 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப் படவுள்ள துணை மின் நிலையங்கள், திருவள்ளூர் மாவட்டம், செங்குன்றத்தில் 2.77 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள துணை மின் நிலையம், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் குணசீலம், பாப்பாக்குடி, வையம்பட்டி, தொட்டியம் ஆகிய இடங்களில் 16.16 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள துணை மின் நிலையங்கள், வேலூர் மாவட்டம், ஆம்பூரில் 4.81 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள துணை மின் நிலையம், விழுப்புரம் மாவட்டம், எடுத்த வயநத்தத்தில் 5.58 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள துணை மின் நிலையம், விருதுநகர் மாவட்டம், நென்மேனியில் 1.74 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள துணை மின் நிலையம், திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியில் 2.85 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள துணை மின் நிலையம், நாகப்பட்டினம் மாவட்டம், வாய்மேட்டில் 2.45 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள துணை மின்நிலையம், கோயம்புத்தூர் மாவட்டம், தேவராயன் பாளையத்தில் 1.67 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள துணை மின்நிலையம், பெரம்பலூர் மாவட்டம், தென்னூரில் 1.81 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள துணை மின் நிலையம், ஆக 221.94 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள 30 துணை மின்நிலையங்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 2.9.2005 அன்று அடிக்கல் நாட்டினார்கள்.

இந்த நிகழ்வின்போது, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்துறை அமைச்சர் திரு.இரா.விசுவநாதன், தலைமைச் செயலாளர் திரு.என். நாராயணன், இ.ஆ.ப., எரிசக்தித்துறை செயலாளர் திரு.இரா.சத்பதி, இ.ஆ.ப., தமிழ்நாடு மின்சார வாரியத்தின் தலைவர் திரு.ஹன்ஸ் ராஜ் வர்மா, இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர்.

* * *

## அண்ணாவின் பொன்மொழிகள்



செப்டம்பர் 15
பேரறிஞர் அண்ணா பிறந்த நாள்

- மக்களை நல்லவர்களாக்க வேண்டுமானால் அவர்கள் மனத்திலே உள்ள மாசு, மதவெறி, சாதி, ஆணவம், சுயநலம், ஆதிக்க எண்ணம் அழிந்தாக வேண்டும்.
- பொருள் பாடுபடுவனுக்குப் போய்ச் சேரவேண்டும். போய்ச் சேரும் பொருளும் பயனுள்ள காரியத்துக்குச் செலவிடப் படவேண்டும். இரண்டும் நமது கொள்கை, இரு விழிகளில் ஒன்றுக்கு மற்றொன்று பாழாகக் கூடாது.
- மொழிப்பற்று இருப்பது எந்த வகையிலும் வருந்தத்தக்கதல்ல. போற்றத்தக்கது.
- கலை ஓர் இன மக்களின் மனப்புண்பு, அவ்வின மக்களிடையே தோன்றும், தெளிவு, வீரம் ஆகியவற்றின் எடுத்துக்காட்டு. எனவே, கலை, இன வளர்ச்சிக்கு ஏற்றபடி மாறியும் விரிந்தும் வரும் என்பதே நுண்ணறிவினரின் துணிவு.
- காலம் மாறக்கூடியது. மாறிக்கொண்டுதான் இருக்கும். காலத்திற்கேற்ப கருத்தில் மாற்றம் வேண்டும். மாறாத சமுதாயம் மறைந்துவிடும்.

## கோவையில்
# முதல் தொழில்நுட்பப் பூங்கா
மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள் அறிவிப்பு



தென்பிராந்திய இந்திய தொழில்துறையின் ஒத்துழைப்போடு, தமிழக அரசு ஏற்பாடு செய்திருக்கும் 'கனெக்ட் 2005' கண்காட்சியைத் துவக்கி வைப்பதற்காக உங்களுடன் பங்கேற்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். மனதின் தடைகளை உடைப்பதில் தகவல் தொழில்நுட்பத்தின் ஆற்றலைப் பற்றி கவிஞர் ரவீந்திரநாத் தாகூர் அறிந்திருக்கவில்லை. அதனால்தான், அவர், 'எங்கே மனம் அச்சமின்றி இருக்கிறதோ, அங்கே தலை உயர்ந்திருக்கிறது, எங்கே அறிவு சுயேச்சையாக உள்ளதோ' என்று கூறியுள்ளார்.

தாகூரின் கனவுகளை நனவாக்க தகவல் தொழில்நுட்பம் நம்மை தகுதியாக்கியுள்ளது. தகவல் தொழில்நுட்பம் ஒரு சிலருக்கு மட்டும் உரித்தாக்கப் பட்டிருந்தது. தற்போது அது ஒவ்வொருவரும் தங்கள் வாய்ப்பைப் பயன்படுத்தி வாழ்க்கையை மேம்படுத்திக் கொள்ளும் வகையில் ஒவ்வொருவருக்கும் அளிக்கப் பட்டுப் பரவலாக்கப்பட்டிருக்கிறது. தகவல் தொழில் நுட்பத் துறையின் தற்போதைய பிரச்சினைகளை ஆழமாக விவாதிப்பதற்காக இங்கே கூடியுள்ள உங்கள் அனைவருக்கும் என் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். சென்னையையும் தமிழ்நாட்டையும் தகவல் தொழில்நுட்பத் துறையில் உச்சியில் நிறுத்தும் இந்த 'கனெக்ட்-2005' வேறெப்போதும் இல்லாத வகையில் மிகவும் தனிச்சிறப்புக்குரியது.

நிதிநிலையில்,தமிழகம் 2001-இல் மிகவும் மோசமாக கீழ்நிலையில் இருந்தது. பல நிபுணர்கள் இந்த மோசமான நிலையில் இருந்து மீண்டெழ வழியே இல்லை என்று எழுதினார்கள். இதனைத் தகவல் தொழில்நுட்பத்தில் சிறந்து விளங்கும் நீங்கள் நன்கு அறிவீர்கள்.

### ஒளிவீசும் வைரமாகத் திகழும் தமிழகம்

தகவல் தொழில்நுட்பத்துறையில் குழப்பத்துக்கு ஏன் இடமில்லை என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். வேகமாக முன்னேறும் நாடுகளின் அணியில், தமிழகம் வழிகாட்டியாக முன்னோடியாக இருக்கும் நல்வாய்ப்பை நான் கண்டேன். கடின உழைப்பு, தொடர் கவனம், கொள்கைகள் மற்றும் நெறிப்படுத்துதல் ஆகியவற்றால் மீண்டும் தமிழகம் உச்சியில் நிற்கிறது. சென்னை நகருக்கு இந்த முறை நீங்கள் வந்துள்ளபோது, இந்த சுறுசுறுப்பான நகரம் ஆக்கப்பூர்வமான உணர்வு முயற்சி விரைவாக முன்நிற்கிறது. கிழக்கில் ஒளிவீசும் வைரமாகத் திகழ்கிறது என்பதை உறுதியாக உணர்வீர்கள்.

### முனைப்பான முயற்சிகள்

சென்னையும், தமிழ்நாடும் மேல்நிலைக்கு உயர்கிறது என்று ஏன் சொல்கிறேன்? மென்பொருள் ஏற்றுமதி 2000-2001இல் ரூ.3,115 கோடியாக இருந்தது. அது 2004-2005இல் ரூ. 10,703 கோடியாக உயர்ந்துள்ளது. 244 சதவிகித உயர்வுடன் மாபெரும் வளர்ச்சி கண்டுள்ளது. 2004-2005இல் மென்பொருள் குழுமங்கள் மாநிலத்தில் 1266 ஆக வளர்ந்துள்ளது. நாள்தோறும் மென்பொருள் குழுமங்கள் மூன்று என்ற கணக்கில் அதிகப்படுத்துகிறோம். தங்களின் நல்ல சந்தைகளுக்காகத் தீவிரமாக முயற்சித்துக் கொண்டிருக்கும் நடுத்தர மற்றும் சிறிய குழுமங்களை நான் பாராட்டுகிறேன்.

ஏற்றுமதியின் நிலை மற்றும் ஆழம், தகவல் தொழில்நுட்பம் மாபெரும் வளர்ச்சிக்குச் சக்தி படைத்ததாக விளங்கி, நிலையான இடத்தைப் பெற்றுள்ளது என்ற நம்பிக்கையை உருவாக்கியுள்ளது. 2004-2005இல் 'அப்ளிகேஷன்' மென்பொருள் ஏற்றுமதிச் சந்தையில் 61 சதவிகிதமாக இருந்தது. 'சிஸ்டம்' மென்பொருள் 12 சதவிகிதமாகவும், தகவல் தொழில்நுட்பம் சார்ந்த துறைகள் 10 சதவிகிதமாகவும் பங்கு பெற்றிருந்தன. வெளிநாட்டு வேலை நடவடிக்கை (அவுட்சோர்சிங்) 5 சதவிகிதம், உற்பத்தி மேம்பாடு 3 சதவிகிதம் மற்ற துறைகள் 9 சதவிகிதமாகும். இவை மென்பொருள் ஏற்றுமதித் துறையின் மற்ற பகுதிகளாகும். இந்தத் துறையில் வளர்ச்சிக்கு எல்லையில்லை. முனைப்பான முயற்சிகள் பெரிய நிலைக்கு இட்டுச் செல்லும்.

### சென்னையில் பன்னாட்டு நிறுவனங்கள்

உறுதியான செயல்பாடுகளின் பாதையைப் பதிவு செய்துள்ளதால், இது மிகவும் ஆச்சரியத்திற்குரியது. 10 பெரிய குழுமங்களில் 9 குழுமங்கள், டாடா கன்சல்டன்சி, இன்போசிஸ், விப்ரோ, சத்யம், எச்.சி.எல்., பாட்னி கம்ப்யூட்டர்ஸ், ஐப்லெக்ஸ், போலாரிஸ், ஹெக்சாவேர் ஆகியவை சென்னையை இருப்பிடமாக மட்டும் கொள்ளவில்லை. இங்கு அவை விரிவாக்கங்களையும் பெற்றுள்ளன.

பன்னாட்டு நிறுவனங்களின் தொகுதிகள், அக்சென்டர், வெரிசன், ஜான்சா, ஆபீஸ் டைகர், ஃப்ளெக்ஸ்ட்ரானிக்ஸ், அல்காடெல் மற்றும் காக்னிசன்ட் டெக்னாலஜி ஆகியவை சென்னையைத் தகுந்த இடமாகத் தேர்ந்தெடுக்கும் மற்ற குழுமங்களாகும். உலக வங்கி, ஸ்டாண்டர்ட் சார்ட்டர்ட் வங்கி, ஏபிஎன் ஆம்ரோ வங்கி ஆகியவையும் சென்னையைத் தங்களது கேந்திரமாகக் கொண்டுள்ளன.

பன்னாட்டு கனரகத் தொழில்களும் சென்னையில் தளம் அமைத்திருப்பதால் இங்கு கனரகத் தொழில் பகுதியும், சுறுசுறுப்பாகியுள்ளது. சென்னைக்கு நோக்கியாவின் வருகையும் மற்ற தயாரிப்பாளர்கள் இடம் பெற்றிருப்பதும் சென்னையில் மறு முதலீடு செய்வதற்கான அடையாளத்தைக் காட்டுகிறது.

தமிழகத்தில் சென்னையை மட்டும் தேர்ந்தெடுக்க இல்லை. இதற்கு காரணம் பெரிய போட்டிக்கு இடையே வான் மற்றும் கடல் வழிகளில், நமது யுக்தியின் அடிப்படையில், கிழக்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளின் சந்தையே காரணம் ஆகும். 250 பயணிகள் விமானம் மற்றும் 28 கார்கோ விமானங்களுடன் மும்முரமான பன்னாட்டு விமான நிலையத்தை நாம் பெற்றிருக்கிறோம். கூடுதலாக, ஒரு ஓடுபாதையுடன் புதிய பன்னாட்டு விமான நிலையத்தை நிர்மாணிப்பதற்கு என்னுடைய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இது சென்னை விமான நிலையத்தைப் பெரிய வசதியானதாக ஆக்கும்.

நம்முடைய 3 மாபெரும் துறைமுகங்கள் அவற்றின் தகுதியில் பிரபலமானவை.

### சென்னை – முன்னேறும் ஒரு நகரம்

பெரிய அளவிலான உள்நாட்டுச் சந்தை மேலும் ஒரு ஈர்ப்பாகும். கனரகத் தொழிலில் எல்லா முதலீட்டாளர்களையும் நான் வரவேற்கிறேன். அவர்களுக்கு எனது அரசு முழு ஒத்துழைப்பும், முழு ஆதரவும் வழங்கும் என நான் உறுதியளிக்கிறேன். தமிழகத்தில் கனரகத் தொழிலில் தைவான் நாட்டின் ஆர்வத்தை அறிந்து கொள்ள இங்கு, நான் ஒரு பிரதிநிதிக் குழுவை அனுப்பினேன். இந்தச் சந்தர்ப்பத்தில் ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை நாம் எடுத்து வருகிறோம். நோக்கியா, ஐ.டி.சி. உள்பட பல நிறுவனங்கள் சென்னைக்கு வர உள்ளன. இதை மகிழ்ச்சியோடு நான் வரவேற்கிறேன்.

தகவல் தொழில்நுட்பத் துறையின் இந்த அரிய வளர்ச்சி எவ்வாறு சாத்தியமானது. தமிழகத்தின் கட்டமைப்புத் திட்டமிடப்பட்டுச் சரியான தருணத்தில்




அமல்படுத்தப்படுகிறது. புதிய தேவைகளுக்கேற்ப கட்டமைப்பு உருவாக்குவதில் கோரிக்கை வந்த உடனேயே உயர்ந்த வகையில் செய்கிறோம். இந்த முறை நீங்கள் சென்னை வந்தபோது 'ஐ.டி.எக்ஸ்பிரஸ்வே' நான் உறுதியளித்ததைப் போல வளர்ந்து கொண்டிருப்பதைக் கவனித்திருப்பீர்கள். அனைத்து வசதியுடன் உங்கள் தொழில் கூட்டமைப்புக்குத் தேவையான போக்குவரத்துத் தேவையை அது அளிக்கும்.

'என்றென்றும் சென்னை' என்ற எனது முயற்சியால் சென்னையின் முகத்தோற்றம் மாற்றியிருக்கிறது. சென்னை நிச்சயமாக முன்னேறும் ஒரு நகரம். குடிநீர் வளங்கள் உள்பட இதுவரை இருந்த எண்ணற்ற பிரச்சினைகளில் வெற்றி கண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். இது பின்னப்பட்ட உலகத் தொடர்பு என்பது வெற்றியின் அறிவுபூர்வமான முடிவு.

## அறிவுசார் தொழில் நகரியம்

நிறுவப்பட்ட 13.52 டெராபிட்ஸ் (ஒரு செகண்டிற்கு) என்ற பேண்டு வித் உலகிலேயே மிகப் பெரியதாகும். இந்த நீர்மூழ்கி கேபிள்கள் சென்னையை உலகின் மற்ற பகுதிகளுடன் இணைக்கிறது. அது உயர்ந்த பாதுகாப்பு உடையதாகும். கிடைக்கும் பாண்ட் வித் ஆர்வமான நிலையை உடையது. வேறெங்கும் இல்லாதது. தகவல் தொழில்நுட்ப நகருக்காகச் சென்னையில் நிர்மாணிக்கப்படும் 5.2 மில்லியன் சதுர அடியிலான இடம் கட்டப்பட்டு வருகிறது. தனியார் துறையுடன் 40 தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் வர உள்ளன. செயல்படுவதற்கு வசதியாக 11.8 மில்லியன் சதுர அடியில் இடம் ஒன்று ஏற்பாட்டில் உள்ளது. இதில் நாம் வெகுவாக முன்னேறி வருகிறோம் என்பதையும் நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திட்டமிட்ட முறையில் உள்கட்டமைப்பு வசதி பற்றி கூறிவருகிறேன். நல்ல வளர்ச்சியை நாம் கண்டு வருகிறோம் என்பதை உங்களுக்குத் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

இன்று, அறிவுசார் தொழில் நகரியத்தைத் துவக்கி வைப்பதில் நான் உண்மையிலேயே மகிழ்ச்சியடைகிறேன். தகவல் தொழில்நுட்பத் துறையில் இது சென்னையில் புதிய முன்னேற்றத்தைச் சக்தியுடையதாக்கும். சிறுசேரி தகவல் தொழில்நுட்பப் பூங்காவினால் நாம் சிறப்பான இடத்திற்கு வந்துள்ளோம்.

## தகவல் தொழில்நுட்பத் துறை சார்ந்த தொழில்கொள்கை

கோவையில் உருவாக இருக்கும் தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்கும் பணி விரைவில் தொடங்கும் என்பதை அறிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். இதற்காக, எல்காட்டுக்கு நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஒரு நல்லநோக்கத்துக்காக நீண்ட தூரத்தைக் கடக்கும் தகுதியுடையதாக சென்னையும் தமிழ்நாடும் எவ்வாறு உருமாறின? ஆண்டுதோறும் 80 ஆயிரம் பொறியியல் பட்டதாரிகள், 56 ஆயிரம் டிப்ளோமாக்காரர்கள், 3 இலட்சம் அறிவியல் மற்றும் கலை பட்டதாரிகளின் வருகையால், இந்தியாவிலேயே தமிழகம் முன்னிலையில் உள்ளது.

இது மனித ஆற்றல் குணமாக இருப்பதால் இந்தியாவுக்குள் ஒப்பிட முடியாத வகையில், தமிழகம் முன்னணியில் உள்ளது. தமிழகம் 4 'சி'க்களுக்குப் பிரபலமானது. சென்னை நகரம் கலாச்சாரம், காபி, கிரிக்கெட் இப்போது கணினித் தொழிலிலும் சென்னை உள்ளது. இதன் பங்கு மகத்தானது.

இன்று, என்னால் அறிவிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பத் துறை சார்ந்த தொழில் கொள்கை தரமான உயர் திட்டத்துக்கு முன் முயற்சி எடுக்கும் வகையில் உள்ளது. ஏனைய கல்வித் திட்டத்துக்கு மதிப்பு கூட்டும் வகையில் கொள்கை அளவில் நான் எடுத்து கூறி வருகிறேன். மொழி மற்றும் குரல் பயிற்சி உள்பட பெரிய அளவிலான கட்டமைப்பை இது உள்ளடக்கியது.

## அறிவு சார் பொருளாதாரம்

இது தகவல் தொழில்நுட்பம் சார்ந்த துறைகளில் தனிச்சிறப்பு வாய்ந்த பகுதிகளை உருவாக்கும். தகவல் தொழில்நுட்பம் சார்ந்த துறைகளின் திட்டத்தில் நமது மாநிலம் ஒப்பற்றப் பங்கைப் பெற்றுள்ளது. இந்தத் திட்டம் பல பல்கலைக்கழகங்களில் கடைப்பிடிக்கப்படுகிறது. மாணவர் சமுதாயத்தாலும் வரவேற்கப்படுகிறது. மைக்ரோசாப்ட் கார்ப்பரேஷன் ஆப் இந்தியாவுடன் எனது அரசு ஒப்பந்தம் ஒன்று செய்துள்ளது.

தகவல் தொழில்நுட்பத் துறையில் ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிப்பதே அதன் நோக்கம். இத்திட்டத்தில் 5 ஆண்டு காலத்தில் 20 ஆயிரம் ஆசிரியர்களும், 10 இலட்சம் மாணவர்களும் பயனடைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கனரக மற்றும் மென்பொருள் அதிபர்களுடன் பங்கு பெறுவதில் வாய்ப்புகளை நாம் ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். மாநிலத்தின் நகர்ப்புற மற்றும் கிராமப்புற மக்களுக்கு, குறைந்த விலைக் கணினிகளை வழங்கும் வகையில் மாபெரும் தகவலை செய்ய முடியும்.

அறிவுசார் பொருளாதாரம் என்பது ஒருவரும் சமுத்திரத்தில் ஒரு தீவாக இருக்க முடியாது. பொருளாதாரத்தில் ஏனைய பகுதிகளில் இருந்து பிரிக்கவும் முடியாது. பெரும் தகுதி, ஊடுருவல் மதிப்பு மற்றும் எதிர்முனை முறையை உருவாக்கி வாழ்க்கையின் எல்லாத் தரப்புகளிலும் ஆழமான வேர்களை அது பதிக்கிறது என்பதை நாம் உறுதி செய்ய வேண்டும். கிளிக் பொருளாதாரம் என்ற பழமொழி வெகுமதியைப் போன்றது. போட்டி உலகில் வெற்றி பெறுவதற்குப் பிரிக் பொருளாதாரத்தை அது தூண்டுகிறது.

## முதலீட்டுக்குத் தகுந்த இடம் சென்னை

நம்முடைய இந்த நகரத்தில் நவீனமும், மரபும் ஒன்றுக்கொன்று கைகோர்த்து அரிய இணைப்புப் பெற்றுள்ளது. அடுத்த தலைமுறையின் தொழில் உத்திக்குச் சென்னை நகரம் சமமாக, இனிதாக உள்ளது. நம்முடைய பழங்கால இசை கண்ணியமானது. பெரும் எண்ணிக்கையிலான நமது பழங்கால கோயில்களும், கண்ணியமான நமது பாரம்பரிய சர்ச்சுகளும், புனித பழைய மசூதிகளும் தகுந்த நல்லிணக்கத்துடன் அமைதியாக ஒன்றுக்கொன்று அருகில் இணைந்து நீடிக்கின்றன.

நமது கலாச்சார வேறுபாட்டுக்கும், மதச்சார்பற்ற மரபுகளும் வாழும் உதாரணங்கள் இவை. சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பதிலும், குற்றத்தை ஒழிப்பதிலும் என்னுடைய தனிப்பட்ட ஈடுபாடு அளவிட முடியாதது. தமிழ்நாட்டில் சென்னையில் பாதுகாப்பைப் பற்றி நீங்கள் கவலைப்படத் தேவையில்லை. உள்கட்டமைப்பு, திறமை தகவல்தொடர்பு பாதுகாப்பு, வாழ்க்கைத்தரம் இவற்றை ஒன்றாக்கிப் பார்த்தால் இன்று, இந்தியாவிலேயே முதலீட்டுக்குத் தகுந்த இடம் சென்னை என்பதை நான் உங்களுக்கு உறுதியாக கூறமுடியும். தனிப்பட்ட ஆய்வுகளே இதற்கு ஆதாரம்.

## தமிழகம் உயர்ந்து நிற்கிறது

சட்டம், ஒழுங்கைப் பராமரிப்பதிலும், உள் கட்டமைப்பிலும், பொது முறைகளிலும், அதனுடைய திறமையிலும் தொழிலாளர் உறவுகளிலும் தன்னுடைய தலைமையில் தகுதி வரிசையில் தமிழகமே உயர்ந்து நிற்கிறது. நான் எதிர்நோக்கியிருக்கும் அளவிட முடியாத நிலையை மாநிலம் அடைந்து கொண்டிருக்கிறது.

நான் ஏன் தொழில்நுட்ப துறையில் ஆர்வமாக இருக்கிறேன்? அது ஒரு மந்திரக்கோலாக தோன்றுகிறது. வளர்ந்த நாடுகளைப் பின்பற்றுவதிலும், முன்னெடுத்துச் செல்வதிலும் வாய்ப்பை அது அளிக்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக, நம்நாட்டில் இலட்சக் கணக்கான மக்களுக்கு அது நம்பிக்கை ஊட்டுகிறது. அறிவின் விரிவை அது தட்டி விடுவதாக நாம் எடுத்துக் கொள்ளலாம். சந்தைத் தகவல் தேவைப்படும் விவசாயியை எடுத்துக் கொள்ளுங்கள் அல்லது

விவசாயத்துறையில் புதிய தொழில்நுட்ப முன்னேற்றமாக இருக்கட்டும் அல்லது உற்பத்தித் தகவல் மற்றும் நடவடிக்கை விவரங்கள் தேவைப்படும் மகளிர் சுயஉதவிக் குழுக்களாக இருக்கட்டும் – ஆரம்ப சுகாதார நிலையங்களில் சிறந்த நிபுணர்களின் தொலை மருத்துவத்தை (Tele Medicine) பெறும் ஏழை நோயாளிகளாக இருக்கட்டும் – தகவல் தொழில்நுட்பத்தை அமலாக்குவது அளவற்றதாகும்.

அதனால்தான், நமது நாட்டில் இலட்சக்கணக்கான மக்களுக்கு வாய்ப்பையும் நம்பிக்கையும் அளிக்கும் தகுதியுடையதாக இருப்பதால், அதை ஒரு மந்திரக்கோல் என்று நான் உணர்கிறேன். இது மிகப்பெரிய சவால், மாபெரும் வாய்ப்பு, வலைதளத்தின் மூலம் கிராமப்புற சேவைகளுக்கு முன்முயற்சி என்பது முன்னேற்றத்தின் பெரிய நடவடிக்கை.

## சாதிப்பதே என் செயலாகும்

தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு ஊராட்சியிலும் தகவல் தொழில்நுட்ப வசதிகள் மற்றும் கிராமத்திற்கு தகவல் வசதியை அளிப்பதில் சி.டி.க்கள் மற்றும் அதைத் தொடர்ந்து தமிழகத்தில் மாநில அளவிலான பிரதேச வலைதளம் அமல்படுத்த உள்ளது. இந்த முறையில் சுயஉதவிக் குழுக்களால் மகளிர் பெரிய அளவிலான சேவைகளுக்குப் பயன்படுத்தப்படுகிறார்கள். இவ்வாறு கிராமப்புற ஆய்வுத் திட்டத்தை நாம் உடனடியாக அமல்படுத்த உள்ளோம்.

இதனால், மக்கள் தகவலைப் பெறும் தகுதி உடையவர்களாக மாற முடியும். "ஈமெயில்'' நிர்வாகத்திலும் மிகப்பெரிய பங்குக்கு முன்னெடுத்துச் செல்கிறது. "ஈமெயில்'' நிருவாகம் உறுதியாக நிர்மாணிக்கப்படுவதால்தான் நல்ல நிருவாகத்திற்கு அடிப்படை என்று நான் திருப்தியடைகிறேன்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இந்தியத் தொழில்நுட்பத் துறை நெருக்கடியான கட்டத்தில் உள்ளது. அந்நிய வேலைகள் (அவுட் சோர்சிங்) வாழ்க்கை முறையாகி விட்டது. இது சமாளிக்கப்படவேண்டும். ஆனால், இது தவிர்க்க முடியாததாக உள்ளது. அந்நிய வேலைகள் வெற்றிக்கு வெற்றி என்ற நிலையில் நமது உத்திகளின் அடிப்பண்டயாகக் கொண்டு வலுவான தகவல் தொடர்புடையதாக உள்ளதை நான் காண்கிறேன்.

இன்னொரு மிகப்பெரிய சவால் பிலிப்பைன்ஸ், சீனா, பிரேசில், ஹங்கேரி மற்றும் போலந்து, செக்குடியரசு போன்ற கிழக்கிந்திய நாடுகளுடனும் உள்ள போட்டிகளே ஆகும். தெற்கு ஆப்பிரிக்கா, வியட்நாம், அர்ஜென்டினா மற்றும் ருமேனியா போன்ற நாடுகள் சவால்களாக விரைந்து மாறி வருகின்றன.

எந்த முறையிலும் தரத்தில் சமாதானம் செய்து கொள்ளாமல் போட்டியைப் பராமரிப்பதே அறிவுப் பூர்வமான தேவைகளாகும். இதற்கு வியாபார நடவடிக்கையில் இருந்து அறிவுசார் நடவடிக்கைகளுக்கு மதிப்பு மிகுந்த முறையில் முன்னேறுவதே தகுந்த வழிகளில் ஒன்றாகும். அயல்நாடுகளில் பெரிய போட்டிகளுக்கு இடையே ஒப்பந்தங்களைப் பெறும் இந்தியாவின் தொழில்நுட்பம் பெறும் கம்பெனிகள் இந்திய உள்நாட்டுச் சந்தையிலும் செல்வாக்குப் பெறுவதும் தேவையாக உள்ளது.

உள்நாட்டுத் தேவைகளுக்கு ஏற்ப பெரிய அளவிலான உள்நாட்டுச் சந்தையின் மேம்பாட்டை இழப்பதை நீங்கள் புறக்கணித்துவிட முடியாது. இது உங்களுக்குத் தெரிந்த வியாபார மாதிரிகள் மற்றும் நடவடிக்கைகளை மறுவடிவமைப்பு செய்யத் தூண்டுகிறது. டேட்டா பாதுகாப்பு முதலீட்டாளர்களின் நம்பிக்கையைச் சீர்குலைக்கும், அச்சுறுத்தும் பகுதியாக உள்ளது. இதை வலிமையாகச் சமாளித்தாக வேண்டும்.

இந்தியத் தகவல் தொழில்நுட்ப துறையில் மாறுபாடாக உள்ள இத்தகைய அறிவுபூர்வமான சவால்களை எண்ணிப்பார்ப்பதற்கு 'கனெக்ட் 2005' தேர்வு செய்யப்பட்டிருப்பதற்கு நான் மகிழ்ச்சி அடைகின்றேன். மகிழ்ச்சியின் வெளிப்பாடான முன்னுரைகளில் நான் முன்னேற்றத்தைக் காண்கிறேன். அவை நிறைவேறும்.

அவை சரியான கவனத்தைப் பெறும் என்று உங்களுக்கு உறுதியளிக்கிறேன். தேவையை நிறைவேற்றுவதே என் நோக்கம். அதைச் சாதிப்பதே என் செயலாகும். அந்த வழிக்கு வாருங்கள். இந்தக் கடின வேலையை எளிதாக, விரைவாகச் செய்வதற்கு தகவல் தொழில்நுட்பம் அவசியத் தேவையாகும். இந்த தலைச்சிறந்த என்னுடைய அரசின் சாதனைக்கு நீங்கள் அனைவரும் பங்குதாரராக உங்களை நான் அழைக்கிறேன். உங்கள் அனைவருக்கும் என் இனிய நல்வாழ்த்துகள். நன்றி!

சென்னையில் நந்தம்பாக்கம் கூட்ட அரங்கில்,
8–9–2005 அன்று "கனெக்ட் – 2005''
கண்காட்சியைத் தொடங்கிவைத்து,
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்
ஆற்றிய ஆங்கில உரையின் தமிழாக்கம்.



# வேலூரில் சிப்பாய்க் கலகம் 200ஆவது ஆண்டு நினைவு கூறும் விழா

**வே**லூர் மாவட்டத்தில், இந்திய முதல் சுதந்திரப் போராட்டம் என்ற வேலூர் சிப்பாய் கலகத்தின் 200ஆவது ஆண்டு நினைவு கூறும் விழா, வேலூர் அண்ணா கலை அரங்கில் 10.7.2005 அன்று மாலை 4 மணியளவில், செய்தி–மக்கள் தொடர்புத்துறை சார்பில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

இவ்விழாவிற்கு, வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எஸ். கோபாலகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள் தலைமை தாங்கினார். மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. கே. பாண்டுரங்கன் அவர்கள், பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்குப் பரிசுகள் வழங்கியும், அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கியும் விழாப் பேருரை ஆற்றினார்கள். மேலும், இவ்விழாவில் சென்னை சரகம், இந்திய தொல்பொருள் ஆய்வுத் துறை கண்காணிப்பாளர் டாக்டர் டி. சத்தியமூர்த்தி, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. சி. ஞானசேகரன், திரு. ப. நீலகண்டன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள்.

சிப்பாய் கலகத்தின் நினைவு நாளை முன்னிட்டு 10.7.2005 அன்று, காலை 8 மணிக்கு, வேலூர் மக்கான் சந்திப்பில் உள்ள வேலூர் சிப்பாய் கலகம் நினைவுத் தூண் அருகே, தமது இன்னுயிர் நீத்த இந்திய சிப்பாய்களுக்கு மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. கே. பாண்டுரங்கன், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எஸ். கோபாலகிருஷ்ணன் மற்றும் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர். பின்னர், தேசிய மாணவர் படை, ஊர்க்காவல் படை, நாட்டுநலப்பணித் திட்ட மாணவர்கள் ஆகியோர் அணிவகுப்பு மரியாதை செலுத்தினார்கள்.

மாணவர்களிடையே சுதந்திரப் பற்றையும், விடுதலைப் போராட்ட உணர்வையும் ஊட்டும் வகையில், வேலூர் மாவட்டத்தில் உள்ள சுமார் 2,500 கல்வி நிறுவனங்களில் பேச்சுப் போட்டிகள் நடத்தி 7,860 மாணவ மாணவியர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இறுதிப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு



10.7.2005 அன்று மாலை நடந்த விழாவில் பரிசுகள் வழங்கப்பட்டன.

விழாவை முன்னிட்டு, வேலூர் அண்ணா கலை அரங்கத்தில் காலை 11 மணி முதல் மதியம் 2 மணி வரை, பள்ளி/கல்லூரி மாணவ மாணவிகள் பங்கேற்ற தேசிய உணர்வை ஊட்டும் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பரிசுகள் வழங்கப்பட்டன.

பிற்பகல் 2 மணிக்கு தியாகி கே.எஸ். கந்தசாமி அவர்கள், கருத்தரங்கத்தைத் தொடங்கி வைத்தார். புலவர் கே. பதுமனார், தலைமையில் "எரிமலை எண்ணம்" என்ற தலைப்பில் டாக்டர் நீலவனும், "நெருப்பும் இருப்பும்" என்ற தலைப்பில் புலவர் சண்முக செங்கல்வராயனும், "நடந்ததும், முடிந்ததும்" என்ற தலைப்பில் கவிஞர் பே. அமுதாவும், "வேட்கை கொழுத்து" என்ற தலைப்பில் தமிழ் அருவி ச. இலக்குமிபதியும், "கோட்டையும் கொடியும்" என்ற தலைப்பில் திருக்குறள் மூதறிஞர் இராதாகிருஷ்ணனும் பங்கேற்றுப் பேசினார்கள்.

விழா முடிவில், தேசிய ஒருமைப்பாட்டையும் மத நல்லிணக்கத்தையும் உருவாக்கும் "பாரத விலாஸ்" என்ற திரைப்படம் இலவசமாகத் திரையிடப்பட்டு விழா இனிதே நிறைவுற்றது.

– மா. கலைமணி,
செய்தி–மக்கள் தொடர்பு அலுவலர்,
வேலூர்.

* * *

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227157
சென்னை-600 008

## வேலூர் சிப்பாய்க் கலகம்

ஆங்கிலேயர்களும், பிரெஞ்சுகாரர்களும் [illegible] நவாப் முகம்மது அலியின் குடும்பச் சண்டையில் தலையிட்டு 1760இல் வந்தவாசியில் நடத்திய சண்டையில் ஆங்கிலேயருக்கு வெற்றி கிடைத்தது. இதனால் ஆங்கிலேயர்களுக்கு நாடு பிடிக்கும் ஆசை உருவானது. இந்த வெற்றிக்குப்பின் நவாப் முகமது அலி ஆங்கிலேயரையே சார்ந்திருக்க நேர்ந்தது. ஆங்கிலேயர்கள், திருநெல்வேலி சீமை வரை பாளையக்காரர்களிடம் வரிவசூல் செய்யப்போய் எதிர்த்தவர்களை எல்லாம் கடுமையாகத் தண்டித்தனர். இதனை எதிர்த்து ஹைதர் அலி பல இடங்களில் போரிட்டு, 1782இல் வேலூர் கண்ணமங்கலம் கணவாய் அருகே தங்கி இருந்தபோது, நோயுற்று அம்மூர் நரசிங்கராயபுரத்தில் மரணமடைந்தார்.

1782இல் ஹைதர் அலி காலமானதும் அவருடைய மகன் திப்புசுல்தான் அரியணை ஏறினார். திப்பு, தென்னகத்தில் ஆங்கிலேயரை எதிர்க்கும் வல்லமை மிக்க வீரனாக விளங்கினார். திப்புவிற்கு பிரெஞ்சுகாரர்களின் ஆதரவும் இருந்தது. திப்புவை வீழ்த்துவதற்கு ஆங்கிலேயர்கள் ஆற்காடு நவாப், ஐதராபாத் நிஜாம், மராட்டிய மன்னன் ஆகியோருக்கு பல ஆசைகள் காட்டி அவர்களை துணை சேர்த்துக் கொண்டார்கள். 1799இல் நடைபெற்ற நான்காவது மைசூர் போரில், திப்பு மரணமடைந்தார். திப்புவின் 12 மகன்களும், 6 மகள்களும் வலிமைமிகு வேலூர் கோட்டையில் சிறைவைக்கப்பட்டனர்.

ஸ்ரீரங்கப்பட்டணம் சண்டைக்குப் பின் ஆங்கிலேயர், ஆற்காடு நவாபுகளின் உரிமையில் தலையிட்டு 'நவாப்' என்னும் அதிகாரத்தைப் பறித்து ஆற்காடு இளவரசர் என்றாக்கி, சென்னை அமீர் மகாலில் குடியேற வைத்தனர். 1801இல் ஆங்கிலேயர்கள், கர்நாடகத்தின் முழு ஆதிக்க அதிகாரத்தைப் பெற்றனர். இதே ஆண்டில், வட ஆற்காடு மாவட்டம் உள்ளிட்ட சென்னை மாகாணம் திருநெல்வேலியிலிருந்து ஓங்கோல் வரை அமைக்கப்பட்டது. ஆங்கிலேயர்களின் இந்த வளர்ச்சி கண்ட ஜமீன்தார்கள், ஜாகீர்தார்கள், பாளையக்காரர்கள் ஆங்கிலேயர் மீது வெறுப்புக் கொண்டனர். திப்புவின் மரணமும், நவாப்புகள் அவமானப்படுத்தப் பட்டதும் குறிப்பாக முஸ்லீம்களிடையே எதிர்ப்பு உணர்வை வளர்த்தன.

வேலூரில் இருந்த ஆங்கிலேயப் படையில், 1500க்கு மேலான இந்திய வீரர்களும் 370 ஐரோப்பிய வீரர்களும் இருந்தனர். 1806இல் மதராஸ் படைக்கு முதன்மைத் தளபதியாக நியமிக்கப்பட்ட சர்ஜான் கிரடேக் என்பவன் பல விதிமுறைகளைப் புகுத்தினான். அந்த விதிமுறைகள் யாவும் தம் பண்பாட்டிற்கு ஒவ்வாதது எனக் கருதிய இந்திய வீரர்கள் அதனைக் கடுமையாக எதிர்த்தனர்.

1806 மே மாதத்தில், லெப்டினென்ட் கர்னல் டேர்லி என்பவர், இந்திய வீரர்களுக்கு இராணுவ [illegible]களின் மாற்றங்களில், மனநிறைவு இல்லை என மதராசுக்குத் தெரிவித்தார். அதைத் தொடர்ந்து புது ஆணையை எதிர்ப்பவர்கள் மதராசுக்கு அனுப்பப்பட்டு தண்டனை பெற்றார்கள். புரட்சி செய்யும் படையாளியை நீக்கி 23ஆவது ரெஜிமென்டில் சேர்த்தனர். இந்நிலையில் முகமதிய பக்ரிகள், மாவட்டத்தின் பல இடங்களுக்கும் சென்று ஆங்கிலேயரை ஒழித்துக் கட்ட பிரச்சாரம் செய்தனர்.

வேலூரில், சிப்பாய்களின் புரட்சியை 1806இல் ஜூலை 14ஆம் நாள்தான் நடத்த முன்பு திட்டமிட்டிருந்தனர். முஸ்தபாபா பேக் என்பவர் கர்னல் போர்ப்ஸ் என்பவரிடம் புரட்சி செய்வது தொடர்பான இரகசியத் திட்டங்களை தெரிவித்துவிட்டான். மேலும், 1806இல் ஜூலை 9ஆம் நாள், வேலூர் கோட்டையில் நடைபெற்ற திப்புசுல்தானின் மகள் திருமணத்தில் மக்கள் கலந்து கொண்டனர். அதுமட்டுமல்லாமல், அன்று இந்திய வீரர் ஆங்கிலேய அதிகாரியை அணிவகுப்பில் அவமரியாதை செய்துவிட்டார். இச்சூழலில், ஆங்கிலேயர்கள் என்ன செய்வார்களோ என பயத்தினால் திடீர் எனப் புரட்சியை தொடங்கினர்.

1806 ஜூலை 10ஆம் நாளன்று அதிகாலை 4 மணிக்கு, இந்திய வீரர்கள் அணிவகுப்பு மரியாதை நடக்கும் இடத்திற்கு வந்தனர். ஆங்கிலேயர்கள் இந்திய வீரர்களைச் சுடுகின்றனர் என்று புரளி கிளப்பினர். இதனால் இந்திய வீரர்கள் கொதித்தனர். ஆங்கிலேயரின் இருப்பிடங்களுக்குச் சென்று அதிகாரிகளைக் கொன்றனர். பல ஆங்கிலேய வீரர்களும் மாண்டனர். திப்புவின் மகன் பட்டே ஐதரை அரசனாக்கினர். திப்புவின் கொடியை ஏற்றி யூனியன் ஜாக்கொடியை கீழே இறக்கினர்.

இத்தகவல், வேலூர் கோட்டைக்கு வெளியில் இருந்த மேஜர் கூட்ஸ் என்பவருக்குத் தெரிந்து அவர் இராணிப்பேட்டையிலிருந்த பெரும் குதிரைப் படைக்கு தெரிவித்தார். கர்னல் இகில்லஸ்பி தனது படை மற்றும் காலப்பர் துப்பாக்கிகளைக் கொண்ட பெரும் படையுடன் வந்து, துப்பாக்கியால் வேலூர் கோட்டையின் வலிய கதவுகளைத் தகர்த்து உள்ளே சென்றது. தலைமை இல்லாது புரட்சி செய்த சுமார் 800 இந்திய வீரர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். மாவட்டத்தின் மற்ற இடங்களில் 600 வீரர்கள் அகதிகளாகக் காவலர்களால் பிடித்து வேலூர், திருச்சிராப்பள்ளி சிறைகளில் அடைக்கப்பட்டனர். 17 இந்திய அலுவலர்கள் கோட்டைக்கு மேற்கில் தூக்கிலிட்டும், துப்பாக்கியால் சுடப்பட்டும் கொல்லப்பட்டனர். இந்த வேலூர் சிப்பாய் கலகம்தான் இந்திய விடுதலைப் போராட்டத்தின் முன்னோடி என்று வரலாற்றாளர்கள் குறிப்பிடுகிறார்கள்.

* * *



R.N.I.No.21446/70
RGN No.TN/PMG (CCR) 836/03-05, WPP-518

